# தேவதையைக் கண்டேன்

அகிலா கோவிந்த்



# தேவதையைக் கண்டேன்...



## 1

''ஆஹா! இப்போதாவது ஒத்துக் கொள்கிறாயா... நீ முட்டாள்தான் என்று?'' என்று கேட்டான் பாலு.

தனது தளிர் நாக்கை உதட்டோரம் கொண்டு வந்து அழகு காட்டி கலகலவென கிணுகிணுத்த அக்கா காஞ்சனமாலா, ''நான் ஒத்துக்கொள்கிறேன். நான் முட்டாள் என்றால் இந்த முட்டாளின் அன்புத் தம்பி படுமுட்டாளாகத்தானே இருக்கும்.. நீயே சொல்?'' என்றாள்.

"என்ன நான் படுமுட்டாளா?'' என்றான் பாலு தனது பதினைந்து வயது உடம்பை நெஞ்சை முறுக்கிக் கொண்டு.

''போடா நோஞ்சான்! நெஞ்சை முறுக்கினால் சிக்ஸ் பேக்ஸ் என்று நினைப்பு வேறா? ஸ்ஸு! சரியான எலும்படி. எனக்குத் தெரியாதா?''

''யேய்... ஆனாலும் நீ அழகாய் இருக்கிறாய் என்பதற்காக என்னை ரொம்பவும் கிண்டலடிக்காதடி. பின் படாதபாடு படுவாய்...'' என மிரட்டினான் பாலு.

''அது.. என்னடா படாத பாடு..? கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியில் என்னைப் போட்டு வறுத்து எடுத்து விடுவாயா? சொல்... பார்ப்போம்!''

''அது.. இல்லை... இது வேறு...''

''வேறா...?''

''ம்ம்... உன்னுடைய முக்கியமான ரிக்கார்டு நோட்டுகள் எல்லாம் காணாமல் போய் கண் காணாத தேசத்திற்குச் சென்று விடும்.''

''யேய்..! யேய்..! என் நோட்டுகளில் மட்டும் கை வைத்தால் அப்படியே உன் கையை முறித்து விடுவேன்...''

''ஆமாம்.. நீ அப்படி வந்து முறிக்கும் வரை என் கை பூப்பறித்துக் கொண்டா இருக்கும்? உன்னை ஓங்கித் தள்ளி... புரட்டி எடுத்து விடாது?''

''போடா நோஞ்சான்! பேசறதைப் பார்!''

''ஏய்...'' என மறுபடியும் உறுமினான் பாலு. ''என்னை இப்படி நோஞ்சான் அது இதுவென கிண்டலடித்தால்



எனக்குக் கெட்ட கோபம் வந்து விடும்..'' என்றான் மிரட்டலாய்.

''அடாடா..! கெட்ட கோபமா? அப்படியானால் இதுவரை வந்தது நல்ல கோபமா? போடா நோஞ்சான்..! நோஞ்சான்! நோஞ்சான்!'' என்றவள், ''பார்த்தாயா? ஒன்றுக்கு மூன்று முறை சொல்லி விட்டேன். உன்னால் ஆக முடிந்ததைப் பார்!'' என்றாள் சவால் விடுவதைப் போல்.

பாலு ஸ்டூலில் உட்கார்ந்திருந்தவன் டபக்கென இறங்கி அவள் பக்கம் வேகமாய் அடிப்பது போல் வந்து பின் நிறுத்தி, அவள் காதுகளில், 'உர்ர்ர்ர்ரென' வேகமாகக் கத்தி அவளுக்கு எரிச்சலூட்டினான்.

காதுகளை இறுகப் பொத்திக் கொண்டாள் காஞ்சனமாலா.

''ஐயோ..! பேய் ஒண்ணு என் பக்கத்தில நின்று கத்திரகளை... பண்ணுது! யாராவது வாங்க! என்னைக் காப்பாத்துங்க!'' என்றாள் போலியான பயக்குரலில்.

''நான் பேய் இல்ல. பிசாசு! உன்னை அப்படியே கடிச்சுக் குதறிடுவேன்'' மறுபடியும் கைகளை விரித்துப் பாய்வதுபோல் அவளுக்கு பயம் காட்டினான் பாலு.

மாலாவும் டக்கென விரிந்து பரந்திருந்த தனது கூந்தலை இருபுறமும் தூக்கிக் காட்டியவாறு, ''நானும் மோகினிதான். மோகினிப் பிசாசுதான். உன் ரத்தத்தை அப்படியே குடிச்சிருவேன்...'' என்றாள். அவனைப் போலவே பயங்காட்டிக் கொண்டு.

''அதுதான் உன்னால் முடியாது...'' என்றான் பாலு எதையோ யோசித்தவனாய்.

''ஏன் முடியாது?''

''என் ரத்தத்துலதான். காரம் இருக்காதே..? காரம் நிறைந்த மிக்சர், காராப் பூந்தி என்றுதான் ஒரு பிடி பிடிப் பாயே.. காரம் இல்லாத என் ரத்தத்தை எப்படி குடிப் பாயாம்?''

''அதற்கென்ன..? வீட்டில் மிளகாய்ப் பொடி டப்பா தான் இருக்கிறதே..? அதில் கொஞ்சம் எடுத்துத் தூவி னால் போதாதா? அதனால் அப்படிச் செய்து சர்ரென ஸ்ட்ரா போட்டு குடிப்பது போல் குடித்து விடுவேன். பின் நீ இரத்தமே இல்லாமல் பொத்தென கீழே விழுந்து விடுவாய்.''

''சரி... அப்படியே ஆனாலும் நீ என் ரத்தத்தைக் குடித்து அப்படியே அதனால் குண்டடித்து அசிங்கமாய் போய் விடுவாயே? பின் உன்னைப் பக்கத்து வீட்டு சேகர் மாமா கூட திரும்பி பார்க்க மாட்டார்...''

''ஓ... அப்படிப் போகிறதா கதை? அப்படியானால் வேறு வழியே இல்லை! அந்த சேகரின் அசடு வழிந்து அடிக்கடி பல்லிளிக்கும் தொந்தரவில் இருந்து தப்பிக்க வாவது நான் உன் ரத்தத்தைக் குடித்தாக வேண்டும். வா! பக்கத்தில் வா!''

அவள் விரட்ட அவள் கையில் சிக்காமல் குடுகுடு வென ஓடினான் பாலு.

மாலாவும் விடவில்லை.

மேடையில் இருந்து ஓடி படிகளில் இறங்கி பின்புறத் தோட்டம் முற்றம் எனச் சுற்றிச் சுற்றி ஓடினவனை லபக்கென ஒரு திருப்பத்தில் பிடித்து விட்டாள்.



ஆனால் இதையெல்லாம் தற்செயலாய் சமையல் கட்டில் இருந்து வெளிவந்த தாய் லட்சுமி பார்த்துவிட முகம் வெகுண்டாள்.

''பாவாடை தாவணி போட்ட வயசுப் பொண்ணு அடக்க ஒடுக்கமா இருக்காம இப்படியா ஓடிப் பிடிச்சு விளையாடுறது? எத்தனை தடவை உனக்கு சொல்லி இருக்கேன்?'' என அதட்டினாள்.

''அப்படிச் சொல்லுங்கள் அம்மா. இவள் மோகினிப் பிசாசாம். என்னை விரட்டுவாளாம். ரத்தம் குடிப் பாளாம்...''

பாலு நேரம் பார்த்து போட்டுக் கொடுக்க காஞ்சன மாலாவும் விடவில்லை.

''இதையும் கேட்டுக் கொள்ளுங்கள் அம்மா. இவன் வேப்ப மரத்துப் பேயாம். என்னைக் கடித்துக் குதறிடு வானாம். பாருங்கள்! பல்லை வேறு வழித்து ஈயென காட்டுகிறான்!'' என்றாள்.

அம்மா ஏதோ சொல்ல வாய் எடுப்பதற்குள் முன்புற ஹாலில் இருந்து கையில் தின பேப்பருடன் அங்கு தரி சனமானார் தந்தை சபேசன்.

அவர்கள் பேசியது எல்லாம் அரை குறையாய் காதில் விழுந்திருக்க, ''என்ன இது பேய்களும் மோகினிகளுமா இங்கு வசிக்கின்றன?'' என்றவர் அதே குறும்போடு மனைவியைப் பார்த்து, ''நீ ஒருத்திதான் அப்படி என்று நினைத்தேன்? நீ பெற்ற குட்டிகளும் அப்படித்தானா?'' என்றபடி சிரிக்க ஆரம்பித்தார்.

''வந்துட்டீங்களா? என்னைக் கிண்டலடிக்காம உங்க ளால இருக்க முடியாதே?'' என அங்கலாய்த்தவள்,

''அப்பப்பா...! என்னை விடுங்க. எனக்கு நிறைய சமையல் வேலை இருக்கு. இந்த குட்டிப் பேய்களின் பஞ்சாயத்துக்கு நீங்கதான் லாயக்கு..!'' என்றபடி மீண்டும் சமையலறையில் புகுந்து கொண்டாள் அவள்.

''என்ன பிரச்சினை உங்களுக்கு?'' என்று விசாரணை யில் இறங்கினார் சபேசன்.

அக்காவிற்கு முந்திக் கொண்டு படபடவென விவரித் தான் தம்பி.

''அப்பா, எனது தமிழ் பாடத்தில் இலக்கணம் பற்றிய ஒரு சந்தேகத்தை அக்காவிடம் கேட்டேன். பதில் சொல் லத் தெரியாமல் திருதிருவென விழித்தாள். காலேஜ் வரைக்கும் வந்து விட்டாய். இது கூட உனக்குத் தெரிய வில்லையா? நீ சரியான முட்டாள் என்றேன். அதற்கு அவள் அக்காவான நான் முட்டாள் என்றால் தம்பியான நீ படுமுட்டாள் என்று கிண்டலடித்தாள். அவ்வளவுதான் விஷயம்'' என்றபடி மீண்டும் மாலாவின் பிடிகளில் இருந்து தப்பிக் கொண்டு, ''என்னைப் பிடி பார்ப்போம்...'' என ஓடினான்.

மறுபடியும் புலியாய் மாறி அவனை விரட்டப் போனாள் மாலா.

சபேசன் சிரித்தபடியே அவர்களது விளையாட்டைப் பார்க்க லட்சுமி மறுபடியும் அடுக்களையில் இருந்து வெளிவந்தவள் இந்த விரட்டும் காட்சியைப் பார்த்து வெகுண்டாள்.

''நீங்களாவது அவளுக்குப் புத்தி சொல்வீர்கள் என்று பார்த்தால் நீங்களும்கூடச் சேர்ந்து ரசிக்கிறீர்களே?'' என கணவனை ஒரு சாடு சாடியவள் அதே வேகத்தில் ஓடி வந்த காஞ்சனமாலாவை வழிமறித்தாள்.



''ஏண்டி... ஒரு வயதுப் பெண். கல்லூரிப் படிப்பை முடிக்கப் போகிறாய்.. இன்னமும் ஐந்தாப்புப் பைய னுடன் சிறு பிள்ளைபோல் விளையாடிக் கொண்டு... உனக்கு புத்தியே இல்லையா?'' என்றாள் சற்று அதட்டும் குரலில்.

காஞ்சனமாலாவோ சற்றும் அதில் பயம் கொள்ளா மல், ''ஐயோ..! அம்மா அம்மா!'' என்றபடி ஓடிப்போய் அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டவள், ''எனக்கு நிஜமாகவே புத்தியே இல்லையம்மா. இருந்த கொஞ்ச நஞ்ச புத்தியும் இந்த பாசக்கார கொழுப்பெடுத்த தம்பி யுடன் சேர்ந்து நன்றாக மழுங்கடித்துப் போய் விட்டது. அதனால் இன்று மட்டும் கடனாய் உங்களிடம் உள்ள அபரிதமான புத்தியை எனக்குக் கொடுத்து உதவுங் களேன்! ப்ளீஸ்..! என் செல்ல அம்மா இல்லையா நீங் கள்..?'' என லட்சுமியின் கன்னத்தைப் பிடித்துக் கொஞ் சியபடி சிணுங்க. மகளின் குறும்பில் கோபம் மறைந்து புன்னகை எழும்பியது தாய்க்கு.

அந்த புன்னகையை அவசரமாய் மறைக்க முயன்றபடி, ''போடீ குரங்கு!'' என்றபடி அவளிடமிருந்து விடுபட்டு மீண்டும். சமையலறைக்குள் புகுந்தாள்.

பாலு ஓடியவன் திரும்பி, ''பார்த்தாயா..? அம்மாகூட உன்னை புத்தியில்லாத முட்டாள் என்று சொல்லி விட் டாள். நான் சொன்னது சரிதானே..?'' என்க... ''உன்னை இன்று என்ன செய்கிறேன் பார்...'' என மறுபடியும் அவனை விரட்ட ஆரம்பித்தாள் காஞ்சனமாலா.

அவன் பாலுவோ அப்படியே வெளியில் ஓடிவிடக் களைத்துப் போனவளாய் திரும்பி வந்து தந்தையின் காலடியில் உட்கார்ந்தாள் அவள்.

''இப்படி ஆடி ஓடி சுட்டித்தனம் செய்வது தப்பா... நீங்களே சொல்லுங்களப்பா?'' என்றாள்.

பரிவாய் அவள் தலையை வருடி சிரித்த சபேசன், ''தப்பே இல்லை கண்ணு...'' என்றார்.

''பின் அம்மா மட்டும் அடிக்கடி அப்படிச் சொல்கிறார்களே... அது.. அது.. பயமாய் நெஞ்சை உறுத்துகிறதே அப்பா?'' என்றாள் சிறிது கலவரக் குரலில்.

''அவள் கிடக்கிறாள்... விடு..! நீ எப்போதும் போல் விளையாடு செல்லம்..!'' என மறுபடியும் தலையை வருடி தட்டிக் கொடுக்க பயம் நீங்கியவளாய் எழுந்து துள்ளி ஓடினாள் காஞ்சனமாலா.

அவள் அப்படிச் சிட்டாய் போவதை ரசித்துப் பார்த்த சபேசன் முகத்தில் சட்டென இனம் புரியா கவலையொன்று படர ஆரம்பித்தது.

தீவிர யோசனையோடு தலை குனிந்தார் அவர்.



## 2

அன்று இரவு படுக்கையில் உட்கார்வதும் நிலை கொள்ளாமல் சிந்தனையுடன் எழுந்து நடப்பதுமாய் இருந்த கணவரை ஆச்சரியமாய்ப் பார்த்தாள் லட்சுமி.

''என்னங்க விஷயம்? எதுவும் பிரச்சினையா?'' என்றாள் முகத்தில் கேள்விக்குறியோடு.

வேகமாய் தலையசைத்தார் சபேசன்.



கூடவே, ''இன்று அலுவலகத்திற்கு சொர்ணம் போன் செய்து விட்டாள்...'' என்றார்.

'சொர்ணம்' என்ற பெயரைக் கேட்டதுமே லட்சுமிக்கும் திக்கென்றுதான் இருந்தது. சொர்ணம் சபேசனின் தூரத்து சகோதரி உறவு முறை. அவளுக்கு 'அடாவடி அத்தை' என்றுதான் சுற்றத்தார் வைத்திருக்கும் செல்லப் பெயரும் கூட.

அவள் போன் செய்தால் விஷயம் விவகாரமாய்த்தான் இருக்கும் இன்று எதற்கு போன் செய்தாள்? என்ன கேட்டிருப்பாள்?

''உடனடியாக பணத்தைக் கொடுக்க வேண்டுமாம். அல்லது அவளது மகனான அந்த தறுதலை பாண்டிக்கு நம் செல்லத்தை மணமுடித்துக் கொடுக்க வேண்டுமாம். இல்லாவிட்டால் போலீஸ் கோர்ட் என படியேறி சந்தி சிரிக்க வைத்து விடுவாளாம்...''

மூச்சு விடாமல் கடகடவென சொல்லி முடித்தார் சபேசன். ''என்ன இவ்வளவு தூரம் மிரட்டுகிறாளா?'' என்றாள் லட்சுமி நம்ப முடியாமல்.

''மிரட்டலேதான்! இவ்வளவு நாள் காத்திருந்து அவள் பொறுமையிழந்து விட்டாளாம். மேலும் பாண்டி நம் காஞ்சனமாலாவை கட்டி வைக்கும்படி அடிக்கடி நச்சரிக்க ஆரம்பித்து விட்டானாம்...''

''சரிதான்! அந்த வேலை வெட்டி இல்லாத தறுதலைக்குப் போய் நம் பொண்ணை...'' என்று ஆரம்பித்தவள், ''குரங்கு கையில் கிளி மாட்டின கதைதான்...'' என முடித்தாள்.

''அதையும் அவளிடம் அப்படியே சொல்லிவிட்டேன். அதற்கும் வெட்கமில்லாமல், உன் தங்கக் கிளியான

மகள் குரங்கான என் மகனின் மனதை மாற்றி அவளையும் கிளியாக்கி விடுவாளே என்கிறாள்... அவள்'' என சபேசன் சொல்ல லட்சுமிக்கு மூச்சடைப்பது போல்தான் இருந்தது.

''என்னங்க சொல்றீங்க..?'' என பதறியவள்,

''இந்த முறை சொர்ணம் எப்படியும் சம்பந்தம் பண்ணி விடணும்ன்னு தீவிரமா இருக்கிறதாகத் தெரியுதே? எப்படி அவளைச் சமாளிக்க? எப்படி அவளிடமிருந்து தப்பிக்க?'' என்றாள் கவலையோடு.

சபேசனும் நெற்றியில் வேதனைக் கோடுகள் தெரிய தலையசைத்தவர், ''அதான் எனக்கு ஒன்றும் பிடிபடவில்லை லட்சுமி. அந்த பத்து லட்சப் பணம் மட்டும் நம்மகிட்ட இருந்தா அவா மூஞ்சியில விட்டெறிஞ்சி விடலாம். அதுவும் நம்ம கையில இல்ல. அவ்வளவு பெரிய தொகையை கடனாவோ வட்டிக்கு வாங்கியோ நம்மால புரட்ட முடியாது. தனியார் கம்பெனியில சாதாரண கணக்கரா இருக்கும் என்னால அந்த பத்து லட்சத்தை சம்பாதிப்பது சேமிப்பது எல்லாம் நிச்சயமா முடியாத காரியம்தான். ஆனா.. இப்போ சொர்ணம் இன்னிக்கு மிரட்டுறதைப் பார்த்தா அவா இனியும் பொறுக்க மாட்டா... விபரீதமா எதாவது பண்ண துணிஞ்சிட்டான்னு மட்டும் தெரியுது...'' என்றார் சோகம் பொங்க.

''அவள் சொர்ணம் சொன்னபடி போலீஸ் கோர்ட்டுன்னு அவா போய்டுவாள்ன்னு நீங்க பயப்படுறீங்களா?'' தனது பயத்தை வெளிக்காட்டாமல் லட்சுமி கேட்டாலும் சபேசனின் உறுதியான தலையசைப்பு அவளை கலவரமேபடுத்தியது.



''கண்டிப்பா அவள் போகலாம். அவளும் துணிச்சலா போகக் கூடியவள்தான். மேலும் அவாகிட்ட நாம கையெழுத்துப் போட்டுக் கொடுத்த பத்திரம் ஆதாரங்கள் எல்லாம் இருக்கு. அதனால அவா புகார் செஞ்சு நடவடிக்கை எடுத்தா நாம சட்டத்தில வகையா மாட்டிக்கிடுவோம்...''

''நீங்க சொல்றதைப் பார்த்தா சொர்ணம் நினைச்சா... ஜெயிலுக்குக் கூட நம்மை அனுப்பிவிட முடியுமா?'' என்றாள் குரல் நடுங்க.

''ம்ம்...'' என சபேசன் லேசாக உச்சரித்தவர், ''அதைக் கூட நாம வக்கீல் கேஸ்ன்னு வைச்சுத் தவிர்த்திரலாம். ஆனா... விஷயம் பேப்பரில் எல்லாம் வந்து நம் குடும்ப மானத்தைக் கப்பலேத்தி விடும்ன்னுதான் பயமா இருக்கு...'' என்றார்.

''அப்போ என்னதாங்க செய்ய?''

மறுபடியும் உதடுகளை வெறுமையாய் பிதுக்கியவர், ''அதான் தெரியல லட்சுமி. யோசிச்சு... யோசிச்சுப் பார்க்கேன். ஒரு வழியும் அகப்படல. ஆனா இதை எப்படியும் தடுத்தாகணும். அந்த சொர்ணத்தோட மகன் பாண்டி... எல்லா கெட்டப் பழக்கங்களும் உள்ள பொறுக்கி. வேலை வெட்டி ஒண்ணும் கிடையாது. இந்த சொர்ணம் வட்டிக்கு விட்டு சம்பாதிக்கிற பணத்தில ஜாலியா வாழ்க்கையை ஓட்டிக்கிட்டு இருக்கிற அவனுக்குப் போய் நம்ம பொண்ணை எப்படிக் கொடுக்க முடியும்?'' என்றார் மேலும் கவலை பொங்க.

''அதைச் சொல்லுங்க. இந்த சொர்ணம் சொந்தக்காரியா இருக்காளேன்னு அஞ்சு வருஷத்துக்கு முன்னால என் உடம்பில ஏற்பட்ட கட்டி ஒண்ணை நீக்க தேவைப்

பட்ட ஒரு லட்ச ரூபாய் பணத்திற்காக நீங்க கடன் வாங்கினீங்க. ஆனா இந்த சொர்ணம் அந்தத் தொகைக்கு வட்டி... வட்டிக்கு வட்டின்னு அநியாயம் செஞ்சு இப்போ பத்து லட்ச ரூபாயைக் கொடுங்கன்னு திடீர்ன்னு நெருக்கடி கொடுக்கிறா. இது எந்த வகை நியாயம்ங்க..?'' என்றாள் லட்சுமி ஆற்றாமையாய் அப்பாவித்தனமான குரலில்.

சபேசன் அதை ஆமோதித்தவர், ''அநியாயம்தான் ஆனா... அதை யார்கிட்ட போய் நியாயம் கேட்க முடியும். சொர்ணம் குணம் தெரியாம அவர்கிட்ட போய் பணத்தை வாங்கினது நம்ம தப்பு லட்சுமி...'' என்றவர் ஏதோ யோசனை தோன்றியவராக, ''ஆனா ஒரு அருமையான வழியும் இருக்கு லட்சுமி. அது.. அது.. சரிப்பட்டு வருமான்னுதான் யோசனையா இருக்கு...'' என்றார் முகத்தில் திடீர்ப் பிரகாசம் தோன்ற.

''என்ன வழிங்க? சொல்லுங்க!''

''லட்சுமி... நான் வேலை பார்க்கும் மில் முதலாளிக்கு நீலகிரி மலையில குடகுமலைன்னு ஒரு டீ எஸ்டேட் இருக்கு. அதை கவனிக்க அடிக்கடி சின்ன முதலாளி செல்வது வழக்கம். இந்த முறையும் அவரு அடுத்த வாரம் அந்த எஸ்டேட் கணக்கு வழக்குகளை கவனிக்க கிளம்ப இருக்கிறார். அவருக்கு கணக்கு வழக்குகளை பார்க்க அவர் சொல்லும் வேலைகளைச் செய்ய ஒரு செகரட்டரி தேவைப்படுறதா பேசிக்கிட்டாங்க. அதுவும் எஸ்டேட்டில் சின்ன முதலாளி இருக்கும் இரண்டு மாசத்துக்கு மட்டும்தான். பேசாம நம்ம பொண்ணை காஞ்சனமாலாவை அந்த செகரட்டரி வேலைக்கு



அனுப்பிரலாமா.. எப்படி என் யோசனை?'' என்றார் சபேசன் ஆவலான குரலில்.

''என்னது செகரட்டரி வேலைச்கா? நம்ம பொண்ணு படிப்பு என்னாகும்ங்க. என்ன சொல்றீங்க நீங்க?''

லட்சுமி கேட்க அதற்கும் விளக்கம் கொடுத்தார் சபேசன்.

''லட்சுமி, மாலாவுக்கு இப்போ செமஸ்டர் பரீட்சை நடந்துகிட்டு இருக்கு. எப்படியும் இந்த வாரம் முடிஞ்சு.. ஒரு மாசம் லீவுதான். பின் மெடிக்கல் லீவு அது இதுன்னு எதாவது சொல்லி கூட ஒரு மாதம் லீவு எடுத்தாப் போச்சு. ஏன்னா... இப்போ நமக்கு முக்கியம் நம்ம குழந்தையின் படிப்பு இல்ல. சொர்ணத்துகிட்ட இருந்து அவளைக் காப்பாத்தறதுதான்.''

''சரி... அப்படியே சின்ன முதலாளிக்கு செகரட்டரியா அனுப்பிட்டா சொர்ணம் சும்மா விட்டிருவாளாங்க?''

''விடமாட்டாதான்! ஆனா என்னோட முதலாளி மில் அதிபர் பெரிய இடம்ன்னு அவளுக்கு நல்லாத் தெரியும். அவர்தான் செகரட்டரி வேணும்ன்னு கட்டாயப்படுத்தி கூப்பிட்டுட்டுப் போயிட்டாருன்னு அவா கிட்ட சொன்னா அவளால ஒண்ணும் செய்ய முடியாது. ரெண்டு மாசம் வழியில்லாம காத்திருக்கத்தான் செய்வா. நாம அந்த ரெண்டு மாசத்துக்குள்ள... நம்மோட பூர்விக கிராம விவசாய நிலத்தை நகை நட்டை விற்று பத்து லட்சம் புரட்டிருவோம். சொர்ணத்தோட கடனை அடைச்சு அவளோட பிடியில இருந்து தப்பிச்சுருவோம். என்ன சொல்ற?''

கடகடவென தனது திட்டத்தை சபேசன் சொல்ல... லட்சுமி பயம் நீங்காதவளாய் தலையசைக்கத்தான் செய்தாள்.

கூடவே அவர்கள் பேசும் சம்பாஷணைகள் எல்லாம் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த காஞ்சனமாலாவின் காதுகளிலும் தெளிவாய் விழுந்தது.



# 3

மறுநாள் தாய் தந்தையிடம் தான் வேலைக்குச் செல்ல சம்மதம் என உறுதியாய் தெரிவித்தாள் காஞ்சனமாலா. அதற்கு அடுத்த நாள் பெரிய முதலாளியும் தந்தையும் சொல்லி விட்டாலும் எம்.டி. பொறுப்பில் இருக்கும் சின்ன முதலாளியான தினகர் அவளை செகரட்டரி வேலைக்காக ஒரு சின்ன இன்டர்வியூ செய்ய விரும்பினதாக தந்தை சொன்னதும் அன்றே அவருடன் அலுவலகம் கிளம்பி விட்டாள் காஞ்சனமாலா.

சின்ன முதலாளி தினகர் வியாபாரத்தில் படு சுட்டி. நம் நிறுவனம் எக்ஸ்போர்ட், கன்ஸ்ட்ரக்ஷன், சாப்ட்வேர் என பல துறைகளில் கால் பதித்து வளர்ந்ததுக்கு அவரே முக்கிய காரணம். அப்பாக்கு தப்பாத பிசினஸ் மூளை. என தந்தை புகழாரம் சூட்டி எம்.டி. அறையின் ரிசப்ஷன் முகப்பில் அவளை உட்கார வைத்து விட்டுப் போனார்.

இரண்டே நிமிடங்களில் அவளை இன்டர்காம் மூலம் உள்ளே அழைத்து விட்டான் தினகர்.

பெரிய விசாலமான அறையில் குஷன் இருக்கையில் புன்னகையுடன் அந்த இளைஞன்! இவன்தான் அந்த



எம்.டி.யா? அது என்ன... சொன்னார்கள்? சின்ன முதலாளி?

அவனுக்கு வயது இருபத்தி ஏழு... எட்டு இருக்கக் கூடும். ஆனால் வயதுக்கு மீறிய அனுபவ முதிர்ச்சி அதிகார கம்பீரம் அசாத்தியமாய் அவனிடம் தொனித்தது.

புன்னகையைப் பெரிதாக்கி உடனே உட்காரச் சொன்னான். அவள் நீட்டிய ஃபைலை வாங்கி அவளது டைப்பிங், என்.எஸ்.எஸ். கம்ப்யூட்டர் கோர்ஸ் சர்டிபிகேட்டுகளை எல்லாம் அனாசியமாய் புரட்டினான்.

காஞ்சனமாலாவும் சும்மா இருக்காமல் மெல்ல அவனை அளவெடுத்தாள். நெடுநெடு உயரம், உறுதியான உடற்கட்டு, பரந்த நெற்றி, அலை அலையான சிகை, கூர்மையான கண்களின் உள்ளே மின்னலாய் சுழலும் காந்த விழிகள்... அந்த பணத்தை பிரதிபலிக்கும் கம்பீரம் இன்னும்... அப்படிப் பார்த்தவள் இவன் எப்படிப்பட்டவனாக இருக்கக் கூடும்? என யோசிக்கவும் செய்தாள்.

சர்டிபிகேட்டுகளைத் திருப்பி அவளிடம் நீட்டியவன், 'குட்' என்றபடி அவளை மேலிருந்து கீழ் வரை ஊடுருவும் ஒரு பார்வையைச் சட்டென செலுத்த அவள் சற்று மிரளவே செய்தாள்.

ஆனால் மறுகணமே, ''பார்ப்பதற்கு நீ மிகவும் அழகாகவே இருக்கிறாய். ஆனாலும் உன் அழகான அந்த தலைக்குள் இருக்கும் மூளையைப் பற்றி எனக்குக் கொஞ்சமாவது தெரிந்தாக வேண்டும். அதற்காக சில கேள்விகள்...'' என நிறுத்தியவன், ''கேட்கலாமா?'' என்றான் அனுமதி கேட்பதுபோல்.

அவள் முகம் மாறி சுவாரஸ்யமானாள்.

''கேளுங்கள் ஸார்... தெரிந்தவரை பதில் சொல்கிறேன்...'' என்றாள் பவ்யமாக.

''தட்ஸ் குட்...!'' தலையசைப்புடன் கேள்விகளை ஆரம்பித்தான் அவன்.

எல்லாமே பொது அறிவு, நாட்டு நடப்பு பற்றிய கேள்விகள்தான்!

அவள் தினம் தவறாது 'ஹிண்டு' பேப்பர் படிக்கும் வழக்கம் இருந்ததால் அவன் கேட்ட அத்தனைக்கும் டக்கென பதில் சொல்லி அசர வைத்தாள்.

''பரவாயில்லையே... சில பெண்கள் போல் குமுட்டையாய் இல்லாமல் நிறைய விஷயங்கள் தெரிந்து வைத்திருக்கிறாயே?'' என்றபடி அதீத வியப்பு காட்டி அந்த சந்தோஷத்தில் தனது கைகளைப் பெரிதாய் குலுக்க நீட்டினான். பதிலுக்கு பவ்யமாய் கை கூப்பி தவிர்த்தாள் அவள்.

''ஓ.. இந்த விஷயத்தில் நீ சுத்த கர்நாடகமா?'' எனக் கூறி அதற்கும் சிரித்தான்.

அவன் முகத்தில் எதோ ஒரு வசீகரம் தெரிந்தாலும் கூடவே ஒரு ஆபத்து இருப்பது போல் அவனது அந்த வினோதப் புன்னகையில் உணர்ந்தாள் அவள்.

''ஆல்ரைட்! உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. நான் கீரனூர் செல்லும்போது என் செகரட்டரியாக நீயும் அங்கு வருகிறாய். உன் தந்தையிடம் என் சம்மதத்தைச் சொல்லிவிடு. சரிதானே?'' என்றபோது பெரிதாய் தலையாட்டினாள் அவள்.



பின் அவன் போகச் சொன்னதும் அவன் ரூமில் இருந்து விடுவிடுவென ஓடி வந்து விட்டாள்.

தினகர் விஷயத்தில் என்னவோ ஒன்று அவளுக்கு இடித்தது. ஆரம்பம் முதல் அவன் பார்த்த பார்வை சரியில்லையா... அல்லது அவன் பேச்சு சரியில்லையா... அல்லது நம்மிடம் வேலை பார்ப்பவள்தானே என்ற திமிரில் அவன் காட்டும் துடுக்குத்தனமா... எதுவோ ஒன்று அவளுக்கு சரியாய் பிடிபடவில்லை. அவன் மேல் ஒருவித எரிச்சலைக் கிளப்பி குழப்பவே செய்தது.

ஆனால் ஆவலாய் எதிர் வந்த தந்தை முன் அவளால் எதையும் வெளிக்காட்ட முடியவில்லை.

''என்னம்மா சின்ன முதலாளியைப் பார்த்தாயா? என்ன சொன்னார்?'' என்றார் பிரயாசையாய்.

''வேலைக்கு வரச் சொல்லி விட்டார். நாளை மறுதினம் புறப்பட வேண்டுமாம்...'' என்றாள். தனது சம்மதத்தையும் தெரிவிப்பதுபோல்.

''அப்பாடா... அது போதும்..! இப்போது தான் நிம்மதியாக இருக்கிறது. இனி ஒரு மூன்று மாதங்கள் பிரச்சினையில்லாமல் ஓடிவிடும். அதற்குள் சொர்ணத்திற்கு கொடுக்க வேண்டிய பணத்தைப் புரட்டி பாக்கியை அடைந்து விடுவேன். உன்னையும் மணக்கமிரட்டும் பாண்டியின் ஆபத்திலிருந்து மீட்டு விடுவேன்...'' என்றார் பெருமூச்சு விட்டவாறு.

''ஆனால் உங்களை, அம்மா, தம்பியை எல்லாம் நான் பிரிந்தாக வேண்டுமே?'' என்றாள் காஞ்சனமாலா கவலை பொங்கும் குரலில்.

அந்தப் பிரிவின் வலியை உணர்ந்தவர் போல் அவள் தோள்களைத் தட்டியவர், ''ஒரு மூன்று மாதம்தானே

கண்ணு? படபடவென காலண்டரின் தேதியைக் கிழிப்பது போல் பறந்தோடி விடும். பிறகு நீ இங்கு வந்து விடலாம். எல்லா பிரச்சினைகளும் தீர்ந்து விடும். சரிதானா?'' எனவும் ஒப்புக் கொள்பவள் போல் தலை யாட்டினாள் அவள்.

ஆனால் நிஜமாக ஒருபுறம் அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது. யாருக்கோ பயந்து எங்கேயோ ஓடுவது போல் தோணியது. இது சரியா..? இதை விட்டால் வேறு வழியே இல்லையா? அப்பா... அம்மாவை... விடுவோம். நம்மால் கூட வேற வழியைச் சிந்திக்க முடியவில்லையே என வருந்தினாள்.

பாலு, ''ஐயோ அக்கா! உன்னை மூன்று மாதம் பார்க்க முடியாதா?'' என்று தவிப்பாய் கேட்டபோது அவளுக் கும் கண்களில் நீர் முட்டியது.

இருந்தாலும் அவனறியாமல் துடைத்துக் கொண்டு, ''மூன்றே மாதம்தானடா! காலண்டர் தேதியை சரசர வென கிழிப்பது போல் சிட்டாய் பறந்திடும். பின் நான் ஓடோடி வந்துவிடுவேன்...'' என்று தந்தை தன்னிடம் சொன்ன வார்த்தைகளை மாற்றிச் சொன்னவள், தந்தை யும் இதை பக்கத்தில் இருந்து கவனிப்பதை உணர்ந்து அவரைப் பார்த்து கண்களைச் சிமிட்டினாள்.

தாய் லட்சுமிதான் அவள் போட வேண்டிய உடைகள் பற்றி, அவள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றியெல்லாம் தனி லெக்சர் கொடுத்தாள்.

போய் அங்கு பெண்கள் விடுதி போன்ற அறை ஒன்றில் தனியாய் தங்கப் போகிறாய்..? உனக்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும்... யார் யாரிடம் எப்படிப் பேச



வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாம்?'' என மறுபடியும் அவளுக்கு 'கிளாஸ்' எடுக்க முயல, ''ஐயோ அம்மா! நான் என்று பாவாடை தாவணி போட்டு, ரோட்டில் இறங்கி நடக்க ஆரம்பித்தேனோ அன்றே நீங்கள் சொல்லும் இந்த ஊர், உலக நடைமுறைகளை எல்லாம் தெரிந்து கொண்டேன். நீங்கள் என்னை பொத் திப் பொத்தி வளர்ப்பது போலவே அங்கேயும் எதாவது ஒரு விடுதி பொந்துக்குள் இருந்து விட்டு பத்திரமாக திரும்பி வந்து விடுகிறேன். போதுமா என் செல்ல அம்மா?'' என்று கழுத்தை கட்டிக் கொஞ்சியபோது தங் களை மறந்து எல்லோரும் சிரித்தனர்.

ஆனால் அப்போதே காஞ்சனமாலாவினுள் தினகர் தன்னை உடம்பை ஊடுருவும் பார்வையொன்று பார்த்தது பயமாய் மனதில் தோன்றி மறைந்தது.

அதற்கும் அவள் அலட்டிக் கொள்ளவில்லை. பணக் காரனாய முதலாளியாய் இருந்தால் என்ன? யார் வாலை ஆட்டினாலும் ஒட்ட நறுக்கி விட வேண்டியதுதான். எத்தனை இடி மன்னர்களை செவிட்டில் பதம் பார்த்து, காதல் ஜொள்ளர்களைப் பார்வையால் பொசுக்கி எதிர் கொண்டிருக்கிறோம்? என தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டாள் அவள்.

ஊருக்குக் கிளம்பும் நாள் அன்று தந்தை சபேசன் அவளை தனியே அழைத்துப் பேசினார். ''சூழ்நிலைக் காக உன்னை இப்படியெல்லாம் அனுப்பி நானே சிரமப்படுத்துகிறேனே... கண்ணு? மனதுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது...'' என கண் கலங்கினார்.

அவரது கைகளை அழுந்தப் பற்றி சமாதானப்படுத் தியவள், ''ஐயோ! என்ன இது? நான் என்ன

ராணுவத்திற்கா சென்று போரிடப் போகிறேன்? உங்களது அலுவலகப் பிரிவில் வேறு ஒரு பகுதியில் போய் வேலை பார்க்கப் போகிறேன். இதற்குப் போய் வருந்தாதீர்கள்!'' என ஆறுதல் சொன்னாள்.

தந்தை மேலும், ''அப்புறம கண்ணு அவர் சின்ன முதலாளி பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் ஒரு மாதிரி என்று சொல்வார்கள். அதனால் நீ உன் வேலையை மட்டும் செய்து விட்டு ஒதுங்கி விடு. மற்றவர்களது அந்தரங்க விஷயங்களில் எதிலும் தலையிடாதே..!'' என்று சொல்ல புரியாமலே பலமாய் தலையாட்டினாள் அவள்.

ஆனால் தந்தை அப்படிச் சொன்னதற்கான அர்த்தம் மறுநாள் தினகருடன் செல்லும்போதுதான் புரிந்தது.



# 4

கீரனூர் எல்லையில் இருந்து ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில் மலையடிவாரம் ஒன்றில் அந்த 'தினகர் டீ எஸ்டேட்' அமைந்திருந்தது.

பூம்பொழில் என பெயருக்கேற்ற அழகான மரங்கள் சூழ்ந்த கிராமத்தில் எஸ்டேட். எஸ்டேட்டைச் சுற்றி பணியாளர் குடியிருப்புகள். சிறு சிறு வீடுகள்.

அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் அரசு கலைக் கல்லூரியும் அங்கு அமைந்திருந்ததால் பக்கத்து சுற்று



வட்டார கிராமப் பகுதியில் இருந்து படிப்பதற்காக எல்லோரும் பூம்பொழில் வந்தார்கள். அதனால் பஸ் வசதிகள் அதிகமாகி எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே கிராமம் தென்பட்டது.

அங்கு புதிதாய் எழும்பி இருந்த மகளிர் விடுதி ஒன்றில்தான் காஞ்சனமாலா சேர்ந்து எஸ்டேட்டில் வேலை பார்க்கும்படி ஏற்பாடு. புதிய இடம் என்பதால் சபேசனே மகளுடன் கிளம்பி விட்டார்.

தாயிடமும் தம்பியிடமும் கண்ணீர் மல்க விடை பெற்று உடமைகளுடன் கிளம்பினாள் காஞ்சனமாலா.

ஆறு மணி நேரப் பயணத்திற்குப் பின் எஸ்டேட்டை அடைந்தனர். அன்றே மகளிர் விடுதியில் காஞ்சன மாலாவைச் சேர்த்தும் ஆயிற்று. அவளைப் போலவே நாலைந்து பெண்கள் அங்கு தங்கி எஸ்டேட் வேலைக் குப் போவது தெரிந்து மாலா மிகவும் நிம்மதியடைந்தாள்.

அதனால் தன்னை விட்டுவிட்டுத் தவிப்பாய் ஊருக்குக் கிளம்பிய தந்தையிடம் தைரியம் சொல்லி அனுப்பி வைத்தாள்.

அன்று மாலை வரை ஓய்வெடுத்துவிட்டு விடுதியில் தங்கியிருந்த மற்ற எஸ்டேட் ஊழியப் பெண்களைப் போய் பார்த்தாள். பேசினாள். எல்லோருமே கல்யாணம் ஆகாமல் அவளைப் போலவே சம வயதினர்.

அக்கவுண்டிங், டெஸ்பாட்ச், க்ளியரன்ஸ் என வெவ்வேறு பிரிவுகளில் இருப்பதாய் சொல்ல... அதில் இரண்டு பெண்கள் மட்டும், ''நாங்கள் தினகர் சாருக்கு செகரட்டரியாக பல வருடம் இருக்கிறோமே... நீ... அதற்கு?'' என்று கேட்டபோது காஞ்சனமாலா விழிக் கவே செய்தாள்.

அவள் பதில் சொல்லாததைக் கண்டு இருவரும் ஒருவருக்கொருவர் ஒரு அர்த்தமான பார்வை பார்த்து நமட்டுச் சிரிப்பு உதிர்த்தது. அவள் திகைப்பை அதிக மாக்கியது.

மறுநாள் அலுவலகம் சென்றபோது தினகரே அவளை வரவேற்று எஸ்டேட் ஆபீஸை சுற்றிக் காட்டினான். தேயிலை உற்பத்தி, ஏற்றுமதி அதனால் கம்பெனிக்கு லாபமாய் கிடைக்கும் பல லட்சங்கள் பற்றியெல்லாம் விளக்கினான்.

இறுதியில், மாலா பேசிய அந்த இரண்டு விடுதிப் பெண்களையும், ''இவள் மாலினி, இது ரோஸி எனது செகரட்டரிகள்'' என அறிமுகப்படுத்தி வைக்க, ''பின் நான் எதற்கு சார்?'' என்றாள் அவள் அதே வியப்போடு.

''இவர்கள் அலுவலக பிஸினஸ் செகரட்டரிகள். நீ.. எனது பர்ஸனல் அசிஸ்டெண்ட் அந்தரங்க உதவியாளினி!'' எனச் சொல்ல அவள் தலை அசைந்தது. கூடவே 'அந்த ரங்க' வார்த்தை உச்சரிப்பில் அவன் அழுத்தம் கொடுத் ததையும் கவனிக்கவே செய்தாள்.

தினகர் அவன் ரூமிற்கு நேர் எதிரான கண்ணாடி அறை ஒன்றை அவளுக்கு ஒதுக்கியிருந்தான். அதாவது எந்நேரமும் அவன் தனது அறையில் இருந்து அவளை அவன் கவனித்துக் கொண்டிருக்க முடியும். இது எதற்கு? அவள் வேலை செய்கிறாளா என்று கண்காணிப்பதற்கா... அல்லை வேறு எதற்குமோ?

புரியாமலே அலுவலக அக்கவுண்டண்ட் சொன்ன விஷயங்களை உள் வாங்கி தன் பணிபற்றி புரிந்து கொண்டாள் அவள். தினம் தன்னிடம் வரும் ஃபைல்



குறிப்புகளை எல்லாம் ஒழுங்கு படுத்தி தினகரிடம் கையெழுத்து வாங்குவதும், தினகருக்கு வரும் போன் கால்களை அட்டெண்ட் செய்வதும் அவளது வேலை என வரையறுக்கப்பட்டது. அன்றே தனது பணியை சிரத்தையாய் தொடங்கி விட்டாள்.

முதல் இரண்டு நாட்கள் வேலைகள் சுளுவாய் போயிற்று. தினகர் அதிகம் பேசாமல் ஒன்றிரண்டு வார்த்தைகளோடு நிறுத்திக் கொண்டான்.

மூன்றாம் நாள் தான் வந்த அந்த டெலிபோன் கால் அவளை ரொம்பவும் கலவரப்படுத்தியது.

''தினகர் சாருக்கு லைன் கொடுங்கள். நான் பேச வேண்டும்...'' என ஒரு இருபது வயது பெண் குரல் துடிப்பாய் ஒலித்தபோது திகைத்தாள்.

''மேடம் நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன? எதற் காக தினகர் சாரிடம் பேச வேண்டும். அதையெல்லாம் சொல்கிறீர்களா?'' என்றாள் குரலில் பவ்யம் காட்டியபடி.

அதற்கு மறுமுனையில் கேலியாக, ''நீ யார் தினகர் சாருக்கு புது செகரட்டரியா? ஆனால் நீ அழகாக இருப் பாயே... சரிதானே?'' என அலுட்பாக ஒலித்தது அவளை எரிச்சல் படுத்தியது.

இருந்தாலும் எரிச்சலை அடக்கிக் கொண்டு,

''மேடம், நான் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல் கிறீர்களா? உடனே தினகர் சாருக்கு லைன் கொடுக் கிறேன்...'' என்றாள்.

மறுமுனைக் குரல் முன்பைவிட அதீத கேலியோடு, ''நான் யார் எதற்குப் பேச வேண்டும் என்ற விபரங்களைச் சொல்லட்டுமா? பின் ஐயோ.. என நீ காதைப் பொத்திக்

கொண்டு அலறக் கூடாது சரியா?'' என்று கேட்டபடி, ''என் பெயர் லலிதா. தினகர் சார் அடிக்கடி என்னை கெஸ்ட் அவுஸிற்கு வரச் சொல்வார். இந்த வாரம் முழுவதும் நான் ப்ரீயாகத்தான் இருக்கிறேன். அதான் நான் கெஸ்ட் அவுஸிற்கு வர வேண்டுமா என்று சாரிடம் கேட்டுச் சொல்ல வேண்டும்...'' என்றாள் படபடவென அதே வேகத்துடன்.

''கெஸ்ட் அவுஸிற்கா? அங்கு நீங்கள் எதற்கு?'' என டக்கென காஞ்சனமாலா கேட்டு விட்டவள் பின் விஷயம் சுரீரென உறைத்தவள் போல் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

'ஒருவேளை... இந்தப் பெண்... அந்த மாதிரி பெண்ணா? அது போல்... அதற்காக இருக்குமோ? தினகர்... என்ன அப்படிப்பட்ட... பெண் பொறுக்கியா? கம்பெனி கெஸ்ட் ஹவுஸிற்கே இது போன்ற பெண்களை வரச் சொல்லி...? ... சே... சே..! அப்படி ஒரு போதும் இருக்காது...!' என அவள் நினைக்கும்போதே போன் குரல், ''என்ன யோசிக்கிறாய்? நீ யூகித்தது சரிதான். நான் அந்த மாதிரிப் பெண்தான். தினகர் சார் அதற்கு தான் என்னை வரச் சொல்வார். சீக்கிரமாக எனக்கு அவரிடம் லைன் கொடு.. எனக்கு நிறைய வேலைகள் இருக்கிறது...'' என பரபரத்தாள்.

மறுவினாடியே ஒன்றும் தோன்றாதவளாய் டக்கென தினகரின் போனுக்கு கனெக்ஷன் கொடுத்தாள்.

கையில் பிடித்திருந்த ரிசீவரை காதில் வைத்தால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது தெரிந்து விடும். அது அநாகரீகம் என எண்ணி டக்கென ரிசீவரை வைத்து விட்டாள்.



ஒரு ஐந்து நிமிட பேச்சிற்குப் பிறகே அந்தப் பெண்ணின் லைன் கட் ஆனது. டெலிபோன் மானிட்டரில் தெரிந்தது.

ஐந்து நிமிடம் தினகரிடம் பேசி இருக்கிறாளா? அப்படியானால் அவள் சொன்னது எல்லாம் உண்மைதானா? தினகர் கம்பெனி கெஸ்ட் ஹவுசிற்கே பெண்களை வரவழைத்து சுகம் தேடும் பெண் பித்தனா? அப்படிப்பட்ட ஸ்திரீ லோலன் ஒருவனிடமா அவள் வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள்?

தினகரனின் செகரட்டரியாக சொல்லப்பட்ட மாலினியும் ரோஸியும் முதல் சந்திப்பில் அவளை ஒரு அர்த்தமான பார்வை பார்த்தவாறு நமட்டுச் சிரிப்பு சிரித்தது ஞாபகத்திற்கு வந்தது.

ஆனால் அப்பா ஒன்றும் புரியாமல், 'சின்ன முதலாளி தினகர் குணத்திலும் வேலையிலும் தங்கம்...' என்றெல்லாம் சர்டிபிகேட் கொடுத்தாரே?

இந்த அவுட் ஹவுஸ் சமாச்சாரங்கள் எல்லாம் அப்பாவிற்குத் தெரியாதா? அல்லது தெரியாமல் போய் விட்டதா?

குழம்பியவளுக்கு அடுத்த சில மணி நேரத்திலேயே தெள்ளத் தெளிவான விடை ஒன்றும் கிடைத்தது.



## 5

அன்று மாலை எஸ்டேட்டின் தேயிலைத் தோட்டப் பகுதிக்கு உற்பத்தி நிலையைப் பார்க்க தினகர் கிளம்பிக் கொண்டிருந்தான்.

கண்ணாடி தடுப்புகளுக்கு வெளியே அவள் நிற்பதைப் பார்த்ததும் வெளிவந்தவன், ''நீ நம் எஸ்டேட் தேயிலைத் தோட்டத்தைப் பார்த்திருக்க மாட்டாய். உடன் வந்து தெரிந்து கொள்'' என அவளையும் அழைத்துச் சென்றான்.

ஜீப்பில் அமர்ந்து அவன் ஸ்டார்ட் செய்ய பக்கத்து ஸீட்டில் அவள் அமர்ந்து கொண்டாள்.

ஜீப் மலைச்சரிவான செம்மண் பாதைகளில் சென்று அடர்ந்த மரங்கள் வழியாக தேயிலைத் தோட்டப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சில்லென்று காற்று உடம்பைத் துளைக்க இயற்கையின் அழகை வெகுவாய் ரசித்த காஞ்சனமாலா அந்த ரம்மியமான சூழலை ஆர்வமாய்ப் பார்த்தாள்.

அதைத் தற்செயலாய் உற்று கவனித்த தினகர், ''அழகு... அழகைப் பார்த்து ரசிக்கிறதோ... வேடிக்கை தான்!'' என்றான்.

அவன் சொல்வதன் அர்த்தத்தை முழுவதும் உணராமலே, ''என்ன... சொன்னீர்கள்?'' என்றாள் அவள்.

''கண்ணாடியை அடிக்கடி பார்க்கும் பழக்கம் உண்டு தானே?'' என்றவன் சட்டென அதே தொனியில், ''உன் சிறு இடை, அந்த நளினமான வளைவுகள், காந்தமான கண்கள், பழத்துண்டுகளான உதடுகள்.. இன்னும் செக்கச் செவேலென கிறங்கடிக்கும் சிவப்பு அழகில் மன்மதன் ஏவிவிட்ட ரதிபோல்தான் நீ ஜொலிக்கிறாய். இதுவெல்லாம் உனக்குத் தெரியாதா? அதனால் தான் இந்த அழகு அந்த இயற்கை அழகை ரசிக்கிறதே. என வியப்பானேன்!'' என்றான் சர்வ சாதாரணமாக.



அவன் முடிக்க நிஜமாகவே முகம் சிவந்து அவளுக்கு ஒரு மாதிரியாய் போயிற்று. இரண்டே வரியில் அவள் உடம்பை எல்லை மீறி பார்ப்பது போல் எல்லை மீறி வர்ணித்தும் விட்டானே!

அடிக்கடி தன்னை ஊடுருவும் ஒரு பார்வை இவன் பார்ப்பது இதற்காகத்தானா?

''ஸார்.. என்ன... இது...?'' என்றாள் ஒரு அதிர்வோடு கோபமாக.

''என்ன... என்னாயிற்று...?'' என்றபடி எதுவுமே அறியாதது போல் வண்டியின் வேகத்தை குறைத்து அவளை உற்றுப் பார்த்தான்.

''இப்படியா ஒரு பெண்ணை அவளிடமே வரை முறை இல்லாமல் வர்ணித்துப் பேசுவது?'' என்றாள் அதே சீறலாய்.

''ஓ... நீ... அதைச் சொல்கிறாயா?'' என்றபடி சிரித்து மறுபடி வண்டியின் வேகத்தைக் கூட்டியவன், ''அழகை... ரசிப்பது... அதை விமர்சித்து வர்ணிப்பதும்.. இதிலெல்லாம் தவறேதும் இல்லை. மேலும் ஒரு ஆணால் பெண்ணின் அழகு வர்ணித்து புகழப்படும்போதுதான் அது அந்தப் பெண்ணிற்கே உண்மையான ஒரு அழகை உண்டு பண்ணுகிறது. இது எனது தாழ்மையான அபிப்பிராயம்...'' என அதே சிரிப்புடன் முடித்தான்.

''ஆமாம் பெரிய கண்டு பிடிப்புதான்! ஆனால் இதே போல் நீங்கள் தெருவிலோ பஸ் ஸ்டாப்பிலோ நிற்கிற பெண்களிடம் போய் வர்ணித்துச் சொல்லிப் பாருங்கள் நிச்சயம் செருப்படிதான்..'' என்றாள் தன் கோபம் முழுவதையும் குரலில் காட்டியவாறு.

அவன் அதற்கும் வேறு மாதிரி கொக்கி போட்டு அவள் வாயைக் கிண்டினான்.

''அதாவது... நான் மட்டும் உன் முதலாளி இல்லை யென்றால் நான் இப்படிச் சொன்னதற்கு நீ கண்டிப்பாய் செருப்படி கொடுத்திருப்பாய் எனச் சொல்லாமல் சொல்கிறாய். அப்படித் தானே?''

நம்மைப் பற்றி இவனுக்குப் புரிய வைக்க இதுதான் சரியான சந்தர்ப்பம். விடக்கூடாது... என நினைத்தவள், ''ம்ம்... கண்டிப்பாக! அதிலென்ன சந்தேகம்?'' என்றாள் மறுபடியும் குரலை உயர்த்தி.

அவன் சட்டெனச் சிரித்தான். ''ஆனாலும் உனக்கு தைரியம்தான் பெண்ணே. எனக்கே செருப்படி கிடைக் கும் எனச் சொல்லாமல் சொல்கிறாய்..?... ம்ம்.. நான் நினைத்தால் என் கன்னங்களில் உன் மூலமாக முத்த மழையைக் கூட பெய்யச் செய்ய முடியும்.. தெரியுமா?''

அவன் சொல்லியபடி சிரிக்க அவளும் பதிலுக்குச் சிரித்தவாறு, ''அப்படி முத்த மழை கேட்டதற்கும் சேர்த்து மற்றொரு கன்னத்திலும் செருப்படிகள் தொடரும். அதுவும் உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள்.

அவன் சட்டெனத் திரும்பி அவளைப் பார்த்து விட்டுச் சொன்னான்.

''உனக்குத் துணிச்சல் ஜாஸ்திதான். சம்பளம் கொடுக் கும் முதலாளியிடமே இப்படிப் பேசுகிறாயே...''

''ம்ம்... அந்த முதலாளி சும்மா ஒன்றும் எனக்கு சம் பளப்படி அளக்கவில்லை, ஸார். செய்கிற வேலைக்கான கூலிதான் அது.''



''ஓஹோ.. அப்படியா?'' என தினகர் புருவம் உயர்த் தியவன், ''அப்படியானால் கூலி கொடுத்தால் என்ன வேலை வேண்டுமானாலும் நீ செய்வாயா?'' என்றான்.

அவள் திரும்பி கண்கள் விரித்து அவனைப் பார்த்த போது அவன் வேண்டுமென்றே கண்களைச் சிமிட்டி சைகைபோல் செய்தான்.

காஞ்சனமாலாவுக்கு உடனே அன்று வந்த போன் காலும் கெஸ்ட் ஹவுஸிற்கு வரவேண்டுமா என்று கேட்ட பெண் குரலும் சட்டென ஞாபகம் வர, ''ஆமாம் ஸார்! நீங்கள் அப்படிக் கூலி கொடுத்து நீங்கள் சொல் லும் வேலைகளை எல்லாம் செய்ய உங்கள் கெஸ்ட் ஹவுசில் நிறைய அழகிகள் காத்திருக்கிறார்களே... அதை மறந்து விட்டீர்களா?'' என்றாள் அவனையே உற்றுப் பார்த்தவாறு.

அவள் அப்படிக் கேட்டதும் சட்டென அவனது முகம் மாறியது. ''என்ன.. என்ன சொல்கிறாய்? கெஸ்ட் ஹவுஸா..? யார் இதையெல்லாம் வந்து உன்னிடம் சொல்லியது?'' என்றான் குரலில் கோபம் பரவ.

அந்தக் கோபத்தை ரசிப்பவள் போல், ''வேறு யாரும் சொல்லவில்லை ஸார். அந்த கெஸ்ட் ஹவுஸ் அழகி இன்று உங்களுக்கு போன் செய்தாளே. அவள்தான் எல்லாவற்றையும் ஒப்புவித்தாள்..'' என்றதும் அவன் முகம் இறுக திரும்பிக் கொண்டான்.

அதற்குப் பின் அவன் ஒன்றும் பேசவில்லை. பார்வையை ரோட்டில் பதித்தவாறு ஜீப்பை வேகமாய் தேயிலைத் தோட்டங்களை நோக்கிச் செலுத்தினான்.

அவள் அவனை இன்னும் நன்றாக உற்றுப் பார்த்தாள்.

அவனது அந்த அமைதி பல்வேறு கேள்விகளை அவளுள் எழுப்பியது.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுப்பது போல் அவனைப் பற்றிய அந்தரங்க உண்மைகளை உடைத்துப் போட்டதும் அமைதியாகி விட்டானா?

அல்லது... வேலை பார்ப்பவளிடம் தன் குட்டு வெளிப்பட்டு விட்டதே எப்படி சமாளிப்பது என யோசிக்கிறானா?

முதலில் இவன் நல்லவனா..? கெட்டவனா? கெஸ்ட் ஹவுஸிற்கு பணம் கொடுத்து அழகிகளை வரவழைப்பவன் எப்படி நல்லவனாய் இருக்க முடியும்? பெண் பித்து பிடித்து அலையும் காமுகன்தானே?

ஆக - இப்படிப்பட்ட ஒருவனிடம் போய் வேலை பார்ப்பதே கேவலமான விஷயம்தானே! சே!

நொந்து போனவளை மேலும் நோகடிக்கும்படி மறுநாள் வேறு ஒரு சம்பவமும் நடந்தது.



# 6

மறுநாள் வழக்கம் போல் காஞ்சனமாலா ஃபைல் ஒன்றைக் காட்ட தினகரின் அறைக்குள் கதவைத் தட்டி அனுமதியுடன் நுழைந்தாள். நுழைந்தவள் அப்படியே திடுக்கிட்டாள்.

அங்கு அவள் கண்ட காட்சி?



அவள் திகைத்துப் போனாள். ஒரு கம்பெனி எம்.டி. அலுவலக அறையிலேயே... இப்படியா..? இப்படியா நடந்து கொள்வாள் என திடுக்கிட வைத்தது.

அலுவலக இன்னொரு செகரட்டரியான ரோஸி அந்த தினகரின் பக்கத்தில் நெருக்கமாய் நிற்க அவன் கைகளால் அவளை அணைத்தபடி அவளிடம் எதையோ கொஞ்சிக் கொஞ்சலாய் சொல்லிக் கொண்டிருந்தான்.

இந்த லட்சணத்தில் மற்றொரு கையில் ஃபைல் ஒன்றைத் திறந்து அதையும் பார்ப்பது போன்ற தினகரின் பாவனை வேறு!

சே! அலுவலக அறையா... அல்லது.. அந்தரங்க அறையா? இந்த ரோஸி...

அவளுக்கு... அவளுக்காவது.. கொஞ்சம் மூளை வேண்டாம்.. இப்படி அதை அனுமதித்துக் கொண்டிருக்கிறாளே? அவள் அவனுக்கு செகரட்டரியா அல்லது ஆசை நாயகியா? பட்டப் பகலில் இப்படி ஒரு கூத்தடிக்கும் கண்றாவி வேறு! சே!

அந்தக் காட்சியைச் சற்றும் எதிர்பாராத காஞ்சனமாலா முகம் சுழித்து அருவறுப்புடன் திரும்பப் போனாள்.

அப்போதுதான் அவள் உள்ளே வந்ததை உணர்ந்த தினகர், அவள் திரும்பிப் போவதை பார்த்து, ''நில்! என்ன விஷயம்?'' என்றான் எதுவுமே நிகழாதது போல்.

அப்போதும் அவனது ஒரு கை ரோஸியின் இடையை இறுகத் தழுவியிருந்தபடி இருந்ததை எரிச்சலுற கவனித்தவள் அதை அடக்கிக் கொண்டு, ''இந்த ஃபைலை உங்களிடம் காட்ட வந்தேன். தேயிலை ஏற்றுமதிக்கான புது ஆர்டர்கள் பற்றிய விபரங்கள் இதில் இருக்கின்றன.

ஆனால் நீங்கள் இப்போது இதைப் பார்க்கும் நிலையில் இல்லை என்பதால் பிறகு வந்து'' என அவள் வார்த்தைகளை முடிப்பதற்குள் அவசரமாய் குறுக்கிட்டான் அவன்.

''ஏன்... எனக்கென்ன.. நன்றாகத்தானே இருக்கிறேன். ஃபைலைக் கொடு..!'' என கையை நீட்டினான்.

அப்போதும் ரோஸியைப் பிடித்த பிடியை அந்த இறுக்கத்தை விடாமல் மற்றொரு கையினாலே அவளிடம் வாங்கினான்.

அவள் கண்களால் அவனையும் ரோஸியையும் மாறி மாறி ஒரு மாதிரியாக முறைப்பதை கவனித்தவன் பெரும் ஆச்சரியமாய், ''ஹேய்.. என்ன... எங்களை... முறைக்கிறாயா?'' என்று கேட்டும் விட்டான்.

இப்படி புரியாமலோ அல்லது வெட்கமில்லாமல் கேட்பவனிடம் என்ன பதில் சொல்ல முடியும்?

அவள் பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

''உனக்குப் பொறாமையா?'' என அவன் கேட்ட அடுத்த கேள்வி அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

என்ன ஒரு கர்வம் இவனுக்கு! இவன் ரோஸியை அப்படி உரிமையாய் பிடித்திருப்பதைப் பார்த்து அவளுக்குப் பொறாமை வந்து விட்டதாக்கும்?

''முட்டாள்தனம் ஸார்..!'' என்றாள் சினம் பொங்க.

''என்ன சொல்கிறாய் நீ?'' என குரலை உயர்த்திய தினகரின் பேச்சிலும் கோபம் எதிரொலித்தது.

''இப்படி அலுவலகத்தில் நடந்து கொள்வது சகிக்க முடியாத முட்டாள்தனம் சார்! உங்களை இந்த



கம்பெனியின் எம்.டி. என நினைக்கவே அருவறுப்பாய் இருக்கிறது...''

வந்த எரிச்சல் முழுவதையும் அவன் மீது வார்த்தைகளாய் கொட்டிவிட்டு அவன் பதிலுக்குக் காத்திராமல் விறுவிறுவென வெளியேறினாள் அவள்.

ஒரு கணம் திகைத்துப் போனான் தினகர்.

யாரும் அவனிடம் இதுவரை இப்படிப் பேசியதில்லை. அவனையே விமர்சித்து இப்படி அருவறுப்பாய் முகம் சுளித்ததில்லை!

காஞ்சனமாலாவும் அதே கொதிப்புடன் இருக்கையில் வந்து தொப்பென விழுந்தாள்.

அவளுக்கு ஏனோ தினகரின் செயல் பெரும் ஆத்திரத்தைக் கிளப்பியிருந்தது. 'வெட்கம் கெட்ட ஜென்மங்கள் எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும்...' என தினகர் விஷயத்தில் மட்டும் ஏனோ இருக்க முடியவில்லை.

அதனால் மூச்சு வாங்க ஒன்றும் ஓடாமல் ஒரு ஐந்து நிமிடம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவள் நினைத்தது போலவே ரோஸி ரூமை விட்டு அகன்ற ஒரு பத்து நிமிடத்தில் அவளை தன் ரூமிற்கு அழைத்தான் தினகர்.

கொண்டிருந்த கோபம் குறையாமலே உள்ளே சென்றாள் அவள்.

அவனோ எதுவுமே செய்யாததுபோல் பற்கள் முழுவதையும் காட்டி பால் வண்ணச் சிரிப்பொன்றை அப்பாவியாய் சிரித்தான்.

ஒருவேளை இது போன்ற வசீகரச் சிரிப்பில் தான் ரோஸி போன்ற பெண்கள் மயங்கி இவன் எல்லை மீறுவதை அனுமதிக்கின்றனரோ..? என நினைத்தாள்.

மூச்சு வாங்க நின்றவளை "இங்கே உட்கார்...!" என இருக்கையைக் காட்டி அழுத்தமாய்ச் சொன்னான்.

"நீ இந்த விஷயத்தில் சரியான எல்.கே.ஜி.யாக இருப்பாய் என நான் கொஞ்சமும் நினைக்கவில்லை..." என்றான்.

அவள் வந்த சினத்தை அடக்கிக் கொண்டு,

"எந்த விஷயம் ஸார்?" என்றாள்.

"புரியவில்லை..? ரிலேஷன்ஷிப்... ஆங்கிலத்தில்.. தமிழில்.. உறவுகள்.. இந்த விஷயத்தில் நீ ரொம்பவும் குழம்புகிறாய்... மற்றவர்களுக்கும் எரிச்சல் உண்டாக்குகின்றாய்.." என்றான்.. ஆத்திரப்படுவது போல்.

"ஸார்..." எனக் குரலை உயர்த்தி ஆரம்பித்தவள், "சுற்றி வளைப்பு எதற்கு? நேரிடையாகவே சொல்கிறேனே? நீங்கள் உங்களிடம் செகரட்டரியாக பணிபுரியும் ரோஸியின் இடையைத் தழுவி அணைத்துக் கொண்டபடி அலுவலக ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்த காட்சி... சே! அது நன்றாகவா இருக்கிறது? ஒரு கண்ணியமான நிறுவனத்தின் எம்.டி. நடந்து கொள்கிற முறையா.. நீங்களே சொல்லுங்கள்..!" என்றாள் பொரிந்து தள்ளியவளாய்.

பெரிதாய் பேசியவள் பதிலுக்கு அவனும் கோபமாய் சீறுவான் என எதிர்பார்த்து ஏமாறவே செய்தாள்.

அவன் எவ்வித சலனமுமில்லாமல் ஒரிரு கணம் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.



முகத்தில் அந்த அப்பாவித்தனம். எப்போதும் குடி கொண்டிருக்கிற அந்த வசீகர குழந்தைத் தனம்!

அதற்குள் தன் தவறை உணர்ந்து வருந்த ஆரம்பித்து விட்டானா?

அவள் ஆச்சரியமாய் நினைக்க அவளை மேலும் வியப்பூட்டும்படி தலையை வேகமாய் அசைத்தான்.

"நீ... சொல்வது மெய்தான்...! சரிதான். ஆனால் காஞ்சனமாலா.." என நிறுத்தியவன் முகத்தைக் கூர்மையாக்கியபடி. "நீ.. இப்படி நினைப்பதைப் போல... அந்த ரோஸி ஏன் நினைக்கவில்லை? அவள் என் கை அவளது இடையை வளைத்துப் பிடிக்க எப்படி அனுமதித்தாள்? ஏன் அவள் அதைத் தடுக்கவில்லை? காரணத்தைச் சொல்லு பார்ப்போம்.." என்றான்.

"அது... அது...." அவள் முதல் முறையாய் தடுமாறினாள்.

பின் சமாளித்து, "அது... அவளது.. மனநிலை... யாரைப் பற்றியும் கவலைப் படாத... ஒருவித மனோபாவம்."

"அவள் சொல்லி முடிக்கும் முன், "கரெக்ட்! அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். ரோஸியின் மனநிலை... அவள் மனதில் வைத்துக் கொண்ட வரைமுறை... அவள் அதில் தவறில்லை என்று நினைக்கிறாள்... நானும் அதில் தவறில்லை என்று நினைக்கிறேன்... ஆனால்... பார்... மூன்றாம் மனுஷியாய் பார்த்த உனக்குத்தான் அது தவறாகத் தெரிகிறது" என்றான்.

"கெட்டிக்காரத்தனமான பேச்சு ஸார்... இது" என்றாள் வெடுக்கென.

அதற்கும் அவன் விடவில்லை.

''கெட்டிக்காரத்தனமான பேச்சுதான். ஒத்துக் கொள் கிறேன். ஆனால் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?'' என்றான்.

''சொல்லுங்கள்...''

''ஆண் பெண்... என இருவரும் பழகுவது.. நெருக்கம் காட்டுவது.. என இரண்டுமே அவரவர் மனநிலையைப் பொறுத்தது... விருப்பம் இருந்தால் ரொம்பவும் நெருக் கம் கொள்வதும் அது தீர்ந்து விட்டால் விலகுவதும் தவறு அல்ல. இது என் பாலிஸி!'' என்று முடித்தான்.

''அதாவது.. நீங்க சொல்ல வருவது ஸார்...'' என புரியாதவள் போல் அவன் மனநிலையை முழுவதும் தெரிந்து கொள்ள விரும்புவது போல் இழுத்தாள்.

அவன் கொஞ்சமும் யோசிக்காமல் பட்டென போட்டு உடைத்தான்.

''ஆண் பெண் பழக்கமும் இயற்கையாய் எழும்பும் பால் உணர்வும் தவறு அல்ல என எண்ணுகிறவன் நான். விருப்பம் இருந்தால் அதனால் மற்றவர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லையென்றால்... வரைமுறை களைத் தூக்கிப் போட்டுவிட்டு... படுக்கை வரை நெருக்கம் காட்ட நான் தயார்தான்!'' என்றான் சிறிதும் வெட்கமின்றி.

அவனின் அந்த வெளிப்படையான பேச்சில் அவள் தான் சட்டென முகம் கன்றிப் போனாள்.

''எனக்கு இதெல்லாம் இந்தக் கண்றாவி எல்லாம் சுத்தமாய் பிடிக்காது!'' என்றாள் முகம் சுழிக்க.



அவனோ அதற்குக் கொஞ்சமும் அசராமல், ''இப்படித் தான் ரோஸியும் ஆரம்பத்தில் சொன்னாள். கடைசியில் எல்லைகளை எல்லாம் உடைத்துப் போட்டு விட்டு. என் படுக்கை வரை வந்து விட்டாள். நாளை அப்படி நீயும் வர மாட்டாய் என்பது என்ன நிச்சயம்?''

அவன் சொன்னதும் அப்படியே வெகுண்டு ''ஸார்...'' என அவள் வேகமாய் குரல் உயர்த்தியவள், ''நான் அப்படி ஒன்றும் கேவலமான பெண் இல்லை. கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள்...'' என்றாள் ஆக்ரோஷமாக.

ஆனால் அவன் மறுபடியும் புன்னகைத்தான். கண்களின் இமைகளை மேலும் கீழும் தாழ்த்தி சாந்தப் படுத்துவது போல் செய்தான்.

கூடவே, ''முதலில் நான் கூறுவதை எவ்வித உணர்ச் சியும் கொள்ளாமல் அமைதியாகக் கேள். கேட்கிறாயா?'' என்றவன் தொடர்ந்து, ''நான் ஒரு பேச்சுக்காகத்தான் அப்படிச் சொன்னேன். பொதுவாக எனது கணிப்புப்படி ஒரு மணமாகாத ஆணும் பெண்ணும் பழக நேர்கிற போது பெண்ணிடம் சில எதிர்பார்ப்புகள் பலவீனங்கள் இருப்பதை ஒரு ஆணால் உணர்ந்துவிட முடியும். ஆக அப்படி அந்த பெண்ணின் எதிர்பார்ப்புகளை சரியாக உணர்ந்து அவன் பூர்த்தி செய்து விட்டால்... அவள் அவனோடு கை கோர்த்து எந்த எல்லைக்கும் செல்ல தயாராகி விடுவாள் என்பது பெண்களைப் பற்றிய எனது கணிப்பு...'' என்றான் அவன் படுசாதாரணமாக தனது பெரிய கண்டுபிடிப்பு ஒன்றை விளக்குவது போல்.

ஓஹோ..! பெண் என்றால் அவ்வளவு இளக்காரமாய் உனக்குப் போய்விட்டதோ? என்ற எண்ணத்தில்

புருவம் உயர்த்தி முகத்தைச் சுழித்தவள், ''அது என்ன... ஒரு பெண்ணின் எதிர்பார்ப்புகள்... பலவீனங்கள்..? அதையும் உங்கள் திருவாயாலே கொஞ்சம் விளக்கமாகச் சொல்லி விடுகிறீர்களா?'' என்றாள்.

கேலி செய்யும் தொனியில்.

அவனோ சீரியஸாய், ''இன்னும் நான் சொல்வது உனக்குச் சரியாக புரிபடவில்லையா? ம்ம்.. புரியும்படி விளக்குகிறேன். இப்போது இந்த ரோஸியையே எடுத்துக் கொள். அவள் வேலைக்குச் சேர்ந்தபோது அவளது எதிர்பார்ப்புகளை பட்டியலிட்டால்... இறந்து போன அவளது தந்தையின் கடன் இரண்டு லட்சம், தங்கையின் படிப்புச் செலவு, நோய் வாய்ப்பட்ட தாயின் மருத்துவச் செலவு... என ஒரு சின்ன லிஸ்ட் இருந்தது. அவைகளைத் தெரிந்து கொண்டு உடனே பூர்த்தி செய்தேன். அவ்வளவுதான் ரோஸி மெல்ல.. மெல்ல.. என்னை நெருங்கி விட்டாள். நான் சொன்ன நெருக்கம் எதுவரை என்று உனக்குப் புரிந்திருக்கும் என நினைக்கிறேன். அதுபோல் ஒவ்வொரு பெண்ணிற்கும் ஒரு அளவுகோல் ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். உன்னிடம் உனக்குகூட...'' என ஆரம்பித்து அத்தோடு பேச்சை நிறுத்தினான் தினகர்.

கடவுளே! என்ன ஒரு திமிர் இவனுக்கு! பணம் இருக்கிற தைரியத்தில், இவனிடம் கைகட்டி வேலை செய்கிறோம் என்ற நினைப்பில் என்னவெல்லாம் அவனே யோசித்து முடிவு செய்து வெட்கமில்லாமல் கேட்கவும் செய்கிறானே?

இவனை என்ன செய்வது? இப்படிப்பட்ட ஒரு காமுகனின் கீழா செகரட்டரியாக வேலை பார்ப்பது?



சீறலாய் நிமிர்ந்தவள், ''என்னிடம் நீங்கள் நினைப்பது போல் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை. எந்தவித அளவுகோலும் இல்லை... போதுமா?'' என்றவள்.

தொடர்ந்து, ''இனி உங்களிடம் செகரட்டரியாக, உங்களின் கீழ் வேலை பார்க்க என் மனம் விரும்பவில்லை. எனவே இக்கணமே நான் வேலையிலிருந்து ராஜினாமா செய்கிறேன்..!'' என்றாள் கோபம் சற்றும் குறையாதவளாய்.



# 7

அரைமணி நேரத்தில் ரூமிற்கு வந்தவள் அதே வேகத்தில் உடைமைகளை பேக் செய்யத் தயாராகி விட்டாள்.

ஆனால் மனதுள் கேள்விகள் எழுந்து அவளை திகைக்க வைத்தது.

வேலையை விடுவது சுலபம். விருட்டென பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஊருக்குச் செல்வது அதை விட சுலபம்.

ஆனால்...?

அப்பா அம்மா திகைத்து விடுவார்களே?

அவள் வந்து விட்டால்... விஷயம் சொர்ணத்திற்கு தெரிந்து பின் மாமன் பாண்டி... தாலியுடன் விரட்ட ஆரம்பித்து விடுவானே?

அப்பாவிற்கு மூன்று மாத அவகாசம் இல்லாவிட்டால் பத்து லட்ச ரூபாய் பணத்தைப் புரட்டவும் முடியாதே?

என்ன செய்வது?

வீராப்பாய் வேலையை விட்டு விட்டுப் போய் அவர்கள் முன் போய் நின்று என்னதான் செய்ய முடியும்?

கடவுளே! இத்தனையையும் எப்படி மறந்தாள்? சட்டென அவனிடம் ராஜினாமா செய்கிறேன் என்று எப்படிச் சொன்னாள்?

அதற்காக?

சகித்துக் கொள்வதா..? பெரிய மன்மதன் போல் காமுகனாய் துரத்தப் பார்க்கும் ஒருவனது கீழ்வேலை பார்ப்பதா?

தினகர் ஒன்றும் தெரு ரவுடியோ பொறுக்கியோ இல்லையே. ஒரு நிறுவனத்தின் முதலாளி. என்ன பணம் இருக்கிற திமிரில் இப்படி சாகசப் பேச்சு பேசி தன்னிடம் வேலை பார்ப்போரை மயக்கப் பார்க்கிறான் அதற்கு செவி சாய்க்காமல் இருந்து விட்டால் அவனால் என்ன செய்ய முடியும்?

அத்துமீறி நுழைந்து அவளை பலவந்தப்படுத்தவா முடியும்?

இல்லைதானே? பிறகு ஏன் அவனுக்கு பயப்பட வேண்டும்? வேலையை விட்டு ஊரை நோக்கி ஓட வேண்டும்?

சிந்தனை தாக்க பெட்டியில் துணிகளை வைத்தவள் அதே போஸில் அப்படியே சிலை போல் உட்கார்ந்து விட்டாள்.



எவ்வளவு நேரம் அவள் அப்படி உட்கார்ந்திருந்தாள் என அவளுக்கே தெரியாது திடீரென யாரோ கதவை வெகுநேரம் தட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்து... என்ன ஒரு கவனக் குறைவு? என்றபடி வேகமாய் எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

வெளியே... அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

தினகர் கைகளைக் கட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

''உள்ளே வரலாமா?'' என்றான் பவ்யமான குரலில்.

அவள் திகைப்பதைப் பார்த்து ''என்னை எதிர்பார்த்திருக்க மாட்டாய்...'' என்றான் எடுத்த எடுப்பிலே.

''ம்ம்.. எதிர்பார்க்கவில்லை...'' என்றாள் அவளும் பதிலுக்கு வியப்பு பார்வை பார்த்தபடி.

''அப்புறம்..?'' என ஆரம்பித்தவன் டக்கென நிறுத்தி புருவங்களை உயர்த்தியவாறு ''இப்படி வெளியில் வைத்தே பேசி அனுப்பி விட்டால் பின் பண்பாட்டை மீறியதற்காக அசல் தமிழச்சியான உனக்கு தண்டனை கூட கிடைக்கக்கூடும் பரவாயில்லையா?'' என்றான்.

தவறை உணர்ந்து புன்னகைத்தவளாய் ''உள்ளே வாருங்கள் ஸார்...'' என்றாள்.

சிரிப்புடன் வந்து அவள் காட்டிய நாற்காலி இருக்கையில் உட்கார்ந்தான். எதுவுமே நடவாதது போல் முகத்தை வைத்துக் கொண்டு அவளைப் பார்த்தான்.

இப்படி அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு பார்ப்பதுதான் இவன் ஸ்பெஷாலிட்டியோ?

அவள் உள்ளுக்குள் நினைக்க, கட்டிலில் சூட்கேஸ் தயாராகிக் கொண்டிருப்பதை கவனித்தவன், ''அப்புறம்

என்ன முடிவெடுத்தாய்?'' என்றான் திரும்பவும் சாதாரணமாக.

அவள் முகம் மாறி இறுக்கம் படர்ந்தது.

''வேலையை ராஜினாமா செய்யப் போகிறேன். ஊருக்குக் கிளம்பப் போகிறேன்!'' என்றாள் சுருக்கமாக.

''அப்படியானால் நீ தோற்று விட்டாய். உன் தோல்வியை ஒப்புக் கொள்கிறாய்...'' என்றான் அவன் பதிலுக்கு.

தோல்வியா? என்ன சொல்கிறான் இவன்?

அவள் திகைக்க அவன் விளக்கினான்.

''எதற்காகவோ யாருக்காகவோ பயந்து வேலையை விட்டு ஓடினால்... அது.. தோல்விதானே?'' என்றான்.

''யாருக்காகவோ அல்ல... உங்களுக்காக...!'' என திருத்தினாள் அவள்.

''எனக்கா? எனக்கு பயந்தா ஓடுகிறாய்?''

''அப்படி கூட வைத்துக் கொள்ளலாம்...'' என்றாள் குரலில் வேகத்தைக் காட்டியபடி.

''நான் ஒன்றும் சிங்கமோ... புலியோ... இல்லையே... உன்னைத் திடீரென கடித்துக் குதறிவிட. என்னிடம் அப்படி என்ன பயம்?''

''பயம் உங்கள் மீது அல்ல... உங்கள் மோசமான பழக்க வழக்கங்கள் மீது...'' என்றாள் நேரிடையாக விஷயத்திற்கு வந்தவளாய்.

அவனும் விடவில்லை. ''நான் எப்படி இருந்தால் உனக்கென்ன?'' என்றான் பதிலுக்கு.



''எனக்கு ஒன்றுமில்லைதான்! ஆனால் ஒரு நல்ல நடத்தையுள்ளவரின் கீழ்தான் வேலை பார்க்கிறோம் என்ற உயர்ந்த நம்பிக்கை மனதில் எழும்.''

அவள் சொன்னதற்கு, ''ஓஹோ...'' என தலை சாய்த்துச் சொன்னவன், ''அப்படி ஒரு உயர்ந்த நம்பிக்கை உன் மனதில் எழுவதால் உனக்கு என்ன லாபம்?'' என்றான் விடாமல்.

''லாபம் ஒன்றுமில்லை. நிம்மதியுடன் வேலை பார்ப்பேன்...''

''அப்படியானால் எனது இந்தப் பழக்க வழக்கங்களால் உன் நிம்மதி போய்விடும். உன்னால் சரியாக வேலை பார்க்க முடியாது...''

''அப்படித்தான் ஸார்...!'' என்றாள் அவள் அழுத்தமாக.

இனி வேறு வழி இல்லை போலவே! இவனிடம் உடைத்துச் சொல்லியாயிற்று. பெட்டியுடன் ஊருக்குக் கிளம்பிவிட வேண்டியதுதான்!

அவள் மனதுள் திரும்பவும் திடமாய் முடிவெடுக்க எண்ணிய நிலையில்தான் அவன் டக்கென அப்படி ஒரு கேள்வியைக் கேட்டான்.

''ஒருவேளை. நான் என்னை... என் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டால்?'' என்றபடி புருவம் உயர்த்தி அவளையே உற்றுப் பார்க்க அவள் திகைத்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்? உங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்வீர்களா?''

''ம்ம்.. தேவைப்பட்டால் மாற்றிக் கொள்கிறேன்'' என்றான் அவன் தலையசைப்புடன்.

''எப்படி... எப்படி... என் ஒருவருக்காகவா?'' என்றாள் அவள் குரலில் கேலியை ஓடவிட்டபடி.

''உனக்காக மட்டுமில்லை... எல்லோருக்காகவும் தான்'' என்றான் அவன் குரலில் உறுதி காட்டி.

''எல்லோருக்காகவுமா?''

''ம்ம்.. பின் உன் போல் ஒவ்வொருவரும் பிடிக்க வில்லை என கோபித்து பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விட்டால் இந்த தினகர் அசோசியேட்ஸ் கம் பெனி என்னாகும்? திவாலாகிப் போய்விடுமே! அந்த பயம்தான்! அதற்காகத்தான்!'' மறுபடியும் அப்பாவி களையை முகத்தில் காட்டி சிரித்தான் அவன்.

அவளுள் ஆச்சரியம் கூடியது. கண்கள் விரிய உற்றுப் பார்த்தாள்.

''அப்படியானால் நீங்கள் நிஜமாகவே திருந்திவிட உங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள நினைக் கிறீர்களா?''

''ம்ம்... அப்படித்தான்...''

''அது... உங்களால் முடியுமா?''

''ஏன் முடியாது...? நான் மனது வைத்தால்'' என்று ஆரம்பித்தவன் சட்டென, ''நீ மனது வைத்தால் கூட முடியும்...'' என்றான்.

''நானா.. எப்படி?'' என்றாள் அவள் மேலும் ஆச்சரிய மாக.

''நீ ஊருக்குப் போகவில்லை. வேலைக்கு வருகிறேன் என்று சொல். நான் மாறி விடுகிறேன்...'' என்றான் அவன் சர்வ சாதாரணமாக.



இதற்கு அவளால் என்ன சொல்ல முடியும்?

திரும்பவும் கண்கள் விரிய அவனையே உற்றுப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்?''

''நீங்கள் சொல்வதை எப்படி நம்புவது? சில மணி நேரங்களுக்கு முன்தான் பெண்கள் பற்றிய உங்கள் அபிப்ராயத்தையும் உங்களது பரந்த மனசு கொள்கை பற்றியும் பெருமையாய் லெக்சர் அடித்தீர்கள். இப்போது சட்டென அதையெல்லாம் விட்டு விடுகிறேன். மாறி விடுகிறேன் என்று சொன்னால்... எப்படி.. எப்படி.. ஸார்?''

அதற்கும் அவன் அலட்டிக் கொள்ளவில்லை.

சாதாரணமாக, ''புத்தி வந்தது என நினைத்துக் கொள் ளேன்...'' என்றான்.

''புத்தி வந்ததா?''

''ம்ம்... ஒரு அழகான பெண் உரைத்துச் சொல்லும் போது... அது மண்டையில் ஏறி புத்தி வரக்கூடாதா? அப்படி உரைக்காத அளவுக்கு நான் ஒன்றும் அடிமுட் டாள் இல்லையே..?''

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

அவள் வியந்து கேட்க எழுந்து கைகளைக் கட்டியபடி குறுக்கும் நெடுக்கும் நடந்தவன் நின்று நிதானமாய் அவளைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான்.

''விளையாட்டுக்காக அல்ல. நிஜமாகவே அப்படித் தான் நிகழ்ந்தது...'' என்றவன் தொடர்ந்து, ''நீ என்னிடம் அப்படிப் பேசிவிட்டுச் சென்றது முதலில் என்னுள் கோபத்தைதான் வரவழைத்தது. பின் வேறு ஒரு

கோணத்தில் சட்டென யோசித்துப் பார்த்தேன். உண்மை புரிந்தது. ஒரு காமுகன் போல் வேலைக்கு வரும் பெண்களின் பலவீனங்களைத் தெரிந்து கொண்டு வலை வீசுவது ஒரு கௌரவமான செயல் இல்லையே? அதுவும் ஒரு கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கக் கூடியவன் செய்கிற காரியமா?'' மட்டரகமான பொறுக்கித்தனமான வேலையல்லவா அது? என்றெல்லாம் நினைக்க நினைக்க மனதில் பதிந்து புத்தியில் உரைத்தது. ஏன்.. இப்படி இருக்க வேண்டும்... திருந்தி நல்ல ஒரு மனிதனாய் செயல்பட்டால்... என்ன என்றும் தோன்றியது. அதனால்தான் கொஞ்சமும் கௌரவம் பார்க்காமல் உன்னைத் தேடி வந்து உண்மையை விளக்குகிறேன். என்ன புரிந்ததா?''

தனது நீண்ட உரையை அவன் நிகழ்த்தி முடித்த போது கண்கள் இமைக்காமல் அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் அதை ஒரு முறை உற்றுக் கவனித்து ஆழமாய்ப் பார்த்தவன், ''உன் முடிவை மாற்றினதற்கு நன்றி நாளை முதல் மீண்டும் வேலைக்கு வர இருப்பதற்கும் நன்றி!'' என அவள் முடிவை யூகித்தது போல் அவனே சொல்லிவிட்டு விறுவிறுவென வெளியேறினான் அவன்.



# 8

காஞ்சனமாலாவால் ஒன்றையும் நம்ப.. முடியவில்லை. மின்னல் போல் திடீரென அவன் தினகர் வந்தான்.



பேசினான். கடைசியில் அவள் சொல்லாமலே அவள் முடிவை யூகித்தது போல் அதற்கு நன்றியும் சொல்லி விட்டுப் போய்விட்டான்.

இது ஒரு வகை கெட்டிக்காரத்தனமா?

அதை விடுவோம். முதலில் அவள் பேச்சு. அவனது ப்ளேபாய் கொள்கையில் இருந்து மாறி விட்டதாய் சொல்கிறானே?

இது.. உண்மையா? நடக்கக் கூடியதுதானா? இல்லை வேறு எதற்காகவும் அவளை வேலையில் தக்க வைத்துக் கொள்ள இந்த தினகர் இப்படியெல்லாம் சொல்லி நடிக்கிறானா?

நினைத்தவளுக்கு கூடவே அப்படி ஒன்றும் அவனுக்கு அவசியமில்லையே? நாம் வேலையை விட்டுப் போனால் ரோஸி போன்று இன்னும் பல பெண்கள் பல அழகிகள் அவன் வலையில் தானாக வந்து விழக்கூடுமே? பிறகு எதற்கு நடிக்க வேண்டும்? என்ற எண்ணமும் எழுந்தது.

அதே நிலையில் மேலும் ஓரிரு முறை யோசித்துப் பார்த்தவள் கடைசியில் அந்த முடிவிற்கு வந்தாள்.

எது எப்படியோ...? அவன் மாறினானோ... இல்லையோ... இப்போதைக்கு அவளும் வேலையை உதறிவிட்டு வீராப்பாய் ஊருக்குச் செல்ல முடியாது? ஒரு மூன்று மாதம் இப்படியே கடந்து விட்டால் போதும். பின் அவள் சூழ்நிலைகள் எல்லாம் சரியாகி விடும். அதற்குப் பின் அவள் இந்த வேலையில் இருக்கப் போவதில்லை? அதன் பின் அவன் குணத்தைப் பற்றியோ அவன் மாறினானோ... என்பது பற்றியெல்லாம் கவலைப்பட

வேண்டியது இல்லை! அதுவரை பல்லைக் கடித்துக் கொண்டு இருந்துவிட வேண்டியதுதான்!

முடிவெடுத்தவளாய் நிம்மதியடைந்தாள் காஞ்சன மாலா.

மறுநாள் வழக்கம் போல் வேலைக்குப் போனபோது தினகர் புன்னகைத்து 'குட்மார்னிங்!' சொன்னதோடு சரி. வேறு எதும் பேசவில்லை. கேட்கவில்லை.

அவன் சொன்ன பிறகு அவள் ஊருக்குப் போக மாட்டாள் என்று அவ்வளவு நம்பிக்கை போலும் அவனுக்கு!

அன்று ஓரிரு வார்த்தைகள் அலுவலக விஷயமாய் அவன் பேசினதோடு சரி. வேறு எதுவும் அவளிடம் பேசிக் கொள்ளவில்லை. இப்படியே இருந்தால் நல்லது தான்! எனவும் அவள் நினைத்துக் கொண்டாள்.

மூன்று நான்கு நாட்கள் கழித்து ரோஸி, டெஸ்ஸி, லீனா என அழகுப் பதுமைகளாய் அவனது கையசைவில் செகரட்டரிகளாக இருந்த அந்த மூன்று பேரும் திடீரென வேலையை ராஜினாமா செய்தனர். வேறு கம்பெனிக்கு வேலைக்குச் செல்வதாய் கூறி விடுதியைக் காலி செய்து சென்றனர்.

திகைத்து தினகரிடமே சென்று காரணம் கேட்ட போது, "நல்லவனாக மாறி விடுகிறேன் என்று சொன்னால் போதுமா..? செய்ய வேண்டும்தானே?" என்றான்.

அவள் புரியாமல் விழிக்க, "பஞ்சையும் நெருப்பையும் பக்கத்திலேயே வைப்பது போல் இவர்களை பக்கத்திலே வைத்துக் கொண்டு எப்படி மாறுவது? அதனால்தான் அதிக பணத்தைக் கொடுத்து வேறு கம்பெனியில் வேலை தேடிக் கொள்ளும்படி சொல்லி விட்டேன்



பணத்தைப் பார்த்ததும் அவர்களும் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டு விட்டார்கள்.." என விளக்கம் கொடுத்தான்.

போதாதென்று அந்த செகரட்டரிகள் வேலை பார்த்த பணிகளில் ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்களை தேர்ந்தெடுத்து பணிக்கு அமர்த்தினாள்.

தினம் காலை அவள் வருவதற்கு முன்பே அலுவலகத்திற்கு வந்து வேலைகளில் ஆழ்ந்து விடுவதை வழக்கமாக கொள்ள ஆரம்பித்தான்.

அலுவலகத்தில் தினமும் வரும் இமெயில்கள், பேக்ஸ் மூலம் வரும் ஆர்டர்கள், நேரிடையாய் பேச வரும் தொழில் க்ளையண்ட்கள் என பலர் வந்து போனார்கள். எல்லோரையும் அவன் திறம்படச் சமாளித்துப் பேசுவதைக் கண்டு வியந்தாள் அவள்.

முன்பு போல் இல்லாமல் அலுவலக பணிகள் செயல் பாடுகள் பற்றியெல்லாம் அவளிடம் நிறையப் பேசினான். அவள் ஆலோசனைகளை அக்கறையாய் கேட்டான்.

அவளுக்கும் தொழில் பற்றி அவனுடன் பேசும்போது நிறைய ஆர்வம் தொனித்தது. இப்படித் தான் தேயிலை ஏற்றுமதி பற்றி அவன் பேசிக் கொண்டிருக்கும்போது இதனால் லாபம் குறைவுதான் என சட்டென அவள் குறிப்பிட்டாள்.

"என்ன சொல்கிறாய்?" என்றான் அவன் வியப்பாய்.

"நான் சொல்வது மெய்தான் ஸார். இப்போது நமது இருநூறு கிராம் தேயிலைக்கு உற்பத்திச் செலவு ஐந்து ரூபாய்தான். அதற்கான ஏற்றுமதிச் செலவு, அந்நிய வரி

போன்றவற்றைச் சேர்த்தால் பன்னிரண்டு ரூபாய் ஆகி விடுகிறது. அதை அப்படியே வெளிநாட்டு கம்பெனிக்கு பதினைந்து ரூபாய்க்கு விற்கிறோம். நமக்கு இரு நூறு கிராமுக்கு மூன்று ரூபாய் என்ற லாப சதவீதம் தான் வருகிறது. இதையே...''

அவள் நிறுத்த ஆர்வமாய், ''சொல்லு...'' என்றான் அவன்.

''இதையே ஏற்றுமதி செய்யாமல் உள்ளூர் சந்தை எனப்படும் லோக்கல் மார்க்கெட்டில் அனுப்பினாலும் இருநூறு கிராமுக்கு சந்தை விலை பதினைந்து ரூபாய் தான். ஆனால் எந்தவித வரியும் கிடையாததால் போக்கு வரத்து செலவுகள் போக நமது மொத்த அடக்க விலை பதினோரு ரூபாயில் முடிந்துவிடும். அதனால் உள்ளூர் மார்க்கெட்டிற்கு நாம் நம் தேயிலையை அனுப்பினால் இருநூறு கிராமுக்கு நான்கு ரூபாய் லாபம் கம்பெனிக் குக் கிடைக்கும். அதாவது ஏற்றுமதி செய்வதை விட ஒரு ரூபாய் அதிகமாய். இதனால் இப்போதுள்ள சூழ்நிலையில் ஏற்றுமதியைக் குறைத்து விட்டு உள்ளூர் மார்க்கெட்டிற்கு நம் உற்பத்தியை அனுப்புவது நல்லது... என நினைக்கிறேன்...''

அவள் சொன்னதும் கண்கள் மின்ன எழுந்தவன் அதே உற்சாகத்துடன் கைகளைத் தட்டினான்.

''வெரிகுட்! அபாரமான யோசனை இது! எனக்குக் கூடத் தோன்றவில்லையே? எப்படி இந்த விஷயத்தைக் கண்டு பிடித்தாய்?'' என்றான் வியப்பு பரவ.

''ரொம்பவும் சிம்பிள் ஸார். தினப் பேப்பர் ஒன்றில் உள்ளூர் சந்தையில் தேயிலை விலை அதிகரித்திருக்



கிறது என்பதைப் படித்தேன். இங்கு அலுவலகம் வந்து ஏற்றுமதி மூலம் கிடைக்கும் விலையையும் அதோடு ஒப்பிட்டேன். உள்ளூர் சந்தையே லாபம் எனப் புரிந்தது...''

''இன்டெலிஜென்ட் கேர்ள்! அபார புத்தி கூர்மைதான் உனக்கு! அப்படித்தான் இருக்க வேண்டும். வெறும் சம்பளத்திற்காக அலுவலக வேலைகளை மட்டும் பார்க் காமல் ஊடகங்கள் வழியாக சுற்றுப்புறம் நடக்கும் தொழில் விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண் டும். இப்படி உன் போல் நம் கம்பெனியின் ஒவ்வொரு வரும் செயல்பட்டால் நம் கம்பெனி வளர்ச்சியில் எங்கோ போய்விடும்!''

நிஜமாகவே அவன் உணர்ச்சி வசப்பட்டு பாராட்டிய தில் அவள் ரொம்பவும் குளிரத்தான் செய்தாள்.

மேலும் இதுநாள் வரை தேயிலை கம்பெனியைப் பற்றி நமக்கு என்ன தெரியும். நாம் என்ன வேலையைப் பார்த்து எப்படி நம் திறமையைக் காட்டப் போகிறோம் என பயந்தவளுக்கு இந்த வாய்ப்பு மிகவும் தன்னம் பிக்கை கொடுப்பதாய் அவளுக்கே அமைந்தது.

அதனால் அவன் மனம் விட்டுப் பாராட்டியதில் அவளும் மனம் விட்டுச் சிரித்தாள்.

அதைத் திரும்பி உற்றுக் கவனித்த அவன், ''ம்ம் பூக்கள் எல்லாம் ஒரு சேர விரிவதைப் போல் நன்றாய் இருக்கிறது உன் சிரிப்பு!'' என திடீரென ரசித்து நற் சான்று வழங்கினான்.

இன்னும் கொஞ்சம் சிரித்துக் காட்டும்படி மனதும் அவளைத் திடீரென தூண்டியது. அதை ஆத்திரத்துடன் அடக்கினாள்.

ஒரு பாராட்டில் அப்படியே உச்சி குளிர்ந்து விட வேண்டுமா? என மறுபடியும் எழுந்த கேள்வியை சிறிதும் பொருட்படுத்தாமல் தன்னை மீறி மேலும் அவனைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்தாள் அவள்.



# 9

தினகர் அடியோடு மாறி இருந்தான் அல்லது தன்னை மாற்றிக் கொண்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

முன்பு போல் மன்மத விளையாட்டுத்தனம் இல்லாமல் அவன் கவனம் முழுவதும் வேலையிலே இருந்தது. அவளிடமும் சீண்டலாய் இரட்டை அர்த்த கொச்சையான பேச்சுக்கள் பேசுவது இல்லாமல் பணி சம்பந்தமாகவே பேசினான்.

எல்லாவற்றையும் விட கெஸ்ட் ஹவுஸ் அழைப்பிற்காக அந்த இளம் பெண்ணின் போன் கால் பேச்சுகள் அளவே நின்று போய் இருந்தன.

எதனால் இந்த மாற்றம்? எப்படி இது சாத்தியம்?

அவள் வேலையை விட்டுப் போய் விடுவேன் என்று பயங்காட்டியதும் மாறி விட்டானா? தனது ப்ளேபாய் தனத்தை முழுவதுமாய் விட்டு விட்டு நல்லவனாய் மாறிவிட்டானா?

நம்பக்கூடியதாய் இல்லையே!

ஆச்சரியமாய் ஒருநாள் அவனிடமே கேட்டாள்.



சிரித்தபடி, ''ஏன் நான் மாறக்கூடாதா?'' என்றான்.

பின் அவனே, ''எப்படி சில சூழ்நிலைகள் என்னை கெட்டவனாக மாற்றியதோ அதே போல் சில சூழ்நிலைகள் என்ன நல்லவனாகவும் மாற்றியது...'' என்றான்.

அவள் தொடர்ந்து தன்னைக் குறிப்பிடுவானோ என்று பார்க்க, ''அதற்கு நீயும் ஒரு காரணம். போதுமா?'' என்று கேட்டு முடித்தான்.

அதற்குப் பின் காஞ்சனமாலா அந்த விஷயத்தை திரும்பத் திரும்ப அவனிடம் கேட்கக் கூடாது என விட்டு விட்டாள். திருந்தி விட்டான். அத்தோடு விட்டு விடுவோம். அதை ஏன் ஆராய்ச்சி பண்ண வேண்டும்? என முடிவெடுத்தாள்.

அவன் அப்படி தன் சுபாவம் மாறியதாலோ என்னவோ அவளால் அவனுடன் எவ்வித லஜ்ஜையுமில்லாமல் பேசப் பழக முடிந்தது.

தினம் பேக்டரியை பார்வையிட அவனுடன் செல்லும்போதும் சரி, இரண்டு நாளுக்கு ஒருமுறை தேயிலைத் தோட்டங்களை கண்காணிக்கச் செல்லும் போதும் சரி ஜீப்பில் அவன் பக்கத்து முன் ஸீட்டில் உட்கார்ந்து எதாவது பேசிக் கொண்டே இருவரும் வருவது வழக்கமாயிற்று.

ஆனால் அவளது வழக்கமான சீண்டல் கேலி தோன்றியது. ஆனால் அவளும் லேசுப்பட்டவள் இல்லையே. வீட்டிலே வாலு என்று பெயரெடுத்தவள் ஆயிற்றே.. அதனால் பதிலுக்கு பதிலடி சரியாகக் கொடுத்தாள்.

இப்படித்தான் ஒரு நாள் தேயிலைத் தோட்டங்களைப் பார்த்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருக்கும் போது அந்தக் காட்சியை இருவரும் கண்டனர்.

பெரிய மலைப் பாறை ஒன்றின் மறைவாக இருவர். இளம் ஜோடிகள். அவனுக்கு இருபத்தைந்து வயது. அவளுக்கு இருபது வயது என்று தான் மதிப்பிடலாம்.

பார்வைக்கு இருவரும் வேறு எதோ ஒரு எஸ்டேட் தொழிலாளிகள் என்று அப்பட்டமாய் தெரிந்தது. அவர்கள் ஜீப் வந்ததையோ, அதன் சத்தத்தையோ கேட்காமல் அல்லது கண்டு கொள்ளாமல் தங்களது காதலில் மெய்மறந்திருந்தனர்.

அதைக் கவனித்த தினகர் சட்டென ஜீப்பை நிறுத்தி விட்டான். காஞ்சனமாலாவை கவனிக்கும்படி சைகை செய்தான்.

அந்த ஜோடிகள். ஒருவர் மடியில் ஒருவர் படுப்பதும், அணைத்துக் கொள்வதும் திடீர் திடீரென முத்தங்களைப் பரிமாறிக் கொள்வதும். அவன் ஆணில் பேச்சுக்கெல்லாம் அவள் குலுங்கக் குலுங்கச் சிரிப்பதுமாய் நேரம் போய்க் கொண்டிருந்தது.

காஞ்சனமாலாவுக்கு ஒரே ஆச்சரியம்தான்!

அவர்களைப் பார்த்தால் படிப்பறிவு இல்லாத கிராமத்து வாசனை. முகத்தில் தெளிவாய் ஓடியது. இவர்கள் இவ்வளவு துணிச்சலாய் பொது இடம் என்று கூடப் பார்க்காமல் பட்டணத்து காதல்களை போல் எல்லா விஷயங்களிலும் துணிந்து விடுவார்கள் போலவே? என வியந்தாள்.



''இதுதான் உண்மையான காதல்! யாரையும் சட்டை செய்யாத தெய்வீகக் காதல்! இதையாவது நீ சரி என்று ஒத்துக் கொள்வாயா... அல்லது தவறு என்று வாதிடுவாயா?'' என்றான் தினகர் திரும்பி அவளைப் பார்த்தபடி.

அவன் எதற்கு அப்படிக் கேட்கிறான் என்பதை புரிந்து கொள்ள முடியாதவளாய், ''இதில் என்ன ஸார் தவறு இருக்கிறது? அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். இதில் தவறு என்ன இருக்கக் கூடும்?'' என்றாள்.

அவன் பதில் சொல்லாமல் கைகளைக் காட்டி, ''இன்னும் கொஞ்சம் நடப்பதைப் பார்!'' என்றான்.

அவள் புரியாமல் பார்த்தாள்.

சில நிமிடங்களிலே கொஞ்சிக் கொண்டிருந்த ஜோடியில் பெண் சுதாரித்தது போல் நிமிர்ந்து அவனிடம் எதையோ கறாராய் கேட்க.. அவன் ஆணும் அதற்குச் சிரித்தபடி தன் பர்ஸை எடுத்து சில ரூபாய்த் தாள்களை உருவி அவளிடம் நீட்டினான்.

அதை லபக்கென வாங்கி தன் ஜாக்கெட் ஓரமாய் அந்தப் பெண் திணித்துக் கொண்டாள். பின் இருவரும் திரும்பவும் காதல் ரசத்தில் மேலும் நெருக்கமாக முகம் சுழிக்க திரும்பினாள் காஞ்சனமாலா.

தினகரும் அவள் முகம் சுழிப்பதைக் கண்டு புரிந்தவனாய் ஜீப்பை ஸ்டார் செய்து ரிவர்ஸ் எடுத்தபடி அங்கிருந்து கிளம்பினான்.

அதை விட்டுக் கொஞ்ச தூரம் அகன்றதும் தினகர் மறுபடி திரும்பி அவளைப் பார்த்தான்.

''உனக்கு எதுவாவது புரிந்ததா?'' என்றான்.

அவள் திரும்பவும் விழித்தாள்.

''அவன் எதற்காகவோ பணம் கொடுத்தான். அவள் வாங்கிக் கொண்டாள். எதனால் எதற்கு பணம் கொடுத் தான்?'' என்றாள் அவள் புரியாத ஆச்சரியத்துடன்.

தினகர் கடகடவென ஒரு சிரிப்பு சிரித்தான்.

''இது கூடவா உனக்குப் புரியவில்லை? கொஞ்சம் யோசித்துப் பார்!'' என்றான்.

அவள் மறுபடியும் தலையை அசைத்து ''புரிய வில்லை...'' என்றாள்.

அவன் சிரிப்பை நிறுத்தி சீரியஸாய் பார்த்தவன்,

''நீ நினைப்பது போல் அவர்கள் காதலர்கள் இல்லை. அவன் யாரோ, அவள் யாரோதான்!'' என்றான்.

''என்ன... என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் அவள் அதிர்ந்து.

''ம்ம்.. இப்படி கூலித் தொழிலாளர்கள் வாங்கும் சம்பளப் பணத்தை தினக் கூலியை அபகரிக்கச் சில பெண்கள் அலைகிறார்கள். இவர்களை மயக்கும் சுந்தரி கள் அல்லது தொழில்காரிகள் என்று கூறலாம். இப்போது புரிந்ததா?'' என்றான்.

அவள் அவன் சொன்னதைக் கண்டு அரண்டு தான் போனாள்.

''நிஜமாகவா.. நிஜமாகவா?'' என்று அவள் நம்ப முடி யாமல் கேட்க அவன் தலையசைத்து உறுதி செய்தான்.

''காலம் கெட்டு விட்டது. சே! சின்ன கிராமத்தில்.. சாதாரண தொழிலாளர்கள் மத்தியில் கூடவா இப்படி யெல்லாம் நடக்கிறது? தூ..!'' அருவறுப்புடன் அவள்



முகம் சுழிக்கச் சொன்னாள். அவனோ, நிதானமாய், ''இப்போது புரிந்ததா உனக்கு? சந்தர்ப்பங்களும் சூழ் நிலைகளும்தான் ஒரு தவறு செய்யும்படி ஒருவனைத் தூண்டுகின்றன..'' என்றான்.

அவன் என்ன சொல்ல வருகிறான் என அவளுக்கு முதலில் புரியவில்லை. பின் அவனே விளக்கியபோது அவளுக்கு விசித்திரமாய்த்தான் இருந்தது.

''நீயே... நான் சொல்வதை கொஞ்சம் யோசித்துப் பார். சம்பளக் கூலிப் பணத்தை பை நிறைய வாங்கிக் கொண்டு அந்த இளைஞன் திரும்பிக் கொண்டிருந் திருப்பான். இவள் மயக்கும் சுந்தரியை அவன் முன் போய் போஸ் கொடுத்து காசு கொடுத்தால் கிடைக்கும் என்று சொல்லும்போது... அவன் எப்பேர்ப்பட்ட சத்திய வானாய் இருந்த போதும் சலனப்படுவது இயல்பு தானே...?'' என்றவன் தொடர்ந்து குரலில் உறுதியைக் காட்டியபடி, ''இப்படி மலரே வலிய வந்து இதழ்களை விரித்து தேன் உண்ணும்படி வண்டிற்கு சவால் விடு கிறதே.. இது.. எந்த வகையில் நியாயம்?'' என முடித்த போது அவன் சொன்ன வண்டு, மலர், உவமையைக் கேட்டு அவளுக்கு சிரிப்பே வந்து விட்டது.

அடக்க முடியாமல் அவள் சிரித்தபோது, ''சிரிப்பதற் காக அல்ல. சிந்திப்பதற்காகச் சொல்கிறேன்...'' என்றான.

''புரிந்தது...'' என்றாள் அவளும் சிரிப்பை நிறுத்தி அவனைப் பார்த்தவாறு.

பார்த்தவளின் கண்களை அவனும் நேருக்கு நேர் பார்த்தான். ''இப்போதாவது என்னைப் பற்றி புரிந்ததா?'' என்றான்.

அவள் திகைத்தாள்.

எதையோ சொல்ல வந்து விட்டு என்னைப் பற்றி புரிகிறதா என எதற்குக் கேட்கிறான்?

அடுத்த நொடியோ அவனிடமிருந்து அதற்கு பதிலும் வந்தது.

''இப்படி இப்படித்தான்... சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நானும் கெட்டிருந்தேன். அந்த சூழ்நிலை எவ்வளவு அபாயகரமானது எப்படிப்பட்ட மோசமான ஒன்று என எனக்கு இப்போது தள்ளி நின்று பார்க்கும் போது புரிகிறது. சே...! என்ன ஒரு மனிதன் நான்..? அந்த படிக்காத தினக்கூலி இளைஞனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நினைக்கவே அருவறுப்பாய் இருக்கிறது...'' என்றபடி தன்னையே நொந்து கொண்டு அவன் வெறுப்பாய் முகம் சுழப்பதைக் கண்டு அப்படியே அதிர்ந்துதான் போனாள்.

''வருந்தாதீர்கள்... ஸார்...! இப்போதுதான் நீங்கள் அந்தப் பழக்கத்தை எல்லாம் விட்டு விட்டீர்களே. இனி எதற்குக் கவலைப்படுகிறீர்கள்?'' என்றாள் ஆறுதல் சொல்வது போல்.

''ஆனால் எல்லாவற்றுக்கும் காரணம் நீ.. நீதான் காஞ்சனமாலா! உனக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும். ரொம்பவும் நன்றி! வெரி.. வெரி.. தாங்க்ஸ். இந்த நன்றியை ஒரு போதும் நான் மறக்க மாட்டேன்...!'' என்று உணர்ச்சிப் பூர்வமாய் சொன்னவன் அதே வேகத்தில் அவள் கைகள் இரண்டையும் பற்றி நன்றி தெரிவிப்பது போல் அழுந்த முத்தமிட்டான்.

அக்கணமே பாதாளத்தில் விழுவது போல் உணர்ந்தாள் அவள்.





# 10

அன்றைய இரவு காஞ்சனமாலாவிற்கு தூங்கப் பிடிக்கவில்லைதான். என்னமோ ஏதோ... நடந்து விட்டது போல்தான் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்து விட்டாள்.

தினகர் அன்று மனம் வருந்திப் பேசியது அவளை என்னமோ செய்தது. ரொம்பவும் பாதித்தது. தன்னால் தன் பேச்சால் ஒருவன் திருந்தி விட்டான் என்பது மகிழ்ச்சியையும் கொடுத்தது. அந்த மகிழ்ச்சியே மனதில் விதவிதமான மின்மினிகளை பட்டாம்பூச்சிகளை சிறகடிக்க வைப்பதையும் அதிர்வாகவே உணர்ந்தாள் அவள்.

அவன் திருந்தி விட்டான் சரி. ஆனால் எதற்காக இப்படி கரை புரளும் ஒரு சந்தோஷம். மனதிலும் நெஞ்சிலும் அலையடிக்க வேண்டும்? என கேள்வியையும் கேட்டுப் பார்த்தாள்.

பெரிய மௌனம் ஒன்றே பதிலாக வந்து அவளை மலைக்கவே செய்தது.

கடவுளே! இது என்ன கூத்து?

வந்தோம். மூன்று மாதம் வேலை பார்த்தோம். போனோம் என்று இல்லாமல்.. இது என்ன.. புது அர்த்தங்கள். புரியாத சலனங்கள்?

ஜாக்கிரதை. மனமே ஜாக்கிரதை!

தினகர் முதலாளி. பெரும் பணக்காரன். அவன் திருந்துவான்.. திருந்தாமல் போகிறான். அதற்காகத் தலைகால் புரியாமல் குதூகலித்துக் குதியாட்டம் போட வேண்டுமா?

கஷ்டப்பட்டு அன்று மன உணர்ச்சிகளை எல்லாம் அடக்கியவள் அப்படியே தூங்கியும் போனாள்.

மறுநாள் பக்கத்து டீ எஸ்டேட் ஒன்று விலைக்கு வருவதாகப் பேச்சு வர தினகர் அதைப் பார்வையிடக் கிளம்பினான்.

அவளையும் உடன் அழைத்துச் சென்றான்.

காரில் ஏறி இருவரும் கிளம்பினார்கள். ''எஸ்டேட் விலைக்கு வருவதாகச் சொல்கிறார்கள்? விலை எவ்வளவு தெரியுமா?'' என்றான் தினகர்.

''எவ்வளவு ஸார்?'' என்றாள் விழிகளை உயர்த்தி.

''பத்து கோடி...'' என்றான் தினகர் சாதாரணமாய்.

''என்ன பத்து கோடியா...? யம்மாடியோவ்...!'' என தன்னை மீறி ஆச்சரியத்தில் சொல்லி வாய் பிளந்தாள் காஞ்சனமாலா.

அதைக் கவனித்த தினகர் சிரித்தான்.

''இதற்கே வாய் பிளந்தால் எப்படி? அதற்கு பக்கத்தில் இன்னொரு எஸ்டேட்டும் விலைக்கு வருகிறது. அதன் விலை நூறு கோடி..!'' என்றான்.

''எப்படி ஸார்.. இது? அவ்வளவு பணம் யாரிடம் இருக்கிறது... யார் வாங்குவார்கள்?'' என்றாள் திகைப்பு விலகாமல்.



''எல்லாம் அரசியல்வாதிகள்தான்! மஞ்சள் கட்சியின் பொதுச் செயலாளர் ஒருவர்தான். அதை வாங்கப் போகிறார் என்று பேச்சு...'' என்றவன் ''சரி அதை விடு. நாம் எப்படி வாங்கப் போகிறோம் என்று தெரியுமா?'' என்றான்.

''ம்ம்.. தெரியும் ஸார். பேங்க் லோன் மூலமாகத் தானே? நேற்று கூட வந்திருந்த பேங்க் மேனேஜர் ஒருவரிடம் அது பற்றித்தானே பேசிக் கொண்டிருந் தீர்கள்?'' என்றதும் தினகர் அவள் பக்கம் திரும்பி, ''அலுவலகத்தில் நடக்கும் எல்லாவற்றையும் கவனிக்கிறாயே... நிஜமாகவே என் புத்திசாலி செகரட்டரிதான் நீ..! வெரிகுட்..!'' என்றான் பாராட்டும் விதமாய்.

அவனது சின்ன பாராட்டு கூட பெரும் சந்தோஷத்தை மனதில் வரவழைப்பதையும் திகைப்பாய் உணர்ந்தாள் அவள்.

பின் அரை மணி நேர பயணத்திற்குப் பிறகு எஸ்டேட்டை அடைந்து இறங்கினார்கள். அங்கிருந்த மேனேஜர் ஒருவர் எஸ்டேட்டின் வெவ்வேறு பகுதி களைச் சுற்றிக் காட்டினார்.

கிட்டத்தட்ட ஐம்பது ஏக்கர் பரப்பளவில் அந்த டீ எஸ்டேட் அமைந்திருந்தது. ஒருபுறம் மலைப் பாறைகள். மறுபுறம் உள்ள மலைச் சரிவில் தேயிலைச் செடிகள். இயற்கை சூழ பார்ப்பதற்கே ரம்மியமாய் இருந்தது தினகருக்கு ரொம்பவும் பிடித்து விட்டது.

உன் அபிப்பிராயம் என்ன? என்பது போல் கணைகளாலே சைகை செய்து தினகர் கேட்க தன் கருத்தையும் தலையசைப்பாகவே சொன்னாள் அவள்.

கூடவே ஒவ்வொரு கம்பித் தடுப்புகளுக்கு பக்கத்தில் போர்டுகள் வைத்து அந்தப் பகுதியின் நீள அகல பரப்பளவை எழுதி வைத்திருக்க... தனது செல்போன் காமிராவை எடுத்து அவைகளைப் பதிவு செய்ய ஆரம்பித்தாள் அவள்.

அதைக் கவனித்த தினகர், ''க்யூட் கேர்ள்! நான் சொல்ல நினைத்ததை நீயே செய்து விட்டாய்...'' என்றவாறு அவள் தோள்களைத் தட்டியபடி முன்னால் நடந்தான்.

அவள் காமிராவால் அந்த மூன்று நான்கு அறிவிப்பு பலகைகளை படம் பிடித்தவள் தற்செயலாய் திரும்பி தினகர் சென்ற திசையைப் பார்க்க அப்படியே திடுக்கிட்டுப் போனாள்.

நேராகச் சென்ற தினகர் விறுவிறுவென கம்பித் தடுப்புக்கு அப்பால் இருந்த பாறை ஒன்றின் மீது விறுவிறுவென ஏறிக் கொண்டிருந்தான். பெரிய பாறை அது. ஆனால் செங்குத்தாய் கொஞ்சம் பிசகினாலும் அப்படியே வழுக்கி விழச் செய்யக் கூடிய அபாயகரமான பாறை.

மறுபுறமோ மலைச்சரிவை ஒட்டினால் போல் பெரும் பள்ளத்தாக்கு. கொஞ்சம் இடறி விழுந்தாலும் அவ்வளவுதான்! யாரும் காப்பாற்ற முடியாது. எலும்பு கூட மிஞ்சாது.

ஆனால் தினகர் இதை கொஞ்சமும் பொருட்படுத்தாதவனாய் விறுவிறுவென அந்தப் பாறையில் ஏறிக் கொண்டிருக்க... பார்த்த அவள் அப்படியே பதறித்தான் போனாள்.



படக்கென தாவி நடைபாதைக்கு வந்து அவனை நோக்கி, ''ஸார்... ஸார்...'' என்று கூவியபடி ஓடினாள்.

ஆனால் அது தினகரின் காதில் விழுந்தாற்போல் தெரியவில்லை.

சுற்றிக்காட்ட வந்த அந்த எஸ்டேட் மேனேஜரும் வேறு எதையோ எடுத்து வர அவுட் ஹவுஸ் பக்கம் சென்றிருந்தார்.

ஆக.. அங்கு தனியாளாய் நின்று கொண்டிருந்தது. அவள் மட்டுமே.

ஒன்று கிடக்க ஒன்று ஆகி விட்டால் அவளால் என்ன செய்ய முடியும்?

பதறியவளாய் அதே பதட்டம் தொனிக்க ஓடி தினகர் நின்ற மலைப் போன்ற பக்கம் சென்று,

''ஸார்... ஸார்... வேண்டாம்... இறங்கி விடுங்கள்! இது ஆபத்து! ஆபத்து!'' என அலறினாள்.

தினகர் சுவாரஸ்யமாய் மறுபுற பள்ளத்தாக்குப் பகுதியை பார்வையிட ஏறிக் கொண்டிருந்தவன் அவள் குரல் கேட்டு நின்று திரும்பினான்.

அவள், 'ஆபத்து! ஆபத்து!' என அலறியபடி கைகளை வேகமாய் அசைப்பதை இறங்கும்படிச் சொல்வதை ஆச்சரியமாகப் பார்த்தான்.

''என்ன.. என்னாயிற்று?'' என்றான் எதுவும் புரியாத குரலில்.

என்னவா? இவ்வளவு ஆபத்தான பாறை மீது ஏறி நின்று கொண்டு என்ன என்று கேட்கிறானே என அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

அதை அடக்கிக் கொண்டு, ''முதலில் கீழே இறங்குங்க ஸார்..! நீங்கள் நிற்பது வெகு ஆபத்தான பாறை... கொஞ்சம் பிசகினாலும் ஆபத்து.. ஸார்! ஆபத்து ஸார்...!'' என மறுபடியும் அவள் அலற அவன் சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

இப்போது என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது? என எரிச்சலானவள் அதை மறைத்தவாறு, ''ஐயோ! ப்ளீஸ்... முதலில் இறங்குங்கள் ஸார்.. எனக்கு பயமாக இருக்கிறது. ப்ளீஸ் இறங்குங்கள்..'' என்றாள் கெஞ்சலாய் அழாத குறையாய்.

அவளது இந்தக் கெஞ்சலை கவனித்த தினகரால் அதற்கு மேல் அவள் பேச்சுக்கு மறுக்க முடியவில்லை. ஒகே! ஒகே! என்றபடி எப்படி விரைவாய் ஏறினானோ அதே போல் திரும்பியும் வந்தான்.

அவன் பாறையை விட்டு இறங்கி தரைப் பகுதிக்கு வந்ததும் தான் அவளுக்கு உயிரே வந்தது. தடதடத்த நெஞ்சும் சீராக துடிக்க ஆரம்பித்தது போல் உணர்ந்தாள்.

அதே சிரிப்புடன் கைகளைத் தட்டியபடி தினகர் அவள் பக்கம் வர ஓடிப்போய் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு மூச்சு வாங்கினாள். ''என்ன ஒரு மடத்தனம் ஸார்! கொஞ்சம் பிசகினாலும் என்ன நடந்திருக்கும் தெரியுமா?'' என்றாள்.

''என்ன நடந்திருக்கும்?'' என்றான் அவன் எதுவுமே தெரியாதது போல் அவளை எதிர் கேள்வி கேட்டுக் கொண்டு.

''என்ன... ஸார்... இப்படிக் கேட்கிறீர்கள்?'' என ஆத்திரத்துடன் ஆரம்பித்தவள் அதே கோபத்துடன்,



''கொஞ்சம் பிசகினாலும் ஆபத்து ஏற்பட்டு உயிரே போயிருக்கும் தெரியுமா?'' என்றாள் படபடப்பு கொஞ்சமும் குறையாமலே.

அதை உற்று கவனித்த தினகர், ''என் உயிர் மீது உனக்கு அவ்வளவு அக்கறையா?'' என்றான் ஒரு மாதிரியான ஊடுருவல் பார்வை பார்த்தபடி.

அப்போதுதான் அவளுக்கு சுருக்கென்றது. தன்னை மீறிய அவன் உயிர் பற்றிய பயம் கவலை எல்லாவற்றையும் படபடப்புடன் வெளிக்காட்டி விட்டோம் என்பது புரிந்தது.

அது மட்டுமா அவள் அந்த படபடப்பில் அவன் கைகளைக் கூட இறுக இன்னமும் பிடித்துக் கொண்டு... தன் நிலை உணர்ந்தவளாய் முகம் சிவக்க டக்கென தன் கைகளை உருவினாள் அவள்.

உருவிய கைகளை டக்கென பற்றிய அவன், ''எனக்காக இந்த உலகில் மிகவும் கவலைப்படுகிற முதல் பெண் நீயாகத்தான் இருக்கும். வெரி தாங்க்ஸ்!'' என்றபடி அவள் கைகளில் மென்மையாய் முத்தம் ஒன்றை பதித்தான்.



# 11

காஞ்சனமாலாவுக்கே ஆச்சரியம்தான்! திடீரென அவன் உயிர் பற்றிய அக்கறை ஏன் வந்தது? என கேட்டுப் பார்த்தாள்.

அந்த இடத்தில் தினகர் இல்லை வேறு யாராக இருந்தாலும் அப்படிச் சொல்லியிருக்கத்தான் செய்வாள். ஆனால் தினகர் என்றதும் தான் ஒருவித நெஞ்சு அடைக்கும் பதட்டமும் படபடப்பும் தொற்றிக் கொண்டது என்பதையும் அவளால் உணர முடிந்தது.

தினகரும் அதற்கு மேல் அந்த விஷயத்தை ஆராய்ச்சி பண்ணாமல் தேயிலைச் செடிகளின் அடர்த்தி குறித்து விவரித்து விளக்க ஆரம்பித்து விட்டான்.

பின் மேனேஜரிடம் பேசி விட்டு ஒரு வாரத்தில் அட்வான்ஸ் கொடுத்து உறுதி செய்வதாய் சொல்லி விட்டுக் கிளம்பினார்கள்.

ஜீப்பில் வருகையில் இடையிடையே அவன் ஓரக் கண்ணால் தன்னைப் பார்ப்பதை அவள் உணர்ந்தாள். எதற்காக இப்படி அவன் பார்க்க வேண்டும்? என குழம்பிய அவளுக்குக் கொஞ்ச நேரத்தில் விடையும் கிடைத்தது.

''ம்ம். அழகான மஞ்சள் ஸேரி, காதுகளில் புதியதாய் தொங்கட்டான். முகத்தை வசீகரமாக்குவது போல் பேஸ் க்ரீம், நீள கூந்தலைத் தழைய தழையப் பின்னியிருக்கிறாய்.. அந்தப் பெரிய அழகுக் கண்களுக்கு மை தீட்டியிருக்கிறாய். பிரமாதமான அழகுதான்'' என்றவன், ''ஆமாம், இன்று எதுவும் விசேஷம் உண்டா?' என்றான் சர்வ சாதாரணமாய் விசாரிப்பது போல்.

தன்னை அவ்வளவு தூரம் கவனித்து அவன் செய்த பாராட்டில் உள்ளூர பெருமகிழ்ச்சி புரண்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாதவளாய் ''அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை ஸார்..'' என்றாள்.



தினகர் விடாமல் மறுப்பாய் தலையசைத்தவன், ''இல்லை... இல்லை.. எதுவோ இருக்கிறது. நீ மறுக்காமல் சொல்ல வேண்டும். உன் அழகு கூடியிருக்கிறது. மெனக்கெடுத்து கண்ணாடி முன் நின்று சில பல நிமிட நேரங்களை செலவழித்து புதிதாய் அழகு படுத்தி இருக்கிறாய். எதற்காக இந்த மாற்றம்?'' என்றான்.

அவன் பார்க்க வேண்டும் என்ற நினைப்பில் இன்று கிறுக்குத் தனமாய் கண்ணாடி முன் நின்று ரொம்ப நேரம் செய்த ஒப்பனையை... அட... அப்படியே நேரில் பார்த்தது போல், எல்லாவற்றையும் கண்டு பிடித்து விட்டானே..? என முகம் சிவக்கத் துணுக்குற்றவள் எல்லாவற்றையும் மறைக்கும் விதமாய், ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை ஸார். என் 'மகிழ்ச்சிக்கு ஒரே ஒரு காரணம்தான்'' என்றாள்.

''அது என்ன காரணமோ..? அடியேன் அறியலாமோ?'' என்றான் அவன் புன்னகையை பெரிதாக்கியபடி.

''தாராளமாக...'' என அவள் கைகளை விரித்துக் காட்டியவள், ''கனம் எம்.டி.யான மதிப்பிற்குரிய திரு. தினகர் அவர்கள் மிக நல்லவராக மாறி விட்ட சந்தோஷம் தான்...!'' என்றாள் பேச்சை முற்றிலும் மாற்றி விடுபவளாய்.

''ஓ... அப்படிப் போகிறதா விஷயம்?'' என தினகர் புருவம் உயர்த்தியபடி அவளைப் பார்த்தவன், ''அப்படி மாற்றியவள் நீ! சந்தேகமில்லாமல்' அந்தப் பெருமை உன்னைத்தான் சாரும்...'' என்றான்.

''அதனால்தான் ஸார் இந்த கூடுதல் சந்தோஷம்...'' என்றபடி மறுபடி சிரிக்கப் போனவள் அவன் தலையைத்

திருப்பி தன்னையே ஒரு மாதிரியாய் பார்ப்பது கண்டு திடுக்கிட்டாள்.

அவன் நினைத்தது போலவே, ''சந்தோஷம் சரி. இந்த திடீர் அலங்காரங்களுக்கு என்ன அர்த்தம்?'' என்றான் மறுபடியும் விஷயத்திற்கு வந்தவனாய்.

ஆஹா... இவன் லேசில் விடமாட்டானா..? என பதில் உரைக்க பயந்தவள் கொண்டிருந்த முறுவலைப் பெரி தாக்கியபடி, ''அதான் ஸார், சந்தோஷத்தில் குதூகலமாய் எதாவது செய்யத் தோன்றும் அல்லவா. அப்படிச் செய்ததுதான் இது...'' என்றாள் விளக்குவது. போல் தனக்கே புரிந்து கொள்ள முடியாத ஒரு அர்த்தத்தில் தினகரும் லேசில் விடுவதாயில்லை.

''ரொம்பவும் குழப்புகிறாயே...?'' என இழுத்தவள்,

''உனக்கு சந்தோஷம் பொங்கினால் உன்னை மேலும் அழகு படுத்திக் கொள்வாய் சரி. ஆனால் அப்படி உன்னை அழகு படுத்திக் கொண்டு யாருக்குக் காட்ட விரும்புகிறாய். அதை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்றான் விடாப்பிடியாய் அவள் பதிலில் எதையோ தேடுவது போல்.

அவன் அதை அறிய விரும்பி இப்படியெல்லாம் கேட்கிறான் என்பது புரிந்தாலும் புரியாதவள்போல், ''நீங்கள் கேட்பதுதான் என்னைக் குழப்புகிறது ஸார். நான் சந்தோஷமாய் என்னை அழகுபடுத்தினேன். மகிழ்ச்சி யோடு கண்ணாடியில் பார்த்து ரசித்தேன். அவ்வளவு தான்!'' என்றாள்.

''ம்ம்... புரிகிறது...'' என தினகர் பதிலுக்கு வேகமாய் தலையசைத்தவன், ''அந்த மகிழ்ச்சியில் நானும் கலந்து கொள்ளட்டுமா?'' என்றான் சிரிப்பு மாறாமல்.



இதற்கு என்ன பதில் சொல்வாள்?

அவனைப் பார்த்து பதில் சொல்ல முடியாத குழந்தை போல் ஒரிரு கணம் விழித்தவள் பின் கலகலவெனச் சிரித்து விட்டாள்.

''ம்ம்... அழகான முகம்! அருமையான சிரிப்பு. பார்த் துக் கொண்டே இருக்கலாம் போல் தான் இருக்கிறது...'' என்று தினகர் சொல்ல,

''ஸார்... கவனம்! கவனம்! நீங்கள் வண்டியோட்டி வருகிறீர்கள். சாலையைப் பாருங்கள்..'' என்றவள் சட் டென குரலை மாற்றி, ''ஐயோ...! அதோ... ஒரு சரக்கு. லாரி! நம்மை நோக்கி வேகமாய்... யம்மா...! யம்மாடி யோவ்வ்? ஸார்...'' என சாதாரணமாக பேசத் தொடங் கியவள் பின் பெருங்குரலில் அலறுவது போல் சப்தம் கூட்டி கூறி லேசான பதட்டம் காட்டினாள்.

அவ்வளவுதான். அவளைப் பார்த்து பேசியபடி தன் பார்வையை ஒரிரு கணம் அவளை நோக்கி திருப்பி யிருந்த தினகர் அவள் பெருங்குரலிலும், பதட்டம் காட்டியதிலும் நிஜமாகவே பதறி பயந்து சட்டென பிரேக்கை பிடித்து ஜீப் குலுங்க நிறுத்தினான்.

நிறுத்தியவன் நிறுத்தியபடி ரோட்டைப் பார்க்க... ரோட்டில் லாரியோ... வேறு எதுவுமோ இல்லை.

திரும்பி அவளைப் பார்க்க... ஏமாந்து விட்டீர்களா? என்பது போல் மீண்டும் கலகலவெனச் சிரித்தாள் காஞ்சனமாலா.

அவள் விளையாடியது அப்போதுதான் தினகருக்கு புரிந்தது.

'அடி... குறும்புக்காரி! என்ன தைரியம் உனக்கு? என்னையே ஏமாற்றுகிறாயா?' என்பது போல் சட்டென தாவிப் பிடித்து அவள் காதுகளைத் திருகினான்.

பின் அப்படியே குலுங்க குலுங்க சிரித்த அவள் கழுத்தை வளைத்தவன் சட்டென அவளை இறுக அணைத்தான்.

அவளோ அவனிடமிருந்து திமிறுவது போல் அவன் கைகளை விலக்கப் போனவள் சட்டென ஏற்பட்ட அந்த நிஜமான நெஞ்சணைப்பில் ஸ்பரிசத்தில் ஒரு கணம் தடுமாறினாள்.

தடுமாறியவளின் நிலையை நன்றாக உணர்ந்தவன் போல் கைகளால் தாங்கிப் பிடித்து அணைத்தபடியே அவள் முகத்தை நிமிர்த்தியவன் அப்படியே குனிந்தான். அவளது செவ்விதழ்களில் அழுத்தமாய் தனது உதடு களைப் பதித்து வேகமாய் முத்தமிட ஆரம்பித்தான்.

தன் வசமிழந்தவள் போல் அப்படியே கிறங்கிப் போனாள் காஞ்சனமாலா.



## 12

அன்று இரவும் காஞ்சனமாலாவால் நிம்மதியாய் தூங்க முடியவில்லை.

பல நாட்களாய் மனதில் வந்து ஓடிப் பிடித்து விளை யாடிக் கொண்டிருந்த அந்த சந்தேகம் அன்று அந்த கணத்தில் உறுதியாய் பளிச்சிட்டது.



இதுநாள் வரை இல்லாத இந்தக் காதல் ஏன் வந்தது?

எதனால் இந்தத் தடுமாற்றம்?

தினகரை விட அழகான பர்ஸனாலிட்டிகளை எத் தனை முறையோ பார்த்திருக்கிறாள். சந்தித்திருக்கிறாள். அப்போதெல்லாம் ஏற்படாத ஒன்று இப்போது ஏன் ஏற் படுகிறது?

ஒருவேளை நெருங்கிப் பழகுவதாலா?

ஓர் ஆணுடன் நெருங்கிப் பழகினாலே, அந்த ஆணின் ஒரு சில குணங்கள் பிடித்து விட்டாலே இந்தத் தடு மாற்றம் ஏற்பட்டு விடுமா?

பலம் இல்லாத கொடி ஒன்று உறுதியான மரக்கிளை கிடைத்ததும் அதைச் சுற்றி பின்னி பிணைந்து வேகமாய் வளர்வது போல்.. யார் நெருங்கி அபயக்கரம் நீட்டி னாலும் மயங்கி விடுவார்களா இந்தப் பெண்கள்?

கொடியிடையாள் என்று வர்ணிப்பதுகூட அதற்காகத் தானா?

பின் தினகர் நாலு பேச்சு இனிமையாய்ப் பேசி அங்கங்கு இதமாய் மென்மையாய் தொட்டதும் மனம் முழுவதும் சரணாகதி அடைவது போல் இறங்கி விட்டதே!

கொஞ்ச நாட்களுக்கு முன் அவனை பெண் பித்தன், பொறுக்கி.. அவன் கீழ் வேலை பார்க்கக் கூட முடியாது... அவனைப் பார்ப்பதே பாவம்... என வசை பாடி ஊரை விட்டுக் கிளம்பத் துணிந்த மனதுதான் இப்போது பொல்லாத அமைதியாகி தினகர் புராணம் பாடத் தொடங்கி விட்டதே...?

ஏன்... எதனால்?

ஒருவேளை இந்த தினகர் எதுவுமே சொக்குப்பிடி போடுவது போல் பேச்சிலேயே அவளை மயக்கி ஆளுமைப்படுத்தி விட்டானா? அல்லது அப்படி முயல் கிறானா?

பேசாமல் அவன் பிடியில் இருந்து விலகி இங்கிருந்து சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்கு ஓடி விடலாமா?

பின் எந்தக் குழப்பமும் வராதுதானே!

அப்பா, அம்மா, தம்பி பாலு, தோழி நீலா என பழைய சுகமான வாழ்க்கையைத் தொடங்கி தொடர்ந்து அனு பவிக்கலாமே?

அதை விட்டு விட்டு எதற்காக இந்த இம்சைத்தனம்? அடிக்கடி தேவையில்லாமல் எழும் இந்த தினகர் நினைப்பு?

என்னென்னமோ சிந்தனைகள்.

கிறுக்குத்தனமான யோசனைகள்.

எல்லாம் அவள் மனதில் அன்று ஓடியது.

எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு மறுநாள் அலு வலகம் கிளம்பிப் போனாள்.

ஆனால் அங்கும் அவளுக்கு பலத்த திகைப்பு!

அன்று அலுவலகத்தில் கஸ்டம்ஸ் மற்றும் வணிக வரித்துறையினரின் ரெய்டு. ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக் கணக்கு விவரங்கள். அதற்குண்டான வரிகள், குடோன் ஸ்டாக், எக்ஸ்போர்ட் ஆர்டர் என அனைத்து விபரங்களையும் கேள்வி கேட்டு துளைத்தபடி பத்து பதினைந்து அரசாங்க அதிகாரிகள்.



அவர்களது பிடியில் விசாரிப்பில் அலுவலகமே அல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

ரிக்கார்டுகளைப் பார்ப்பதும் கேள்விகள் கேட்டுக் குடைவதுமாய் இருப்பது அவள் அரண்டுதான் போனாள்.

அவர்கள் காஞ்சனமாலாவையும் விட்டு வைக்க வில்லை. ஸீட்டில் அவள் வந்து உட்கார்ந்ததுமே இரண்டு பேர் அவளைச் சூழ்ந்து கொண்டு அவள் பார்த்து வரும் வேலை, அவளுக்குத் தெரிந்த கம்பெனி விபரங்கள் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டனர்.

திகைத்து அவள் பேந்தப் பேந்த விழிக்க, திகைத்தான் அவள் பக்கம் வந்து அவள் தோள்களைத் தட்டி, ''உனக்குத் தெரிந்த விபரங்களைத் தைரியமாகக் கூறு. இது வழக்கமாக நடக்கும் விசாரணைதான்!'' என தைரியம் கொடுத்தான்.

அந்த தைரியத்தில்தான் உயிர் வந்தது போல் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். தினகரைப் பார்த்தபோது அவன் அதே வசீகரப் புன்னகையோடு கொஞ்சமும் பதட்டமில்லாமல் அங்குமிங்கும் நடமாடியது அவளை ரொம்பவும் ஆச்சரியப்படுத்தியது.

இப்படித்தான் எந்த சூழ்நிலையிலும் அமைதியாய் இயல்பாய் இருக்க வேண்டும் என நினைத்தவள் தனக் குத்தானே அதை உரக்கச் சொல்லிக் கொண்டாள்.

ஒரு மூன்று மணி நேரம் அலுவலக ஃபைல்களை குடைந்த அதிகாரிகள் பின் குடோன் ஸ்டாக்கைப் பார்க்க வேண்டும் என கிளம்பி விட்டார்கள்.

தினகர் அவர்களை குடோனுக்கு அழைத்துச் செல்லத் தயாராகிக் கிளம்பினான். எல்லாவற்றையும் விசித்திர

மாய் பார்த்து திகைத்து நின்றவளின் தோள்களை மறுபடியும் தட்டி, 'நீயும் உடன் வா..!' என அழைத்துப் போனான்.

தினகரின் தேயிலை குடோன் அலுவலகத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் அடிவாரப் பகுதியில் ஐந்து ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்தது. அங்கு ஏற்று மதிக்கு தயாரான தேயிலைத் தூள்க்ள், பதப்படுத்த வேண்டிய தேயிலைச் செடிகள், என நிறைய பொருள் கள் ஸ்டாக் வைக்கப்பட்டு பத்திரப் படுத்தப்பட்டிருக்க... அதை சரி பார்ப்பதற்காக தினகருடன் அதிகாரிகள் கிளம்பினார்கள்.

தினகர் தன் காரில் காஞ்சனமாலாவுடன் கிளம்ப பின்னால் ஜீப்பில் அதிகாரிகள் தொடர்ந்தார்கள்.

''எப்படி ஸார் பதட்டமில்லாமல் இருக்கிறீர்கள்?'' என்றாள் காஞ்சனமாலா தன் விழிகள் முழுவதையும் விரித்தவாறு.

தோள்களை அசால்டாய் குலுக்கினான் தினகர்.

''இது வழக்கமாக அதிகாரிகள் நடத்தும் சோதனை தான். நான் எதற்கு பயப்பட வேண்டும்? கணக்கு வழக்குகளில் குறிப்புகளில் எந்தவிதத் தப்பும் இருக்காது. மேலும் கம்பெனி லாபம் பெறுவதற்காக அரசாங்கத்தை ஏமாற்றும் எந்த குறுக்கு வழிகளிலும் நான் ஈடுபட மாட் டேன். எனக்கு அது பிடிக்காத விஷயமும் கூட...''

சொல்லியபடி அவன் சிரிக்க கள்ளமில்லா சிரிப்பென் றால் இதுதானோ? என வியந்தாள்.

அத்தோடு தினகர் விடாமல் அவள் தோள்களைத் தட்டியவன், ''நீ ரொம்பவும் பயந்து விட்டாய் போல...



உன் கண்களிலே அது தெரிகிறதே?'' எனவும், ''ஆமாம்... ஸார்...'' என்றாள் நீண்ட பெருமூச்சு விடுபவளாய்.

''கூல் டவுண் பேபி...'' என்றபடி தினகர் அவள் தோளைத் தட்டிய கைகளைக் கீழே கொண்டு வந்து அவள் விரல்கள் மீது ஆதரவாய் வைத்தான். அழுத்தமாய் பிடித்துக் கொண்டான்.

அந்தச் சூழ்நிலையில் அவளுக்கும் கைகளை விடு விக்கத் தோன்றவில்லை. அவளும் விடுவதாய் இல்லை போலும். தன் மறுகையினாலே ஸ்டியரிங்கை வளைவு களில் லாவகமாய் வளைத்து காரை வேகமாய் செலுத்தி னான்.

இருபது நிமிட பயணத்தில் குடோனை அடைந்து இறங்கினார்கள். அங்கு குடோனில் உள்ள ஸ்டாக்குகளை குறிப்புகளை எல்லாம் அதிகாரிகள் செக் செய்ய ஆரம் பிக்க... தினகர் அவளை தன் கேபின் அறைக்கு கூட்டிச் சென்றான்.

அங்கு அதிகாரிகள் சோதனை முடியும் வரை இரு வரும் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு மணி நேர சோதனை முடிந்ததும் அதிகாரிகள் திருப்தியடைந்தவர் களாய் விடை பெற்றுக் கிளம்பினர்.

புன்னகையுடன் அவர்களை அனுப்பி வைத்த தினகர் காஞ்சனமாலாவுடன் அங்கிருந்து கிளம்ப தன் காரை நோக்கி நடந்தான்.

அப்போது திடீரென சூழ்நிலை மாறி வேகமாய் சூரைக் காற்று வீசியது. கூடவே இடி மின்னலுடன் வானில் கருத்த மேகங்கள் உருவாக ஆரம்பித்தது. காரைக் கிளப்பி சில அடிதூரம் இருவரும் செல்வதற்குள்ளே சடசடவென மழை வேகம் பிடித்து விட்டது.

பலத்த அடர்மலைகள் கண்ணைப் பறிப்பது போல் மின்னல்கள்.

தூரத்தில் இடி விழுவது போல் அதி பயங்கர சப்தங்கள்!

பத்து கிலோ மீட்டர் மலைப் பகுதியில் செங்குத்தாய் ஏறித்தான் அவர்களது இருப்பிடத்தை அடைய முடியும். அதுவும் இந்த நேரத்தில் மலைப்பாதைகளில் பயணிப்பது மிகவும் ஆபத்தானது. திடீரென மலைச் சரிவு ஏற்பட்டு பாறைகள் உருண்டு வந்து பாதையை அடைத்துக் கொள்ளும். இல்லை. வண்டி மீதே பாறைகள் விழக்கூடிய அபாய முகம் ஏற்பட்டு விடலாம்.

அதை யோசித்த தினகர், ''பக்கத்தில்தான் கம்பெனிக்குச் சொந்தமான கெஸ்ட் அவுஸ் இருக்கிறது. அங்கு தங்கி விட்டு மழை விட்டதும் நாம் செல்வோம்...'' எனச் சொல்ல தலையாட்டினாள் அவள்.

அந்த கெஸ்ட் அவுஸ்தான் தன் தலைவிதியை மாற்றப் போகிறது என்று காஞ்சனமாலா அப்போது சற்றும் உணரவில்லை.



## 13

தினகர் சொல்லியபடி காரைத் திருப்பி அந்த குடோன் பக்கம் உள்ள கெஸ்ட் ஹவுசில் நிறுத்தினான்.

மழை... சரியான அடை மழைதான்!



இடியும் மின்னலும் மாலை நேர இருட்டும் வேறு சேர்ந்து கொள்ள காரை விட்டு அவனுடன் இறங்கியவள் பயத்தில் பற்றியிருந்த அவன் கையைக் கூட விடவில்லை.

அந்த கெஸ்ட் ஹவுஸின் சாவியை எப்போதுமே தன்னிடம் வைத்திருப்பான் போலும். பைக்குள் கைவிட்டுத் திறந்து அவளை உள்ளே கூட்டிப் போனான்.

சிறிய பால்கனி, மாடி, ஏசி, ஹீட்டர், இருக்கைகள், நீள சோபாக்கள் தனித்தனி அறைகள் என சகல வசதிகளுடன் இருந்தது கெஸ்ட் ஹவுஸ்.

'அவ்வப்போது வரும் அதிகாரிகள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதுண்டு என விளக்கம் கொடுத்தான் தினகர்.

அவளை பெரிய ஹாலின் சோபாவில் உட்கார வைத்துவிட்டு உள்ளே தெரிந்த கிச்சன் பக்கம் போய் மின் அடுப்பை உயிர்ப்பித்து சூடான தேநீரை தயாரித்துக் கொண்டு வந்து அவளிடம் நீட்டினான்.

''நம் நிறுவனத் தயாரிப்பில் உருவான பிளாக் டீதான்! குடித்துப்பார். நன்றாக இருக்கும்!'' என்றான்.

சூடாகவும் சுவையாகவும் இருக்க ரசித்துக் குடித்தாள் அவள். அதற்குள் தினகர் போன் செய்து மேனேஜரிடம் பேசிக் கொண்டிருந்தான்.

அவன் பேசிய தொனியில் இருந்து பெரும் மழை பெய்வதால் உடனே உற்பத்தியை நிறுத்திவிட்டு லீவு விடும்படியும், பணியாளர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு பத்திரமாகச் செல்ல வாகன வசதிகளை ஏற்பாடு செய்து விடும்படியும் அறிவுறுத்திக் கொண்டிருந்தான்.

அந்த மழை நேரத்திலும் பணியாளர்கள் நலனுக்காக இவ்வளவு யோசிக்கிறானே... எவ்வளவு நல்ல மனது இவனுக்கு? என வியந்தாள் அவள்.

அந்த வியப்பில் அவனையே வைத்த கண் வாங்காமல் ஓரிரு நிமிடங்கள் பார்த்தாள்.

ஒரு நேரத்தில் இவனைத்தானே கெட்டவன், பொறுக்கி, காமுகன் என்றெல்லாம் நினைத்தோம் என்ற நினைப்பு அவளுள் ஓடியது. அப்படி நினைத்தமைக்கு தன்னையே கடிந்து கொள்வது போல் உதடுகளை அழுத்தமாய் கடித்துக் கொண்டாள் அவள்.

அதற்குள் தினகர் போன் பேசி முடித்தவனாய் அவள் பக்கம் வந்தவன் ஒரு போர்வையை நீட்டினான்.

''மலைப் பாதையில் நிறைய மலைச் சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் மேனேஜர் சொன்னார். அதனால் மழை விட்ட பிறகுதான் நாம் இங்கிருந்து செல்ல முடியும். அதுவரை இந்த அறையில் ஓய்வு எடுத்துக் கொள். நான் வெளியில் இருக்கிறேன்...'' என்றபடி போர்வையைக் கொடுத்து விட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல் வெளி சோபாவை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

''ஸார்... ஸார்...'' என்றபடி நடக்கப் போனவனின் கைகளை வேகமாய்ப் பிடித்தாள்.

என்ன? என அவன் நின்று திரும்ப, ''எனக்கு பயமாய் இருக்கிறது ஸார்...'' என்றாள் குரல் கம்ம.

''பயமா... எதற்கு?''

அவன் கேட்டு முடிக்க அந்நேரம் பார்த்து காதைப் பிளக்கும் பெரும் ஓசையுடன் இடியொன்று பக்கத்தில் எங்கோ விழுந்தது போல் அறையே தடதடத்தது.



''ஐயோ...! இடி!'' அலறியவளாய் டக்கென குழந்தை போல் அவன் நெஞ்சில் மோதி ஒண்டிக் கொண்டாள் அவள்.

''இதற்கு... இதற்குத்தான் ஸார்! பயமாய் இருக்கிறது...!'' என நிஜமாகவே உதடுகள் தந்தியடிக்க அவள் சொன்னதைக் கண்டு அவன் சிரித்து விட்டான்.

''இவ்வளவு பயந்த பெண்ணா நீ..?'' என்றபடி அவன் தினகர் ஆதரவாய் அவள் தோளைத் தாங்கியபடி கட்டில் பக்கம் சென்று உட்கார்த்தி வைத்தான்.

அவனும் பக்கத்தில் உட்கார்ந்து அவளைப் பார்த்தான்.

''ரொம்பவும் பயப்படாதே. இந்த கெஸ்ட் ஹவுஸிலும் சரி... மற்ற நம் அலுவலகங்களிலும் சரி இடி தாங்கி கருவியை முன்பே தற்பாதுகாப்புக்காக பொருத்தியிருக்கிறேன். அதனால் இடி ஒன்றும் உன் தலையிலோ என் தலையிலோ விழப் போவதில்லை...'' என்றான் தைரியம் கொடுப்பது போல்.

ஆனாலும் பயம் நீங்காதவளாய் பயப் பார்வையுடன் நிமிர்ந்தவள் மறுபடியும் ஒரு பெரிய இடி ஓசை கேட்டதும் அதே பயத்தில் அவனோடு ஒண்டினாள். அப்படியே அபயம் தேடுவது போல் அவனை இறுக கட்டிக் கொண்டாள்.

கொஞ்ச நேரம் இருவரும் அதே நிலையில் இருந்தார்கள்.

ஒரு சிறு அமைதிக்குப் பின் அவன், ''மாலா...'' என மெல்ல அழைத்தான்.

அவள் அவனை பயத்தில் அணைத்துப் பிடித்தபடி இருந்தாலும் எங்கோ தூரத்தில் இருந்து கேட்பது போல், ''ம்ம்...'' என்றாள்.

''இப்படி யாருமில்லாத தனிமையில் நாம் இப்படி இருப்பது தவறு...'' என்று சொல்லியபடி தன்னைப் பிடித்திருந்த அவளது கைகளை விலக்கினான். தன்னை முழுவதுமாய் விடுவித்துக் கொண்டான்.

அவளுக்கு அவன் சொல்வது உரைத்தாலும் என்னவோ போல் எதையோ இழந்து விட்டது போலவே இருந்தது.

அதனாலே, ''தவறா? எதை நினைத்து நீங்கள் அப்படி பயப்படுகிறீர்கள்?'' என்றாள் புரியாதவள் போல்.

தினகர் அவளை உற்றுப் பார்த்து விட்டு கண்களைச் சிமிட்டினான். ''ஒரு ஆணும் பெண்ணும் தனிமையில் இருந்தால் என்ன நடக்குமோ அந்தத் தவறுக்கு...'' என்றான்.

''நான் பயப்படவில்லை...'' என்றாள் அவள் நெஞ்சு நிமிர துணிச்சல் காரிபோல்.

அவன் மறுபடியும் ஒருவிதமான பார்வையால் அவளை வெறிக்கவும், ''எனக்கு உங்கள் மீது நம்பிக்கை இருக்கிறது...'' என்றாள்.

அவன் தினகர் கைகளை வெறுமையாய் விரித்துத் தட்டினான்.

''ஆனால் எனக்கு என் மீது அந்த நம்பிக்கை இல்லை...'' என்றான்.

''என்ன நம்பிக்கை இல்லையா? என்ன சொல்கிறீர்கள் ஸார்?'' என்றாள் அவள் புருவம் உயர்த்தி கைகளை கன்னங்களில் வைத்தவாறு.



பதிலுக்கு அவனும் அதே போல் கையை தன் கன்னத்தில் வைத்தவன், ''கொஞ்ச நாளைக்கு முன்பு ஒரு பெண் என்னைக் கெட்டவன், பொறுக்கி, காமுகன் என்றெல்லாம் கூட திட்டி அழகு பார்த்தாள். அப்படிப் பட்ட ஒருவன் எப்படி தன் மீதே நம்பிக்கை வைக்க முடியும்? நீயே சொல்..!'' என்றான் எதிர் கேள்வி கேட்பவன் போல்.

அவள் முகம் மாறிச் சிரித்தாள்.

''நான் மாறிவிட்டேன். நீங்களும் மாறி விட்டீர்கள். அது எனக்குத் தெரியும்!'' என்றாள்.

''எப்படி?'' என்றாள் அவன் தன் தலையை முழுவதுமாய் அவள் பக்கம் திருப்பி.

அவள் என்ன பதில் சொல்வது என்பது போல் திரும்பி அவனை அவன் கண்களையே கூர்ந்து பார்த்தாள்.

பின் என்ன நினைத்தாளோ... சட்டென அவனை தன் கைகளால் அணைத்து அவன் நெற்றியில் முத்தம் ஒன்றை இதமாய் பதித்தாள்.

அவன் திகைப்பது போல் அவளையே உற்றுப் பார்த்தான்.

''நான் செய்தது தவறா ஸார்?'' என்றாள் திடீரென திடுக்கிடுவது போல் அவள்.

''தவறுதான்! இப்படியே போனால் நாம் இருவரும் உணர்ச்சிகளின் பிடியில் சிக்கிக் கொள்வோம்...'' என்றபடி அவன் சட்டென எழுந்து விட்டான்.

அங்கிருந்து அகல்வதற்குத் தயாரானான்.

அவள் நிஜமாகவே அவன் நடந்து கொள்ளும் விதம் கண்டு குளிரத்தான் செய்தாள்.

ஒரு காலத்தில் பெண்களை எப்படி போகப் பொருளாய் நினைத்து நுகரத் துடித்தவன் இப்போது புனிதமாய் அல்லவா கருதுகிறான். அவ்வளவு நல்லவனாக இவன் மாறிவிட்டானா? அப்படி இவன் மாறுவதற்கான காரணம் நாம்தானே? நமக்காகவா இப்படி முற்றிலும் மாறி விட்டான்?

அவ்வளவு தூரம் நம் மீது மதிப்பு..?

மரியாதை?.. காதல்? அன்பு? பிரியம்? என எதை அப்படி வைத்திருக்கிறான்?

சட்டென நெகிழ்ச்சி கொண்டவளாய் அதை தெரிந்து கொள்ளும் நினைப்பில் மறுபடியும் நகரப் போனவளை கைகளைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள்.

அவனும் டக்கென நின்றான். கிரேக்க போர் வீரன் போல் நெஞ்சு நிமிர சிலை போல் அவன் நின்றது மேலும் அவளுக்கு வெறியூட்டியது போலும்.

முன்பின் யோசியாமல் ஏதோ ஒரு ஆவலில் அவனை மறுபடியும் தழுவினாள்.

அவன் பேசாமல் இருந்ததும் அவன் தன் காதலை ஆமோதிக்கிறான் ஏற்றுக் கொள்கிறான் என்ற கூடுதல் சந்தோஷம் அவளுள் எழுந்து கொள்ள... அவனை அணைத்த பிடியை விடாமல் இருந்தாள்.

அவன் மட்டும் என்ன உணர்ச்சிகளற்ற மரப்பாச்சியா? எவ்வளவு நேரம்தான் அப்படி உணர்வில்லாமல் இருக்க முடியும்?

அடுத்த சில நிமிடங்களிலே அவளை அந்த படுக்கையில் கிடத்தி அவள் மேலே படர்ந்து விலா எலும்புகள்



நொறுங்குமளவுக்கு வெறியோடு அணைத்தான்.. அவன்.

அவனது அந்த முரட்டுத் தனத்தில் அவள் மேலும் கிறங்கியவளாய் கண்கள் சொருக எவ்வித எதிர்ப்பும் காட்டாது அவன் பிடிகளில் துவழ ஆரம்பித்தாள்.

இனி அவன் என்ன செய்தாலும் சரிதான். தனக்கு ஒப்புதல்தான் என்பது போல் அவளும் அவளது கரங்களால் அவனை விளக்க ஆரம்பித்தாள்.

உணர்ச்சிகளின் பிடிகளில் தங்களை இருவரும் ஒப்படைக்கப் போகும் உன்னத நிலை அது.

அந்த நிலையில் சட்டென நின்றான் தினகர். தனது பிடியை எல்லாம் தளர்த்தி... அவளை அவனது பிணைப்பில் இருந்து முழுவதுமாய் அவன் விடுவித்து... சட்டென ஒன்றும் நடவாதது போல் எழுந்து நின்றான் அவன்.

அவள் கண்கள் சொருக ஏதோ ஆனந்தமான ஒரு உலகத்திற்குப் போக தயாராக இருந்தவள் பட்டென கனவு கலந்தது போல் திடுக்கிட்டு விட்டாள்.

அதே துணுக்குற்றலுடன் குற்ற உணர்ச்சி தாக்கத் தவித்தாள். தனது உடைகளை சரி செயதபடி எழுந்தவள் அவனை நிமிர்ந்து பார்க்க தைரியம் இல்லாதவள் போல குனிந்தாள்.

ஆனால் தினகரிடம் இருந்து கிளம்பிய வெடிச் சிரிப்பு ஒன்று அவளை நிமிரச் செய்தது.

''என்ன பேபி அப்படி விழிக்கிறாய்? ஒன்றும் புரியவில்லையா? நான் நல்லவன் போல், உன் மேல் காதல் இருப்பது போல் நடித்ததும் அந்த மயக்கத்தில்

உன்னையே இழக்கத் துணிந்து விட்டாயே? நான் அன்று உன்னிடம் சொல்லி சவால் விட்டது ஞாபக மிருக்கிறதா? ஒவ்வொரு பெண்ணிற்கும் ஒரு எதிர் பார்ப்பு, ஒரு அளவுகோல் இருக்கிறது... அதை சரியாக புரிந்து கொண்டு பூர்த்தி செய்து விட்டால் போதும். அவள் அவனோடு கைகோர்த்துக் கொண்டு எந்த எல் லைக்கும் செல்லத் தயாராகி விடுவாள் என்று. அதே போல் உனது எதிர்பார்ப்பு உனது அளவுகோல் ஒரு நல்ல வனாய் நல்ல ஆண் மகனாய்... சரியான ஒழுக்க சீலனாய் இருப்பதுதான். அதைப் புரிந்து கொண்டு உன்னிடம் அப்படி நல்லவன் போலவே நடித்தேன். நீயும் நான் நினைத்தது போல் நம்பினாய். ஏமாந்தாய். கடைசியில் நான் சொன்ன எல்லையான படுக்கை வரை வந்து உன்னை இழக்கவும் தயாராகி விட்டாய். இப்போது சொல் பேபி? சவாலில் ஜெயித்தது நானா.. நீயா? இந்த தினகர் தோற்றதாய் எந்த சரித்திரமும் இல்லை தெரி யுமா? சொல்லியபடி வெறித்தனமாய் படபடவென அவள் சிரிக்க... அப்படியே நொறுங்கிப் போனாள் அவள்!

## 14

தினகர் சொல்லச் சொல்ல அவளுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை தான். திருதிருவென விழித்தவள் அவள் சொன்ன சவால், நடிப்பு.. போன்ற வார்த்தை களில் முன்பு நடந்தது உரைத்தது போல் நினைவுக்குக் கொண்டு வந்தாள்.



முன்பு இதே போல் ஒரு முறை வெட்கமில்லாமல் அவன் படுக்கைக்கு வருகிறாயா? என அவளை அழைத்த போது அவள் வெடித்ததும் அப்போது அவனும் பதி லுக்கு அதே கோபத்தில் பெண்களைப் பற்றிய தனது மதிப்பீட்டைச் சொல்லிப் பேசியதும் அவள் ஞாபகத் திற்கு வந்தது.

அப்படியானால் அன்று அவன் பேசியது வெறு பேச்சு கிடையாதா? வீராப்பாய் உன்னை எப்படியும் என்னிடம் பணிய வைக்கிறேன் என்று போட்ட சவாலா?

அந்த சவாலை நிறைவேற்றுவதற்கு அதில் ஜெயிப்ப தற்கு இப்படி நல்லவன் போல் நம்மிடம் நடித்திருக் கிறானா?

அதுவும் காதலிப்பது போல் காதல் வேஷம் வேறு போட்டிருக்கிறானா?

என்ன கொடுமை... என்ன அநியாயம் இது..!

நல்லவன் மாதிரி நடித்தானாம்!

அப்படியானால் இவன் இன்னும் நல்லவனாக மாற வில்லையா..? பழைய தினகராய் பொறுக்கியாய் பெண் களுக்கு வலை வீசும் காமுகனாய் தான் வெறி பிடித்து அலைகிறானா?

''நான் காமுகன் இல்லை பேபி..!'' அவள் நினைப்பை புரிந்தவன் போல் மறுபடி பேச ஆரம்பித்தான் அவன்.

''நான் மட்டும் நீ நினைப்பது போல் காமுகன் என் றால் இந்நேரம் என் பிடிகளில் வலிய வந்து துவண்ட உன்னை பூவை நுகர்வது போல் நுகர்ந்து ஆசையை தீர்த்திருப்பேன். ஆனால் எனது நோக்கம் அதுவல்ல ..

அன்றே உன்னிடம் சொன்னது போல் தொழிலும் சரி மற்ற விஷயங்களிலும் சரி என் கணிப்பும் நான் எடுக்கும் முடிவும் மிகச் சரியாக இருக்கும். அது என்னவோ தவறு போல் என்னை அன்று என்னவெல்லாம் பேசினாய். ஏதோ காமக் கொடூரன் போல் வார்த்தைகளை வீசி எவ்வளவு அருவறுப்பாய் என்னைப் பார்த்தாய்? இதுநாள் வரை என்னிடம் அப்படி யாரும் பேசியது இல்லை. அவ்வளவு ஒரு வெறுப்பை அருவறுப்பாய் என்னிடம் காட்டியதும் இல்லை. ஆனால் நீ.. நீ... அன்று.. அன்று... என்னை ரொம்பவும் அவமானப்படுத்தினாய்... காமுகன் போல் எனக்கு பயந்து கொண்டு... வேலையை விட்டே ஓடத் துணிந்தாயே...? அதனால்தான் என்னை அவமானப்படுத்திய உன்னை உன் திமிரை அடக்கி பழி வாங்கத் துடித்தேன். உனக்காக என் சுபாவத்தை மாற்றி நல்லவனானேன். கடைசியில் தானாக பழம் நழுவிப் பாலில் வருவது போல் நீயே வலிய வந்து உன்னை என்னிடம் ஒப்படைக்கும் அளவுக்கு உனக்கு காதல் கிறுக்குப் பிடிக்க வைத்து விட்டேன். பார்த்தாயா...? அதில்தான் எனது வெற்றி... எனது அபார சாதனை இருக்கிறது...''

கொக்கரிக்காத குறையாய் பேசி முடித்தான் அவன்.

அவளுக்குச் சுத்தமாய் வாயடைத்துதான் போனது.

ஒரு வார்த்தை அவளால் பேச முடியவில்லை.

அவன் நிமிர்ந்து கூட முன்பு போல் பார்க்க முடியாமல் குனிந்தே இருந்தாள்.

ஒரு சில நொடிகளில் உணர்வுகளில் நெகிழ்ந்து தன்னையே அவனிடம் ஒப்படைக்கும் அளவுக்கு துணிந்து விட்டாளே.



என்ன ஒரு கையாலாகாத்தனம். எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

அப்படி அவள் ஒரு கணம் பலஹீனப்பட்டதைத் தானே நன்கு உணர்ந்து எள்ளி நகையாடுகிறான்!

அவமானம் பிடுங்கித் தின்றவளாய் கற்சிலை போல் சில நிமிடங்கள் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவன் அறையின் முன்னும் பின்னும் ஒருவித ஜெயித்து விட்ட ராஜநடை நடந்தவன் கதவுப் பக்கம் போய் வெளியே பார்த்தான். அவன் முகம் மாறியது. அவளை நோக்கித் திரும்பினான்.

''மழை விட்டு விட்டது. கிளம்பு..!''

சொல்லியபடி அவள் பதிலுக்குக் காத்திராமல் முன்னால் விறுவிறுவென நடக்க ஆரம்பித்து விட்டான்.

அவள் அங்கு சிலைபோல் உட்கார்ந்து என்ன செய்யப் போகிறாள்?

தப்பித்தோம் பிழைத்தோம் என பின்னால் குனிந்த தலையாய் நடந்து காரில் ஏறிக்கொண்டாள்.

மழை விட்டிருந்தாலும் சாலைகளில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியிருக்க தினகர் காரை மெதுவாகவே ஓட்டினான்.

குனிந்திருந்த அவள் பக்கம் அவன் திரும்பவில்லை. அவளும் நிமிர்ந்து அவனைப் பார்க்கவே இல்லை. இருபது நிமிட பயணத்திற்குப் பின் அலுவலகப் பகுதியை அடைந்து விட்டார்கள்.

அவளை அவள் தங்கியிருக்கும் ஹாஸ்டல் பக்கமே இறக்கி விட்டான்.

கதவைத் திறந்து விருட்டென இறங்கியவள் கதவை சாத்தும்போது நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

''நான் வேலையை ராஜினாமா செய்கிறேன். நாளைக்கே ஊருக்குப் போகிறேன்!'' என்றாள் அவள் இறுகிய முகத்துடன்.

''தாராளமாய்...'' என்றான் அவனும் குரலில் எவ்விதச் சலனமுமின்றி.

பின் அவள் திரும்பி நடக்க அவனும் விரைசலாய் காரைத் திருப்பிக் கொண்டு சென்று விட்டான்.

கண் மண் தெரியாத ஆத்திரத்தில் துடித்துக் கொண்டிருந்த மனதுடன் எப்படி எங்கும் முட்டாமல் ஹாஸ்டல் சுவரில் மோதாமல் அறை வந்து சேர்ந்தாள் என்பதே அவளுக்குத் தெரியவில்லை.

யாரையும் எதையும் பார்க்கப் பிடிக்காதவளாய் உள்ளே பூட்டிக் கொண்டு போய் படுக்கையில் விழுந்தாள்.

பல மணி நேரம் அவள் உடம்புதான் அப்படி அசைவற்றுக் கிடந்ததே தவிர உள்ளம் நடந்ததை நினைத்து நினைத்துக் களைத்து விட்டது.

அவளை எவ்வளவு கேவலமாய் நினைந்து விட்டான் அவன்!

அவன் நல்லவனாய் மாறியதால் அந்த சந்தோஷத்தில் அவளறியாமல் பூத்ததுதானே அந்த மென்மையான உணர்வு...? காதல்..?

அதைப்போய் நாடி பிடிப்பது போல் கைகளால் அழுத்திப் பிசைந்து கொச்சைப் படுத்தி விட்டானே?

எல்லாவற்றுக்கும் மேல் அவள் நடிப்பிற்காக, அவளை சவாலில் ஜெயிப்பதற்காகத்தான் அப்படி அவள் மீது



காதல் கொண்டிருப்பது போல் எல்லாம் நடந்து கொண்டானாம்!

கடவுளே! எவ்வளவு பெரிய ஏமாற்றம். எவ்வளவு பெரிய தோல்வி அவளுக்கு!

சில மணி நேரத்தில், அவளை எவ்வளவு கேவலமான பிறவி போல் அவள் ஆக்கி விட்டான்?

என்ன ஆனாலும் சரி.

இனி இந்த ஊரில் ஒரு நொடி தாமதிக்கக் கூடாது.

அவன் முகத்தில் இனி ஒருபோதும் விழிக்கக் கூடாது!

நாளை முதலில் வேலையை ராஜினாமா செய்து விட்டு உடனே ஊருக்குக் கிளம்பிவிட வேண்டும்.

அப்படிச் சென்று விட்டால் கவலையில்லை. இனி அவன் முகத்தில் விழிக்கவே வேண்டியதில்லைதான்! அவனைப் பார்க்கும் வாய்ப்பும் இராதுதான்!

அவனைப் பார்க்கவே முடியாதுதான்.

தலையணையில் முகம் புதைத்து அழுதவள் அப்படியே தூங்கியும் போனாள்.



# 15

மறுநாள் காஞ்சனமாலா திட்டமிட்டபடியே எல்லாம் நடந்தது.

முதலில் அலுவலகம் சென்று ராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பித்தாள். தினகர் இன்னும் அங்கு வந்திருக்க

வில்லைதான். ஆனால் முன்பே போன் மூலம் தலைமைக் கணக்கரிடம் விவரம் தெரிவித்திருப்பான் போலும்.

அவள் ரிசைனிங் லெட்டரை நீட்டியதும் அதை எதிர்பார்த்தது போல் அவள் அதுநாள் வரை வேலை பார்த்த தற்கான சம்பளத்தை பைசா குறையாமல் செக்காய் போட்டு நீட்டினார்.

அலுவலகத்தில் வேறு யாரும் எதுவும் அவளிடம் கேட்கவில்லை.

கேட்கவும் மாட்டார்கள்.

ஏனெனில் அங்கு எல்லாமே தினகரின் ராஜ்யம்தான். ஒன் மேன் ஷோதான்! எல்லாவற்றுக்கும் முக்கிய சூத்ரதாரியும் அவன்தானே!

பின் ரூம் வந்து காலி செய்து விட்டு உடமைகளுடன் பஸ் ஏறினாள்.

பஸ் கிளம்புகையில் வீட்டு நினைவு மெல்ல பீறிட்டது.

அம்மா... அம்மா... தம்பி பாலு.. தோழி நீலா... அவர் களுடன் பழைய இனிமையான வாழ்க்கை கிடைக்கும். திரும்பவும் கல்லூரியிலோ மாலை நேர வகுப்பிலோ சேர்ந்து கொள்ளலாம்தான்.

ஆனால்...?

அத்தை சொர்ணம்... பாண்டி மாமா..?

அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அப்பாவின் கடன் பத்து லட்ச ரூபாய்...?

அதைப் புரட்ட இன்னும் ஒரு மாதத்திற்கு மேலான கால அவகாசம் தேவைப்படும் என இரண்டு



நாட்களுக்கு முன் போன் செய்த தந்தை கூட விபரம் தெரிவித்திருந்தாரே?

பின் அதற்குள் இப்படியாகி அவமானப்பட்டு வேலையை யும் விட்டு விட்டு அவர்கள் முன் போய் நின்றால் என்ன ஆகும்?

அவள் திரும்பி வந்து விட்டாள் என சொர்ணம், அத் தைக்குத் தெரிந்தால் அவ்வளவுதான்!

உடனே செல்ல மகன் பாண்டியுடன் கிளம்பி வந்து நச்சரிக்க ஆரம்பித்து விடுவாள்.

பாண்டியும் வலிய வலிய அவள் பின்னால் வந்து அசடு வழிவான்.

சொந்தம் என்று போய் விட்டதால் முகம் முறித்து விரட்டவும் முடியாது.

அப்படி விரட்டினாலும் கடனை, கொடுக்க வேண்டிய பாக்கி பணத்தை எடுத்து வை... இல்லாவிட்டால் நடப்பதே வேறு என அத்தை மிரட்ட ஆரம்பித்து விடு வாள்.

இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமானால் தந்தை சொல்லியது போல் மூன்று மாதம் அதாவது இன்னொரு மாதம் இந்த தேயிலை எஸ்டேட்டில் அவள் வேலை பார்க்க வேண்டும். அப்படி பார்த்திருந்தால் தந்தையும் அந்த அவகாசத்தில் பூர்விக நிலத்தை விற்று பணத்தைப் புரட்டிவிட முடியும்.

ஆனால்..?

இங்குதான் நிலைமை திடீரென தலைகீழாய் மாறி விட்டதே!

இனி ஒரு நொடி கூட இங்கு வேலை பார்க்க முடியாத சூழ்நிலை... அந்த தினகரின் முகத்தில் முழிக்க முடியாத கட்டாயம் ஏற்பட்டு விட்டதே!

இனி யோசித்துப் பயனில்லை!

எது வந்தாலும் சமாளிக்க வேண்டியதுதான். எது நடந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்!

கடைசியில் தெளிந்தவள் போல் அந்த பக்குவப்பட்ட நிலைக்கு வந்து விட்டாள் காஞ்சனமாலா.

அதே இறுக்கத்துடன் ஐந்து மணி நேர பயணம் செய்து ஊரை அடைந்து வீட்டுக்கு போய் நின்றாள். திடுதிப்பென வந்து நின்ற அவளை எதிர்பாராமல் திகைத்துதான் போயினர் பெற்றவர்கள்.

''வேலை பிடிக்கவில்லை என்னால் முடியலையப்பா. அதனால் வந்து விட்டேன்...'' என்றாள் தந்தையிடம்.

தந்தை சபேசன் ஆறுதலாய் அவளை அணைத்து வாஞ்சையாய் அவள் தலையை வருடினார்.

''பரவாயில்லை கண்மணி. உனக்குப் பிடிக்கா விட்டால் வந்துவிட வேண்டும் என நான் முன்பே சொல் லித்தானே உன்னை அனுப்பி வைத்தேன்?'' என்றார் ஆறுதல் வார்த்தைகளுடன்.

''ஆனால்.. அத்தைக்கான பணம்... புரட்டி விட்டீர் களா? அப்பா?'' என்றாள் ஆதங்கமாய்.

''இல்லை கண்ணு... அதற்கு இன்னும் எப்படியும் ஒரு மாதம் பிடிக்கும். அந்த பூர்விக நிலத்தில் சரியான பட்டா விபரம் இல்லாததால், வி.ஏ.ஓ. தாசில்தார், வட்டாட்சியர் என நிறைய பேரிடம் அனுமதி வாங்க வேண்டியிருக்



கிறது. அது கிடைத்தவன் உடனே விற்று விடலாம். பணமும் நம் கைக்கு வந்துவிடும். அதுவரை அத்தையை பொறுமை காக்கச் செல்வோம்...'' என்றார் நெற்றியில் கவலைகள் பெருகும் சிந்தனைக் கோடுகளோடு.

பின் காஞ்சனமாலா கவலை நீங்கியவளாய் தம்பி யுடன் விளையாடினாள். தோழி நீலாவைப் பார்த்துப் பேசினாள்.

அம்மாவுடன் கல்லூரி சென்ற மாலை நேர வகுப்பில் படிப்பைத் தொடர அப்ளிகேஷன் கூட வாங்கி வந்து விட்டாள்.

தினகர் பற்றி அவ்வப்போது நினைவுகள் எழுந்தாலும் ஒதுக்கிக் கொண்டு நடமாடினாள்.

நெடுநெடு உயரத்தில் ஆஜானுபாகுவான உடற்கட் டோடு வசீகரமாய் அவன் சிரிக்கும் அழகு அடிக்கடி அவள் மனதில் வந்து போனது.

அது மட்டுமா? அன்று கெஸ்ட் ஹவுஸில் வெட்க மின்றி அவனைத் தழுவிக் கிடந்தது, முத்தமிட்டது எல்லாம் நினைவுக்கு வந்து ரொம்பவும் இம்சித்தது.

சே! உணர்வுகளின் பிடியில் எவ்வளவு கேவலமாக நடந்திருக்கிறோம்... அதனால் தான் அவ்வளவு கேவல மாகப் பேசி விட்டான். என்ன ஒரு திமிர்.. ஆணவம்.. அவனுக்கு!

கடைசியில் நான் சவாலில் ஜெயித்து விட்டேன். நீ வேலையை விட்டுப் போகலாம்... என்பது போல் விரட்டித் துரத்தி விட்டானே?

அடிக்கடி அவன் நினை ப்பு வந்து கோபமாய் கொதிக் கத்தான் செய்தாள் அவள்.

ஆனால் மறுவாரம் சொல்லி வைத்தாற்போல் சொர்ணம் அத்தை அவள் வந்த விஷயத்தை எப்படியோ கேள்விப்பட்டு செல்ல மகன் பாண்டியுடன் வந்து குதித்து விட்டாள்.

''அடி தங்கம்! உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாகிப் போச்சு..'' என மாலாவை கட்டிக் கொண்டு அவள் நடித்த நடிப்பைப் பார்த்துத் தம்பி பாலு வந்த சிரிப்பை அடக்க சிரமப்பட்டது போலவே அவளும் திணறினாள்.

''உன்னை மருமகளாக்கிக் கொள்ளணும்ன்னு எனக்கு மட்டுமல்ல இந்த பச்சைப் புள்ளைக்கும் ஆசை...!'' என பாண்டியைக் காட்டினாள்.

இவனா பச்சைப் புள்ளை? வரிந்து கட்டிய லுங்கியும், கறுப்பாய் திகுதிகுவென வளர்ந்த உருவமும் கடா மீசைக்கு கீழே உள்ள பெரிய பெரிய பற்கள் தெரிய அறையே அதிரும்படி சிரிப்பதும், அந்த பற்களின் இடையே எப்போதும் சிகரெட் புகைந்து தொடர்ச்சியாய் வளையங்கள் வருவதும்... இவனா அந்த அப்பாவி?

ஆனால் சொர்ணம் சொன்னதற்கு அப்பாவி போல் தலையாட்டி வெட்கப்பட்டு சிரித்தான் பாண்டி.

''மாலான்னா எனக்கு உசிரு. அவளைத்தான் நான் கட்டிக்குவேன்!'' என்றான் ஏதோ கடையில் பொருள் ஒன்றை விரும்பி வாங்குவது போல்.

''நீ கவலைப்படாத செல்வம். இந்த முறை மாமா கண்டிப்பா சம்மதிச்சிருவார். அதனால மாலாக் கண்ணு உனக்குத்தான் மனைவியா வரப்போறா...'' என்றாள் சொர்ணம் தன் பங்கிற்கு, அவளாகவே வேண்டுமென்று கல்யாணப் பேச்சை எடுத்துப் பேசி முடிப்பது போல்.



அவள் பேசுவதைக் கேட்டு தந்தையும் தாயும் என்ன சொல்வதென்று தெரியாமல் நெளிவதையும் கண் கூடாகக் கண்டாள் காஞ்சனமாலா.

அவளுக்கும் சங்கடமாகத்தான் போயிற்று.

இந்த முறை சொர்ணம் அத்தை பணத்தை உடனே கொடு இல்லாவிட்டால் கல்யாணத்தை உடனே நடத்து!'' எனக் கறாராய் சொன்னால் அப்பாவால் என்ன செய்ய முடியும்? இனியும் அப்பாவால் சாக்கு போக்கு சொல்லி தப்பிக்கக் கூட முடியாதே?

என்ன சொல்லப் போகிறார் அப்பா? என திகைக்கவே செய்தாள் அவள்.

அவள் நினைத்தது போலவே சொர்ணம் அத்தை வந்த இரண்டாவது நாளே கல்யாணத்திற்கு நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

ஒத்துக் கொள்ளா விட்டால் பத்து லட்ச ரூபாய் பணத்தைத் தராமல் மோசடி செய்து விட்டதாக போலீஸ் கம்ப்ளையிண்ட் கொடுத்து விடுவேன் என்ற அன்பான மிரட்டல் வேறு.

இதில் பாண்டி வேறு சதா நேரமும் மாலாவின் பின் னால் கூஜா தூக்காத குறையாய் அசடு வழிய வந்து கொண்டிருந்தாள்.

ஒரு கட்டத்தில் அத்தை கொடுத்த நெருக்கடி. வெறுப் பான விரக்தியான மனநிலை. தினகர் மேல் இருந்த அளவு கடந்த கோபம். எல்லாம் ஒரு சேர அவளைச் சூழ்ந்து ரொம்பவும் வேதனைப்படுத்தி இம்சித்தது.

தன்னையே சுற்றி வரும் மாமா பாண்டியை ஒரு மனதாய் கட்டிக் கொள்வது என்று!



# 16

காஞ்சனமாலாவே இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை. இப்படி ஒரு முடிவிற்கு வருவோம் என அவள் கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை!

ஆனால் சொர்ணம் அத்தையின் காதைப் பிளக்கும் கேள்விகள் முன் தாயும் தந்தையும் பதில் பேச முடி யாமல் தினம் தினம் மருகுவது, கைகளைப் பிசைந்து கொண்டு கெஞ்சாத குறையாய் நெளிவது அவளுக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியது.

இதில் இருந்து அவர்களை மீட்க வேண்டும் என துடித் துடியாய் துடித்தாள்.

அதற்கு ஒரே வழி பாண்டி மாமாவைக் கல்யாணம் செய்து கொள்வதுதான்!

அதை விட்டால் வேறு வழியும் கிடையாது.

இப்படியே பேசிக் கொண்டிருந்தால் அத்தை ஒரு நாள் பொறுமையிழந்து அப்பா மீது மோசடி கம்ப்ளையிண்டை போலீஸிடம் கொடுத்து கம்பி எண்ணச் செய்தாலும் செய்து விடுவாள்தான்!

அதனால் தாமதிக்க வழியில்லை. அதனால் சீக்கிர மாக முடிவெடுத்தாக வேண்டும்.



மாலா யோசித்தாள்.

பாண்டி படிப்பறிவில்லாதவன் முரடன்.

வேலை வெட்டியில்லாமல் ஊர் சுற்றும் தெருப் பொறுக்கி எல்லாவற்றுக்கும் மேல் அவள் மீது தீராத மையல் கொண்டு பிதற்றாத குறையாய் பின் சுற்று பவன்!

அவ்வளவுதானே?

அவனை மணந்தால் என்ன? மணந்து கொண்டு அவனை படிப்படியாய் மாற்றித் திருத்த முயற்சித்தால் தான் என்ன?

இந்த தினகர் போன்ற கொழுத்த பணக்கார முதலைகள் நல்லவனாகவும் கெட்டவனாகவும் வேஷம் போட்டு ஊரை ஏமாற்றும்போது அசல் கெட்டவனாய் ஊரறிய தன்னை பறைசாற்றிக் கொண்டு வாழும் பாண்டி அவனுக்கு ஒன்றும் குறைந்தவன் இல்லையே!

மேலும் தினகர் நினைப்பு வந்ததும் கோபமும் ஆத் திரமும் ஒருசேர எழுந்து அவளைத் தாக்கியது.

அன்று என்னமாய் அவளை அவமானப்படுத்தி விட்டான்?

அவள் புனிதமாய் அவன் மீது வைத்த ஆசையை எவ்வளவு துச்சமாய் பேசிவிட்டான்?

நடிப்பாம். சவாலாம். அவளை சோதித்தானாம்?

கடைசியில் அவள் பார்த்த மற்ற பெண்கள் போல் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என முடி வெடுத்து விட்டான்.

அவன் என்னவும் எப்படியும் நினைத்து விட்டுப் போகட்டும். இனி அவன் முகத்திலேயே முழிக்கக் கூடாது.

கூடாது. கூடாது. கூடாதுதான்!

தீர்மானமாய் யோசித்தவள் அந்த வேகத்திலேயே அந்த எரிச்சலிலே மறுநாள் தாய் தந்தையிடம் அந்த தனது 'திடீர்' முடிவையும் அறிவித்தாள்.

''பாண்டி மாமாவைக் கல்யாணம் செய்து கொள் கிறேன். உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்!'' என்றாள்.

பெற்றவர்களுக்கு அவள் சொன்னதைக் கேட்டு பலத்த அதிர்ச்சிதான்!

''ஐயோ! என்னம்மா... கண்ணைத் திறந்து கொண்டே பாழுங்கிணற்றில் குதிக்கப் போகிறாயா?'' என்றார்கள் பதற்றத்துடன்.

''அப்படியெல்லாம் இல்லையாப்பா...'' என்றாள்.

''பின் எங்களுக்காகவா? சொர்ணம் அத்தை மிரட்டுவ தால் உன் தந்தைக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்ற முடிவுக்கு வந்து விட்டாயா?''

''அப்படியும் இல்லையாப்பா...'' என்றாள் உண் மையை மறைக்கும் குரலில்.

''பின் என்னம்மா விஷயம்? எப்படி இதற்கு சம்மதிக் கிறாய்?'' என்றதும் தன் நிலையை தெளிவாய் அவர் களுக்கு விளக்கினாள்.

''பாண்டி மாமா முரடர்தான். ஆனால் கெட்டவர் கிடையாதுதானே? சரியான படிப்பறிவு இல்லாததால் அப்படி முரட்டுத்தனமாய் சில விஷயங்களில் நடந்து



பேசத் தெரியாமல் பேசக்கூடும். அவரை திருத்தி விடலாம். திருத்தி நல்வழிப் படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மேலும் பாண்டி மாமா ஒன்றும் யாரோ இல்லையே... உங்களது சகோதரி மகன். எனக்கு முறை மாமன் முறை... பிறகு எதற்கு கவலைப் பட வேண்டும்? தைரியமாகக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்! நான் தயார்!'' என்றாள் காஞ்சனமாலா எல்லாவற்றையுடன் உறுதி செய்யும் குரலில்.

இவ்வளவு தூரம் காஞ்சனமாலா சொன்னதற்குப் பிறகு சபேசனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அரை மனதோடு இருவரும் சம்மதித்தனர்.

சொர்ணத்திற்கும் பாண்டிக்கும் தலைகால் புரியாத சந்தோஷம்தான்! நல்ல முடிவு எடுத்து விட்டாய் கண்ணு..! என அவளைச் சுற்றி சுற்றி ஓடி வந்து கொஞ் சினாள்.

மறுவாரமே ஒரு நல்லநாள் பார்க்கப்பட்டு கல்யாணத் திற்கான முகூர்த்த தேதி குறிக்கப்பட்டது.

காஞ்சனமாலா ஒருவித இறுக்கத்துடனே நடமாடி னாள்.

அடிக்கடி நினைவில் எழுந்த தினகர் முகமும் இரவில் ஞாபகத்தில் உதிக்கும் அந்த அவனது வசீகரச் சிரிப்பும் அவளை இம்சிக்கத்தான் செய்தது.

எல்லாவற்றையும் ஓரங்கட்டி மறக்க நினைப்பவள் போல் நடமாடினாள் அவள்.

இதோ... பத்து நாட்கள் ஓடிவிட்டது.

பதினோராம் நாள்.

இன்றுதான் கல்யாணம். அவளுக்கும் மாமன் மகன் பாண்டிக்கும் ஊரறிய கல்யாணம்!

நகரின் மத்தியில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் கல்யாண ஏற்பாடு. முகூர்த்த நேரப்படி காலையிலேயே அவளை பெண் அழைத்துச் சென்று விட்டார்கள்.

உற்றார் உறவினர் புடைசூழ மேளதாளங்கள் இன்னிசையுடன் மண்டபமே திருமணக்களை கட்டியிருந்தது. மணப் பெண் அறையில் தோழிகள் உறவினர்கள் அவளை உட்கார வைத்து மேலும் மேலும் அலங்கரித்துக் கொண்டிருந்தனர்.

நம் கையில் இனி ஒன்றும் இல்லை. நடப்பது நடக்கட்டும் என்ற விட்டேற்றியான மனநிலையில் முழுவதுமாய் இருந்தாள் காஞ்சனமாலா. அதனாலேயே செயற்கையாய் பார்ப்பதும், பேசுவதும் செயற்கையாய் சிரிப்பதும்... என இயல்பில்லாமல் கடமை போல் செய்து கொண்டிருந்தாள்.

இன்னும் அரை மணி நேரத்தில் சுபமுகூர்த்தம். அவள் கழுத்தில் தாலி கட்டி விடுவான் பாண்டி. பின் அவன் தான் அவளது கணவன். அருமை மணாளன்!

நினைத்துப் பார்க்கும்போதே அந்த நினைப்பே பகீரென அடிவயிற்றைப் பிசைந்து அவளுக்கு!

ஆயினும் எதையும் வெளிக் காட்டாமல் சிலைபோல் தான் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தாள் அவள்.

அப்போது...

மணப்பெண் அறையை யாரோ தட்டினார்கள்.

திறந்தால் வெளியே... பட்டு வேஷ்டி பட்டுச் சட்டையில் மணமகன் பாண்டி!



''தனியாய் மணப்பெண்ணிடம் பேச வேண்டுமாம்...'' தலையைச் சொரிந்தபடி சொன்னான்.

தோழிகள் உடனே அவர்களை தனிமைப்படுத்தி விட்டு அகன்றனர்.

அறையினுள் நுழைந்த பாண்டியை திரும்பிக் கூட பார்க்க மனமில்லாமல் அதே போஸில் சுவரை வெறித்த வாறு உட்கார்ந்திருந்தாள் காஞ்சனமாலா.

கூடவே அவளுள் எரிச்சல்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் தாலி கட்டப் போகிறான். அவள் அவன் மனைவியாகப் போகிறாள். அதற்குள் என்ன அவசரம்? எதற்கு தனியே பேச வேண்டும்? இவனது அசடு வழியும் தனத்திற்கு ஒரு அளவே கிடையாதா?

ஆனால் பாண்டியின் குரல் என்றுமில்லாத தெளிவுடன் அப்போது ஒலித்தது.

''காஞ்சனமாலா, இந்தத் திருமணம் நடக்கும். ஆனால் மணமகன் நானா இருக்கப் போவதில்லை. இவர்.. இவர் தான்!'' என்றான்.

திடுக்கிட்டவள் என்ன உளர்கிறான் என திரும்பிப் பார்த்தாள்.

பாண்டிக்குப் பின்னால் -

கைகளைக் கட்டியபடி தினகர் நின்று கொண்டிருந் தான்.

காஞ்சனமாலாவால் நம்பவே முடியவில்லை.

அதிர்ந்தே விட்டாள்!

நடப்பது கனவா..? நிஜமா?

நடப்பது நிஜம் என்பதை பறை சாற்றுவது போல் அதுவரை சலனமில்லாமல் பின்னால் நின்று கொண்டிருந்த தினகர் மெல்ல அடியெடுத்து முன்னால் வந்தான்.

கண்களை விரித்து அவளை மேலும் கீழும் நன்றாகப் பார்த்தான்.

''மணப்பெண் கோலம்? ம்ம்... நன்றாகத் தான் இருக்கிறது! பேஷ்... பேஷ்! நானும் வேண்டுமானால் உனக்கு வாழ்த்துச் சொல்லி உன் தலையில் அட்சதையைப் போடட்டுமா?'' என்றபடி உட்கார்ந்திருந்தவளை எழுப்பி அவள் தோள்களை அழுந்தப் பற்றி அவள் மென்னி உலுங்கும்படி ஆக்ரோஷமாய் கேட்டான் அவன்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை.

''என்ன... என்ன... இது..? விடுங்கள்... விடுங்கள்..!'' என்றாள் அவளும் சுதாரித்து ஆத்திரம் முழுவதும் பொங்கியவளாய்.

அவனும் குரலை உயர்த்தினான்.

''உன்னை விடவா...? எதற்கு... இவனை கட்டிக் கொள்வதற்கா? என்னை அவ்வளவு தூரம் மாய்ந்து மாய்ந்து காதலித்து விட்டு இந்த அசட்டு மூஞ்சியைக் கட்டிக் கொள்ள எப்படிச் சம்மதித்தாய்? பதில் சொல்..! பதில் சொல் எனக்கு!''

மறுபடியும் அவளைப் பிடித்து உலுக்கி மிரட்டினான் தினகர்.

அவளுக்கும் கோபம் கண் மண் தெரியாமல் எகிறியது.



அவனது பிடிகளில் இருந்து உதறுவது போல் ஓங்கி தன்னை விடுவித்தாள்.

''என்னது... காதலித்ததா? உங்களை யார் காதலித்தது?'' என்றாள் வெகுண்டு.

''நீ... நீதான்..!'' சுட்டு விரலை நீட்டினான். அவன் எச்சரித்தான். ''என்னை காதலித்து... அந்தக் காதலில் உன்னையே நீ இழக்கும் அளவுக்கு முன் வந்தது எல்லாம் பின் என்னவாம்?''

அவள் அசரவில்லை. தோள்களைக் குலுக்கியவள், ''அதுதான் சவால் நடிப்பு... என என்னென்னவோ பிதற்றி விட்டீர்களே? இன்னும் என்ன அதில் பேச இருக்கிறது?'' என்றாள் கோபம் அகலாத சீற்றத்துடன்.

அவன் புருவத்தை உயர்த்தி மீசையை முறுக்கினான். ''நான் செய்தது நடிப்புதான். ஆனால் நீ என் மீது வைத்தது உண்மையான காதல்தானே? அதற்கு பதில் சொல்!'' என்றான்.

அவளும் எரிச்சலாகி பொறுமையிழந்தவள் போல், ''சரி இப்போது அதற்கென்ன?'' என்றாள் கண்கள் விரிந்த முறைப்புப் பார்வையுடன்.

''என்ன... என்னவா? என்னைக் காதலித்து விட்டு என் மீது அப்படி ஒரு காதலை வைத்து விட்டு இந்த மூஞ்சுக்கு கழுத்தை நீட்டத் தயாராகி விட்டாய். உனக்கு எவ்வளவு தைரியம்?'' என உறுமியவன் அதே வேகத்தில் திரும்பி பின்னால் நின்ற பாண்டியைப் பார்த்து, ''இன்னும் ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? விஷயத்தைச் சொல்லிவிட்டு ஓடு. இல்லாவிட்டால் போலீஸ் வந்து விடும். ம்ம்..!'' என்றான் மிரட்டுவது போல்.

பாண்டி உடனேயே நடுங்காத குறையாய் பதட்டம் காட்டி, ''ஆமாம் மாலா! என்னை மன்னித்து விடு. ஸார் சொல்வது எல்லாம் உண்மைதான். நான் நிஜமாய் உன் மேல் ஆசைப்பட்டு கல்யாணத்திற்கு சம்மதிக்கவில்லை. உன்னை திருமணம் செய்து அதே கையோடு உன்னை வடநாட்டு சேட் ஒருவனிடம் பல லட்சங்களுக்கு விற்க விலை பேசி வைத்திருந்தேன். அதுதான். என் திட்டமும் கூட. ஸார்தான் அதை எப்படியோ தெரிந்து கொண்டு... என்னை அடித்து உதைத்து உண்மையை வரவழைத்தார்... எனக்கு மாமா தரவேண்டிய பத்து லட்ச ரூபாய் பணத்தையும் ஒரே செக்கில் கொடுத்து விட்டார். இனி நீ கட்டிக் கொள்ள வேண்டியது என்னையல்ல.. நீ விரும்பிய, உனக்குப் பொறுத்தமான சார் அவர்களைத்தான்! அவரையே நீ மணந்து கொள்...'' என தனது நீண்ட உரையை முடித்தான்.

பின் பெரிய கும்பிடு ஒன்றைப் போட்டபடி அந்த ரூமை விட்டு வெளியேறினான் பாண்டி.

தினகர் அவன் சென்றதும் ஏளனப் பார்வையுடன் காஞ்சனமாலா பக்கம் சென்றான். ''அதான் முட்டையிலிருந்து குதிரைக் குட்டி வெளிவந்து விட்டதே. இனி என்ன செய்யப் போகிறாய்?'' என்றான் கேலியாய்.

''யார் என்ன சொன்னாலும் சரி.. நான் உங்களை ஒரு போதும்...''

அவள் வார்த்தைகளை முடிக்கவில்லை. ''இப்படியே நீ பேசிக் கொண்டிருந்தால் முதுகில் இரண்டு போடு போட்டிருவேன்...'' என்றபடி அவளை வேகமாய் தன் பக்கம் இழுத்து மென்னி நொறுங்க அணைத்தான் அவன்!





# 17

தினகர் அப்படி ஒரு இறுக்கமான அணைப்பு அணைத்தான்.

காஞ்சனமாலா அதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

கொண்டிருந்த ஆத்திரத்தில் அவனுக்கோ அவளுக்கோ அடிகள் விழும் என்று பார்த்தால் அணைத்து அல்லவா கொண்டிருக்கிறான்?

ஒருவேளை இதுவும் நடிப்பா? இப்படி நடித்து இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட்டு வருகிறேன் என்று யாரிடமும் சவால் விட்டு வந்திருப்பானா?

கோபமாய் அந்த சிந்தனை தாக்க அவனது பிடிகளில் இருந்து திமிறினாள். துள்ளினாள். விடுபட முயற்சித்தாள்.

ம்ம்.. கூட! அவனது பிடி இரும்புப் பிடியாய் இருந்தது.

''அன்று ஆசையாய் வந்து அப்படி என்னைத் தழுவி விட்டு இன்று யாரோ போல் என்னிடம் முரண்டு பிடிப்பதைப் பார்..!''

சட்டென முகம் மாறி இறுக்கம் குறைந்து சிரிப்புடன் தினகர் சொல்ல அவளுக்கும் சுருக்கென்றது. அவன் சொல்வது உண்மைதானே?

ஆனால் நான் வைத்தது காதல். இவன் நம் மீது காட்டியது நடிப்பு அல்லவா?

மறுபடியும் அந்த சிந்தனைக் கீற்று தோன்ற வெகுண்டாள்.

''விடுங்கள்..! விடுங்கள்!'' அலறிக்கொண்டு.

அவன் மெல்ல அவள் முகம் நோக்கி குனிந்து, ''கொஞ்ச நேரம் இப்படியே அமைதியாய் இருக்கவேண்டும். இதே நிலையில் இருந்து பொறுமையாய் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். இல்லாவிடில்...''

அவன் நிறுத்த, ''என்ன செய்வீர்கள்?'' என்றாள் மீண்டும் கோபம் பொங்க.

''பின்... உன் கன்னம், உதடு, நெற்றி என ஒன்று விடாமல் முத்த மழை பொழிய ஆரம்பித்து விடுவேன். என்ன சொல்கிறாய்?'' என்றான் மிரட்டும் தொனியில்.

இவன் செய்தாலும் செய்வான் மன்மத கொக்காய் முன்பு அலைந்தவன் தானே... என்ற நினைப்பில் அவன் அப்படிச் செய்து தன்னை மேலும் எரிச்சல் படுத்தி விடக்கூடாது என்பதற்காக கோபத்தை அடக்கினாள். அமைதி காத்தாள்.

கூடவே, ''சொல்லுங்கள்...'' என்றாள் ஒற்றை வார்த்தையாய்.

அவன் நீள மூச்செடுத்தவாறு குரலை முற்றிலும் மென்மையாக்கியபடி பேச ஆரம்பித்தான்.

''முதலில் ஒன்றைத் தெரிந்து கொள். நான் உன் மீது கொண்டது காதல்! அதுவும் நீ என் மீது வைத்தது போலான உண்மையான காதல்! அதில் நீ எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை...''

அவன் மேலும் பேசும் முன், ''அதற்குள் அன்று காதல் போல் நடிப்பு, சவால் ஜெயித்து விட்டே



பிதற்றியது எல்லாம் மறந்து போயிற்றா? அபாரம்! மந்தமான மூளை! மந்தமான ஞாபக சக்தி!'' சொல்லியவள் முதல் முறையாய் பரிகாசச் சிரிப்பு ஒன்றை உதிர்க்க, ''ம்ம்... நீ.. என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். உண்மை அதுதான். அதே போல் நான் அப்படி நடிப்பு, சவால் என்றெல்லாம். சொல்லி உன்னை எரிச்சல் படுத்தியதற்கு முக்கிய காரணம் நீதான். சந்தேகம் இல்லாமல் நீயேதான்!'' ஊஎன்றான் அவளை குற்றம் சாட்டி.

''இது என்ன புது உளறல்? ஒருவேளை கொண்டிருந்த... பித்தம் எல்லாம் தலைக்கேறி விட்டதா?'' என்றாள் அவள் சீறல் குறையாமல்.

''அப்படி ஏறினாலும் அது உனக்குத்தான்...'' என்றவன் தொடர்ந்து, ''நீ அன்று செய்த செய்யப் போன மிகப் பெரிய பிழை ஒன்றை மறந்து விட்டாய். முதலில் அதை ஞாபகப்படுத்திப் பார். உனக்கு எல்லாம் புரியும்!'' என்றான் மிடுக்கான குரலில்.

''எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதையும் நீங்களே சொல்லித் தொலைத்து விடுங்கள்'' என்றாள் மீண்டும் எரிச்சல் பரவ.

''அந்தப் பிழை, காதல் மயக்கத்தில் என் மேல் கொண்டிருந்த நல்ல அபிப்பிராயத்தில் உன்னையே இழக்கத் துணிந்தாயே... அதுதான்...!''

அவன் விளக்கம் கொடுக்க அவளுக்கு சுருக்கென்றது.

உண்மைதானே? அவனை மிக நல்லவனாய், தன்னால் அப்படி நல்லவனாய் மாறி விட்டதை அவள் உணர்ந்து வந்த அளவு கடந்த காதலில் வெட்கத்தை

யெல்லாம் விட்டு விட்டு அன்று புத்தியில்லாமல் தன்னையே இழக்கத் துணிந்தாளே!

அவன் மட்டும் அன்று உடன் பட்டிருந்தால் எவ்வளவு பெரிய அசிங்கம், வாழ்க்கை முழுவதும் மறக்க முடியாத ஒரு வடு அவளது வாழ்வில் நடந்திருக்கும்?

இருந்தாலும் அவன் முன் எதையும் காட்டிக் கொள்ள விரும்பாதவளாய், ''அன்று தான் ஒன்றும் நிகழவில்லையே... பிறகு... என்ன... எப்படி அது பிழையாகும்?'' என்றாள் எதிர்கேள்வியுடன்.

அவன் முகத்தை ஆட்டி புருவத்தை உயர்த்தினான், ''ஆஹா... இது நல்ல பதில்தான்! ஆனால் அன்று நான் சுதாரிக்கவில்லை என்றால் அந்த தப்பு நடந்திருக்கும். அதைத் தடுத்தவன் நான் தான். மேலும் இதனால் நான் உன் மேல் வைத்திருந்த அந்த உயர்வான கோபுரம் போன்ற மதிப்பு சட்டென ஒரே நொடியில் சரிந்து குப்பை மேடாக போயிற்றே... அதற்கு என்ன சொல்கிறாய்?'' என்றான்.

அவளால் இம்முறை பேச முடியவில்லைதான். இருந்தாலும் கொண்டிருந்த வீராப்பு குறையாமல், ''அதற்கும் உங்கள் அபாரமான காதல் நடிப்பிற்கும் என்ன சம்பந்தம்?'' என்று அவள் கேட்டதும், ''நான் அப்படி காதல் நடிப்பு செய்ததாகப் பொய் சொன்னதே அதற்காகத்தான்!'' என முடித்தான் அவன்.

''புரியவில்லை...'' என்றாள் அவள் தலையை இருபுறம் ஆட்டி.

''எப்படிப் புரியும்? என் மீது காதல் கொண்ட நீ அப்படி கிறங்கிப் போனவள் போல் எல்லாவற்றுக்கும்



தலையாட்டிக் கொண்டுதானே இருந்தாய்? ஒரு வேளை நான் நல்லவனாக மாறாமல் உன் அன்பை பெறுவதற்காக அப்படி நல்லவன் போல் வேஷம் போட்டிருந்தால் உன் நிலைமை என்னவாகி இருக்கும் என கொஞ்சம் யோசித்துப் பார். அதனாலே நான் உன் மீது வெகுண்டேன். நான் பார்த்த ரோஸி, டெய்ஸி வரிசையில் நீயும் சேர்ந்துவிடக் கூடாது என கோபப்பட்டேன். அந்த ரோஸியும் டெய்ஸியும் பணத்திற்காக தங்களை இழக்கத் துணிந்தார்கள். அதே போல் நீ நல்லவன் நம் காதலன் என்றெல்லாம் மனதில் புதுக் கனவுகள் விரிந்ததும் உன்னை மீறி உன்னையே இழக்கத் துணிந்தாய். அது தவறுதானே?''

அவன் சொல்லச் சொல்ல அவள் தலை அவளையறியாமல் தரை தாழக் குனிந்தது.

அவளால் நிமிர்ந்து அவனைப் பார்க்க முடியவில்லை. அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை தான். நியாயம்தான்!

பணத்திற்காக தங்களை இழக்க முன் வரும் அவர்களுக்கும், காதல் வேகத்தில், நம் மனங்கவர்ந்த நல்லவன் என உணர்ச்சி வசப்பட்டு தன்னையே இழக்க இருந்த அவள் நிலையும் ஒன்றுதானே?

அதற்காகத்தான், அப்படி வெட்கம் கெட்டு நாம் துணிந்த செய்கை கண்டுதான் இவன் கோபம் கொண்டானா? அதனாலே, நான் இவ்வளவு நாள் உன் மீது கொண்டிருந்தது காதல் அல்ல... உன்னை சவாலில் ஜெயிக்க நான் கொண்டிருந்த காதல் நடிப்பு... என்றெல்லாம் சொல்லி நம்மைத் தவிக்க விட்டானா?

அவள் திகைத்து உணர்ந்தவளாய் தனது மைவிழிகளை உயர்த்தி அவனையே பார்க்க அவளது நினைப்பை புரிந்தது போல் கொண்டிருந்த அணைப்பை மேலும் இறுக்கியவன், ''உன்னிடம் காதல் இல்லை என்று சொல்லி தவிக்க விட்டது அதனால்தான்...!'' என்றபடி குனிந்து அவள் நெற்றியில் இதமான முத்தமொன்றை பதித்தான்.

அவள் கொண்டிருந்த ஆத்திரம் கோபம் எல்லாம் சட்டென குறைவது போல் அவளுக்கே தோன்றியது. ஏன்.. இவன் பார்த்ததும் மென்மையாய் அப்படிப் பேசியதும் உருகி விடுகிறோம்? என அவள் தன்னைத் தானே கேட்டுத் துணுக்குற்றாள்.

அவனோ மேலும் அவளை சாந்தப்படுத்தும் விதமாய், அவள் கைகளைப் பிடித்து அவள் விரல்களை மெல்ல வருடினான். ''ஒன்றை மட்டும் தெரிந்து கொள். ஒரு ஆணோ பெண்ணோ எந்த விஷயத்தில் வேண்டுமானாலும் நடிக்க முயலலாம். ஆனால் இந்தக் காதல் விஷயத்தில் நடிப்பது முடியாது. நடிக்கச் சாத்தியமே இல்லை. அதை மீறி நடிக்க முயற்சித்தாலும் உண்மையிலே தங்களை மீறி காதலில் விழுந்து விடுவார்கள்...'' என அவன் பேச, ''சொந்த அனுபவம் பேசுகிறதோ?'' என்றாள் அவள் குறுக்கிட்டு எதையோ தெரிந்து கொள்ள விரும்புபவள் போல்.

தலையை மறுப்பாய் வேகமாய் அசைத்தவன், ''அதான் திரும்பத் திரும்ப சொல்லி விட்டேனே... நடிப்பு இல்லை உண்மையான காதல் என்பது... பின் ஏன் இன்னமும் அது பற்றியே கேட்கிறாய்? நீ இப்போது கேட்க வேண்டியது உன் பாண்டி மாமா பற்றி...'' என்றான்.



அவளுக்கு அப்போதுதான் சுருக்கென ஞாபகம் வந்தது. அவளுக்கும் பாண்டி மாமாவுக்கும் தானே கல்யாண ஏற்பாடும் செய்யப்பட்டு அவள் மணப்பெண் கோலத்தில் உட்கார்ந்திருக்கிறாள்? இதில் பாண்டி மாமா வேறு உள்ளே வந்து தினகரைக் காட்டிவிட்டு பெரிய கும்பிடு போட்டவாறு ஓடி விட்டார். இங்கு என்னதான் நடக்கிறது?

அவள் திகைக்க விளக்கினான் அவன்.

''இரண்டு நாளுக்கு முன்புதான் இங்கு ஊர் திரும்பினேன். இங்கு வந்து பார்த்தால் உனக்குக் கல்யாண ஏற்பாடுகள்... எனக்கு உடனே புரிந்து விட்டது. எனது பேச்சில் மனமொடிந்த நீ விரக்தியில் செய்யும் ஏற்பாடுகள் இவை என. அதனால் மணநாளான இன்று காலையிலே உன் தந்தையைப் பார்த்துப் பேசினேன். விஷயம் முழுவதையும் தெரிந்து கொண்டு அவரிடமும் நம் காதல் விஷயத்தைச் சொல்லி சம்மதம் வாங்கினேன். பின் உன் சொர்ணம் அத்தைக்கு சேர வேண்டிய பத்து லட்சத்திற்கு வட்டியெல்லாம் போட்டு பதினைஞ்சு லட்சம் கொடுத்து, உன் அருமை பாண்டி மாமாவைக் கூப்பிட்டுக் கொண்டு இடத்தைக் காலி செய்யும்படி சொன்னேன். உடனே பெரிய கும்பிடு போட்டு விட்டு ஒப்புக் கொண்டார்கள்...''

அவன் சொல்லி முடிக்க வாய் பிளக்கும் ஆச்சரியத்துடன் கேட்டு அதிசயப்பட்டாள். அவன் விடாது, ''எல்லாம் ஒரு சில மணிநேரங்களில் இனிமையாய் நடந்து லைன் கிளியராகி விட்டது. அதனால், இனி நம் விஷயம்தான். உன்னை அலாக்காய் இப்படியே தூக்கி மணமேடைக்குக் கொண்டு போக வேண்டியது தான்.

தாலியைக் கட்ட வேண்டியதுதான்!'' என்றான் சர்வ சாதாரணமாக.

''ஓஹோ... அப்படியானால் என் சம்மதம் தேவை யில்லையா? நான் எப்போது அதற்கு சம்மதித்தேன்?'' என்றாள் கண்கள் முழுவதும் விரிய பொய்க் கோபத் துடன்.

அவன் தினகர் சிரிப்புடன் அவள் தலையில் செல்லக் குட்டு ஒன்றை வைத்தவன், ''உன் சம்மதத்தைத்தான் பிடிப்பில் காண்பித்துக் கொண்டிருக்கிறாயே...? கீழே பார்... இப்போது நான் உன்னை அணைத்துப் பிடித்த கைகளை விலக்கி விட்டேன். நீ தான் என்னை அணைத் துப் பிடித்திருக்கிறாய்?'' என அவள் சுட்டிக் காட்ட... ''ஐயோ..! கண்டுபிடித்து விட்டானே? நம்மையறியாமல் நாமும் இதைக் காட்டித் தொலைந்து விட்டோமே...?'' என அவள் பதறி முகம் சிவந்து விலகப்போக... விலகப் போனவளை இழுத்து மறுபடியும் வேகமாய் அணைத் தான். ஆசையாய் உச்சி முகர்ந்தான்.

''தறி கெட்டு போய்க் கொண்டிருந்த என் மனதை கட்டுப்படுத்தி என்னை நல்லவனாக மாற்றி என் வாழ் வில் புகுந்த இனிமையான தேவதை நீ... இனி ஒரு நொடி உன்னைப் பிரியப் போவதில்லை...'' என்றான் தினகர் உணர்ச்சி பொங்க... நெகிழ்ச்சியான குரலில்.

''எனக்கும் அப்படித்தான். என் அன்பு தினு..!'' என ஆசையாய் அவனை விளித்தபடி அவன் மார்பில் கொண் டிருந்த கோபமெல்லாம் மறைய இனிமையாய் புதைந் தாள் காஞ்சனமாலா!

*

# நீதானே என் பொன்வசந்தம்...!

## 1



'இன்று எப்படியும் தப்பித்தாக வேண்டும். என்ன சொல்லி தப்பிப்பது?' என்பது தான் காலை எழுந்தது முதல் மதுமதியின் கவலையாய் போயிற்று.

வாக்கிங் போய் விட்டு வரும் தந்தை வருவதற்குள், வந்து அந்தக் கேள்வியை கேட்பதற்குள் அவள் யோசித் தாக வேண்டும். அவள் கையை தலையில் வைத்துக் கொண்டு அப்படியும் இப்படியுமாய் யோசனையில் ஆட்டும் போது கூட 'உன் அழகான தலையை இப்படி யெல்லாம் சிலுப்ப வேண்டுமா கண்மணி?' என தந்தை கேட்பது போலத்தான் அவளுக்கு இருந்தது.

நேற்று இரவு அவர் சொன்ன வார்த்தைகள் நன்றாய் அவளுள் பதியத்தான் செய்தன. ''என்ஜினியரிங் ப்ளஸ் எம்.பி.ஏ. படிப்பு யு.எஸ் வேலை கை நிறைய சம்பளம். உனக்கும் உடனே விசா வாங்கி விடலாம். மாப்பிள்ளைக் கும் நல்ல குணமாம். உன்னைத் தங்கம் போல் வைத்துக் கொள்வாராம், என்ன சொல்கிறாய்?'' என்றார்.

அப்போதும் மதுமதி கேலியை விடவில்லை.

''அப்பா, தங்கத்திற்கு இங்கு இந்தியாவில்தான் அதிகம் மதிப்பு...'' என்றாள்.

''விளையாடாதே மதி... அப்பா சீரியசாய் கேட் கிறாள்?'' என்றாள் அம்மா.

சொன்ன பானுமதி அம்மாவை பக்கத்தில் போய் மதுமதி தோளோடு கட்டிக்கொண்டவள், ''நானும் சீரிய ஸாய்த்தான் சொல்கிறேன். உங்களை எல்லாம் விட்டு எங்கோ ஒரு கண்காணாத இடத்தில் கண்காணாத தேசத்தில் எல்லாம் என்னால இருக்க முடியாதே... என் அன்பு அம்மா...'' என்றாள்.

பானுமதி செல்ல மகளின் முகத்தை தன் பக்கம் திருப்பி, ''கல்யாணம் என்ற ஒன்று ஆகி நீ புருஷன் வீட் டிற்கு சென்று விட்டால் நீ பக்கத்து உசிலம்பட்டியில் இருந் தாலும் ஒன்றுதான். ஆயிரக்கணக்கான மைல் தொலை வுள்ள ஸ்டேட்ஸில் இருந்தாலும் ஒன்றுதான். லீவு கிடைக் கும் போது... எப்பவாவது என்றுதானே வரமுடியும்...?'' என்றாள் தனது சிந்தனையை நியாயப்படுத்துவது போல்.

''உண்மைதான்! ஆனால் உசிலம்பட்டியில் இருந்து ஒரு போன் அடித்தால் ஒரு மணிநேரத்தில் நீங்களோ நானோ பாய்ந்து பறந்து வந்துவிட முடியும்தானே?'' என்றாள் பதிலுக்கு.



''நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்றாள் அம்மா.

''ஒன்று என்ன ஒன்பதே சொல்லேன்...'' என்றாள் மகள் அதே கிண்கிணி சிரிப்புடன்.

''உனக்கு நிஜமாகவே திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா... இல்லை... எப்போதும் இதுபோல் எதாவது சாக்கு போக்குச் சொல்லி தள்ளிப் போட்டுக் கொண்டே போகலாம் என நினைக்கிறாயா... முதலில் அதை தெளிவாகச் சொல்!'' என்றாள் குரலில் கண்டிப்பு காட்டி.

ஆனால் மதியாவது... பயப்படுவதாவது...?

''நீங்களே சொல்லுங்கள் அம்மா... பெண் பிள்ளை ஒருவள் நெற்குதிர் போல் திபுதிபுவென வளர்ந்து விட் டால் மட்டும் போதுமா? காலா காலத்தில் கல்யாணம் என்று ஒன்று அவளுக்கு பண்ணாவிட்டால் இந்த ஊர் உலகம் சும்மா விடுமா? அதனால் இந்த ஊர் உலகத்துக் காகவாவது அவள் பண்ணித்தானே ஆக வேண்டும்?'' என்றாள் கேள்வியை அவர்கள் பக்கம் திரும்பியவாறு.

''சரி... விஷயத்திற்கு வா! நீ எப்போது அதைப் பண் ணப் போகிறாய்?''

''உடனே தான்...!'' என்றாள் மகள்

''என்ன உடனே வா?''

''ம்ம்... எனக்குப் பிடித்து விட்டால் உடனே தான்...!'' என்றாள் மறுபடி சிரிப்பை அடக்கியபடி.

''இது உனக்கு நிச்சயம் பிடிக்கும்...!'' என்றார் அப பாவும் சரியான பாயிண்டுக்கு வந்துவிடும் நோக்கில்.

"ஆமாம்! ஆமாம்! கண்டிப்பாக உனக்குப் பிடிக்கும். நல்ல இடம்!"

அம்மாவும் இதுதான் சாக்கு என பலமாய் அழுத்தம் கொடுக்க நெளிந்தாள் மதுமதி.

கூடவே, "அதை நான் முடிவு செய்கிறேனே... அந்த உரிமையை எனக்கு கொடுங்களேன்... ப்ளீஸ்..!" என்றாள் மதுமதி கெஞ்சலாக.

"கிராண்டட்!" என கை, உயர்த்திய தந்தை சிவராம், "ஆனால் நாள் கடத்தாமல் சீக்கிரமாக நீ உன் முடிவை தெரிவித்தாக வேண்டும்..." என்று கட்டளையும் இட்டார்.

அப்போது சரியென தலையாட்டியவள் தான் இப்போது இந்த நிமிடம் வரை முடிவெடுக்க முடியாமல் திணறிக்கொண்டு... எப்படி இதை தட்டிக் கழிப்பது... அதுவும் பெற்றவர்கள் மனதும் நோகாமல் எப்படி இதைச் செய்வது... என தவித்துக் கொண்டு... குழம்பினாள்.

மதுமதி யோசிப்பதற்கும் இப்படிக் கவலைப்படுவதற்கும் சரியான காரணமும் இருந்தது.

இது அவளை பெண் கேட்டு வந்திருக்கும் ஆறாவது வரன். இதற்கு முன் விரும்பி வந்த ஐந்து வரங்களையும் ஏதேதோ சாக்கு போக்கு சொல்லி தட்டிக் கழித்தாயிற்று.

அதனாலே பெற்றவர்கள் கொஞ்சம் உஷாராகவும் ஆகிவிட்டனர். இவளுக்கு நிஜமாகவே வரனைப் பிடிக்கவில்லையா... அல்லது திருமணம் செய்வதே பிடிக்கவில்



லையா...? என்ற பெரும் சந்தேகம் அவர்களுக்கு வந்துவிட்டது.

அதனாலே இந்த வெளிநாட்டு வரனை அவளுக்குச் சொல்லும்போதே அவர்களுக்கு அந்த வரன் நிரம்பப் பிடித்து விட்டதாகவும், அவளுக்கும் கண்டிப்பாக பிடிக்கும் என்றும் அப்படி அவள் வழக்கம்போல் வேண்டாம்... பிடிக்கவில்லை... என்றெல்லாம் கூறி மறுத்தால் அவள் கண்டிப்பாய் அதற்கான காரணத்தையும் தெரிவிக்க வேண்டும் என்று கறாராய் கூறிவிட்டனர்.

எலிப்பொறியில் சிக்கியது போல் திகைத்துதான் போனாள் மதுமதி.

மதுமதி சிவராம் பானுமதி தம்பதியருக்கு தவம் இருந்து பெற்ற ஒரே செல்வமகள். சிவராமிற்கு அரசின் தாலுகா அலுவலகம் ஒன்றில் குமாஸ்தா வேலை. ஒரே மகள்தானே என சீராட்டி வளர்த்ததோடு செல்லமாகவும் வளர்த்தார்.

மதுமதியும் தாய் தந்தையரின் அன்புப்பிடியில் குஷியாய் பி.காம். முடித்துவிட்டு சார்டட் அக்கவுண்டன்ஸி படிப்பை ஆரம்பித்து விட்டாள். அதை முடித்ததும், நாதன் குருப் கம்பெனிஸ்ஸில் செகரட்டரி வேலை. உடனே சேர்ந்து விட்டாள். வேலை, வீடு, தோழியுடன் அரட்டை என ஒருவருடம் போனது.

இதற்குள் வயது இருபத்து நான்கு முடிந்து இருபத்து ஐந்து தொட்டுவிட பெற்றவர்கள் சுதாரித்துக் கொண்டு வரன்தேட ஆயத்தமாகி விட்டனர்... சொல்லி வைத்தாற்

போல் ஒன்று... இரண்டு... என ஐந்து வரன்கள் தேடி வந்து விட்டன.

மாப்பிள்ளை வீட்டினராய் வந்த எல்லோருக்கும் தங்கவிக்ரகம் போல் அழகுச் சிலையாய் ஜொலித்த மதுமதியை உடனே பிடித்துப் போயிற்று.

ஆனால் மதுமதிக்குத்தான் அவர்கள் யாரையும் பிடிக்க வில்லை!

அதற்கு காரணமாய் அவள் தன் தோழி நீலாவிடம் மட்டும் உண்மையைச் சொன்னாள். ''நீலா, எனக்கு மைண்ட் செட் ஆகவில்லை. கல்யாணத்திற்கு என் மனது இன்னும் தயாராகவில்லை என்று!''

## 2

நீர்த்திரையிட்ட கண்களால் தன்னை வெறித்து நோக்கியபடி நின்ற தாயின் முகம் வெகுவாய் அவளது தவிப்பை உணர்த்த கையில் சூட்கேஸுடன் கிளம்பியவன் அதை அப்படியே வைத்து விட்டு அன்னையின் பக்கம் சென்றான்.

''ஷ்... என்னம்மா இது? இப்போது என்ன நடந்து விட்டது? எதற்காக இப்படிக் கலங்குகிறீர்கள்?'' என லேசான கண்டிப்பும் பணிவும் கலந்த குரலில் மனோரஞ்சன் வினவியபோது தாய் மகாலெட்சுமி முகம் குனிந்தாள்.



அனிச்சையாய் கைகளை அனுப்பி கண்களைத் துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''அப்பாவும் பிள்ளையும் மறுபடியும் சண்டையை ஆரம்பித்து விட்டீர்களோ... நான் என்ன செய்வது?'' என்றாள்.

மனோரஞ்சனோ கொஞ்சமும் உணர்ச்சிவசப்படாமல் தாயின் கரங்களைப் பற்றி இதமாக அழுத்தினான். ''ஐயோ! அப்படியெல்லாம் ஒன்றுமில்லையம்மா...! இந்தமுறை தந்தை என் நோக்கத்தை கண்டிப்பாய் புரிந்து கொள்வார். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது...'' என்றான்.

அவன் வைத்த கைகளின் மீது தனது இன்னொரு கரத்தை வைத்து அவனைப் போலவே அழுத்திச் சிரித்தாள் அவனது அன்புத்தாய்.

''எனக்கு அந்த நம்பிக்கை இல்லை மனோ. உன் தந்தையுடன் முப்பது வருடம் வாழ்ந்திருக்கிறேன். அவரது குணம், எண்ணம் எல்லாம் எனக்கு அத்துப்படி. அவர் உன்னை மாற்றத்தான் முயற்சிப்பார்...'' என்றாள் விடாப்பிடியாய்.

மனோரஞ்சனும் விடவில்லை. கைகளை கட்டிக்கொண்டபடி நெஞ்சு நிமிர குறுக்கும் நெடுக்குமாய் நடந்தவன், ''எனக்கு தந்தை புரிந்து கொள்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது அம்மா. இது ஹைடெக் உலகம். நாளுக்கு நாள் எவ்வளவோ மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கிறது. எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் என எவ்வளவோ முன்னேறி வருகிறது. நாமும் சாதாரண ஜின்னிங் பாக்டரியில் ஆரம்பித்து இன்று தொழிலில், லாஜிஸ்டிக்ஸ்,

ஸாப்ட்வேர் என எவ்வளவோ முன்னேறிவிட்டோம். ஆனால்...'' என நிறுத்தி விட்டு திரும்பி தாயின் முகத்தை கூர்ந்து நோக்கியவாறு, ''நாம் மட்டும் சம்பாதித்து கோடீஸ்வரர் என்ற பெயருடன் நன்றாக இருந்தால் போதுமா அம்மா? நீங்களே சொல்லுங்கள்! இந்த சமூகத்தைப் பற்றி... நம்மைச் சுற்றி இருக்கிற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றி நாம் கொஞ்சமாவது சிந்திக்க வேண்டாம்? அந்த அப்படிப்பட்ட இரக்க சிந்தனையின் விளைவாக பல வருட கனவாய் நான் உருவாக்கினதுதான் நான் சொன்ன அந்த அன்பு இல்லம் புராஜெக்ட்...! நான் சொல்வது இப்போது உங்களுக்காகவாவது புரிகிறதாம்மா?'' பிரயாசையுடன் கேட்டு முடித்தாள் மகள்.

ஆனால் மகாலெட்சுமியிடம் இருந்து ஒரு பெரும் பெருமூச்சுத்தான் வெளிப்பட்டது.

'கோயிலுக்குச் சென்று விட்டு வெளியே இருக்கும் பிச்சைக்காரர்களுக்கு ஒரு ரூபாயை போட்டாலே, காசைக் கொடுத்து அவர்களை இன்னும் சோம்பேறியாக ஆக்கிறாயே? என வீட்டில் வந்து தாம்தீம்மென குதித்து ரகளை பண்ணுவார் சிவநாதன். அவராவது அனாதைகளுக்காக அன்பு இல்லம் கட்டுவதை புரிந்து அனுமதியளிப்பதாவது...!' என தனக்குள் நினைப்புகளை ஓட விட்டவள் மறுபடியும் மகனைச் சமாதானப் படுத்தவே வழிகளைத் தேடினாள்.

''அதைவிட இன்னொன்றும் செய்யலாமே மனோ?'' என்றாள் நப்பாசையாய்.

''என்ன அது...? சொல்லுங்கள்!'' என்றான் தனையனும் ஆவலாய்.



''பேசாமல் உன் அன்பு இல்ல புராஜெக்ட்டை இப்போது தொடங்காமல் ஒரு மூன்று மாதத்திற்கு தள்ளிப் போட்டு விடுகிறாயா? அதற்குள் நானும் உன் தந்தையிடம் அவ்வப்போது பதவிசாக பேசி, விஷயத்தை புரியும்படி அவருக்குச் சொல்லி அனுமதி வாங்கிக்கொடுத்து வருகிறேன். என்ன?''

தாய் முடித்ததும் பெரும் ஹாஸ்யத்தைக் கண்டது போல் கடகடவென சிரிக்கத்தான் செய்தான் மகன்.

புரியாமல் விழித்து திகைத்த மகாலெட்சுமியின் பக்கத்தில் வந்து செல்லாமல் தாயின் தோள்களைப் பிடித்து தட்டியவன், ''அம்மா! இந்த பாச்சாவெல்லாம் தந்தையிடம் பலிக்காது. எத்தனை வருடங்கள் குடும்பம் நடத்தியிருக்கிறீர்கள்... அவரின் பிடிவாதத்தை பற்றி நீங்கள் அறியாததா?'' என்றவன் ஒரு முடிவுக்கு வந்தது போல், ''இந்த விஷயத்தில் மேலும் என்னை வற்புறுத்தாதீர்கள் அம்மா! நான் கிளம்புகிறேன்...'' என ஒருவித கண்டிப்புக்குரலில் கூறியபடி கிளம்பிவிட்டான்.

டிரைவர் தயாராய் ஷெட்டில் இருந்து வெளியெடுத்து வைத்த பளபளகாரின் கதவைத் திறந்து ஒருவித விரைப்புடனே அவன் ஏறிச் செல்வதை கலக்கத்துடனே பார்த்து மறுபடியும் கவலை கொள்ளலானாள் மகாலெட்சுமி.

அரை மணி நேரத்தில் கார் கிரானைட் மினுமினுப்பில் ''நாதன் குரூப் ஆப் கம்பெனிஸ்'' என பளீரிட்ட பிரும்மாண்ட காம்ப்ளெக்ஸ் கட்டிடத்தினுள் சென்று நின்றது.

இறங்கி சூட்கேஸுடன் விறுவிறுவென தனது மேனேஜிங் டைரக்டர் அறையை நோக்கிச் சென்றான் மனோரஞ்சன்.

தந்தையும் கம்பெனியின் சேர்மனுமான சிவநாதன் அதை அவனுக்கு நேர் எதிரான அறைதான்.

தந்தை காலையிலே வீட்டில் இருந்து கிளம்பிவிட்ட போதும் அவன் இன்னும் அலுவலகம் வரவில்லை. அவருக்குப் பிடித்தமான ஜிம்கானா கிளம்பிற்குப் போய் அவருக்குப் பிரியமான ''பில்லியர்ட்ஸ்'' விளையாட்டை ஒரு அரை மணிநேரம் விளையாடிவிட்டு வருவது அவரது தினசரி வழக்கம்.

'வரட்டும். வந்தவுடன் இன்று பேசிவிட வேண்டியது தான். என்ன ஆனாலும் சரி, வளைந்து கொடுக்காமல் பிடிவாதமாய் பேசி தந்தையை அன்பு இல்ல புராஜெக்ட் டிற்கு சம்மதிக்க வைத்துவிட வேண்டியதுதான்!' தீர்மான மாய் மனதுள் நினைத்தபடி தனது ரூமினுள் நுழைந்து இருக்கையில் அமர்ந்தான்.

அவன் அப்படி வந்து அறையில் நுழைவதைப் பார்த்து பதட்டம் கொண்டவளாய் தனது இருக்கையில் இருந்து தாவாத குறையாய் எழுந்து ஓடினாள் அவள்! அவனது செகரட்டரி கம் உதவியாளினியான மதுமதி!

கைகளில் ஃபைல்களுடன் அவள் அரக்கப் பறக்க கதவைத் திறந்து நுழையவும் உள்ளே சூட்கேஸை மேஜையில் வைத்து விட்டு அறையின் பெரிய பெரிய சாமி படங்களை பயபக்தியோடு கும்பிட்டு விட்டு மனோ ரஞ்சன் திரும்பவும் சரியாயிருந்தது.

அதை எதிர்பாராதவளாய் வந்த வேகத்தில் நிலை தடுமாறி அவன் மேல் மோதப் போய் அதையும் கட்டுப் படுத்த முடியாமல் அப்படியே கீழே சாயப்போனாள் அவள்.



சட்டென அவள் தோளையும் கரங்களையும் ஒருசேரப் பிடித்து விழப் போனவளை நேர்படுத்தி நிறுத்தினான் மனோரஞ்சன்.

'ஐயோ! நன்றாக வாங்கிக்கட்டிக் கொள்ளப்போகி றேன்...' என பயந்து நடுங்கியவளின் தலையை செல்ல மாய் தட்டி, ''எதற்காக இந்த அவசரம் பதட்டம்...? ம்ம்...?'' என சிறு கண்டிப்புடன் வினவிவிட்டு சட்டென பார் வையை கனிவாக்கி ''குட்மார்னிங்! கூல்டவுண்!'' என்றான் மனோரஞ்சன் ஒருவித வசீகரச் சிரிப்புடன்.

அந்தக் கனிவில், வசீகரச் சிரிப்பில் சொக்கிப் போன வளாய் தனது முத்துப் பற்கள் அனைத்தையும ஒருசேரக் காட்டி பயம் நீங்கிச் சிரித்தாள் அவள்.

அவளுக்கு மனோரஞ்சனிடம் பிடித்த விஷயமும் அதுதான்! எப்போதும் எந்த நொடியும் கூட தான் முத லாளி... கோடீஸ்வர கோமான் என்ற எண்ணங்கள் சிறிதும் இல்லாமல் இயல்பாக இயல்பான ஒரு மனித னாகவே அவன் நடந்து கொள்வான். வேலை பார்ப் போரின் சிறுசிறு தவறுகளை சங்கடங்களை புரிந்து கொண்டு பெரிசுபடுத்தாமல் தட்டிக்கொடுக்கிற பரந்த குணம் அவனுக்கு!

அதனாலே தடுமாறிவளை தாங்கிப் பிடித்து, அவனே ''குட்மார்னிங்''கையும் சொல்லி அவளுக்கு எதிர் இருக் கையில் அமர்த்தியும் வைத்தான்... சிறிதும் புன்னகை மாறாமல்.

கொண்டிருந்த பதட்டத்திலும், அவள் மீது மோதி அவன் தாங்கிப் பிடித்து அமர்த்தியதிலும் தன் தவறை உணர்ந்து அசடு வழிய பற்களைக் காட்டினாலும்,

உள்ளுக்குள் ஏற்பட்ட அந்தச் சின்ன ஸ்பரிசத்தில் அவளது சிவந்த முகம் மேலும் செந்நிற ரோஜாவாய் சிவந்துதான் போயிற்று!

அவள் வீட்டிலும் சரி, தோழியிடமும் சரி, கல்யாணத்திற்கான ''மைண்ட் செட்'' வரவில்லை என கல்யாண பேச்சை தட்டிக் கழித்து வருவதற்கான உண்மையான காரணம் ''இந்த மனோரஞ்சன் தான்!'' என்பது அவளுக்கும் அவளது உள் மனதிற்கும் மட்டும் தெரிந்த அதி பயங்கர ரகசியமாயிற்றே!

# 3



மதுமதியின் நினைவு தடுமாற்றம் எல்லாம் ஓரிரு நிமிடம்தான். தன் பணியை உணர்ந்தவளாய் கையில் கொண்டு வந்த நோட்பேடை எடுத்து தயாராகிக் கொண்டாள்.

அவன் மனோரஞ்சன் அவள் கொண்டு வந்து கொடுத்த ஃபைல்களில் பார்வையை ஓட்டியபடி தனது டிக்டேஷனை தொடர்ந்தான். அனுப்ப வேண்டிய இமெயில்கள், பேக்ஸ், செய்திகள் என வரிசைப்படுத்தி விளக்கமாய் அவளிடம் சொன்னான்.

ஒரு பத்து பதினைந்து நிமிடங்கள் அவள் அன்று செய்ய வேண்டிய வேலைகளை முழுவதும் தொகுத்து தெளிவாய் கொடுத்து விட்டாள்.



நோட் பேடு குறிப்புகளைத் திரட்டிக் கொண்டு அவள் இருக்கையை விட்டு எழுந்தபடி கிளம்பப் போக, ''ஒரு நிமிடம் அப்படியே உட்கார்...!'' என்றான் ஒருவித தீர்க்கமான பார்வை அவளைப் பார்த்தபடி.

ஆணியடித்தது போல் அப்படியே உட்கார்ந்து விட்டாள் அவள். ''ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்'' என்றபோது அவள் நெஞ்சினுள் இனம்புரியா படபடப்பொன்று மெல்ல சிறகடிக்கத்தான் செய்தது.

ஆனால் மனோரஞ்சனின் சீரியஸான முகபாவம் அவளுக்கு வேறு ஒன்றை உணர்த்தியது. பொதுவாக ஆபீஸ் சம்பந்தம் இல்லாத அவனது குடும்ப விஷயங்களை பிரச்சினைகளை பேசும் போதும் மட்டும்தான் இப்படிப்பட்ட தீவிரமான முகபாவனை அவளிடம் பிரதிபலிக்கும்.

''செகரட்டரி என்றால் ஆபீஸ் விஷயங்களுக்கும் நீதான் உன் பாஸுக்கு சரியான தீர்வைச் சொல்ல வேண்டும்...'' என உரிமையுடன் அவளிடம் புகழாரம் சூட்டியபடி தனக்கு எழும்பும் குடும்ப விஷயங்களை அப்படியே ஒப்புவிப்பான்.

அவன் தன்னிடம் காட்டும் அந்த நம்பிக்கை அந்த அதீத உரிமை உள்ளுக்குள் அவளை பெரிதும் குதூகலிக்க வைக்கும். அவன் சொன்ன விஷயங்களுக்கு தன்னால் முடிந்தவரை மூளையை கசக்கி அவன் மனம் கோணாதவாறு தீர்வையும் சொல்வாள்.

அன்றும் அப்படியே சொல்லப்போகிறான் என்று நினைத்தவளுக்கு அவன் சொன்ன வாக்கியங்கள் பெரும் திகைப்பை உண்டாக்கியது.

''இன்று அப்பாவிடம் மோதப் போகிறேன். ஒன்றில் இரண்டு பார்த்து விடப் போகிறேன்...'' என்றான் மனோரஞ்சன் என்றும் இல்லாத உஷ்ணத்துடன்.

''சார் என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் இதை சற்றும் எதிர்பாராதவளாய் ''முதலில் நான் சொல்லும் விஷயங்களை கேள்'' என்றபடி மனோரஞ்சன் முழுவதையும் கொட்டித் தீர்த்தான்.

தனது நெடுநாள் கனவான அனாதை ஆதரவற்றோருக்காக ''அன்பு இல்லம்'' ஒன்று கட்டுவதற்கு தந்தை தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருவதையும் இந்த முறை அதைப் பொறுக்காமல் தான் பொங்கி எழப் போவதையும் விளக்கமாகவே அவளிடம் சொன்னான்.

இம்முறை அவன் அப்படி அந்த அன்பு இல்ல புராஜெக்ட்டை தீவிரப்படுத்துவதற்கான காரணத்தை அவன் சொன்னபோது அவள் நிஜமாகவே ஆச்சரியப்பட்டாள்.

சென்ற வருடம் மட்டும் அவர்களது நாதன் குரூப் ஆப் கம்பெனிஸ் மூன்றரை கோடியை நிகர லாபமாய் ஈட்டியிருக்கிறதாம் அது போதாதா? அதில் ஒரு ஐம்பது லட்சத்தை இது போன்ற தர்ம காரியங்களுக்காக செலவிட்டால் நாம் குறைந்தா போய்விடுவோம்?

மனோரஞ்சன் கேட்பது எதிர்பார்ப்பது நியாயமான கேள்விதான்! எத்தனை பேருக்கு இப்படியொரு இரக்க சிந்தனை வரும்? அவளும் பணம்... பணம்... மேலும்... பணம்... என வெறிபிடித்து பறந்து அலையும் எத்தனையோ கோடீஸ்வரர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாளே!



இந்த இளம் வயதில் அப்படி பரந்த உள்ளத்துடன் நினைப்பது எவ்வளவு உன்னதமான உயர்ந்த விஷயம் அது ஏன் இவனது தந்தைக்குப் புரியவில்லை?

அவனையே பார்த்து புருவம் உயர வியந்தவாறு அவள் திகைத்த மனோரஞ்சன் பார்வையை கூர்மையாக்கியபடி, ''என்ன? என்ன... திகைக்கிறாய்? நான் சொல்வது சரிதானே?'' என கேள்விகளால் உலுக்க நினைவுக்கு வந்தவளாய், ''ஆ... ஆமாம்... ஸார்!'' என்றாள் அவசரமாய்.

மனோரஞ்சன் கொண்டிருந்த இறுக்கம் குறையாதவனாய் முஷ்டியை மடக்கி மறுகையில் குத்தியவன், ''அதனால் இம்முறை நான் லேசில் விடப்போவதில்லை. பிடிவாதம் பிடிக்கப் போகிறேன் சம்மதம் இல்லையென்றால் கம்பெனியை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்... என வெளிப்படையாய் சொல்லிவிட்டு வெளியேறிவிடவும் தீர்மானித்திருக்கிறேன்...'' என சர்வ சாதாரணமாய் அவன் சொன்னபோது அவளுக்கு தூக்கி வாரிப்போட்டது.

''ஸார்... ஸார்... என்ன... இது...? வே... வேண்டாம்... ஸார்...! இப்படியெல்லாம் தந்தையிடம் சொல்லிவிடாதீர்கள்!'' அவள் ஏறக்குறைய பதறத்தான் செய்தாள்.

அவளை நோக்கி புன்னகை தோன்ற கைகளை உயர்த்திய மனோரஞ்சன், ''நீ ஒன்றும் பயப்படாதே. இது ஒரு வகை மிரட்டல்தான். அப்போதுதான் என் தந்தை வழிக்கு வருவார்...'' என்றான் ஒருவித மர்மச்சிரிப்பை தொடர்ந்தவாறு.

ஆனால் மதுமதியால் அதை ரஸிக்கமுடியவில்லை. கம்பெனியை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் வெளி யேறி விடுகிறேன்... என்பது உறவை முறிக்கும் அதிக பட்ச வார்த்தை அல்லவா? அதை அவன் உபயோகித் தால் அவர் பெற்றவரின் மனசு என்ன பாடுபடும்?

''என்ன சிந்திக்கிறாய்?'' என ஓரிரு நிமிட அமை திக்குப் பின் அவன் கேட்டபோது, அதையே வலி யுறுத்துபவளாய், ''வேண்டாம் ஸார்... அதை விட கடினமில்லாத வார்த்தைகளை உபயோகித்து உங்கள் தந்தையிடம் பேசுங்கள். கண்டிப்பாக அவர் சம்மதிப் பார்...'' என்றாள் குரலில் பிரயாசையுடன்.

மனோரஞ்சன் திரும்பவும் நெற்றியை சுருக்கினான். ''அது என்ன கடினமில்லாத வார்த்தைகள்? நீயே சொல்லிவிடு!'' என்றான்.

அவளும் அவன் கேட்டதும் தாமதிக்காமல் சிந்தித்து வார்த்தைகளை கோர்வையாக்கினாள். ''அதாவது... ஸார்... நீங்கள் அப்படி பட்டென உறவைமுறிப்பது போல் எடுத்தெறிந்து பேசுவதற்குப் பதில்... அந்த வார்த்தை களை உபயோகிக்காமல்... நான்வேறு விதமான விபரித மான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் என பய முறுத்தலாமே...? எப்படி... நான் சொல்வதை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்...!'' என்றாள் கெஞ்சும் தொனி யில்.

அவள் சொல்லும் வார்த்தைகளின் பிரயோகத்தை அது சாந்தமாய் மிரட்டும் தொனியையும் எளிதில் கிர கித்துக்கொண்டு சட்டென முகம் மலர்ந்த மனோரஞ்சன் அப்படியே எழுந்தும் விட்டான்.



''சபாஷ்! நல்ல அருமையான வழியைச் சொல்லி விட்டாய். இதற்குத்தான் எப்போதும் அறிவும் அழகும் உள்ள புத்திசாலி செகரட்டரியை பக்கத்திலேயே வைத் துக்கொள்ள வேண்டும் என்பது...!'' என்று பாராட்டிய தோடு மட்டுமில்லாமல் சட்டென அவள் கைகளை இறுகப் பிடித்து, ''வெரி தாங்க்ஸ்.. மது!'' என வேகமாய் குலுக்கினாள்.

அவள் அறிவைப் பாராட்டி, ஒரே வார்த்தையில் அவள் அழகைப் புகழ்ந்து, தனது கரங்களால் அவள் விரல்களைப் பற்றி இனிமையான ஒரு ஸ்பரிசத்தைக் கொடுத்து... எல்லாம் ஓரிரு நொடியில் நடந்துவிட்டது.

அப்படியே உச்சிகுளிர்ந்து போனாள் அவள்!

அதன்பின் மனோரஞ்சன் தந்தை அலுவலகத்திற்கு வந்து விட்டதை உணர்ந்து பரபரப்பாகி விட்டான்.

அதையும் தடுத்தாள் மதுமதி.

''வேண்டாம் சார். இப்போதுதானே வந்திருக்கிறார் கள்? கொஞ்சம் நேரம் கழித்துப் போய் பேசுங்களேன்...!'' என அவள் சொன்னதும் மனோரஞ்சன் சிரித்துவிட்டான்.

''என்னைவிட.... இந்த விஷயத்தில் அதிகம் கவலைப்படுகிறவள் நீ... நீயாகத்தான் இருக்கும்... என்றவன், ''...ம் உன் யோசனையும் சரிதான். மதியம் லஞ்ச் ஹவரிலே அவரிடம் இதுபற்றி பேசுகிறேன்...'' என முடிவெடுத்து முடித்தான்.

மதுமதியும் தலையசைப்புடன் தனது நோட்பேடை எடுத்துக்கொண்டு அறையில் இருந்து வெளிவந்து விட் டாள்.

தனது அறையில் தனது இருக்கையில் போய் தொப்பென உட்கார்ந்தபோது அவளுக்கு கவலையாக வும் இருந்தது. இந்த மனோரஞ்சன் ஏதோ கேட்கப்போய் அவரது தந்தை கோபமுற்று, ''சரிதான் வெளியே போ...!'' என விரட்டி விட்டால் என்ன ஆகும்?

அலுவலகம் முழுக்க தந்தை சிவநாதனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். கோபம் வந்துவிட்டால் அவ்வளவுதான். ஒரே சிடுசிடுப்புதான். விரட்டல்தான். யார் எதிர்பட்டாலும் எரிந்து விழுவார். ஏன் மதுமதியே கூட பலமுறை அவரிடம் மாட்டி நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டு இருக்கிறாளே!

அப்படி எதுவும் தந்தைக்கும் மகனுக்கும் நடந்து விடக்கூடாது... என மனமுருக கடவுளிடம் வேண்டியும் கொண்டாள்.

மனோரஞ்சனை விட அவளுக்குத்தான் மதியம் என்ன நடக்கப்போகிறதோ...? என்ற பயமும் கலக்கமும் அதிகரித்தது.

அதுவும் சொல்லி வைத்தாற்போல் லஞ்ச் ஹவருக்கு அரைமணி முன்னதாக மனோரஞ்சன் தந்தையின் சேர்மன் அறையை நோக்கி விறுவிறுவென ஒருவித விரைப்புடன் செல்வதை கவனித்த போது அவளது கலக்கம் அதிகரித்தது.

சுமார் ஒரு மணி நேரம்.

தவிப்பான நிமிடங்கள் அவை.

அவள்தான் அடிக்கடி தலையை உயர்த்தி மனோ ரஞ்சன் தந்தையின் அறையில் இருந்து வெளி



வந்து விட்டானா என எட்டிப் பார்த்துக் கொண்டிருந் தாள்.

லஞ்ச் ஹவரோ முடியப் போகிக் கொண்டிருக்க டிபன் பாக்ஸை எடுத்து வைத்தவள் அதை திறக்கவோ திறந்து மதிய உணவை உண்ணவோ மனமில்லாமல் அப்படியே சிலை போல் உட்கார்ந்திருந்தாள்.

அவர்களது சொந்தப் பிரச்சினைக்கு எதற்காக இந்த அதிகப்படியான உரிமை... கவலைப்படுதல்... என்ன இருந்தாலும் நாம் ஒரு பணியாள் தானே? என்றெல்லாம் அவளால் நினைத்து ஒதுக்க முடியவில்லை.

விரல்களைப் பிசைந்தபடி தவிப்புடனே காத்திருந் தாள்.

மேலும் பத்து நிமிடங்கள் சென்றபோது... சேர்மனின் அறைக் கதவு திறக்கப்பட்டு... குபீரென வெளிப்பட்டான் மனோரஞ்சன்.

அதே வேக நடையோடு விறுவிறுவென நடந்து வெளிவந்தான்.

அவள் டக்கென எழுந்து ஓடத்தான் செய்தாள்.

அவன் பக்கத்தில் போய் நின்றபோது எவ்வித சலனத் தையும் அவன் முகக்குறிப்பில் உணர முடியவில்லை.

இறுகிப்போன முகத்துடன் அவளைப் பார்த்தவன், ''நீயும் சாப்பிடவில்லைதானே? வா...!'' என்றபடி தனது காரை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட்டான்.

அந்த நிலையிலும் தான் உண்ணவில்லை என்பதை சரியாக யூகித்திருக்கிறானே... என வியந்தவள் பின் தொடர்ந்தாள்.

காரில் ஏறி அவன் ஸ்டார்ட் செய்ததும் மறுபேச்சில்லாமல் ஏறிக் கொண்டாள்.

அவ்வப்போது மீட்டிங்குகள் நடக்கும் சமயம் இது போல மதியம் உணவருந்த அவனுடன் அவன் ரெஸ்ட்டாரண்டுக்கு அழைத்துச் செல்வது உண்டு.

முதலில் மறுத்தவள் அவனது வற்புறுத்தல் காரணமாக சம்மதிக்க வேண்டியதாயிற்று. மனோரஞ்சன் தீர்க்கமான செயல்களும் உற்ற தோழன் போல் உரிமையாய் பழகும் சுபாவமும் அவளை மறுக்க விடாமல் அப்படி சம்மதிக்க வைத்தது.

இன்றும் அதனாலேயே ஏறிக்கொண்டவள் அவன் முகக்குறிப்பையே ஆராய முயற்சி செய்தாள்.

மனோரஞ்சனோ எவ்வித சலனமுமில்லாமல் வண்டியை ஓட்டி ரெஸ்ட்டாரண்ட் ஒன்றில் நிறுத்தினான்.

இறங்கி இருக்கையில் உட்கார்ந்தார்கள்.

அவனே அவளுக்கும் சேர்த்து பணியாளிடம் ஆர்டர் செய்து விட்டு அவளை உற்றுப் பார்த்தான்.

''பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாய் ஆகிவிட்டது...'' என்றான்.

''என்ன ஸார் சொல்கிறீர்கள்? உங்கள் தந்தை அன்பு இல்ல புராஜெக்ட்டிற்கு ஒத்துக்கொண்டார்களா? என்ன தான் சொல்கிறார்கள்?'' என்றாள் ஆவலாய்.

சலிப்புடன் அவளைப் பார்த்தவன், ''ம்ம்... ஒத்துக் கொண்டார்கள். ஆனால ஒரு கண்டிஷனாம்... நான் உடனே மஞ்சரியை மணந்து கொள்ள வேண்டுமாம்...!'' என்றான் அவளை மொத்தமும் அதிர வைத்தவாறு.



# 4

மஞ்சரி..?

மனோரஞ்சனின் அத்தை பெண். அவனைப் போலவே இருக்கும் அவனது பணக்கார மில் ஓனர் மாமாவின் முறைப் பெண். பணத்திமிரும் அகம்பாவமும் ஒரு சேரக் கொண்டவள் அவளா?

அவள் பெயரைக் கேட்டதுமே மதுமதிக்கு ஒருமுறை அவள் அலுவலகம் வந்ததும் அவள் திமிராய் பண்ணிய களேபரமும் தான் ஞாபகத்திற்கு வந்தது.

அன்று தனது அறையில் மும்முரமாய் குனிந்து ஃபைல்களை பார்த்துக் கொண்டிருந்தவள் சட்டென மூக்கைத் துளைக்கும் ஒருவித அதீத சென்ட் வாசத்தை உணர்ந்து சட்டென நிமிர்ந்தாள்.

ஒரு இருபது வயதுப் பெண் தனது மாநிறத்தை மறைக்க பியூட்டிபார்லர் சென்று கலரடித்து வருவது போல் ஒருவித அதீத மேக்கப்புடன் கதவைத்திறந்து கொண்டு கேபினுக்குள் வருவதைக் கண்டாள்.

நிச்சயம் எம்.டி. மனோரஞ்சனை பார்க்கத்தான் அவள் வருகிறாள் என்பது அவளுக்கு புரிந்து போயிற்று.

பணக்காரத்தனத்தை எதிரொலிக்கும் காதுகளில் கழுத்துக்களில் நகைக்குவியல்கள், உயரத்திற்கும்

தோற்றத்திற்கும் சிறிதும் பொருத்தமில்லா பளபளஜி கினா உடை.

'யார் இது? இப்படி தளுக்கி மினுக்கி அலங்காரம் பண்ணிக்கொண்டு மனோரஞ்சனை சந்திக்க வந்திருக் கிறாள்? யாராக இருக்கும்?' என அவள் சிந்தித்து கொண் டிருக்கும்போதே அவள் பக்கம் வந்து முகத்தருகே கைகளால் சொடுக்கிட்டாள் அவள்.

அவள் வந்த தோரணையும் காட்டிய அதிகாரமும் இவள் நிச்சயம் மனோரஞ்சனுக்கு தெரிந்தவளாகத்தான் இருக்க வேண்டும்... என்ற நினைப்பை மதுமதியுள் ஓடவைக்க, அவசரமாய் ஸீட்டை விட்டு எழுந்தவள், ''மன்னிக்க வேண்டும்... எம்.டி.சாரை பார்க்க வந்திருக் கிறீர்களா? உங்களிடம் முன்பே அப்பாயிண்ட்மெண்ட் இருக்கிறதா? யார் நீங்கள்? உங்கள் பெயரைச் சொல்கிறீர் களா?'' என்றாள் உதவியாளினியாய் தனது கடமையைச் செய்வது போல்.

''உன்னிடமெல்லாம் என் பெயரைச் சொல்ல வேண் டிய அவசியமில்லை...'' என முகத்திலடிக்க பேசியவள் அத்தோடு நில்லாமல், ''நான் தான் மஞ்சரி. உன் எம்.டி.யின் முறைப் பெண் மஞ்சரி...'' என ஒன்றுக்கு இரண்டு தடவை தன் பெயரை உளறி தனது படுமுட் டாள்தனத்தை காட்ட வந்த சிரிப்பை அடக்க மதுமதி சிரமப்பட்டாள்.

அதைக் கவனித்த அவள் மேலும் சினமாகி, ''என்ன இது இளிப்பு? எங்கே என் மனோ? அவர் ரூமைக் காட்டு?'' என்று விரட்டியவள் அத்தோடு நில்லாமல், ''நான் நினைத்தால் இப்போதே உன்னை டிஸ்மிஸ் செய்யும்படி மனோவிடம் சொல்லிவிடுவேன்!'' என கைகளை உயர்த்தி மிரட்டவும் செய்தாள்.



'சரிதான் இவள்! இவளுக்கு இந்த மரியாதை கொடுத் ததே தவறுதான்!' என்பது போல் மதுமதி கைகளை கட்டிக்கொண்டு தோள்களை குலுக்கியவள், ''முதலில் அதைச் செய்யுங்கள். நான் ரொம்பவும் சந்தோஷப்படு வேன். அதோ அந்த எதிர் அறைதான் எம்.டி.ரூம்... ம்ம்... சீக்கிரம்... சீக்கிரமாப் போங்கள்...''என அவளைப் போலவே படபடவென பேசிக் காட்டினாள்.

தன்னை மதுமதி கிண்டல் செய்வதை புரிந்து கொண் டவள் மூக்கு நுனிசிவக்க முறைத்துவிட்டு, ''உன்னை என்ன செய்கிறேன்... பார்!'' என்றபடி விடுவிடுவென எம்.டி.ரூமை நோக்கி நடந்தாள்.

மறுபடியும் சிரிப்பு பொங்க இருக்கையில் அமர்ந்து தனது வேலைகளை கவனிக்க ஆரம்பித்து விட்டாள் மதுமதி. அவளுக்கு மனோரஞ்சனைப் பற்றி நன்கு தெரியும். தனது பணியாட்களை சரியான காரணமில்லா மல் மற்றவர்களுக்காக அவனாவது கடிந்து கொள்வ தாவது?

அவள் நினைத்தது மாதிரியே ஒரு பத்து நிமிடத்தில் முகம் கறுத்துப் போய்தான் வெளிவந்தாள் மஞ்சரி.

வந்து மதுமதியை நிமிர்ந்து பார்க்கக் கூட திராணி யில்லாதவளாய் விடுவிடுவென்று அகன்று விட்டாள். மனோரஞ்சன் அவளுக்கு நன்கு டோஸ் விட்டிருக்க வேண்டும்.

அதற்குப்பின் அந்த மஞ்சரி மறந்தும் கூட மனோ ரஞ்சன் ஆபீஸ் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை!

அவள்தான் இப்போது வேறு ரூபத்தில் கல்யாணம் என்ற பந்தத்தை மையமாக்கி நுழையப் பார்க்கிறாளா?

அந்த ரெஸ்ட்டாரண்டில் மனோரஞ்சன் முன் அமர்ந்து மதிய உணவை கொறித்தபடி சிந்தித்த மதுமதியின் நினைப்பை ஆமோதிப்பது போல், "எல்லாம் அந்த மஞ்சரியின் சூழ்ச்சிதான்!" என்றான் மனோரஞ்சன்.

"எப்படி ஸார்?"

"வேறு என்ன? என்னை அடிக்கடிச் சுற்றி வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் வந்து தொல்லை கொடுத்தாள். வெட்கமில்லாமல் நாம் இன்னும் கொஞ்ச நாளில் திருமணம் செய்யப்போகிற காதலர்கள் போல்தானே? என்றெல்லாம் காதல் டயலாக் பேசி என்னை எரிச்சலூட்டினாள். அதான் அப்படியெல்லாம் நினைப்பை மனதில் வைத்துக் கொள்ளாதே...! என எச்சரித்து அனுப்பினேன். அதை அப்படியே அப்பாவிடம் போய் சொல்லிவிட்டாள்..."

"அப்படியானால் உங்கள் தந்தைக்கு இதன்மூலம் கோபம் அதிகமாகி இருக்குமே சார்?"

அவள் கலக்கமாய் கேட்க அதிர்வில்லாமல் சிரித்தான் மனோரஞ்சன். "அதுதான் இல்லை. எப்படித்தான் இந்த அன்பு இல்ல புராஜெக்ட்டுக்கு தடை சொல்ல என தவித்தவருக்கு... வாயில் மெல்ல அவல் கிடைத்து போல் இது வசதியாய் போயிற்று..."

"என்ன சொல்கிறீர்கள் ஸார்?"

"மது. என் தந்தை நான்... மஞ்சரியைத் தான் கட்டிக் கொள்ள வேண்டும் என நிர்பந்தம் செய்யும் ரகமில்லை. அவரைப் பொறுத்தவரையில் திருமணம்... முக்கியமான விஷயம்... குடும்பம் நடத்தப் போவது அவன்... அவனே... தீர்மானிக்கட்டும்... என விட்டுவிடுவார்... மேலும் நான் மஞ்சரியை கட்டிக்கொள்வதில் அவருக்கு முழு உடன்பாடு கூட கிடையாது..."



"அப்படியா?"

"ம்ம்... மஞ்சரியின் பகட்டுத்தனம்... ஆடம்பரமாய் ரூபாயை செலவழிக்கும் அதிமேதாவித்தனம் இதெல்லாம் அவருக்கு சுத்தமாய் பிடிக்காது. அதனால் நான் மஞ்சரியை கட்டிக்கொள்ள மறுத்துச் சொன்னால் முதலில் சந்தோஷப்படுபவரும் அவர் மட்டும்தான்..."

மனோரஞ்சன் சொல்ல மதுமதி புரியாமல் விழித்தாள். "பிறகு... எதற்கு ஸார்... அவரே பிளாக் மெயில் செய்வது போல் உங்களிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார்?"

மதுமதியின் கேள்விக்கு கடகடவெனச் சிரித்தான் மனோரஞ்சன்.

"அதில்தான் அவரது கில்லாடித்தனம் இருக்கிறது மனோ. அவருக்கு என்னைப் பற்றி, எனக்கு மஞ்சரியை சுத்தமாய் பிடிக்காது பற்றி நன்கு தெரியும். அதனால்தான் நான் ஒரு போதும் மஞ்சரியைக் கல்யாணம் செய்து கொள்ள ஒத்துக்கொள்ள மாட்டேன் என்ற உறுதியை வைத்துக் கொண்டே தூண்டில் போடுகிறார். இப்போது புரிகிறதா?"

"புரிகிறது ஸார்! உங்கள் தந்தைக்கு எப்படியும் உங்களது அன்பு இல்ல புராஜெக்ட்டை நிறுத்தி விட வேண்டும் என்பதுதான் ஒரே குறி. அப்படித்தானே?"

மனோரஞ்சன் பலமாய் தலையசைத்தான்.

"அதேதான்! எப்படியாவது அதை நிறுத்திவிட வேண்டும் என துடிக்கிறார். அப்படி அதை நிறுத்த ஏதாவது

சாக்கு தேடிக்கொண்டிருந்தவருக்கு இது சரியாக வந்து மாட்ட கெட்டியாக பிடித்துக்கொண்டு விட்டார்...''

''அப்படி ஏன் ஸார் அவருக்கு இந்த அன்பு இல்ல புராஜெக்ட் மீது அளவுகடந்த வெறுப்பு?'' மதுமதி ஆற்றாமையாய் கேட்க தோள்களை குலுக்கினான் மனோரஞ்சன்.

''எல்லாம் அவர் மேலும் மேலும் சேர்க்க ஆசைப்படும் பணம் பற்றிய கவலையினால்தான்! எங்கே மகன் இந்த வயதிலேயே அனாதை ஆசிரமம், தர்மம் செய்கிறேன் என்று போய் காசையெல்லாம் தானம் செய்தே கரைத்து விடுவானோ என்கிற அதீத பயம்! அதுதான் இப்படி அன்பு இல்ல புராஜெக்டில் அவருக்கு வெறுப்பை வரவழைத்து தடுக்கிறது...''

பின் சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது. இருவரும் ஒன்றும் பேசாமல் சாப்பிட்டு முடித்தார்கள்.

பேரருக்கு பணம் கொடுத்து விட்டு மனோரஞ்சன் கிளம்பினான். அவன் பின்னாலே வந்து காரில் ஏறிக்கொண்டாள் மதுமதி.

ரெஸ்ட்டாரண்டை விட்டு காரை வெளியெடுத்து தனது அலுவலகத்தை நோக்கி ஓடவிட்ட மனோரஞ்சன் ஒருவித முடிவிற்கு வந்தவன் போல் நிதானமாய் அவள் பக்கம் திரும்பி பேசினான்.

''மது, எனக்கு இந்த அன்பு இல்ல புராஜெக்ட் ரொம்பவும் முக்கியம். அதற்காக என்ன துன்பம் வந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்ற மனநிலையும் எனக்கு வந்துவிட்டது. அதனால் அப்பாவிற்கு அதிர்ச்சி கொடுப்பது போல் மஞ்சரியை கட்டிக்கொள்ள சம்மதம் என சொல்லிவிடலாமா என்று பார்க்கிறேன். யோசித்துப் பார்த்தால் அதுதான் சரியான வழியும் கூட...!''



தலையில் இடி இறங்கினாற்போல் உணர்ந்தாள் மதுமதி.

# 5

அன்று இரவுதான் மதுமதிக்கு முழுத்தூக்கமும் போயிற்று. மஞ்சரியை கட்டிக்கொள்ள சம்மதிக்கப் போகிறேன் என்று அவன் சொன்னதை அவளால் கொஞ்சமும் ஜீரணிக்க முடியவில்லை.

ஆனால் மனோரஞ்சன் அதை அவளிடம் சொன்ன விதமும் அவன் குரலில் காட்டிய உறுதியும் அவளை ரொம்பவும் பயப்படச் செய்தது.

''வேண்டாம் ஸார்... இந்த விபரிதம் பின் உங்கள் வாழ்க்கையே கெட்டு விடும்...'' என வாய் வரை சொல்ல வந்து விட்ட வார்த்தைகளை உதடுகளுக்குள்ளே கஷ்டப்பட்டு அடக்கினாள்.

இது அவனது குடும்ப விஷயம் முழுக்க முழுக்க அவன் சம்பந்தப்பட்ட அவனது தனி விஷயம். இதில் முடிவெடுக்க வேண்டியது அவன்தான்!

ஏதோ ஆலோசனை கேட்கிறான் என்றால் ஓரளவுதான் சொல்ல முடியும். நிர்ப்பந்திக்க முடியும். அதீத உரிமையெடுத்து அவனிடம் பேசுவது நன்றாக இருக்காது. மேலும் அவனது கருத்திற்கு உடனடியாக மறுத்து ஏதேனும் சொன்னால் அது அவனுக்குப் பிடிக்காமல் கூட போய் விடலாம்.

எல்லாவற்றுக்கும் மேலோக இவள் ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்? இவள் இப்படி சொல்வதற்கு எதுவும் உள்ளர்த்தம் இருக்குமோ என்றெல்லாம் அவன் நினைத்து ஆராய ஆரம்பித்துவிட்டால் பின் ஆபத்தாய் போய்விடும்!

இப்படி எதையெல்லாமோ யோசித்து பயந்துதான் மதுமதி அந்த நிமிடம் பேசாமல் இருந்து விட்டாள். ஆனால் அப்படி பேசாமல் மறுத்துச் சொல்லாமல் இருந்து விட்டது தவறோ...? என இப்போது தவிப்பு உண்டானது.

அன்று மாலை அவள் வேலை முடிந்து கிளம்பும் வரை மனோரஞ்சன் அவளிடம் வேறு விஷயங்களை பேசினான் தவிர மஞ்சரி பற்றி எதுவும் கூறவில்லை.

அதற்காக அவன் மறந்து விட்டானோ தள்ளிப் போட்டு விட்டானோ என்று நினைத்து விடமுடியாது. மனோரஞ்சன் ஒருமுறை முடிவெடுத்துவிட்டால் அதில் உறுதியாய் இருப்பான் என அவளுக்கு நன்கு தெரியும்.

அதுவே அவளது பயத்தை அன்று அதிகரித்து தூங்க விடாமல் செய்தது. புரண்டு புரண்டு படுத்து அதே தவிப்புடன் ஒருவழியாய் தூங்கியும் போனாள்.

மறுநாள் மைவிழிக் கண்கள் சற்று சிவக்கத்தான் அலுவலகத்திற்கு போய் உட்கார்ந்தாள். வழக்கத்திற்கு மாறாக அவளுக்கு முன்னதாகவே வந்திருந்தான் மனோரஞ்சன்.

அவன் தன்னை உடனே எதாவது கேட்பதற்கு அழைப்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவன் வேண்டிய ஃபைல்களை பணியாள் மூலமே கேட்டு பெற்று விட்டு பேசாமல் இருந்து விட்டாள்.

சரி எதாவது சாக்கு வைத்து அவனது ரூமிற்குள் நுழையலாம் என்று பார்த்தால் அதற்கும் எதாவது தேடத்தான் வேண்டியிருந்தது.



ஏனெனில் இது பர்ஸ்ட் வீக் எனச் சொல்லப்படும் மாத ஆரம்பம். அதனால் சென்ற மாத வேலைகள் எல்லாம் இறுதியிலே முடித்து ஃபைல்களை க்ளோஸ் செய்தாயிற்று. இனி வரப் போகும் ஆர்டர்களுக்குத்தான் குறிப்பு எழுத வேண்டும்.

மேலும் எதாவது நொண்டிச்சாக்கு வைத்துக் கொண்டு மனோரஞ்சனிடம் பேசப் போனால் அவன் கோபமுற்று, என்ன இன்று என்னாயிற்று உனக்கு? என்று கூட அவளை விரட்டிவிடக் கூடும்.

ஆனாலும் அவளுள் தவிப்பை அடக்க முடியவில்லை. எல்லாம் அந்த மஞ்சரி விஷயம் தான். அவன் முடிவை மாற்றிக்கொண்டானா? இல்லை அதிலேயே உறுதியாக இருந்து விட்டானா? என்று அவளுக்கு தெரிந்தாக வேண்டும். இல்லையேல் தலையே கூட அவளுக்கு வெடித்து விடும்!

ஆனால் சோதனையாய் அன்று காலை முழுவதும் அவளை அழைக்காத மனோரஞ்சன் மதியம் லஞ்ச் ஹவர் முடிந்து வேலை தொடங்கியபோது இண்டர்காமில் அவளை வரும்படி அழைத்தான்.

அப்பாடா...! என ஆவலாய் எழுந்து விறுவிறுவென அவனது அறைக்குள் நுழைந்தாள்.

வேகமாய் வந்தவளை இன்முகமாய் எவ்வித சலனமுமில்லாமல் வரவேற்று கையில் வைத்திருந்த இன்விடேஷன் கார்டு ஒன்றை அவளிடம் நீட்டினான்.

"என்ன ஸார் இது?"

புரியாமல் வாங்கிப் பிரித்தாள் அவள்.

மனோரஞ்சன் விளக்கினான்.

''மது, இது இன்று ஸ்டார் ஹோட்டல் ஒன்றில் மாலை நடக்கப் போகும் ஃபேஷன் ஷோ ஒன்றுக்கான அழைப்பிதழ். இதில் மஞ்சரி கலந்து கொள்கிறாள்...'' என்றவன் பேச்சை அப்படியே நிறுத்திவிட்டு அவளை உற்றுப் பார்த்தான்.

எவ்வித உணர்வுமில்லாமல் அவள் விழிக்கவும், ''உனக்குப் புரிகிறதா?'' என்றான்.

''புரியவில்லை... ஸார்...'' என்றாள் அவள் மஞ்சரி பெயர் தன்னும் ஏற்படுத்திய எரிச்சலை அடக்கச் சிரமப் பட்டவாறு.

அவனோ அதைக் கொஞ்சமும் உணராமல் உற்சாக மாய் பேச ஆரம்பித்து விட்டான்.

''மது, நேற்று உன்னிடம் சொன்னேனே... மஞ்சரியை மணந்து கொள்வது பற்றி. அதை அப்பாவிடம் உடனே சொல்ல மனம் வரவில்லை. முதலில் அவள் மஞ்சரி யிடமே சொல்லிப் பார்ப்போமே என திட்டமிட்டிருக் கிறேன். அவள் மூலமாக விஷயம் அப்பாவிற்கு செல்லட் டுமே... என்ன எப்படி என் பிளான்?'' என்றான் அவன் எதையோ சாதித்துவிட்டதைப்போல்.

''எதற்காக ஸார் இப்படி சுற்றி வளைத்து... நேரிடையாக உங்கள் தந்தையிடமே சொல்லிவிட வேண்டியதுதானே?''

அவன் முடிப்பதற்குள், ''மஞ்சரியிடம் சொல்ல ஒரு காரணமிருக்கிறது...'' என்றான்.

''என்ன காரணம் ஸார்...?''

''எல்லாம் நம்பிக்கைதான்! நான் போய் சம்மதத்தைச் சொன்னால் கூட என் தந்தை முழுவதுமாய் நம்பிவிட மாட்டார். இவன் கடைசியில் நழுவ வேறு எதுவும்



திட்டம் வைத்திருக்கிறானா என சந்தேகம் கொள்வார். ஆனால் மஞ்சரியே போய் நான் சம்மதம் சொல்லிவிட்ட விஷயத்தைச் சொல்லிவிட்டால் அவரது அந்த வீணான சந்தேகம் நீங்கும். என்ன... அப்படித்தானே?''

அவன் சொல்லி விட்டுக் கேட்க அவளால் வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. தலையை மெல்ல அசைக்கத்தான் முடிந்தது.

'கூடவே மனோரஞ்சன் மஞ்சரியை மணந்து கொள் வது என உறுதியாக முடிவெடுத்து விட்டான். இனி இவனை மாற்றுவது எளிதல்ல...' என்ற எண்ணம் வேப் பங்காயை கடித்தது போல் கசப்பாய் அவளுள் ஊறியது.

அதை மேலும் எரிச்சல் படுத்துவது போல் மனோ ரஞ்சனின் அடுத்த வார்த்தைகள் வெளிவந்து விழுந்தன. ''நீ... நீ... நான்... மது... என்னுடன்... இன்று இந்த ஃபேஷன் ஷோவிற்கு வரவேண்டும். வந்து என் சார்பாக மஞ்சரி யிடம் இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டும்...''

அவன் வெகு சாதாரணமாய்ச் சொல்ல, இது என்ன கூத்து? என பயங்கரமாய் திடுக்கிட்டவள், ''ஸார், என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் அதிர்ந்து.

மனோரஞ்சன் தலையசைத்தவன், ''நான் நன்றாக யோசித்து விட்டேன் மது. மஞ்சரியிடம் நானே வலியப் போய் உன்னை கட்டிக்கொள்ளத் தயாராகிவிட்டேன் என்று சொல்வது என்னவோ போல்தான் இருக்கிறது. அதனால் நீ உடன் வந்தால் என் வேலை எளிதாகி விடும். என் பாஸ் மனம் மாறிவிட்டார். உங்களைக் கட்டிக் கொள்ளத் தயாராகிவிட்டார்... என்று ஒரு வார்த்தை அவளிடம் சொல்லிவிட்டால் எல்லாம் சுளுவாகிவிடும். அதனால் நீ வருகிறாய். மாலை ஆறு மணிக்கு பங்ஷன்.

நானே உன்னை அழைத்துச் சென்று விட்டு முடிந்ததும் உன் வீட்டில் ட்ராப் செய்து விடுகிறேன்...'' என முடிவெடுத்ததை உறுதிப்படுத்துவது போல் சொல்லியும் முடித்து விட்டான்.

மதுமதிக்கு வேறு வழியில்லாமல் போயிற்று. மீண்டும் வேண்டா வெறுப்பாய் தலையாட்டி தன் ஸீட்டிற்கு வந்து தொப்பென விழுந்தாள். 'இது... என்ன கண்றாவி?' என்று நினைத்தவாறு தலையில் கை வைத்துக் கொண்டாள்.

ஆனால் ஃபேஷன் ஷோவில் மஞ்சரியிடம் தானே வார்த்தைகளை மாற்றி ஒரு பெரிய பொய் ஒன்றைச் சொல்லப் போகிறோம் என்பதை அப்போது அவள் கொஞ்சமும் உணரவில்லை.

# 6

அலுவலக சிறிய ஒப்பனை அறை ஒன்றிலே லேசா பவுடர் டச்சப்புடன் வேறு வழி தோன்றாதவளாய் ஃபேஷன் ஷோவிற்கு கிளம்பிவிட்டாள் மதுமதி.

தயாராய் கிளம்பிவிட்ட மனோரஞ்சனும் அவளை காரில் ஏற்றிக்கொண்டு வேகமாய் சாலைகளில் ஓடவிட்டான்.

அவள் எவ்வித உணர்வும் இல்லாமல் இறுக்கமாய் அமர்ந்திருக்க அவளை ஓரிருதரம் திரும்பி அவன் உற்றுப் பார்ப்பது போல் அவள் உணர்ந்தாள்.

ஏன் இப்படி உம்மென்று இருக்கிறாய்? அவன் கேட்டு விடுவான் என்ற பயத்தில் வரவழைத்துக் கொண்ட



வலியப் புன்னகையொன்றை அவசரமாய் உதிரவிட்டாள்.

''ஒன்றுமில்லை... மது! நீ... மட்டும் நடக்கும் இந்த ஃபேஷன் ஷோவில் கலந்து கொண்டால் உன்னைத்தான் பெரிய அழகி என்று அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும். சாயம் அடித்து செயற்கை அலங்காரங்களுடன் தங்களை மினுக்க முயலும் அந்த போலிகளின் முன், உன் எளிமையான அலங்காரமும் இயற்கையான அழகும் முதல் பரிசை தட்டிச் செல்ல வைத்துவிடும்...''

இயல்பாக பேசுவது போலவே பேசி அவளுக்கு புகழாரம் சூட்டினான் அவன். ஆனால் அவள் அதையெல்லாம் ரசிக்கும் மனநிலையில் தான் இல்லையே!

ஏன் இவன் இப்படிக் கூறுவது கூட அவனுக்கு தன் மூலமாக மஞ்சரியிடம் நடக்க வேண்டிய காரியத்திற்கான ஐஸ்ஸாக கூட இருக்கலாமே!

அதனாலே அவன் சொன்னதற்கு எவ்வித பதிலும் கொடுக்காமல் மௌனித்தாள்.

ஆனால் அவனோ விடாது, ''என்ன மது? நான் சொல்வது சரிதானே?'' என விடாப்பிடியாய் கேட்கவும், ''எனக்கு இது போன்ற ஷோக்களில் எல்லாம் ஆர்வம் கிடையாது...'' என்று சமாளித்தாள்.

மேலும் பத்து நிமிட பிரயாணத்திற்கு பின் ஃபேஷன் விழா நடக்கும் மெரிடியன் ஹோட்டலை அடைந்து விட்டார்கள்.

முதல் தளப் பிரிவில் ஃபேஷன் ஷோவிற்கான நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

தளத்தில் நுழைந்ததும் அந்தப் பெரிய ஹாலின் ஓரமான இருக்கைகளையே தேடினான் மனோரஞ்சன். மஞ்சரிக்கு நாம் வந்திருப்பது தெரிய வேண்டாம். சர்ப்பரைஸாக இருக்கட்டும்... என விளக்கமும் அளித்து சற்று இருட்டாய் இருந்த பகுதியை தேர்ந்தெடுத்து அமர்ந்து கொண்டான்.

அந்த ஹாலில் ஒரு நூறுபேராவது அமர்ந்திருக்கக் கூடும். எல்லோருமே பணக்காரத்தனம் நிறைந்த கார் பெண்மணிகள். விதவிதமான பளீர் உடைகளும் கழுத்து வலித்துப் போகும் அளவுக்கு நகையலங்காரங்களும் அதை பறை சாற்றியது.

ஃபேஷன் விழாவும் தொடங்கி ஸ்டேஜில் வரிசையாய் வண்ண வண்ண நாகரீக உடைகளில் யுவதிகள் தோன்றி கேட்வாக் நடந்து காட்டி கைதட்டல்களை அள்ளிக் கொண்டிருந்தார்கள்.

நிகழ்ச்சி அறிவிப்பாளரின் குரலை உற்றுக் கேட்ட மனோ ரஞ்சன், ''பெயர் வரிசைப்படிதான் ஷோ நடக்கிறது. மஞ்சரி இனிமேல்தான் ஸ்டேஜில் வரப் போகிறாள். நாம் சரியான நேரத்திற்கு வந்து விட்டோம்...'' என்றான்.

'உடம்பே எரிவது போலான பெரும் எரிச்சல்... ஒன்று' என்ன என்பதை அன்றுதான் முழுமையாக உணர்ந்தாள் மதுமதி.

ஆயினும் மனோரஞ்சன் முன் அவளால் எதையும் காட்டிக் கொள்ள முடியவில்லை.

ஆனாலும் அவளுள் உள்ளுக்குள் பீறிடும் ஆத்திரத் தையும் அடக்க முடியவில்லை!

செருப்பு சரியில்லை என்பதற்காக காலையே வெட்டு வது போல் அல்லவா இவனது செய்கை இருக்கிறது.



அன்பு இல்ல புராஜெக்டிற்காக அந்த ஆணவம் பிடித்த, அவனுக்குப் பிடிக்காத மஞ்சரியை கட்டிக்கொண்டு தனது மொத்த குடும்ப வாழ்க்கையையும் பலி கொடுக்க துணிந்து விட்டானே!

என்ன ஒரு பைத்தியக்காரத்தனம்..!

சித்திரம் வாங்க கண்களையே விற்பது போல் அல்லவா இவனது செய்கை இருக்கிறது?

இதற்கு... அவள் துணை போகி, பிள்ளையார் சுழி யிட்டு மஞ்சரியிடம் பேசி எல்லாவற்றையும் நடத்தி வைக்க வேண்டுமாம்!

என்ன செய்ய? இதிலிருந்து தப்பிக்க முடியுமா? மனோ ரஞ்சனின் முடிவை, அவன் மனதை மாற்றி திசை திருப்ப முடியுமா? என அப்போதும் வழிகளைத் தேடினாள் மதுமதி.

அதன் விளைவாகவே, ''ஸார் ஒன்று சொன்னால் கோபப்பட மாட்டீர்களே?'' என்றாள் பேச்சை பவ்யமாய் ஆரம்பித்தவாறு.

''உன்னிடம் நான் கோபிப்பதா? எதுவானாலும் தைரிய மாகச் சொல் மது...'' என்றான் மனோரஞ்சன் பெரும் பரோபகாரி போல்.

''அதாவது ஸார்...'' என ஆரம்பித்தவள் கவனமாகவே வார்த்தைகளை கோர்த்தாள்... ''நீங்கள் அன்பு இல்ல புராஜெக்டிற்காக மஞ்சரியை உங்களுக்கு பிடிக்காமல் இருந்தும் கூட மணமுடிக்க தயாராகி விட்டீர்கள். ஆனால் பாருங்கள்... ஒருவேளை நீங்கள் அப்படி மணமுடித் தாலும் பின் உங்கள் தந்தை அன்பு இல்ல புராஜெக்டை அனுமதிக்க மனமில்லாமல் வேறு எதுவும் சாக்குகளைத்

தேடி உங்களுக்கு தடை போட்டால்... அது... அது... பெரும் ஆபத்தாகிவிடுமே ஸார்...?'' என்றாள் குரலில் முழுதும் அக்கறையைக் காட்டியவாறு.

ஆனால் அவள் சொன்ன விஷயத்திற்கு கொஞ்சம் கூட சிந்தித்துப் பார்க்காமல் பதிலாய் கடகடவென ஒரு சிரிப்பை உதிர்த்தவன், ''நீ கேட்பது புத்திசாலித்தனமான கேள்விதான். என் தந்தை அப்படி ஏதாவது காரணம் தேடி, நழுவக் கூடியவர்தான். ஆனால் என்ன... என் தாய் முன்னிலையில் மருமகளாகிவிடும் மஞ்சரியையும் வைத்துக் கொண்டு சத்தியம் வாங்காத குறையாய் அவரிடம் உறுதியை வாங்கி விடுவேனே...? அப்படி நான் வாங்கி விட்டால்... அவரால் சொன்ன வார்த்தையில் இருந்து பின் வாங்க முடியாது. நான் எப்படியும் ஜெயித்து விடுவேன்...'' என்றான் மார்தட்டாத குறையாய்.

மதுமதிக்கு அவனையும் அவன் சொன்ன விதத்தையும் பார்த்ததையும் எரிச்சல் எரிச்சலாய்த்தான் வந்தது.

'இவ்வளவு பெரிய முட்டாளாய் இருக்கிறானே? அன்பு இல்லம் ஆரம்பிப்பதற்கு தன் மொத்த வாழ்க்கையையே தொலைக்க நினைக்கும் இவன் சந்தேகமில்லாமல் கண்களை விற்று சித்திரம் வாங்கும் கேஸ்தான்! இவனைத் திருத்துவது முடியாத காரியம்தான்!'

சலிப்பு பொங்க அந்த முடிவிற்கு வந்தாள் மதுமதி.

அந்த எரிச்சலான சோர்வில் முகத்தை மடியில் புதைக்காத குறையாய் குனியவைத்துக் கொண்டாள் அவள்.

ஆனால் அவன் மனோரஞ்சனோ நேராய் ஃபேஷன் ஷோவின் ஸ்டேஜைப் பார்த்துக் கொண்டிருந்தவன் முகம் பிரகாசமாக சட்டென உற்சாகமாகிவிட்டான்.



''அதோ... பார்... அதோ... பார்...! மஞ்சரி...!'' ஸ்டேஜில் வந்து விட்டாள்...'' என்றான் உரத்த குரலில்.

மதுமதி நிமிர்ந்தாள்.

முட்டு வரையுமே உள்ள மினி ஸ்கர்ட்டும் இறுக்கமான மேல் பனியனுமாய் மஞ்சரி மேடையில் வண்ண விளக்குகளுக்கிடையே தோன்றி கேட் வாக்கை நடக்க ஆரம்பித்திருந்தாள்.

இதில் தலையில் ஜிகினா தொப்பி வேறு. கால்களை அகட்டி அவள் நடந்ததும் உடம்பில் நெளிவுகளையும் களைப்புகளையும் அவள் செய்த விதமும் நிச்சயம் ரஸிக்கும்படியாக இல்லை.

ஆனால் அதை மனோரஞ்சன் ரஸித்தான். அல்லது ரஸிப்பது போன்ற பாவனையைக் காட்டினான் என்று சொல்ல வேண்டும்.

''இவ்வளவு பெரிய விழாவில் இத்தனைபேர் முன் அவள் மேடையில் தோன்றுவதே ஒரு சிறப்புதான்!'' என தனக்கு தோன்றிய புகழாரத்தை சூட்டியபடி மதுமதியைப் பார்த்தான்.

அவன் பேச்சில் மறுபடியும் எரிச்சலானவள் அதற்கு அவனுக்கு ஒரு குட்டு வைப்பது போல், ''ஆனால் மற்ற போட்டியாளர்கள் முன் மஞ்சரி வெற்றி பெறுவது முதல் பரிசை பெறுவது கடினம் என்றே தோன்றுகிறது ஸார்...'' என்றாள்.

ஆனால் அதற்கும் மறுக்காமல் தலையசைத்தான் மனோரஞ்சன்.

''நீ சொல்வது உண்மைதான். முதல் பரிசு மஞ்சரிக்கு கிடைக்காது. அவள் அதற்கு ஆசைப்படுவதும் கிடையாது. அவளைப் பொறுத்தவரையில் ஃபேஷன் ஷோவில் கலந்து கொள்ள வேண்டும். அப்படி ஒரு மாடலிங் கிறுக்கு அவள்...'' என அவன் முடிக்க... 'மாடலிங் கிறுக்கு அல்ல... சரியான கிறுக்கு' என உள்ளுக்குள் சொல்லி அமைதியானாள் மதுமதி.

அதற்குப் பின் ஒரு பத்து நிமிடங்களில் ஃபேஷன் ஷோவே முடிந்துவிட்டது.

எல்லோரும் கலைந்து போக ஆரம்பித்தனர்.

மனோரஞ்சன் மதுமதியை கூட்டிக்கொண்டு தளத்தின் பிரதான ஒப்பனை அறைப் பக்கம் போனான்.

''மது, இங்கு உள்ள விசிட்டர் ஹாலில் அமர்ந்து மஞ்சரியை அழைத்து நான் சொன்ன விஷயத்தை எப்படியும் பேசிவிடு. சரியாக ஒரு பத்து நிமிடத்தில் நான் திரும்பவும் இங்கு வந்து மஞ்சரிக்கு இன்ப அதிர்ச்சிகொடுத்து விஷயத்தை உறுதிசெய்து விடுகிறேன்...'' என தான் போட்டிருக்கும் சஸ்பென்ஸ் பிளானை விளக்கினான் மனோரஞ்சன்.

மதுமதியால் அவன் சொன்னதற்கு பலியாடுபோல தலையாட்டத்தான் முடிந்தது.

மனோரஞ்சன் ஊக்குவிப்பது போல் அவள் தோள்களை தட்டி, ''உன் பேச்சு வன்மைபற்றி எனக்குத் தெரியும். அசத்திவிடு...!'' என வேறு சொல்லி அவளது மொத்த எரிச்சலையும் குத்தகைக்கு எடுத்துக்கொண்டான்.

அவன் சென்றதும் அந்த விசிட்டர் ஹாலில் மஞ்சரியை சந்திக்க காத்திருப்பதாய் பணியாள் ஒருவரிடம் தகவல்



சொல்லி அனுப்பிவிட்டு இருக்கையில் காத்திருந்தாள்.

இன்னும் சிறிது நொடிகளில் மஞ்சரி வந்து விடுவாள்? அவளிடம் என்ன பேச?

அன்று அலுவலகத்தில் அவளுடன் நடந்த முதல் சந்திப்பு, திமிறாய் பேசிய மஞ்சரியை சட்டை செய்யாமல் அவள் கொடுத்த நோஸ்கட் இதையெல்லாம் மஞ்சரி மறந்திருப்பாளா?

மேலும் அவளது கணத்த உருவமும் ஆங்காரமான குணமும்... இவளைப் போய் கட்டிக்கொள்ள தேர்ந்து எடுத்துவிட்டானே இந்த மனோரஞ்சன்?

அன்பு இல்ல புராஜெக்ட் ஆரம்பிப்பதற்கு இதைவிட வேறு வழி இல்லாமலா போய்விடும். கண்டிப்பாய் இருக்கும். அதை இந்த மனோரஞ்சன் உணரவோ... இன்னும் கொஞ்சம் யோசிக்கவோ... செய்யாமல் இருந்து விட்டானே?

மேலும் இந்த மஞ்சரியை கட்டிக் கொண்டால் அவனால் நிம்மதியாய் இருக்க முடியுமா? இவளது அகங்கார ஆட்டம் பிடிவாதம் எல்லாம் அவனது நேரான குணத்திற்கு முரண்பாடானது ஆயிற்றே!

அவனது சந்தோஷம், குடும்ப வாழ்க்கை... எல்லாம் அவன் எடுத்திருக்கும் இந்த தவறான முடிவால் மொத்தமாய் சீர்குலைந்து விடுமே?

அப்படி குடும்ப வாழ்க்கை நிம்மதியிழந்து சீர்குலைந்து விட்டால் பின் எப்படி அவனால் இந்த இல்ல புராஜெக்ட்டை வெற்றிகரமாய் நடத்தி மற்றவர்களுக்கு உதவ முடியும்?

பின் மனோரஞ்சன் வாழ்க்கையில் மட்டுமல்ல தான் கொண்டிருக்கும் லட்சியத்திலும் தோல்வி அடைந்து விடுவானே?

அப்படி ஒன்று நடந்துவிட்டால் அதை அவளாலும் தாங்கிக் கொள்ள முடியாதே!

பின்... என்னதான் இதற்கு செய்ய? எப்படி இதை தடுக்க?

யோசித்தவளுக்கு திடும்மென அந்த எண்ணம் பொறியாய் தோன்றியது.

பேசாமல் மஞ்சரியிடம் மனோரஞ்சன் சொன்ன விஷயத்தை சொல்வதற்குப் பதில் பொய் ஒன்றை சொல்லி விடலாமா?

விபரீதமாய் திட்டமிட ஆரம்பித்தாள் மதுமதி...

# 7

மதுமதி லேசாகத்தான் அந்த குறுக்கு வழியை நினைத்தாள். ஆனால் ஒரு பத்து பதினைந்து வினாடிகளில் அது விறுவிறுவென பூதாகரமாய் மனதுள் வளர்ந்து அவளையே சிந்திக்க விடாமல் திணறடித்தது.

இப்படி ஏதாவது ஒன்றைச் செய்தால்தான் மனோரஞ்சனை ஒரு படுகுழியில் விழுவதில் இருந்து காப்பாற்ற முடியும் என்றே ஒரு நினைப்பு ஓடி அவளது யோசனைக்கு வலுக்கொடுத்தது.



சரி... மனோரஞ்சன் அவன் முடிவுப்படி எப்படி போனால் என்ன அவனைக் காப்பாற்ற அவள் யார்?

உறவுக்காரியா...? இல்லை சொந்தக்காரியா? இல்லையே...! அவனிடம் வேலை பார்ப்பவள் தானே? அவளுக்கென்ன அப்படி அக்கறை?

அவன் கல்யாணம் செய்ய தேர்ந்தெடுத்த பெண்ணை வேண்டாம் என அவள் நினைக்கும் அளவுக்கு? இதில் உள்ளூர இன்னொரு ஆசை, அர்த்தம் பொதிந்திருக்கிறது தானே?

துளிர்விட்ட அந்த நினைப்பை அப்படியே விரட்டினாள் அவள்.

இப்போது அது எல்லாவற்றையும் விட மனோரஞ்சனை இந்த இக்கட்டில் இருந்து காப்பாற்றுவதுதான் முக்கியம்.

மேலும் மனோரஞ்சன் அவளைப் பொறுத்தவரையில் ஒரு நல்லவன். மற்றவர்களுக்கு உதவ நினைக்கிற நல்ல முதலாளி. அதனால் அவனுக்கு ஒரு ஆபத்து என்றால் அதை அவளால் சும்மாவா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. காப்பாற்றியாக வேண்டும்.

அவளும் காப்பாற்ற நினைப்பாள்.

மதுமதி திடீரென எழுந்து தன்னுள் வலுப்பெற்ற அந்த சிந்தனையில் உறுதியாகிவிட்டாள். அதனால் மனோரஞ்சனை காப்பாற்ற, மஞ்சரியிடம் அவன் சொல்லச்சொன்ன, விஷயத்தை சொல்லாமல் மறைத்து விடுவது என்ற முடிவிற்கு வந்து விட்டாள்!

இதோ... ஒப்பனை அறையிலிருந்து அதே ஜிகினா கோலத்தில் மினுக்கி குலுக்கி நடந்தபடி மஞ்சரி

வெளிப்பட்டு அவளை நோக்கி வருகிறாள்... வந்துவிட்டாள்!

இருக்கையில் தனக்காக மதுமதி காத்திருப்பதை கண்டு அவளது கறுத்தமுகம் மேலும் கறுத்தது.

அதே வேகத்தில் அவள் பக்கத்தில் வந்தவள், எடுத்த எடுப்பிலே, ''ஏய்... நீ... நீ... மனோ ஆபீஸில்... செகரட்டரியாய் குப்பை கொட்டியவள்தானே? இங்கு என்ன செய்கிறாய்? நீயா... என்னை பார்க்க வரும்படி கூப்பிட்டது...?'' என்றாள் அதிகாரமாய்.

மதுமதி மெல்ல தலையாட்டவும் சினம் பொங்கியவளாய் முறைத்து, ''உனக்கு புத்தி பிசகிவிட்டதா? காத்திருந்து பார்ப்பதை விட்டுவிட்டு என்னை அழைத்து வரும்படி பணியாளிடம் சொல்லியிருக்கிறாயாமே? என்ன ஒரு துணிச்சல் உனக்கு?''

அவள் மூக்கு நுனி கோபத்தையும் ஆங்காரம் தெறித்த பேச்சிலிருந்த அவமானத்தையும்... திகைப்பாகவே பார்த்த மதுமதி... தன்னை சமாளித்துக்கொண்டு, ''ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்...'' என்றாள்.

''முக்கியமான விஷயமா? நீயா...? என்ன உளறுகிறாய்?'' அவள் கேள்வியின் அர்த்தத்தை உணர்ந்தது போல, ''விஷயம் பேச வேண்டியது நான் இல்லை, மனோ ரஞ்சன் ஸார்... அவர்கள்தான் சொல்லி அனுப்பி இருக்கிறார்கள்...! அவ்வளவுதான்!''

''என்ன மனோவா? மனோ அனுப்பினாரா...?'' என ஆயிரம் ஓல்ட்டில் மஞ்சரியின் முகம் மலர்ந்து ஆவலானதை எரிச்சலாகவே பார்த்தாள் மதுமதி.



''ஆமாம்...'' என்றாள் மறுபடியும் குரலில் எவ்வித சுரத்தில்லாமல்.

''சொல்லு... என்ன விஷயம்? அதுவும் உன்னிடம் போய் சொல்லி அனுப்பும் அளவுக்கு?'' என மஞ்சரி கேட்டபடி முகம் சுழித்தபோது மதுமதியினுள்ளும் கோபம் மெல்ல துளிர்விட்டது.

''அது... அது...''

வேண்டுமென்றே சொல்லத் தயங்குவது போல் தொடங்கிவிட்டு நிறுத்தினாள்.

மஞ்சரியிடம் முகத்தில் ஆவலைவிட வேகம் கூடியது.

''ம்ம்... சீக்கிரமாகச்... சொல்...''

''அது...''

மறுபடியும் மதுமதி இழுத்தாள்.

மஞ்சரியின் வேகம் கோபமாகியது.

''ஏய்... உன்னைத்தான் சொல்லு... என்ன சொன்னார்?'' என்றாள் குரலை உயர்த்தியபடி.

''அது... அது... உங்களை... அவருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லையாம். உங்களை மனைவி ஆக்கிக் கொள்ளும் நினைப்பு எல்லாம் அவருக்குத் துளியும் இல்லையாம். நீங்கள் வெட்கமில்லாமல் அவர் பின்னாலேயே சுற்றி வந்து அவரை தொந்தரவு செய்வது ரொம்ப எரிச்சலாக இருக்கிறதாம். அதனால்... நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போல இதையெல்லாம் நீங்கள் புரிந்து கொண்டு அவரை விட்டு விலக வேண்டுமாம். வீண் எண்ணங்களை மனசில் வளர்த்துக் கொண்டு அலைய வேண்டாமாம். இது அவர் உங்களுக்கு விடும் எச்சரிக்கையாம்...''

மடை திறந்தாற்போல் கடகடவென கொட்டித் தீர்த்துவிட்டாள் மதுமதி. எப்படித்தான் அந்த வேகமும் பொய்மைக்கு ஏற்றார் போல் கோர்வையாய் வார்த்தைகளும் வந்து விழுந்ததோ அவளுக்கே தெரியவில்லை!

ஆனால் அவள் நினைத்த மாதிரியே அதைக் கேட்ட மஞ்சரியின் முகம் கோணலாகி ஆத்திரத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''எனக்கா எச்சரிக்கை? அதுவும் இப்படி உன் மூலமாவா...? தூ...'' என காறித்துப்பாத குறையாய் ஆவேசமானவள், அதே வேகத்தில் பொறுமையிழந்தவளாய் கைகளை உயர்த்தி மதுமதியின் கன்னத்தில் ஓங்கி அறையவும் செய்து விட்டாள்.

ஒரு கணம் மதுமதி இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஆ... வென அலறலுடன் அடியை வாங்கியவள் என்ன தைரியம் இவளுக்கு நம்மை அடித்திருக்கிறாள்? என்ற சீறலுடன் கண்களால் அவளை எரித்து நிற்க - அங்கு அந்தச் சூழ்நிலையில்... பேசிக்கொண்டிரு. சர்ப்பரைஸாக வந்து கலந்து கொள்கிறேன்' என்று சொல்லிய மனோரஞ்சன் அப்போது அங்கு நுழைந்து வரவும் சரியாயிருந்தது.

நுழைந்தவன் கண்களில் மஞ்சரி மதுமதியின் கன்னத்தில் ஓங்கி அடிப்பதும் அவள் மதுமதி கன்னத்தை பிடித்தபடி செய்வதறியாமல் திகைத்து நிற்பதுமே காட்சியாய் தெரிய... ஒரே நொடியில் சினம் தலைக்கேற வெகுண்டு விட்டான் அவன்!

அவன் மனதில், தான் சொல்லிய விஷயத்தை மதுமதி மஞ்சரியிடம் சொல்லப் போயிருக்கிறாள்... இந்த அகம்பாவ ஆணவக்கார மஞ்சரி கொஞ்சமும் பொறுமை



யில்லாமல் அவள் வேலை பார்க்கும் ஒரு பணியாள் என்ற அலட்சியத்தோடு தன் பணத்திமிரை காட்டும் வண்ணம் கை நீட்டி அடித்து விட்டாள் என்றுதான் பெரும் ஆத்திரமாய் மனதில் படர்ந்து சிந்தையில் உரைத்தது.

அதனாலே வேக வேகமாய் ஆவேசத்துடன் அவர்கள் பக்கம் வந்தவன் கோபம் கொப்பளிக்க மஞ்சரி பக்கம் திரும்பி, ''முட்டாள்!'' என்றான் குரல் உயர மிரட்டும் தொனியில்.

திடீரென அவன் வந்ததையும் வந்தவன் இப்படிச் சீறலாய் தன்னை முட்டாள் என்று எல்லோர் முன்னிலையிலும் விளிப்பதைக்கண்டு மஞ்சரி கொண்டிருந்த ஆவேசம் மறுபடியும் தலைக்கேற, ''முட்டாள் நான் இல்லை! நீங்கள்... நீங்கள்... தான் முட்டாள்! உங்கள் செகரட்டரி முட்டாள். ஏன்... உங்கள் குடும்பமே முட்டாள் தான்...! முட்டாள் குடும்பம்தான்...!'' என்றாள் குரலின் உச்சஸ்தாயியில்.

''என்னடி சொன்னாய்?'' என்றபடி மனோரஞ்சன் பொறுமையிழந்தவன் அதே வேகத்தில் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் மஞ்சரியின் செவிட்டில் தன் கைகளை பதித்தான்.

# 8

மதுமதி ''குறுக்கு வழி'' ஒன்றை தேர்ந்தெடுத்து அதை செயல்படுத்த பாதிதான் முயற்சி செய்தாள்

அல்லது அவ்வளவுதான் அவளால் முயற்சி செய்ய முடிந்தது எனலாம்.

ஆனால் நடந்தது வேறு. காக்கா உட்கார பனம் பழம் விழுந்த கதையாய் அந்த ரூமிற்குள் நுழைந்த மனோ ரஞ்சன் மஞ்சரி மதுமதியை செவிட்டில் அடிக்கும் காட்சியைப் பார்த்து ஒரேயடியாய் மாறிவிட்டான்.

பாதிக்கிணறைத் தாண்டியவாறு என்ன செய்ய என்று விழித்துக் கொண்டிருந்தவளுக்கு மீதிக் கிணறைத் தாண்ட அவனே வழிபோட்டும் கொடுத்துவிட்டான்.

மனோரஞ்சனுக்கு மஞ்சரி மீது என்றுமே நல்ல அபிப்ராயம் இருந்திராத காரணத்தினால் மஞ்சரி மதுமதியை அடிக்கும் காட்சியைப் பார்த்ததும் அவள் அகம்பாவத்தையும் திமிரையும் கொஞ்சமும் மாற்றிக் கொள்ளவில்லை. இன்னும் பணக்கார கொழுப்புடன் தான் நடந்து கொள்கிறாள் என முடிவு செய்து விட்டான்.

அதுவும் தான் ஒரு செய்தியை சொல்லி தூதுபோல் மதுமதியை அனுப்பியது. அப்படி தான் தூது அனுப்பிய மதுமதியை கொஞ்சமும் சட்டைசெய்யாமல் மஞ்சரி அடிந்ததை அவன் அவள் தன்னை அடித்ததுபோலவே அவமானமாய் உணர்ந்தான்.

அதனாலே அந்த ஆத்திரத்திலேயே கொஞ்சமும் யோசிக்காமல் மஞ்சரியையும் திருப்பி செவிட்டில் அறைந்தான்!

ஆனால்... அவனது இந்தச் செயலை மதுமதி கொஞ்ச மும் எதிர்பார்க்கவில்லை. அதைவிட மஞ்சரி அதை துளியும் எதிர்பார்க்கவில்லை போலும்!



அவன் அடித்ததும் அதிர்ச்சியாகி அப்படியே ஓரிரு நிமிடம் சிலை போல நின்று விட்டாள்.

என்ன... நம்மை... நம்மை... அடித்துவிட்டானா..., அதுவும் மனோரஞ்சன்? நம்பமுடியாமல் அவளது பெரிய விழிகளை விரித்து விரித்து பார்த்தவள் அடித்த தோடு மட்டுமில்லாமல் தன்னை எரிப்பது போல் பார்த்த அவனது முகத்தைக் கண்டு நடப்பது எல்லாம் நிஜம் தான் என்பதை உணர்ந்து அவளும் எரிமலை ஆகிவிட் டாள்.

அதிலும் மதுமதியின் முன்னிலையில் மனோரஞ்சன் அவளை அடித்தது பெரும் அவமானத்தை ஏற்படுத்திய தாய் ஆத்திரமாய் உணர்ந்து திகுதிகுவென கோபம் தலைக்கேறியவளாய் தகதகக்கத்தான் செய்தாள்.

அதனாலே, ''என்ன தைரியம் உனக்கு. என்னையா கை நீட்டி அடிக்கிறாய்?'' என்றாள் மனோரஞ்சனை ஒருமையில் விளித்து முறைத்தவாறு.

''நான் அடித்தது உன்னையல்ல... உன் ஆணவத்தை... உன் பணத்திமிரை...! சரியான அகம்பாவக்காரி...! நீயெல்லாம் ஒரு பெண்ணா...? தூ...!''

அவன் காறி உமிழாத குறையாய் சொல்ல பதிலுக்கு மஞ்சரியும் வரிந்து கட்டிக்கொண்டு சீறலுடன் ஆரம் பிக்க பொறுமையிழந்தான் அவன்.

''ஏய்...! வாயைத்திறந்து இன்னுமொரு வார்த்தை பேசுவாயானால் தொலைத்து விடுவேன் தொலைத்து! வாயை மூடு!'' என கைகளை உயர்த்தி மஞ்சரியை எச் சரித்தவன் மறுகையினால் அதிர்ச்சியில் உறைந்திருந்த மதுமதியின் கரங்களைப் பற்றி தரதரவென இழுத்துக் கொண்டு அங்கிருந்து அகல ஆரம்பித்தான்.

மஞ்சரியும் அவமானமாய் அங்கு நிற்காமல் விருட்டென்று பின்னோக்கி இன்னொரு பாதையில் வேகமாய் நடந்து மறைந்தாள்.

மனோரஞ்சன் ஹாலைத் தாண்டிய லிப்ட் ஓர படிக்கட்டு பின்புற பகுதிக்குச் சென்று நின்றான். மதுமதியை கைத்தாங்கலாய் அவனது பிடியிலே வைத்து நிறுத்தினான்.

ஆள் நடமாட்டமில்லாத ஓரமான பகுதி அது.

அவளை கைப்பிடிக்குள்ளே வைத்து முகம் நிமிர்த்திப் பார்த்தான். அவள் கன்னங்களை தன் விரல்களால் நிரடினான். ''பாவி! என்னமாய் அடித்துவிட்டாள். கன்னமே சிவந்து விட்டதே...!'' என வாய்விட்டுச் சொன்னவன்... அத்தோடு அதே வேகத்தில் அவளுக்கு ஆறுதல் அளிப்பது போல் அவளை தன் நெஞ்சோடு அணைத்தும் கொண்டான்.

மதுமதி இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை!

அவளுக்கு நடப்பதை எல்லாம் பார்த்து திகைப்புக்கு மேல் திகைப்பு!

இன்ப அதிர்ச்சி என்று சொல்வார்களே... அதுபோல் ஒரேயடியான இன்ப அதிர்ச்சி!

அவள் மஞ்சரியிடம் சொன்னது வடிகட்டிய பொய் அதனால் அவள் ஆத்திரமுற்று அடித்தது உண்மை!

ஆனால் அவள் மஞ்சரி தன்னை அடிப்பதை மட்டும் பார்த்த மனோரஞ்சன் இப்படி அடியோடு மாறிவிட்டது. மஞ்சரியை பன்மடங்கு வெறுத்து விட்டது... பெரும் அதிசயம்தானே!



அவள் என்ன நினைத்து பிளான் செய்தாளோ அதை வெகு எளிதாய் அவனே முன் வந்து நடத்திக் கொடுத்து விட்டானே?

இது அவனது அறியாமையா? இல்லை இவன் நல்ல மனதுக்காக கடவுள் நடத்திய செயல்பாடா?

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்தாள்.

ஆனால் நடந்ததை ஒரேயடியாய் மறைக்கக்கூடாது என்ற குற்ற உணர்ச்சியில், ''ஸார்.. நீங்கள் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டீர்கள். நான் மஞ்சரியிடம் முழுவதுமாய் விஷயத்தை...'' என்று அவள் ஆரம்பிக்க தடுத்தான் அவன்.

''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம் மது. எல்லாவற்றையும் நான் என் கண்ணால் பார்த்து விட்டேனே...? அந்த மஞ்சரி கொஞ்சமும் மாறவில்லை. அவளிடம் பார்த்த அகம்பாவம் திமிர்த்தனம் அப்படியே இருக்கிறது. அவள் வீட்டிலும் இப்படித்தானாம்! வேலை செய்யும் பணியாட்களை எல்லாம் இப்படி செவிட்டில் அடிப்பாளாம். இப்படிப் பட்டவளை... இப்படியொரு அகங்காரம் பிடித்தவளை நான் கட்டிக்கொள்ளத்தான் முடியுமா? என்னவொரு தவறான முடிவு எடுக்க இருந்தேன்? நல்ல வேளை உன் மூலமாக தப்பித்துக்கொண்டேன்...''

அவன் பாட்டுக்குச் சொல்லிக்கொண்டு போக அவளுக்கு தலை சுற்றாத குறைதான்...

அவன் அவளிடம் மஞ்சரியிடம் சொல்லச் சொன்னது என்ன? அவள் மஞ்சரியிடம் அதை அப்படியே மாற்றி சொன்னதுதான் என்ன? கடைசியில் எல்லாவற்றுக்கும்

சேர்த்து அவளுக்கு பாராட்டுரை வேறு வாசிக்க ஆரம்பித்து விட்டானே!

அவன் மறுபடியும் அவள் கன்னத்தில் தனது விரல்களால் வருடி, "ரொம்பவும் வலிக்கிறதா மது?" என்று வாஞ்சையாய் கேட்க அவள் ஆடித்தான் போனாள்.

"இல்லை... இல்லை... ஸார்... அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை ஸார்..." என சமாளித்தாள். ஆனால் அவன் விடுவதாயில்லை.

"நான் ஒரு மடையன், செவிட்டில் அடித்தது.. என்ன... வலிக்காமல் இருக்குமா? சே! என்னமாய் சட்டென அடித்து விட்டாள். எனக்காக பேசப்போய் அடிவேறு வாங்கி விட்டாயே மது?" என மருகியவன் அதே வேகத்தில் அவளை மறுபடியும் தன் நெஞ்சில் சாய்த்து ஆறுதலாய் அணைத்தான்.

அவளுக்கு ஒரே கணத்தில் பழம் நழுவி பாலில் விழுந்து பின் வாயிலே விழுவது போல் இருந்தது.

அவன் மஞ்சரி செவிட்டில் அடித்ததற்காக, ஆறுதல் செய்வதற்காக, அவளை அப்படி அணைத்தானோ என்னவோ... ஆனால் அவளால் சிறிதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

இது தவறு. நாம் குறுக்கு வழியில், பொய் ஒன்றைச் சொல்லி ஆதாயம் தேட முயற்சிக்கிறோம் என்பது புத்தியில் நன்கு உணர்ந்தாலும் அதையெல்லாம் உதறித்தள்ளியவளாய் அவனது நெஞ்சினில் பொதிந்தாள் அவள்.

ஆறுதலாய் அணைத்துப் பிடித்தவனை காதலனாய் மனது நினைத்து நம்ப ஆரம்பித்துவிட்டதை திடுக்கிடலாகவும் உணர்ந்தாள்!



# 9

அதற்குப் பின் அன்று காரில் அவளை ஏற்றி அவள் வீடு வரும் வரை ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான் மனோரஞ்சன்.

ஒரு கையில் ஸ்டியரிங்கைப் பிடித்தபடி மற்றொரு கையினால் அவளது பிஞ்சுவிரல்களை ஆறுதலாய் கோர்த்துப் பிடித்துக் கொண்டு பேசிக்கொண்டே வந்தான்.

'ஐயோ! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை ஸார். மஞ்சரி ஆத்திரப்பட்டதற்கு சரியான காரணம் இருக்கிறது. நான் அவளிடம் சொன்ன விஷயமே வேறு...' என்றெல்லாம் உள்ளுக்குள் நியாயம் சொல்லி பேசத் துடித்த மனதை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

தனது கரங்களோடு கோர்த்துப் பிடித்திருந்த அவனது விரல்களின் ஸ்பரிசம் அதனால் மனதிலும் உடம்பிலும் ஓடிய அந்த இனிமை. இதுநாள் வரை இப்படியொரு சந்தர்ப்பம் நிலைமை வராதா என உள்ளுக்குள் ஏங்கிய தவிப்பு... எல்லாம்... அவளை திசை திருப்பி... சரியோ... தவறோ.... இனி... இந்த மனோரஞ்சன் நினைப்பது போலவே அவனை நினைப்புப்படியே... நடந்து இருந்து விட்டால் என அவளது சிந்தனையை உந்தித்தள்ளியது.

அதனால் மஞ்சரியிடம் தான் சொன்ன பொய்யை சொல்லத் துடித்த மனதை அடியோடு நசுக்கி அந்த எண்ணத்தையே கைவிட்டாள் அவள்.

எல்லாவற்றுக்கும் மேல் நடந்த அந்த ஐந்து நிமிடச் சண்டையை நினைத்துப் பார்த்தவளுக்கு... மஞ்சரியை செவிட்டில் அடித்து ரஞ்சன் விஷயத்தை பெரிசுபடுத்தி விட்ட படியால் இருவரும் கிட்டத்தட்ட எலியும் பூனையும் போல் பகையாளி ஆகிவிட்டார்கள் வாழ்க்கையில் இணைய முடியாது. இணையப்போவதில்லை... என்பதும் தெள்ளத் தெளிவாய் புரிந்து போயிற்று.

ஆக... அவள் நினைத்தது போல் அவள் பிளான் செய்தது போல் எல்லாமே நடந்து விட்டது.

மனோரஞ்சனையும் மஞ்சரியையும் பிரித்தாயிற்று. அவர்களுக்கு நடக்க இருந்த கல்யாணம் பற்றிய பேச்சையும் முளையிலே கிள்ளியாயிற்று!

ஆனால்...?

விஷயம் அத்தோடு நிற்கவில்லையே!

மனோரஞ்சன் மஞ்சரி அடித்து விட்ட கோபத்தில் வெகுண்டவன் அப்படியே மஞ்சரியை மணக்க இருந்த தனது திட்டத்தையும் மறந்து விட்டானே!

அந்த ஒரே சம்பவத்தை வைத்து மனம் முழுவதும் வெறுப்பு தோன்ற இவள் மஞ்சரி தனக்கு கொஞ்சமும் ஒத்து வரமாட்டாள் என்று முடிவெடுத்தும் விட்டானே!

மேலும் மஞ்சரி மதுமதி மேல் காட்டிய கோபத்தில் வெகுண்டு அதற்கு மாறாய் மதுமதி மேல் பாசமழையை ஆறுதலாய் பொழிய ஆரம்பித்து விட்டானே!

நடந்த எல்லாவற்றுக்கும் சிகரம் வைப்பது போல் மனோரஞ்சன் மதுமதியின் வீட்டோரமாய் காரை நிறுத்தியவன் அவனிடம் விடைபெற்று இறங்கப் போனவளை இழுத்து தோளோடு அணைத்து இதமாய் நெற்றியில்



ஒரு அன்பு முத்தம் கொடுத்து. "நடந்த எல்லாவற்றையும் எனக்காக பொறுத்துக் கொள் கண்மணி..." என்று சொன்ன போது முகம் முழுவதும் சிவக்க கிறுகிறுத்துத்தான் போனாள் அவள்.

அந்த வெட்கத்தில் ஹேண்ட் பேக்குடன் இறங்கியவள் திரும்பிப் பார்க்காமல் வீட்டினுள் ஓடியும் விட்டாள்.

அவள் அப்படி வெட்கப்பட்டு போவதை ரஸித்துச் சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்த மனோரஞ்சனும் மனதில் புதுப்புது எண்ணங்கள் தாக்கியவனாய் யோசனையோடு காரை கிளப்பினான்.

அன்று இரவு மதுமதிக்கு தூக்கம் வராதது கூட பெரிதில்லை. குறுக்கும் நெடுக்குமாய் கைகளை வீசியபடி ரொம்ப நேரமாய் நடந்து கொண்டிருந்தாள். நடந்த விஷயங்களை எல்லாம் நினைத்து நினைத்துப் பார்த்து... பைத்தியம் பிடிக்காத குறைதான்!

ஆனாலும் குற்றமனது குறுகுறுக்கும் என்பது போல மஞ்சரியிடம் தான் சொன்ன வடிகட்டிய பொய் எவ்வளவு பெரிய பாதகச் செயல் என உறுத்தல் அவளுள் தொடர்ந்தது.

அதற்கும் என்ன ஆனாலும் இந்த மஞ்சரி தனது அகம்பாவகுணத்தால் மனோரஞ்சனுக்கு கொஞ்சமும் பொருத்தமில்லாதவள்தான். அவளை மட்டும் கட்டிக் கொண்டால் அவனது மொத்த வாழ்க்கையும் பாழ்பட்டு விடுமே? ஆக அவன் மனோரஞ்சனை பெரும் ஆபத்தில் இருந்து காப்பாற்றத்தான் அப்படியொரு பொய் சொன்னாள். பொய் சொல்லியிருக்கிறாள். அவ்வளவு தான். அவ்வளவுதானே?

இதில் என்ன தவறு இருக்கிறது?

இடமறிந்து, தேவைப்படும் இடத்தில் பொய் சொல்ல லாம் என வள்ளுவரே கூறியிருக்கிறாரே?

அதைத்தானே அவள் செய்தாள்!

மனோரஞ்சன் சம்பளம் கொடுக்கும் அவளது முத லாளி. அவனுக்கு வந்த ஆபத்தை அவளால் மட்டுமே தடுக்க முடியும் என்ற நிலை வந்தபோது அவள் குறுக் கிட்டு தடுத்திருக்கிறாள்.

இதற்கு ஏன் குறுகுறுப்பு கொள்ள வேண்டும்? நடந்தது எல்லாம் சரிதான். அவள் நினைத்தபடியே நடந்து மஞ்சரியும் மனோரஞ்சனும் பிரிந்து விட்டார்கள்.

அதுபோதும்!

ஒருவாறாக மனம் சமாதானமாகி அன்று தூங்கியும் போனாள்.

மறுநாள் அலுவலகத்தில் வழக்கம் போல் கேபின் கதவைத்திறந்து ''குட்மார்னிங்!'' சொல்லப்போனவளை, ''உள்ளே வந்து உட்கார்!'' என்றான் மனோரஞ்சன்.

அவள் உட்கார்ந்ததும், ''உன்னை மணந்து கொள்ள விரும்புகிறேன். உனக்கு சம்மதமா?'' என்றான்.

## 10



மனோரஞ்சன் நிதானமாய்க் கேட்டான்.



மதுமதியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''ஸார்... என்ன... என்ன... சொல்கிறீர்கள்?'' என்றாள் நம்பமுடியாத அதிர்ச்சியுடன்.

மனோரஞ்சன் தோள்களை குலுக்கி நீளமான பெரு மூச்சொன்றை விடுவித்தான்.

''மது நான் உன்னிடம் கேட்பது உண்மையான தெளிவான மனநிலையோடுதான். என்னை நீ மணந்து கொள்வாயா? உனக்கு அதில் சம்மதம் இருக்கிறதா?'' என்றான்.

அவளால் திகைப்பில் இருந்து விடுபட முடியவில்லை.

''ஸார், என்னையா... என்னிடமா கேட்கிறீர்கள்?'' என்றாள் தனது அதிர்ச்சி முழுவதையும் குரலில் காட்டி.

அவன் கொண்டிருந்த புன்முறுவலை பெரிதாக்கிய படி, ''ம்ம்... உன்னிடம்தான்! அதாவது எனது... பி.ஏ.கம்... செகரட்டரியான செல்வி மதுமதி எம்.காம். அவர்களிடம் தான்... இப்ப என்னை கல்யாணம் பண்ணிக்கொள் கிறாயா? என்ற கேள்வியைக் கேட்கிறேன்... போதுமா?'' என்றான் சிரிப்பை நிறுத்தாமல்.

அவளுள் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தன. மின்மினிகள் கண் சிமிட்டின. ஆனாலும் உள்ளுக்குள் எழுந்த சந் தோஷத் துள்ளல்களை கொஞ்சமும் வெளிக்காட்டாமல் அடக்கியவள், ''எதனால் ஸார் இப்படி ஒரு முடிவு? என்னிடம் இப்படி ஒரு கேள்வி?'' என்றாள் எவ்வித உணர்வும் தெரியாத குரலில்.

அவள் கேட்டதற்கு மனோரஞ்சன் உடன் பதில் சொல்லவில்லை.

அவன் முகம் இறுகிப் போயிற்று. கண்களை மூடி ஆழ்ந்த மூச்சுக்களை இழுத்துவிட்டு அவளைப் பார்த்தான்.

அவன் முகத்தில் இதுவரை அவள் கண்டிராத வேதனை படர்ந்திருந்தது. நடந்த விஷயங்கள் அவனை ரொம்பவும் காயப்படுத்திருப்பது புரிந்தது.

பின் இருக்காதா? தந்தையிடம் ஒருபுறம் சண்டை என்றால்? மறுபுறம் முறைப்பெண் மஞ்சரியிடம் அதை விட பெரிய ரகளை? பின் வீட்டில் குடும்பத்தில் எப்படி நிம்மதி வரும்? எப்படி சந்தோஷம் பொங்கும்?

அவன் வேதனைப்படுவதைக் கண்டு சகிப்பது அவளுக்கே சகிக்க முடியாத துன்பமாக இருந்தது.

அதனாலே, ''விஷயத்தைச் சொல்ல கஷ்டமாக இருந்தால் வேண்டாம்... விட்டு விடுங்கள் ஸார்...'' என்றாள் குரலில் பரிவுகாட்டி.

ஆனால் மனோரஞ்சன் தன்னை உறுதிபடுத்தி கொள்வது உறுதியானது போல் தலைநிமிர்ந்து கொண்டு... அவள் கூற்றை மறுப்பது போல் அசைக்கவும் செய்தான்.

''ம்கூம்...! இதை உன்னிடம் சொல்லியாக வேண்டும். கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டியதும் நீதான்!...'' என புருவம் உயர்த்தியவன் விரிவாய் விவரிக்க ஆரம்பித்தான்.

''மது, மஞ்சரியை நான் பகைத்துக் கொண்டதால் என்னுடைய அன்பு இல்ல புராஜெக்ட் மேலும் சிக்கலாகப் போய் விட்டது. அவள் இதற்குள் என் தந்தையிடம் போய் எல்லா விஷயத்தையும் சொல்லியிருப்பாள்.



அவரும் நடந்தவைகளைக் கேட்டு மிகவும் குஷியாகி விடுவார். இனி ஒரு போதும் நானும் மஞ்சரியும் மணந்து கொள்ள சம்மதிக்க மாட்டோம் என்பதை தெளிவாக தெரிந்து கொண்டு அந்த விஷயத்தையே கெட்டியாகப் பிடித்துக்கொள்வார். நான் மஞ்சரியை மணந்தால்தான் இந்த அன்பு இல்ல புராஜெக்ட் என்பதில் உறுதியாகி எனக்கு வேறு எந்த வழியும் இல்லாதபடி எல்லா வழிகளையும் அடைத்துவிடுவார்.

பின் அன்பு இல்ல புராஜெக்ட்டை விட இந்த மஞ்சரியை சமாளிப்பது பெரிய பிரச்சினையாகப் போய் விடும். அதனால் இப்போது மஞ்சரியிடம் இருந்து நான் முழுமையாக தப்பித்தாக வேண்டும். அதற்கு ஒரே எளிதான வழி... நான் உடனே வேறு யாராவது ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்...'' சொல்லியபடி நிறுத்திய மனோரஞ்சன் ஓரிரு நிமிடம் அவள் கண்களை ஊடுருவது போல் உற்றுப் பார்த்தான். அவளும் சட்டென முகம் சூடேற என்னமோ போல் உணர்ந்தாள்.

அவன் தொடர்ந்து ''அப்படி யாரோ முன்பின் தெரியாத ஒரு பெண்ணை கல்யாணம் செய்வதற்குப் பதில் எனக்கு நன்கு தெரிந்த என் மீது நிஜமான அக்கறையுள்ள அழகான பெண்ணான உன்னை கல்யாணம் செய்தால் என்ன... என்ற கேள்வி என்னுள் எழுந்து விட்டது. இரவு முழுக்க அந்த சிந்தனைதான் எனக்கு! அதனால்தான் நன்கு யோசித்து முடிவெடுத்து காலை வந்ததும் உன்னிடம் கேட்கிறேன்...'' என்றவன் அவளும் ஏதோ சட்டென சொல்ல வர கைகளை உயர்த்தி தடுத்து, ''அவசரம் வேண்டாம். நீயும் நன்கு யோசித்து வீட்டில் கலந்து

ஆலோசித்து உன் முடிவைச் சொல். ஒரு நாள் முழுவதும் அவகாசம் எடுத்துக்கொள் என்ன?'' என்று அவன் முடித்ததும் அவளுக்கு வசதியாய் போயிற்று.

குப்பென சிவந்து போனவளாய் ஒரு கணம் தடுமாறி யவள் அவனை நிமிர்ந்து பார்க்க திராணியில்லாதவளாய் அப்படியே குனிந்தாள்.

அவள் அப்படி குனிவதைப் பார்த்து என்ன நினைத் தானோ சட்டென, ''இதில் எவ்வித கட்டாயமும் இல்லை. என்ன முடிவெடுக்கவும் உனக்கு முழுச்சுதந்திரமும் உண்டு. உனக்கு இதில் விருப்பமில்லை என்றாலும் நான் உன் மீது கோபம் கொள்ளப் போவதில்லை. முழு மனதாகவே வரவேற்பேன். அதனால் நீ இவ்விஷயத்தில் எவ்வித சங்கடமோ சங்கோஜமோ கொள்ளத் தேவை யில்லை...'' என விளக்கமும் கொடுத்தான்.

தான் குனிவதைப் பார்த்து அவன் விரும்பவில்லை போலும் என நினைத்து விட்டான் போலும்... என பயந் தவள் அவசரமாக ''ஐயோ! அப்படியெல்லாம் இல்லை ஸார்! உங்களை மணக்க ஒரு பெண் நிஜமாகவே கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதற்குள்ளான தகுதிகள் எனக்கு சிறிதேனும்...'' என்று சொல்ல வந்ததை அத்தோடு நிறுத்தினாள்.

மனோரஞ்சன் சிரித்தான்.

''உண்மையில்... நீ... நல்லவள். எப்படி நான் நல்ல வனாகவும் இரக்க குணம் கொண்டவனாகவும் இருப்ப தாய் நீ நினைக்கிறாயோ... அதே போல் இரு மடங்கு அதிகம் உன்னிடம் நல்ல மனசும் இரக்க குணமும்



உண்டு. அதனால் நீ எனக்கு எவ்விதத்திலும் குறைச்சல் இல்லாமல் சரியான பொருத்தம்தான்..''

அவன் சொன்ன கடைசி வார்த்தை தேனாய் அவள் காதுகளில் பாய்ந்து அவளை அப்படியே பறக்க வைத்தது.

இருந்தும் அவளுக்கு ஆசை குறையவில்லை. தன்னைப் பற்றி இன்னும் என்ன மதிப்பீடு... எண்ணம்... வைத்திருப்பான் என்பதை தெரிந்து கொள்ளும் ஆவல் கூடியது.

''ஸார்... என்ன... இருந்தாலும்... மஞ்சரி முன்... அவர் களது அழகுக்கு முன்...''

அவள் முடிக்கும் முன்பே குறுக்கிட்டு நிறுத்தியவன், ''மஞ்சரி அழகு என்று யார் சொன்னது? செயற்கையாக சாயம் அடித்து முகத்தில் வண்ணமடித்தால் அழகாகி விடுமா?

''அது அழகே கிடையாது. உன்னை... இதற்காக, இப் போது பேசுவதற்காக இல்லை... முன்பே நிறைய முறை பார்த்து வியந்திருக்கிறேன். சின்ன ஸ்டிக்கர் பொட்டு, லேசான பவுடர், தழையப் பின்னியக் கூந்தல்... நம் செகரட்டரி இவ்வளவு அழகா? என எண்ணியதுண்டு.''

அவன், சொல்லி முடிக்க ஏதோ நினைப்புடன் ''சொல் லுங்கள்... ஸார்...'' என்றவளின் குரல் பிசிறலாய்த்தான் ஒலித்தது. தரையில் பதிய வைத்திருந்த கால்களே காணாமல் போய்விட்டதைப் போல்தான் உணர்ந்தாள்.

இதில் முகம் வேறு சிவந்து இத்தனை ரோஜாக்கள் அதில் ஒரே நேரத்தில் பூத்ததாலா; என்ன செய்வது?

கீழுதட்டை மெல்ல அழுந்தக் கடித்து சிரமப்பட்டு தனது உணர்ச்சிகளை அடக்கி இயல்புக்கு கொண்டு வந்தாள்.

''ஸார்... அப்புறம் உங்கள் தந்தை இதற்கு சம்மதிக்க வேண்டுமே?'' என பேச்சை தனது சம்மதத்தை உள்ளூர தெரிவித்தபடி அடுத்த கட்டத்திற்கு கொண்டு போனாள்.

மனோரஞ்சன் யமகாதகனாயிற்றே! அதை நொடியில் புரிந்து கொண்டு, ''அப்படியானால் உன்னைப் பொறுத்த வரையில் நான் கேட்டதற்கு சம்மதம். வீட்டில் மட்டும் கலந்தாலோசிக்க வேண்டும் அப்படித்தானே?'' என்றதும் மறுபடியும் செந்நிற ரோஜாவாய் மலர்ந்து வெட்கமாய் குனிந்தாள்.

அந்த வெட்கத்தை ரஸித்துப் பார்த்தபடி தொடர்ந்த மனோரஞ்சன், ''என் தந்தை உன்னை மட்டுமல்ல, நான் எந்தப் பெண்ணை மணப்பதற்கும் இந்த நிலையில் சம்மதிக்க மாட்டார். அதனால் இந்தக் கல்யாணம் அவருக்குத் தெரியாமல் நடக்கும். ரெஜிஸ்டர் மேரேஜாகத்தான் இருக்கும்...'' என்று அடுத்த திட்டத்தை விளக்கிய போது, ''ஸார்... என்ன... இது...?'' என அதிர்ந்தே போனாள்.

ஆனால் பதறிய அவளிடம் தனது முழு பிளானையும் விளக்கி தான் போட்டிருக்கும் திட்டத்தை விரிவாய் விளக்கினான்... மனோரஞ்சன்.

கடைசியில், ''உணர்ச்சிவசப்படாதே! உன் வீட்டில் கேட்டு நாளை உன் முடிவைச் சொல்...?'' என அவளது கன்னங்களை செல்லமாய் தட்டி விட்டு அகன்றான்.



அவள் கண்கள் இமைக்க மறந்து அவன் போவதையே சிலைபோல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

# 11

மதுமதி வீட்டிற்கு வந்தவளுக்கு விஷயத்தை இனியும் மறைக்க முடியாது என்று புரிந்து போயிற்று.

வேலைகளை முடித்து ஒய்வாய் உட்கார்ந்த அம்மாவையும் டிவி சேனல்களை மாற்றிக் கொண்டிருந்த அப்பாவையும் ஒரு சேர அமர்த்தி வைத்து நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் சொன்னாள்.

அதிர்ந்து போனார்கள் அவர்கள்!

''என்னம்மா இது கூத்து. உன் முதலாளி அதுவும் பெரிய கோடீஸ்வர கோமான்... அவர் உன்னை மணமுடிக்க கேட்டாரா?'' என்றார் அப்பா வாய்பிளக்கும் ஆச்சரியத்துடன்.

அவரிடம் பொறுமையாய் மனோரஞ்சனின் நல்ல மனது இரக்க குணம் பற்றியும் அவன் தற்போது இருக்கும் இக்கட்டான சூழ்நிலைபற்றியும் விளக்கினாள்.

கூடவே இருவருக்கும் புரிய வேண்டும் என்பதற்காக, ''அவரை எனக்கு இதனால் மிகவும் பிடிக்கும்...'' என்ற தனது உள்ளூர ஆசையை சம்மதத்தை நாசூக்காய் உணர்த்தவும் செய்தாள்.

ஆனாலும் பெற்றவர்கள் திகைத்தார்கள்.

பெரும் கோடீஸ்வரத் தந்தைக்கும் மகனுக்கும் நடக்கும் மோதலில் தங்கள் மகள் போய் பகடைக்காயாய் மாட்டிக் கொள்ள வேண்டுமா?

அதற்கும் அவர்களை சமாதானப் படுத்துவது போல் அவள் ஏதோ பதில் சொல்ல முற்பட்டபோது... வீட்டின் அழைப்பு மணி ஒலிக்க எழுந்து போய் பார்த்தாள்.

மேலும் அதிர்ந்தாள்.

வெளியே... மனோரஞ்சன்! கடைசியில் அவள் வீடு தேடியே வந்து விட்டான்! எதற்காக?

''ஸார்... வாங்க! உள்ளே... வாருங்கள்!'' இன்ப அதிர்ச்சி கொண்டவளாய் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

புன்னகையுடன் நுழைந்தவன் எதிர்பட்ட மதுமதியின் தாய் தந்தையரைப் பார்த்து கை கூப்பி பெரிதாய் நமஸ்கரித்தான்.

நடுஹாலில் அமர்ந்து, மதுமதி ஓடிப்போய் போட்டுக் கொண்டு வந்த சுவையான காபியை பருகியபடி தான் வந்த காரணத்தை விளக்கினான்.

''மதுமதி சொல்லியிருப்பாள். என்ன இருந்தாலும் நானே வந்து நேரில் விளக்கினால்தான் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. என்ன இருந்தாலும் இது... மதுமதியின் வாழ்க்கைப் பிரச்சினை அல்லவா...'' என்றபடி தன் திட்டத்தை அவர்களுக்கு விளக்க ஆரம்பித்தான்.

அவன் பேச்சில் தெரிந்த உறுதியும் மற்றவர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்யவேண்டும் என இரக்கம் கொள்ளும் அவனது உயர்ந்த குணமும் மதுமதியைப் பெற்றவர்களை அசர வைத்தது.



முதலாளியே வலிய வந்து இவ்வளவு தூரம் சொல்லும் போது... என்ன செய்ய முடியும்?

எல்லாவற்றுக்கும் மேலாக மதுமதியும், மனோரஞ்சனை தனக்கு மிகவும் பிடிக்கும் என கோடிட்டு காட்டி விட்டாளே?

அவளது உள்ளூர ஆசையை நாசுக்காய் தெரிவித்து விட்டாளே?

அவளது ஆசைக்கு அவர்கள் ஒரு போதும் தடையாக இருந்ததில்லையே...?

அதனால் அவர்களும் நிதானமாக யோசித்து முடிவெடுத்து கடைசியில் சம்மதித்தார்கள்.

பெரும் நிம்மதியுடன் அவர்களிடம் விடைபெற்று கிளம்பிச் சென்றான் மனோரஞ்சன்.

மதுமதிக்கும் தலைகால் புரியாத மகிழ்ச்சிதான்!

அப்படியே தாயை கட்டிக்கொண்டு சந்தோஷத்தில் முத்தமாரி பொழிந்தாள்.

மனோரஞ்சன் சொன்னது போல் அடுத்த இரண்டு நாட்களில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டான்.

அன்று ஊரின் பிரசித்திபெற்ற சிவன் கோவில் சங்கர ராமேஸ்வரர் பாகம்பிரியாள் சன்னதியில் மாலைமாற்றி விட்டு ரெஜிஸ்டர் ஆபீசில் பதிவுத் திருமண ஏற்பாடு.

காலையிலே குறிப்பிட்ட சொந்தங்களுடன் வேனில் பெண்வீட்டார் கிளம்பிவிட்டனர்.

மனோரஞ்சன் தன் பங்கிற்கு தூரத்து உறவினர் நாலைந்து நண்பர்களுடன் வந்து விட்டான்.

பட்டு வேஷ்டி பட்டுச் சட்டை மாப்பிள்ளை கோலத்தில் கட்டிளங்காளை போன்ற அவனது கம்பீரமான அழகைக் கண்டு மதுமதி பரவசமாகத்தான் செய்தான். ஆனாலும் அவள் உடம்பு முழுவதும் மெல்லிய பயம் ஒன்று புதிதாய் உயிர்பெற்று ஓடியது.

அவன் மனோரஞ்சன் முதலாளி. அவள் அவனிடம் சம்பளம் வாங்கும் சாதாரண செகரட்டரி. ஊர் உலகம் இதை ஏற்றுக் கொண்டாலும், அவனது தந்தையும் நாதன் இன்டஸ்ட்ரீஸ் சேர்மனுமான சிவநாதன் இந்த விஷயத்தை எப்படி ஏற்றுக்கொள்வார்?

கோடீஸ்வரர்களாய் பங்களாவில் வாழும் அவர்களது வாழ்க்கை முறை... என்ன...? வாடகை... பிளாட்டில் வாழும் அவளது குடும்ப முறை என்ன...? ஏணி வைத்தாலும் எட்டாத விஷயத்தை அவர் எப்படி சகித்துக் கொள்வார்?

அவள் நினைப்பை புரிந்தது போல் பக்கத்தில் வந்த மனோரஞ்சன் அவள் விரல்களை மெல்ல பிடித்து அழுத்தினான்.

''எதற்கும் கலங்க வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்...'' என்றான் கிசுகிசுப்பான குரலில்.

சம்பிரதாயங்கள் முடிந்ததும் புதுமணத் தம்பதிகளாய் காரில் ஏறி மணமகள் இல்லம் வந்து பால் பழம் சாப்பிட்டனர்.

பின் அரை மணி நேரத்தில் அதே கோலத்தில் மனோரஞ்சன் அவளுடன் கிளம்பினான்.

''என் தாய் தந்தையைப் பார்க்க போகிறோம். ஆசீர்வாதம் வாங்க...!'' என்றான்.

மதுமதிக்கு பெரும் உதறலெடுத்தது.



காரில் ஏறி அவன் பக்கம் உட்கார்ந்தவள், ''ஸார்...'' என்றாள் குரல் நடுங்க.

மனோரஞ்சன் சிரிக்காத குறையாய்த் திரும்பிப் பார்த்தான்.

''இன்னும் என்ன ஸார்... மோர் என சொல்லிக் கொண்டு...? அழகாக அத்தான் டார்லிங்... என கொஞ்சலாய் ஏதாவது பேர் சொல்லி அழைக்கலாமே?'' என்றான். அதற்கும் அவள் விடாமல், ''இல்லை... ஸார்... கொஞ்சம் அதற்கும் அவகாசம் கொடுங்கள் ஸார்... உங்களை அப்படி... அப்படியே... சட்டென வாய்கூசுகிறது'' என்றாள் ஒருவித சிணுங்கலுடன். அவள் நிலையைப் புரிந்தவன் போல் மெல்ல அவள் தலையைத் தட்டியவன், ''ம்கூம்... புரிகிறது...! ஒரு வித நெருக்கம் ஏற்படும் வரை அப்படித்தான் இருக்கும். நெருக்கம் ஏற்பட்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும்...'' என்றவாறு அவன் கண்ணடித்தபோது உடம்பில் குறுகுறுப்பு தோன்ற குப்பென சிவந்தாள். பின் மனோரஞ்சன் ஞாபகம் வந்தவனாய், ''ம்ம்.. சொல்ல வந்ததை சொல்லாமலே விட்டு விட்டாயே....?'' என்றதும் அவள் அதே கலங்கிய குரலில், ''எனக்கு பயமாக இருக்கிறது ஸார்... உங்கள் வீட்டில்... உங்களின் இந்த திடீர் முடிவை எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா...? என்ன நடக்குமோ... என்று...!'' குரல் நடுங்க முடித்தாள்.

அவள் பயந்து போய் கேட்க தலைவெட்டி சிரித்தான் மனோரஞ்சன். ''நீ நினைப்பது போல் ஒன்றும் பெரிய ரகளை ஏற்பட்டு விடாது. அம்மாவிற்கு இரண்டு நாளைக்கு முன்பே விஷயத்தைச் சொல்லி விட்டேன். அவர்களுக்கு என்ன... கல்யாணத்தை கண்முன்னால்

பார்க்க முடியாமல் போகிறதே என்ற ஒரே வருத்தம் தான்... ஆனால் அப்பாவின் பிடிவாதத்தை உணர்ந்து நீ செய்வது சரிதான் என சம்மதித்து விட்டார்கள். அவர் களுக்கு மஞ்சரியை பிடிக்காது அவள் மருமகளாய் வருவதில் உடன்பாடில்லை என்பதுதான் உண்மையான காரணம். அதனால்... அம்மா வழியில் எந்தப் பிரச் சினையும் இல்லை. பிரச்சினை அப்பாதான் பண்ணுவார். தாம்தீம்மென குதிப்பார். அவரை நான் பார்த்துக் கொள் கிறேன். நான் சமாளித்துக் கொள்கிறேன்...'' என்றான் ஆறுதல் அளிப்பது போல்.

ஆனாலும் பயம் விலகாமல் தவித்தபடியே அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

அரைமணி நேர பயணத்திற்குப் பெண் கார் அல்லது பங்களாவினுள் நுழைந்து நின்றது.

மணக் கோலத்தில் மாப்பிள்ளையும் பெண்ணுமாக இறங்கினர் இருவரும்.

பங்களா முகப்பு வாசலிலே எரிப்பது போன்ற கண் களுடன் கடுங்கோபத்தில் நின்று கொண்டிருந்தார் அவனது தந்தை சிவநாதன்.

# 12

சிவநாதனை மதுமதி அலுவலகத்தில் எத்தனையோ முறை பார்த்திருக்கிறாள்தான். ஆனால் வணக்கமும்



கைகூப்பலும் செய்து விட்டு அவர் கேட்கும் கேள்வி களுக்கு பதில் சொல்லிவிட்டு அகன்று விடுவாள்.

அலுவலக பணியாட்கள் எல்லோரும் சேர்மன் பதவியி லிருக்கும் அவரிடம் பேசப் பயப்படுவார்கள் என்பதை விட அவர் யாரிடமும் அவ்வளவு பேசுவது கிடையாது என்பதே உண்மை.

மகன் எல்லாவற்றையும் திறன்பட பார்த்துக் கொள் வான் என்று எதிலுமே அவர் தலையிடுவதும் இல்லை. அதனாலே அவரைப் பற்றியோ அவரது குணநலத்தைப் பற்றியோ பணியாட்களுக்கும், மதுமதிக்கும் தெரியா மலே போய்விட்டதும் உண்டு.

அதனாலே அன்று முகம் சிவக்க ஜிவுஜிவு கோபத் துடன் பங்களா வாசலில் எதிர் கொண்ட அவரைக் கண்டு மதுமதி அரளத்தான் செய்தாள்.

''என்ன தைரியம் உனக்கு? எனக்குத் தெரியாமல் கல்யாணமே செய்து விட்டாயா?''

அவர் சினமாய் குரல் உயர்த்த, ''எங்களை மன்னித்து விடுங்கள். ஒரு காரணத்திற்காக நான் அப்படிச் செய்து விட்டேன்...!'' என்றான் மனோரஞ்சனும் சட்டென குரல் தாழ்த்தி.

மேலும் தடித்த வார்த்தைகளுடன் வெடித்த சிவநாதன் தன் முறைப்பை கொஞ்சமும் குறைக்காமல் திரும்பி பக்கத்தில் நின்ற அவளை ஊடுருவினார்.

''இது யார்? உன் செகரட்டரியா...? ஃபைல்களை இடுக்கிக் கொண்டு உன்னையே சுற்றி வருவாளே...? கடைசியில் அவளையே வளைத்து உன் மனைவியாக

ஆக்கி விட்டாயா? சரியான முட்டாள்...! வடி கட்டிய முட்டாள்.. நீ...!''

ஆவேசமான குரலில் அவர் கத்த மனோரஞ்சன் வாய் பேசாமல் குனிந்து கொண்டான்.

இந்த நிலையிலும் என்ன சொன்னாலும் அவரை சமாதானப்படுத்த முடியாது. அவர் சமாதானமும் ஆக மாட்டார். ஏனெனில் அவன் செய்திருப்பது மிகப்பெரிய பிழை. என்னதான் சூழ்நிலை ஆனாலும் பெற்ற ஒரே மகனின் கல்யாணம் இப்படித் தனக்குத் தெரியாமல் நடந்ததை எந்தத் தந்தையால் தாங்கிக் கொள்ள முடியும்?

அதனால் அவரின் கோபமான வசவுகளை எல்லாம் தலைகுனிய வாங்கிக் கட்டிக் கொண்டான் அவன். கடைசியில் அவர், ''இனி என் முகத்திலேயே நீ முளிக்கக் கூடாது. போய் விடு...!'' என துண்டை உதறிவிட்டுச் செல்லும் வரை சிலை போலவே இருந்தான்.

தலையை குனிய வைத்தபடி சங்கடமாய் நெளிந்த அவனது கோலத்தைப் பார்க்க மதுமதிக்கே கஷ்டமாய் இருந்தது. இப்படி இவன் செய்வது பாடுபடுவது எல்லாம் எதற்காக? அந்த அன்பு இல்ல புராஜெக்ட்டிற்காகத் தானே? இரக்க குணத்துடன் நாலு ஆதரவற்றோருக்கு உதவ நினைக்கும் இவனது பரோபகார குணத்தை இவன் தந்தை ஏன் புரிந்து கொள்ளவே இல்லை?

அவளும் மனோரஞ்சனை நினைத்து குனிந்த முகத்துடனே கலங்கினாள்.

மனோரஞ்சன் அவள் கைகளைப் பிடித்து இழுத்தபடி பங்களாவின் அவுட்ஹவுஸ்ல் பாதையில் உள்ள இன்னொரு முகப்புப் பக்கம் போனான்.



அங்கு அவன் நினைத்தபடியே அவர்களை எதிர் பார்த்து காத்திருப்பது போல தாய் மகாலெட்சுமி!

''என்னப்பா... கல்யாணம் நல்லபடியாக முடிந்ததா? எங்களுக்குத்தான் பார்க்க கொடுத்து வைக்காமல் போயிற்றே...?'' என அரற்றியவள் அப்படியே திகைத்து நின்றிருந்த மதுமதியை தன் பக்கத்தில் இழுத்து அணைத்தாள்.

''எல்லாவற்றையும் மனோரஞ்சன் முன்பே சொல்லி விட்டான். நீ அவனுக்கு பொருத்தமான ஜோடிதான். உன் போட்டோவையும் முன்பே எனக்கு காட்டி, உன் மருமகள் இவள்தான்! என சொல்லி அனுமதி வாங்கி தான் உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கிறான். அதனால் எதோ திருட்டுத்தனமாய் நடந்த கல்யாணம் என்று கலங்கிவிடாதே...'' என்று அந்தத் தாய் தன் நிலை யறிந்து வாஞ்சையாய்ச் சொன்ன போது அவளுக்கு நிஜமாகவே நெகிழ்ச்சியாக இருந்தது.

மெல்ல நிமிர்ந்து மனோரஞ்சனைப் பார்த்தாள். அவன் அதை ஆமோதிப்பது போல் புன்னகை ததும்ப இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

பின் தம்பதிகள் இருவரும் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றனர்.

திருநீறு பூசி ஆசீர்வதித்த மகாலெட்சுமி அத்தோடு பரபரப்பும் ஆனாள்.

எங்கே உள்ள சென்ற சிவநாதன் திரும்பி வந்து இந்தக் காட்சியைப் பார்த்துவிடக் கூடாதே?

அதனாலே மகன் பக்கம் வந்து அவசரப்படுத்தியவள், "நீ ஒருவாரம் ஊட்டியோ... கொடைக்கானலோ போய் நம் கெஸ்ட் ஹவுஸில் தங்கி விட்டு வா. அதற்குள் உன் தந்தையை எப்படியும் நான் சமாதானப் படுத்திவிடு கிறேன்..." என ஆறுதலாய் பேசி விடைகொடுத்தாள். இருவரும் கண்கலங்கவே அங்கிருந்து கிளம்பினர்.

மதுமதிக்கு மனோரஞ்சனின் தாய் திருமணத்திற்கு எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் ஏற்றுக்கொண்டது ஆச் சரியமாகவே பட்டது.

அதுவும் அவர்களது கம்பெனியிலேயே செகரட்டரி யாய் வேலை செய்யும் பெண்ணை மணமுடிக்க எப்படி அனுமதித்தார்கள்? என நினைத்தாள். காரில் திரும்பி வரும்போது அதற்கு விளக்கம் கொடுத்தான் மனோ ரஞ்சன்.

"அம்மாவிற்கு சுத்தமாய் மஞ்சரியை பிடிக்காது. அவளா? உனக்கு கொஞ்சமும் பொருத்தமில்லாத ஜோடியா யிற்றே...! என்றுதான் அடிக்கடி சொல்லுவார்கள். தந்தை இந்த அன்பு இல்ல புராஜெக்ட்டை நிறுத்துவதற்காக மஞ்சரியை நீ கட்டித்தான் ஆக வேண்டும் என்று பிடி வாதம் பிடித்ததும்... நான் என்ன முடிவெடுக்கப்போகி றேனோ என்றுதான் தவித்தார்கள். ஆனால் நான், மஞ்சரியை ஒதுக்கிவிட்டு உன்னை மணமுடிக்க நினைத் தும் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்."

மனோரஞ்சன் சொன்னது பெரும் ஆறுதலைத்தர மெல்ல கவலை குறைந்தவளாய் மெல்ல புன்னகைக்க ஆரம்பித்தாள்.



அதை உற்றுக் கவனித்த மனோரஞ்சன், "அப்பாடா! இப்போதுதான் பயம் விலகி மெல்ல சிரிப்பு எட்டிப் பார்க்கிறது டோய்!" என்று கேலி செய்யவும் அடக்க முடியாதவளாய் கலகலவென சிரித்தாள்.

பின் சிரிப்பை நிறுத்தியவள், "பின் எப்படி ஸார்...? நீங்களே சொல்லுங்கள்... கந்தல் துணிக்கு... பட்டுக் குஞ்சம் போன்ற வாழ்வு வந்தால் எப்படி...? பயப்படா மல் இருக்க முடியுமா...?" என்று கேட்க இம்முறை மனோரஞ்சன் சிரித்தான்.

"அட... கந்தல் துணியா...? உன்னை அதனோடவா ஒப்பிட்டு பேசுவது? .... சே...! சே!" என மறுப்பாய் தலை யசைத்தவன் "நீ குணத்தில் தங்கம்!... மனதில் மாசுமரு வற்ற மாணிக்கம் அழகில் பார்க்க பார்க்க திகட்டாத பேரழகி... அந்த படபடக்கும் மைவிழிக் கண்கள், பற்கள் பளிச்சிடும் முத்துப் புன்னகை..." என்றவன் சட்டென நிறுத்தி, "இந்த வர்ணனை உன்னை நான் ரஸிப்பதற்கு போதுமா! இன்னும் வேண்டுமா?" என்றான்.

"போதும்! போதும்!" என்றாள் அவள் கைகளை உயர்த்தி முகம் சிவக்க.

கூடவே தன்னை குணத்தில் தங்கம், மாணிக்கம் என்றெல்லாம் சொல்லி ஒப்பிடுகிறானே. தான் மஞ்சரி யிடம் அன்று ஃபேஷன் ஷோவில் பொய் சொல்லி பிரச் சினையையே திசைதிருப்பி விட்டதை அறிய நேர்ந்தால் என்ன ஆகும்? என்ற பயம் ஓடியது.

கூடவே அது தெரிந்துவிட்டால் நம் கதி? பகீரென அந்த நினைப்பு எழுந்து அவளை கதிகலங்க வைத்தது.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லிவிடலாமா...? அப்படி சொல்லி விடுவது நல்லதுதானே? என்ற நினைப்பும் அவளுள் ஓடியது.

ஆனால் மனோரஞ்சன் அன்று அவள் வேறு எதைப் பற்றிப் பேசினாலும் கேட்கும் மனநிலையில் இல்லாதது போல் ஒரு கையில் ஸ்டியரிங்கை பிடித்துக் கொண்டு மறுகையினால் அவள் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டான்.

பற்றிய கையினாலே அவளை தன் பக்கம் இழுத்து நெருக்கமாய் உட்கார்ந்தான். தோளோடு தோள் உரச அவளுடன் செல்வதை குறுகுறுப்பாய் உணர்ந்தாள் அவள்.

காதலோ ஆசையோ இல்லாமல் சூழ்நிலைக்காகத் தானே இவன் தன்னை மணந்திருக்கக் கூடும் என்ற நினைப்பு அவளும் மீண்டும் நெருடலாய் ஓடியது.

அவள் பேசாமலே வருவதைப் பார்த்து அப்படி அவன் மனதில் எண்ணம் ஒன்று ஓடுவதை கண்டுபிடித்தானோ என்னவோ, அவள் முகம் திருப்பி கண்களை உற்றுப் பார்த்தவன், ''ஒரு போதும் உன்னை சூழ்நிலைக்காக மட்டும் மணந்திருப்பதாய் நினைத்துவிடாதே மது. என்னதான் சூழ்நிலையாலும் என் மனதுக்கு பிடித்திருப்பதால்தான் உன்னை தேர்ந்தெடுத்தேன். அதையும் நீ புரிந்து கொள்ள வேண்டும். அதை உனக்கு முழுவதுமாய் வரும் நம் கொடைக்கானல் பயணத்தோடு புரியும். புரிய வைத்து விடுகிறேன். சரிதானா?'' என்று சொல்லியபடி அவள் நெற்றியில் இதமாக முத்தமிட்டான் மனோரஞ்சன்.

நிஜமாகவே குளிர்ந்துதான் போனாள் அவள்!



# 13



மறுதினமே கொடைக்கானல் பிரயாணத்திற்கு இரு வரும் உடைமைகளை எடுத்துக்கொண்டு காலையில் கிளம்பிவிட்டனர்.

அங்கிருந்து மூன்று மணிநேரப் பயணம் என்பதால் காரை மனோரஞ்சனே ஓட்டினான்.

வழிநெடுக உள்ள இயற்கை காட்சிகளை அடர்ந்த மரங்களை, பெரிய மலைத் தொடர்களை... வெள்ளிப் பிரவாகமாய் விழும் அருவிகளை... எல்லாம் காட்டினான். சில இடங்களில் காரை நிறுத்தி நடந்து சென்று இயற்கையை ரஸித்து அவளையும் ரஸிக்கச் சொன்னான்.

இயற்கை அழகை விட அவன் தன் தோளோடு அணைத்துப் பிடித்தபடி அவன் நடந்ததுதான் அவளை சிலிக்க வைத்தது. இனிமையாய் மனதுள் ரஸிக்க வைத்தது.

என்னதான் தாலி கட்டி கணவன் மனைவி என்று ஆகிவிட்டாலும் இதுவரை அவன் முதலாளியாகவே இருந்திருந்ததால் இந்த நெருக்கம் ஒருவித பயத்தையே அவளுள் ஏற்படுத்தியது. மேலும் ஓர் எல்லைக் கோட்டைத் தாண்டி உரிமையுடன் அவனை நெருங்கவோ நெருக்கம் காட்டவோ அவளால் முடியவில்லை.

அதற்கு காரணம் மஞ்சரியிடம் கூசாமல் அவள் சொன்ன பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை. எங்கே

மனோரஞ்சனுக்கு அது தெரிந்துவிடுமோ. அவன் கண்டுபிடித்து விடுவானோ என்ற பய உணர்வை அவளை அதிகம் ஆட்டிப்படைத்தது.

அதனாலே இரவிலும் படுக்கையில் அவன் அவள் நெற்றியில் முத்தமிட்டு குட்நைட் சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு திரும்பிப் படுத்துக் கொண்ட போதும் அவளும், நாம் புதுமணத் தம்பதிகளாயிற்றே. இப்படியா நடந்து கொள்வது? என்றெல்லாம் எண்ணி குழம்பாமல் கொஞ்ச நாளைக்கு இப்படி இருப்பது சரிதான் என அவனைப் போலவே முடிவெடுத்தும் கொண்டாள்.

முதல் நாள் இரவு முடிந்து எழுந்த காலையில் புன்னகையோடு அவனுக்கு அவள் காபியை நீட்டியபோது, ''பரவாயில்லையே புதுமணப்பெண் போல் இல்லாமல் எதிர்பார்ப்பை எல்லாம் குறைத்து ரொம்பவும் இங்கிதமாய் சூழ்நிலை புரிந்து நடந்து கொள்கிறாயே... யார் கற்றுக் கொடுத்தது?'' என ஆச்சரியமாய் கேட்டான் அவன்.

அதற்கும் அவள் புன்னகை மாறாமல், ''எல்லாம் என்னுடைய பாஸ்... பாஸிடம் கற்றுக் கொண்டதுதான்...! அவர்... அவர்... எவ்வளவு எவ்வளவு பெரிய திறமைசாலி அறிவாளி தெரியுமா? அவருடைய செகரட்டரியாய் இருந்து கொண்டு... இது... கூட இதைக் கூட நான் கற்றுக்கொள்ள மாட்டேனா?'' என கெக்கலிக்கும் பார்வையுடன் தோள்களை குலுக்கிக் கொண்டு அவள் சொன்னபோது விழுந்து விழுந்து சிரித்தாள் மனோரஞ்சன்.

கூடவே ''சூடாக காபியை கொடுத்துவிட்டு உடனே ஐஸ் துண்டுகளையும் இப்படித்தலையில் போட்டால் தாங்காதும்மா...'' என்றபோது வெட்கத்தோடு ஓடி ஒளிந்தாள் அவள்.



இன்றும் இப்போதும் கொடைக்கானல் செல்லும் பாதையில் அதே வெட்கத்துடனே அவன் தோள்களில் சாய்ந்தபடி நடந்தாள். ''ஸார், இந்த பூக்கள், மஞ்சள் நிறத்தில் எவ்வளவு அழகாய் ஒளிர்கிறது? இந்த மலை முகடுகளில் மேகக் கூட்டங்கள் எப்படி முட்டிமோதி வழிந்து கிடக்கிறது? ஏஸியை விட இதமான இந்த குளிர் நிலை... மலைப்பாதைகளில் இப்படி நடப்பதே சுகம்தான் ஸார்...''

ஒரு குழந்தையின் ஆச்சரியத்தோடு அவள் எல்லாவற்றையும் விவரித்து மகிழ மனோரஞ்சனோ அவள் பேச்சை உற்றுக் கவனித்து அவளை லேசாய் உலுக்கியவன், ''எல்லாம் சரி... ஆனால் இந்த ஸார் மோரை... விடாமல் விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கிறாயே...? எப்போதுதான் அதை விடுவதாய் உத்தேசம்?'' என்றான் புருவம் உயர்த்திய கேள்விக்குறியுடன்.

''அது... அது... ஸார்... அது... வந்து... ஸார்...''

உதடுகள் தந்தியடிக்க திணறத்தான் செய்தாள்.

அதை மறுபடியும் உற்றுக் கவனித்த மனோரஞ்சன் ''அதற்கு அதை நிறுத்த ஒரு வழி வைத்திருக்கிறேன். இரவில் அதை பிரயோகிக்கிறேன்...'' என்றபடி கண் சிமிட்டினான். மேலும் சிவந்தவளாய் அவன் தோளில் புதைந்தாள்.

அன்று கொடைக்கானல் வந்து அவர்களது கம்பெனி கெஸ்ட் அவுஸில் தங்கினார்கள். மினி பங்களா போல இருந்த அதைச் சுற்றி பார்த்தவள் வியந்தாள்.

அவள் வியப்பதைப் பார்த்து, மனோரஞ்சன், ''இதே போன்று ஒன்று ஊட்டியிலும் நமக்கு இருக்கிறது...'' என்றான்.

''சொந்தமாய் இப்படி ஒரு பங்களா என்றால் விலையும் அதிகமாக இருக்குமோ ஸார்...'' என்று அவள் இழுத்த போது, ''ரொம்பவும் அதிகமில்லை ஐம்பது லட்சம்தான்!'' என்றான்.

''ஐம்பது லட்சமா?'' என வாய் பிளந்தவளின் பக்கத்தில் வந்து தோள்களைத்தட்டி, ''நாதன் கம்பெனி செகரட்ட ரிக்கு நாதன் குரூப்பின் வருமானங்கள் தெரிந்தது தானே?'' என்றான்.

''தெரியும் ஸார் ஆனால்...''

''சொல்லு...''

''எனக்குத் தெரியாதது ஒன்றே ஒன்றுதான் ரொம்ப நாளாய் மனதை குடைந்து கொண்டிருக்கிறது'' என்றாள்.

''அந்த குடைந்து கொண்டிருக்கிற கேள்வியையும் கேட்டு விடு...!'' என்றான் அவன்.

''இவ்வளவு பெரிய பணக்காரராய்... கோடீஸ்வர கோமானாய் இருக்கும் நீங்கள் போயும் போயும் மிடில் கிளாஸ் வாழ்க்கை நடத்தும் செகரட்டரி பெண்ணை எப்படி மணமுடிக்கத் தேர்ந்தெடுத்தீர்கள்? அதிலும் உங்களைப் போலவே உங்கள் தாயாரும்... ஏன் உங்கள் தந்தை கூட இந்த ஸ்டேட்டஸ் விஷயத்தில் எவ்வித முகச்சுழிப்பும் கொள்ள வில்லையே... எப்படி ஸார்? எத்தனை பணக்கார பெரிய இடத்து சம்பந்தங்களை கை நீட்டினால் வந்திருக்கும். எதற்காக அவர்களை ஒதுக்கி வேண்டாம் என நினைத்தீர்கள்?''

அவள் கேட்க... சிரித்த மனோரஞ்சன், ''உன் கேள்வி யிலே பதிலும் இருக்கிறது... என்றவன் அவள் விழிப் பதைப் பார்த்து, ''புரியவில்லையா? விளக்குகிறேன்...'' என்றபடி விவரித்தான்.



''நீ சொன்ன அந்த பணக்கார சம்பந்தங்களில் பணம் மட்டும்தான் இருக்கும் மருந்துக்கு கூட குணம் என்பது இருக்காது. அதற்கு என் முறைப்பெண் மஞ்சரியே சரியான சாட்சி...! மேலும் எங்கள் வீட்டிலும் நான் முன்பே எனக்கு பணம் முக்கியமில்லை. நல்ல மணமும் குண மும் உள்ள பெண்தான் மனைவியாய் வரவேண்டும்... என்பதை உறுதியாய் தெரிவித்து அவர்களது மன நிலையையும் மாற்றி வைத்திருந்தேன். அதனால்தான் அவர்கள் எவ்வித எதிர்ப்பும் காட்டவிலலை...'' என்றான்.

''கூடவே, அப்படி மனம், குணம், காரம் நிறைந்த நான் தேடிய வாசனைப் பெண் நீ தான்!'' என்றபடி அவள் இடுப்பை கைகளால் வளைத்து அவள் கழுத்து வளை வில் அவன் முகத்தை பதித்து ஒரு விதமாய் முகர்ந்த போது கிளுகிளுப்பாய் உணர்ந்தாள் அவள்.

பின் அவனே, ''இப்படியே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? கொஞ்சம் ஓய்வெடுத்து விட்டு, கொஞ்சம் உணவருந்திவிட்டு கொடைக்கானலின் அழகை சுற்றிப் பார்க்க கிளம்புவோம் என்ன? என்று கேட்க அழகாய் தலையசைத்தாள் அவள்.

கொஞ்ச நேரத்தில் ரெஸ்ட்டாரண்டில் உணவை சிம்பி ளாய் முடித்துக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். பில்லர்ராக், மவுண்ட் வியூ, க்ரீன் வேலி என ஒவ்வொன்றாய் பார்த்து ரஸித்துவிட்டு பூங்காவில் வந்து அமர்ந்தார்கள்.

பூங்காவின் மலர்ச்செடிகளை எல்லாம் கண்கள் விரிய ரஸித்தவள், ''ஸார் பாருங்களேன்! வண்ண வண்ண மலர்கள்... எப்படியெல்லாம் வித்தியாசமாய்... அழகாய்... ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு... இருக்கிறது ஸார்...'' என்றாள் வியப்புடன்.

அவள் வியப்பையே ஆச்சரியமாய் கவனித்த மனோ ரஞ்சன், ''அந்த மலர்களுக்கு போட்டி இல்லை பொறாமை!'' என்றான்.

''பொறாமையா... என்ன சொல்கிறீர்கள் ஸார்?''

''ம்ம்... பின் இருக்காதா? அழகான ரம்மியமான மலர் ஒன்றை நான் கைபிடித்துக் கூட்டி வந்திருப்பதைப் பார்த்து இந்த மலர்கள் பொறாமையால் ரொம்பத்தான் பொருமுகின்றன...'' என்றதும் அடக்கமுடியாமல் சிரித்து விட்டாள் அவள்.

''ஆனாலும் ஸார்... இது கொஞ்சம் ஓவர்...! என்னை ஐஸ் துண்டுகளை வைப்பதாய் கேலி சொல்லி விட்டு ஒரு பெரிய ஐஸ் மலையையே என் தலையில் வைக்கப் பார்க்கிறீர்களே?'' என்றாள்.

''நான் எது சொன்னாலும் அது உனக்கும் பொருந்தும் தான்...!'' என்றபடி அதற்குப் பின் அவளை கைப்பிடித்து பூங்காவின் கூட்டத்தினுள் கூட்டிப்போனான். வேகமாய் நடந்தான்.

சக காதல் பயணிகளைப் போல் அவள் இடுப்பை வளைத்துப் பிடித்து நடந்தான். கழுத்தோடு கை கோர்த்து நடந்தான். ஒரு சில சமயங்களில் முகத்தோடு நெருக்க மாய் கன்னம் உரச நடந்தான். ஓரிரு சமயம் முன்னேறி அவள் கன்னங்களில் யாருமறியாமல் இதழ் பதித்து கிளுகிளுப்பூட்டினான்.

அவனது செய்கையெல்லாம் பார்த்து முகம் சிவக்க வெட்கப்பட்டவளிடம், ''இங்கு இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். இது லவ்வர்ஸ் சாய்ஸ். கல்யாணம் செய்து மனைவியை காதலிக்க ஆரம்பித்திருப்பவர் களின் ஏரியா...'' என்று சொல்லி அதிரவைத்தான்.



முன்பு போல் பாஸ் செகரட்டரி என்றில்லாமல் கேலி யும் கிண்டலுமாய் அவனுடன் பேசி விளையாடியதில் ரொம்பவும் மகிழத்தான் செய்தாள் அவள். மேலும் அதில் இதுவரை ஏற்படாத ஒரு வித நெருக்கம் ஏற்படு வதையும் அவள் இனிமையாய் உணர்ந்தாள்.

மேலும் இரண்டு நாட்கள் அப்படியே ஓடியது. அன்று இரவில் தனது பரந்த நெஞ்சினில் அவளை சாய வைத்துக்கொண்டு அவளையே பார்த்தான்.

நெற்றியில் புரண்ட அவள் சுருள் கூந்தலை விலக்கிய படி அவள் முகத்தை ஆவலாய் நோட்டமிட்டான். ரூமின் மெல்லிய ஆரஞ்சு விளக்கொளியில் மேலும் பளபளத் தது அவளது முகம். அவன் அப்படி கண்கள் விரிய பார்த்ததும் அவள் அடக்க முடியாமல் முத்துப் பற்கள் முழுவதையும் காட்டிச் சிரித்தாள்.

அதில் அவளது அழகு மேலும் கூடி மெருகேற பர வசமானவாய், ''மது நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா? உன்னை எத்தனை வருடங்கள் என் பக்கத் தில் வைத்துக் கொண்டே உணராமல் இருந்திருக் கிறேன். நிஜமாகவே நான் அதிர்ஷ்டசாலிதான்!'' என்ற படி அவள் இதழ்களில் மென்மையாய் முத்தமிட்டான்.

அவளும் அந்த தித்திப்பில் பரவசமாகி, ''ஸார், நான் தான் உங்களைவிட அதிர்ஷ்டசாலி! நீங்கள் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!'' என்றாள் கன்னங்களில் ரோஜாக்கள் பூக்க.

அவன் மனோரஞ்சனோ அதே பார்வை அவளை பார்த்தவாறு சட்டென முகம் மாறியவன், ''ஆனால் இப் போது நான் அதிர்ஷ்டசாலி இல்லையோ... என்ற

சந்தேகம் திடீரென மனதை நெருட ஆரம்பிக்கிறதே?'' என ஒரு மாதிரியான குரலில் அவன் சொல்ல அப்படியே துணுக்குற்றுப் போனாள்.

தான் அன்று மஞ்சரியிடம் பொய் சொன்ன விஷயம் இவனுக்கு எப்படியோ தெரிந்து விட்டதோ...? என்ற பயம் தாக்க ஆடிப்போனவள் முகம் வெளிறப் பார்த்தாள்.

''ஸார்... என்ன சொல்கிறீர்கள் ஸார்?'' என்றாள் நடுங்கும் குரலில்.

அவள் முகம் மாறி அழுவதைப் போல் வந்துவிட்டது கண்டு அவள் தலையில் தட்டி அடக்க முடியாமல் கடகடவென சிரித்தான் மனோரஞ்சன்.

''பின் அசடு போல் இன்னும் சார்... மோர் என்று சொல்லிக் கொண்டிருந்தால்... எப்படி? எனக்கு கோபம் வராதா?'' என்றான் பெரும் புதிர் போடுவது போல்...

'''அப்பாடா...! இதுதானா விஷயம்?'' என பயம் நீங்கி பெருமூச்சு விட்டாள் அவள்.

''சரி... ஸார்...! இனிமேல்... உங்கள் விருப்பப்படி... சொல்கிறேன்... சொல்ல முயற்சிக்கிறேன்... ஸார்...'' என்றபடி சொன்னவள் தன் தவறை உணர்ந்து அவசரமாய் உதட்டைக் கடித்தாள்.

அவனோ பதிலுக்கு, ''தவறுதலாக சொன்ன உதடுகளை கடிக்கக் கூடாது. மென்மையான ஒத்தடம் தான் கொடுக்க வேண்டும்..'' என்று திரும்பவும் அவளை இழுத்து மென்மையாய் முத்தமிட்டான்.

பின் அவள் முகத்தை நேருக்கு நேராய் தன் முகத்தருகே பிடித்து, ''இனி நீ சொல்லும் ஒவ்வொரு சாருக்கும் இப்படி இனிப்பான தண்டனைதான் உனக்கு! எங்கே இன்னுமொருமுறை சார்... என்று சொல்லு பார்ப்போம்... என்க!... அவள் அப்போதும் தன்னைத்திருத்திக் கொள்ள முடியாமல், ''ஸார்... என்ன... ஸார்... இது? வந்து... உங்களை...'' எனத்தயங்க மறுபடியும் இழுத்து வேகமாய் முத்தமிட்டான்.



ஆனாலும் அவளால் உடனே மாற முடியவில்லை.

மேலும் இரண்டு மூன்று முறை அப்படியே, ''ஸார்... ஸார்...'' என உளறி அவனிடம் அந்த இனிப்பான தண்டனையைப் பெற்ற பிறகு நாலாவது முறை தன்னை மறந்து, ''மனோ, ப்ளீஸ்... என்னைப் புரிந்து கொள்ளுங்கள்! எனக்கு அப்படி உங்களை கூப்பிட கொஞ்சம் வெட்கமாய்...'' என சிலிர்த்து முகம் சிவக்க நிறுத்தினாள்.

''அப்பாடா... வெளிவந்து விட்டதா குதிரை? இதற்குத்தான் இப்படி தண்டனை கொடுத்தேன். என்ன சொன்னாய்...? மனோ... வா? அப்படியே கூப்பிடு கேட்க இனிமையாய்த்தான் இருக்கிறது...'' எனச் சொல்ல அவளுள்ளும் குறுகுறுப்பு கூடியது.

''சரி மனோ. உங்கள் விருப்பப்படியே இனி அப்படி கூப்பிடுகிறேன் மனோ. அதற்காக நீங்கள் கோபப்படக் கூடாது மனோ. நான் கூச்சத்தால்தான் இதுவரை அப்படி கூப்பிடவில்லை மனோ. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் மனோ. இனி எங்கேயும் எப்போதும் அப்படிக் கூப்பிடுகிறேன் மனோ. சரியா மனோ...? உங்களுக்கு போதுமா மனோ...?''

எனக் கேலி செய்யும் வகையில் அவள் தொடர்ச்சியாய் மனோ...மனோ எனச் சொல்லி சிரிக்க... மனோரஞ்சன் செல்லமாய் அவள் காதைப் பிடித்து திருகி,

''அடி... குறும்புக்காரி! என்னையே கேலி செய்கிறாயா?'' என்றபடி மறுபடியும் அவளை அணைத்து முத்தமிட்டு விடுவித்தான்.

அன்றைய இரவு முழுவதும் இப்படியே கேலியும் கிண்டலுமாய் உணர்ந்தனர். மதுமதிக்கு அப்படிப் பேசப் பேசத்தான் அவன் சொன்ன நெருக்கம் என்னவென்று புரிந்தது... மனதால் இருவரும் மெல்ல நெருங்க ஆரம்பித்து விட்டதும் புரிந்தது.

அப்படியே அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு குழந்தை போல் அவனது நெஞ்சில் சாய்ந்து தூங்கினாள்.

ஆனால் அந்த நெருக்கத்திற்கு மஞ்சரி உருவில் மறுநாள் ஆபத்து வரப்போவதை அப்போது அவள் உணரவில்லை!

# 14

மறுநாள் காலை எழுந்ததும் மனோரஞ்சன் போனில் தொடர்பு கொண்டு கம்பெனியின் மேனஜரிடம் ரொம்ப நேரம் பேசினான்.

பின் திருப்தியடைந்தவனாய் பேசி முடித்து போனை வைத்து விட்டு அவள் பக்கம் வந்தான்.

''எல்லாம் நினைத்தபடியேதான் நடந்திருக்கிறது மது. என்னதான் கோபப்பட்டாலும் நான் இங்கு கொடைக்கானல் வந்து விட்டது தெரிந்ததும் தந்தைதான் தினம்



அலுவலகம் வந்து எல்லா பணிகளையும் கவனிக்கிறாராம். மேனேஜர் சொன்னார். ரொம்பவும் திருப்தியாய் இருக்கிறது...'' என்றான்.

அவளுக்கு புரிந்தது. ''அதாவது கோபத்தில் அவர் அலுவலகம் கூட வராமல் புறக்கணிக்கக்கூடும் என்று நினைத்தீர்களா?'' என்றாள்.

அவன் ஆமோதிப்பது போல் தலையசைத்தவன், ''இப்போது அவரது செய்கையை பார்த்தால் அவர் மனம் மாறும். நம்மை மன்னிக்கக் கூடும் என்றே தோன்றுகிறது...'' என்றான்.

''எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது...'' என்றாள் அவளும் தன் பங்கிற்கு.

''உன் நம்பிக்கைக்கு தாங்க்ஸ்...'' என்றபடி அவள் பக்கம் வந்த மனோரஞ்சன் அவளை இழுத்து ஒரு கையால் தாங்கிப் பிடித்தான்.

''சரி... ஊர்க்கவலையை விடு. இன்று நம் புரோக்ராம் என்ன?''

''நீங்களே சொல்லுங்கள்...'' என்றாள்.

''நேற்று இங்குள்ள விடுதி மேனேஜர் ஒருவரிடம் பேசிய போது, மலையின் வனப்பகுதிகளை ஜீப்பில் சென்று பார்வையிட வனத்துறையே ஒரு ஏற்பாடு செய்திருப்பதாய் கூறினார். அடர்ந்த காடுகளின் உள்பகுதிக்குச் சென்று விதவிதமான பறவைகளை, மிருகங்களை இயற்கை அழகோடு பார்க்கலாமாம். அங்கு செல்வோமா?'' என அவன் கேட்க உற்சாகமாய் தலையாட்டினாள் அவள்.

ரெஸ்ட்டாரண்ட் ஒன்றில் சின்னதாய் டிபனை முடித்து விட்டு இருவரும் கிளம்பிவிட்டனர்.

வனத்துறை ஏற்பாடு செய்திருந்த வேன் ஒன்றில் ஜோடிகளாய் பத்து பன்னிரண்டு பேர் உட்கார்ந்திருக்க அவர்களும் சேர்ந்து கொண்டனர்.

மனோரஞ்சன் அவள் கழுத்தோடு கைகளை கோர்த்து தன்னோடு சாய்த்து அணைத்துப் பிடித்தபடியே உட்கார்ந்து கொண்டான். அந்த வேன் முழுவதும் அவர்களைப் போலவே புதுமணத்தம்பதிகள் போலும்.

எல்லோருமே அப்படி ஒரு வித காதலுடன் நெருக்கமாய் அமர்ந்து கொண்டு சிரிக்கச் சிரிக்க பேசிக் கொண்டு... இருப்பதைக் கண்ட மதுமதியும் தனது சங்கோஜத்தை நீக்கி அவனோடு பசைபோல் ஒட்டிக் கொண்டாள்.

நிஜமாகவே அடர்ந்த வனப் பகுதிக்குள் கூட்டிச் சென்று பார்வையிட வைத்தார்கள். காட்டுக்கோழி, புறா, மான் கூட்டங்கள், யானைக் கூட்டங்கள் என்று எப் பக்கமும் நிறையப் பார்த்தார்கள்.

எல்லாம் முடிந்து பார்த்துவிட்டு வரும் வழியில் திடீரென சிறுத்தை ஒன்று வேனுக்கு சற்று தூரமாய் ரோட்டின் குறுக்கே நடந்து செல்ல வேன் டிரைவர் அப் படியே நிறுத்தி விட்டார். எஞ்சினை ஆப் செய்துவிட் டார்.

எல்லோரும் கம்பி தடுப்பு வழியாக அப்படி நடந்து செல்லும் சிறுத்தையை பயத்தோடு பார்த்தார்கள். மதுமதியும் பயத்தில் உடம்பு நடுங்க அவனை மனோ ரஞ்சனை இறுகக் கட்டிக் கொண்டாள்.



ஒரு ஐந்து நிமிடத்திற்குப் பின், அந்த சிறுத்தை சாவகாசமாய் நடந்து புதர்ச்செடிகளுக்குள் மறைந்தபின் தான் எல்லோருக்கும் மூச்சே வந்தது.

அதற்குள் சில பேர் தங்கள் வீடியோ கேமிராக்களில், செல் போனில் சிறுத்தையை பதிவு செய்து உற்சாக மாயிருந்தார்கள். வழிகாட்டியான வேன் டிரைவரும், ''சிறுத்தையை பார்த்தது உங்களது அதிர்ஷ்டம்தான்!'' என எல்லோரும் சந்தோஷமாகிவிட்டனர்.

அதன்பின் வனத்துறை அலுவலகம் வரும் வரை எல்லோருக்கும் சிறுத்தை பற்றிய பேச்சுத்தான். மதுமதி அதற்குப் பின்னும் நடுக்கத்தோடு மனோரஞ்சனுடன் ஒண்டியபடியே நடக்க அவன் சிரித்தான்.

''என்ன... மது... இந்த பயம் பயந்து விட்டாய்?'' என அவள் தோள்களை குலுக்கினான்.

''அது... அது... நீங்களும் தான் அந்த சிறுத்தையை பார்த்தீர்களே... எவ்வளவு உயரமாய் திடமான உடம் புடன்... ஹப்பா... காட்டில் அதனிடம் மட்டும் யாரும் வசமாய் சிக்கிக் கொண்டால் என்ன ஆகும்?''

அவள் அதே நடுங்கிய குரலில் கேட்க, ''வேறு ஒன்றும் ஆகாது. சிறுத்தைக்கு சூடான டிபனாகப் போய் விடுவார்கள்...'' எனச் சொல்லியவாறு கடகடவென சிரித்தான்... அவன்.

''ஐயோ...! என்னை கேலி செய்யாதீர்கள்...'' என்றபடி அவன் கையை பிடித்து இழுக்காத குறையாய் வனப் பகுதியை விட்டு இழுத்துக்கொண்டு நடந்தாள்.

''இனி ஒருபோதும் இப்படி வனப்பகுதிக்கு வந்து பயப்பட வேண்டாம். இனிமையான பசுமையான

மரங்களையும் இயற்கை காட்சிகளையும் மட்டுமே பார்த்து ரஸிப்போம். மனதுக்கு இதமாகவும் இருக்கும். என்ன... நான் சொல்வது சரிதானே?'' என அவள் கேட்க தலையாட்டியபடி நடந்தான் மனோரஞ்சன்.

அன்று இரவு கெஸ்ட் அவுஸ் வந்த பிறகும் பயம் விலகாமல் அந்த கூரிய நகங்களுடன் கூடிய பெரிய சிறுத்தையைப் பற்றியே அவனுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

மனோரஞ்சன் அவளை தன்னோடு இறுக்கியவன், ''ம்ம்... மென்மையான உன் குணத்தை போலவே உன் மனசும் இருக்கிறது...'' என்றபடி அவள் நெற்றியில் முத்தமிட்டு பயம் விலக்கி தூங்க வைத்தான்.

மறுநாள் எழுந்து படகுத்துறை, க்ரீன்வேலி, பூங்கா என சுற்றினார்கள். அந்த பெரிய பூங்காவில் விதவிதமான மரங்கள் அழகழகான பூச்செடிகளை ரஸித்தபடி நடந்தார்கள். புல்தரையொன்றை தேர்ந்தெடுத்து உட்கார்ந்தார்கள். நேரம் போவது தெரியாமல் மணிக்கணக்காய் பேசினார்கள்.

இருள் படர்வதை உணர்ந்து எழுந்து ஒருவரை ஒருவர் அணைத்தபடியே கெஸ்ட் ஹவுஸை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். கெஸ்ட் ஹவுஸின் எதிரே இருக்கும் ரெஸ்ட்டாரண்டில் இரவு உணவை முடித்துவிட்டு ரூமிற்குச் சென்றார்கள்.

படுக்கையில் சென்று அமர்ந்த மனோரஞ்சன் டிவியைப் பார்க்க ஆரம்பிக்க மதுமதி பெட்டிகளில் உள்ள உடமைகளை சரிசெய்து கொண்டிருந்தாள்.

அப்போது... யாரோ ரூம் கதவை படபடவென தட்டினார்கள்.



யார் இது...? இப்படி இங்கிதம் இல்லாமல் கடகடவென அதிர்வது போல் தட்டுவது?

மனோரஞ்சன் திகைக்க... அதே திகைப்புடன் முன் நின்ற மதுமதி நடந்து அறைக் கதவைத் திறந்தாள்.

வெளியே...

மஞ்சரி! மனோரஞ்சனின் முறைப்பெண் மஞ்சரி ஜிவுஜிவுவென கோபத்துடன் எரிமலையாய் நின்றிருந்தாள்.

# 15

வெளியே... மஞ்சரி!

மஞ்சரியைப் பார்த்ததும் மதுமதியின் சந்தோஷம் அவள் கொண்டிருந்த உற்சாகம் எல்லாம் போன இடம் தெரியவில்லை. நாடி நரம்புகள் எல்லாம் சுண்டி விட்டாற்போல் அப்படியே ஸ்தம்பித்து விட்டாள்!

''ஏண்டி... பாதகி! கடைசியில் நீ என் மனோவை வளைத்து மயக்கி கட்டிக் கொண்டாயா...? என்ன தைரியம் உனக்கு! வேலை பார்க்கும் நாய் நீ... உனக்கு சிம்மாசனம் கேட்கிறதோ?'' என்று பெருங்குரலில் கத்த ஆரம்பிக்க மதுமதி அரண்டு போனவளாய் நிற்க... பின்னால இருந்த மனோரஞ்சன் ஓடி வந்துவிட்டான்.

''ஏய்...லூசு...! உனக்கு அன்று அறை கொடுத்தது போதாதா? இன்று... இங்கேயே ரகளை பண்ண தேடி வந்து விட்டாயா?'' என்றான் கொதிப்பாய்.

மனோரஞ்சனைப் பார்த்ததும் மஞ்சரி கொண்டிருந்த வேகத்தைக் குறைத்து ஆசுவாசப்படுத்தியவள், ''இல்லை மனோ! எனக்கு தான் நீ இவளை ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொண்டது தெரியும். ஆனால்... ஆனால்... இதில் ஏதோ ஒரு சதி இருக்கிறது. இவள் ஏதோ தகடுதத்தம் பண்ணித்தான் உன்னைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும். என் உள்மனதிற்கு அப்படித் தோன்றியதால்தான் இரவென்றும் பாராமல் உடனே ஓடி வந்து விட்டேன்...'' என்றாள் மதுமதியை மொத்தமாய் அரள வைத்தபடி.

''அப்படியா...? அப்படியானால் எதும் புதுக்கதை சொல்லப் போகிறாயா? தாராளமாக சொல்லிட்டுப் போ! ஆனால் நீ என்ன சொன்னாலும் அதை நம்பப் போவதில்லை...'' என்றான் அவன்.

மனோரஞ்சன் சொன்னது மதுமதிக்கு பெரும் நிம்மதியைத் தந்தாலும் அந்த பயம் நடுக்கம் அவளிடம் கொஞ்சமும் போகவில்லை.

அதைவிட மஞ்சரி விறுவிறுவென வந்து எதிர் சோபாவில் உட்கார்ந்து விட்டாள்.

''மனோ... நீ நம்பவில்லை என்றாலும் நான் அதை நிரூபிக்கிறேன். இவள் வாயாலே அந்த உண்மையை வரவழைத்து நிரூபிக்கிறேன். போதுமா?'' எனக் கூறியவள் சட்டென மதுமதியை நோக்கித் திரும்பினாள்.

''நான் கேட்பதற்கு உண்மையான பதிலை நீ சொல்ல வேண்டும். புரிகிறதா?'' என விரட்டினாள்.

''கேளுங்கள்...'' என்றாள் மதுமதி உணர்வில்லாத குரலில் பலியாடுபோல்.



''அன்று... அன்று... அந்த ஃபேஷன் விழாவில் நீ... என்னிடம் பேசவந்து... மனோ... என்னிடம் சொல்லச் சொன்னதாய் வந்து சில விஷயங்களைச் சொன்னாய் அல்லவா...?''

'என்ன இது? கரெக்ட்டாக பாயிண்ட்டையே பிடித்து விட்டாளே... இனி எப்படி தப்பிப்பது? பொறியில் சிக்கிய எலி போல் வகையாய் மாட்டிக்கொண்டு விட்டோமே... அதுவும் மனோரஞ்சன் முன்...? கடவுளே...!'

மனதிற்குள் கலங்கி கதறியவள் அதே பயத்துடனே மஞ்சரியைப் பார்த்தாள்.

''நீ அன்று என்ன சொன்னாய்? மனோரஞ்சனுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அவர் என்னை வெறுக்கிறார். அவர் என்னை ஒருபோதும் திருமணம் செய்து கொள்ள மாட்டார். அதனால் இனியும் அவர் பின்னால் நான் சுற்றிவருவதை விரும்பவில்லை... என மனோரஞ்சன் உன் மூலமாக என்னிடம் சொல்லச் சொன்னார் என்று நீயும் அதை என்னிடம் வந்து சொன்னாய் அப்படித்தானே?'' குறி பார்த்து கேட்டு விட்டாள்!

இனி தப்பிப்பது முடியாத காரியம்!

இப்போ அதே போல் எதாவது பொய் சொல்லி தப்பிக்கலாம். ஆனால் நாளை இதே போல் உண்மைகள் எல்லாம் தெரிய வரும் போது என்ன ஆகும்?

பொய்க்கு மேல் பொய் சொல்லி... நடித்து... அது... வெட்டவெளிச்சமாகும் போது அது... எவ்வளவு கேவலமாய் எவ்வளவு கீழ்த்தரமாய் எல்லோர் முன்னும் தலையை குனிய வைத்து விடும்?

மேலும் எல்லாவற்றையும் தெரிந்த மனோரஞ்சன் அவளைப் பற்றி என்ன நினைப்பான்? இவ்வளவு கீழ்த்தரமாய் நடந்திருக்கிறாயே... என வெறுத்து ஒதுக்கிவிட மாட்டானா?

''இனி... அவனது அன்பு... அவனது அருகாமை ஏன் அவனது மனைவி என்ற உரிமையைக் கூட அவள் இழக்க நேரிடலாம் எனக்கு பொய் பேசுவதே பிடிக்காது. நீ என்னவென்றால் நம் கல்யாண வாழ்க்கையை ஒரு பொய்யான சுவர் எழுப்பியே கட்டியிருக்கிறாய். உன்னை எப்படி நம்புவது? உன்னுடன் எப்படி குடும்பம் நடத்துவது? என கோபத்தில் வெடித்து அவளை வீட்டை விட்டு விரட்டினாலும் விரட்டக்கூடும்...!''

எது வேண்டுமானாலும் நடக்கலாம்!

அதே போல் எது நடந்தாலும் செய்த தவறுக்காக அவள் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இனியும் பொய்களை கூறி அது அவனுக்கு தெரிந்து விடுமோ... என்ற பயத்தில் தினம் செத்து செத்து பிழைக்க முடியாது. என்ன ஆனாலும் சரி... உண்மையை சொல்லி விடுவோம்...! என ஒரு முடிவுக்கு வந்தாள் அவள்.

''ஏய்... உன்னைத்தான் சொல்லு...! நான் சொன்ன மாதிரிதான அன்று வந்து சொன்னாய்? சொல்லு...! சொல்லு...!'' குரலை உயர்த்தி மேலும் விரட்டினாள் மஞ்சரி.

மதுமதி இறுக்கம் கொண்டவள் போல் நிமிர்ந்தாள். வேகமாய் தலையசைத்தாள்... ''ஆமாம்! அப்படித்தான் நான் சொன்னேன். ஆனால் நான் சொன்னது பொய். மனோரஞ்சன் சார் என்னை சொல்லிவிட்டது உங்களை மணக்க அவர் முடிவு செய்து விட்டதை தெரிவிக்கும்படி. ஆனால் நான் தான் அதை மாற்றி அப்படி பொய் சொன்னேன். அது... எனது முதலாளியான மனோரஞ்சன் ஸாரை ஒரு தவறான பெண்ணை மணந்து கொள்வதில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே.. நோக்கத்தினால்தான்...''



அவள் படபடவென சொல்லி முடிக்க மஞ்சரியை விட பலமாய் அதிர்ந்தது மனோரஞ்சன்தான்.

''ஏய்... மது... என்ன... என்ன உளறுகிறாய்? நீ சொல்வது நிஜமா...? என்ன... உண்மையைத்தான் சொல்கிறாயா?'' என்றான் அதிர்ச்சியோடு.

''என்னை மன்னித்து விடுங்கள். நான் சொல்வது உண்மைதான்! அன்று திடீரென யோசித்து சட்டென முடிவெடுத்து மஞ்சரியை மணக்க நீங்கள் துணிந்து விட்டீர்கள். ஆனால் மஞ்சரியின் குணத்திற்கு உங்களால் அவளுடன் ஒருபோதும் ஒரு அமைதியான வாழ்க்கை நடத்தமுடியாது என எனக்குத் தோன்றிற்று. அப்படி நிம்மதியில்லாத ஒரு வாழ்க்கை அமைந்துவிட்டால்... பின் எப்படி உங்களால் அன்பு இல்லம் கட்டும் சேவைப் பணிகளில் எல்லாம் ஆர்வம் காட்டி உங்களுடைய லட்சியக் கனவை நிறைவேற்ற முடியும்? அதனால் மஞ்சரியைக் கட்டினால் உங்களுக்கு நிறைய பாதிப்பு வரும் என தோணிற்று. அதனாலே என்னால்... எனக்கு மஞ்சரியிடம் அப்படிச்சொல்ல ஒரு சந்தர்ப்பம் வந்த போது... உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் பொய்களைச் சொன்னேன். அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்...!''

என்ன ஆனாலும் சரி... இனி எதிர்கொள்ள வேண்டியதுதான்! என்பது போல் மனதில் உள்ள அனைத்தையும் படபடவென கொட்டித் தீர்த்தாள் அவள்.

நிமிர்ந்து மனோரஞ்சன் முகத்தைப் பார்க்கத் தைரியமில்லாமல் அப்படியே கண்கள் வெறிக்க குனிந்தும் கொண்டாள்.

''பார்த்தாயா... பார்த்தாயா மனோ? என்ன தைரியம் இவளுக்கு? வேண்டுமென்றே ஒரு பொய்யைச் சொல்லி நம் இருவரையும் பிரித்து... என் இடத்திற்கு நல்லவள் போல் நாடகம் போட்டு உன் மனைவியாய் வந்து... இந்த சாகஸக்காரியை... உடனே அடித்து விரட்டு மனோ...! ஒரு நல்ல நாளில் நாம் இருவரும் இணைந்து புது வாழ்க்கையைத் தொடங்குவோம்...!''

மஞ்சரி ஆவேசம் கொண்டவளாய் ஏறக்குறைய கத்தவே ஆரம்பித்து விட்டாள்.

மனோரஞ்சன் இறுக்கம் பரவிய ஒருவித நடையுடன் மதுமதியை நோக்கி நடந்து நெருங்கினான்.

கலக்கத்தோடு, கலங்கிய கண்களும் முகமுமாய் தலையை குனிய வைத்திருந்தவளுக்கு தன்னை நோக்கி மனோரஞ்சன் வருவது கண்டு உயிரே போயிற்று.

அடிக்கப் போகிறானா?

அடித்து என் கண்முன் நிற்காதே... ஓடு...! என விரட்டப் போகிறானா?

என்ன... செய்யப் போகிறான்? அவளுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறான்?

அடி வயிறு கலங்க தவித்துப் போய் நின்றாள் அவள்.



ஆனால்... ஒரு வித விரைப்புடன் அவள் பக்கத்தில் வந்த மனோரஞ்சன் கைகளைத் தூக்கி அவளை தன் பக்கம் இழுத்து அப்படியே தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டான்...!

# 16



மதுமதி இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

அதைவிட மிகவும் அதிர்ந்தது மஞ்சரிதான்!

பக்கத்தில் வந்து மதுமதியை அடித்து விரட்டுவான் ஆவேசப்படுவான் என்றெல்லாம் எதிர்பார்த்தவளுக்கு அவன் இப்படி அமைதியாய் போய் அவளை அணைத்துக் கொண்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதைவிட மதுமதியை அணைத்த மனோரஞ்சனும் அவள் பக்கம் திரும்பி, ''அதான் நீ வந்த வேலை முடிந்து விட்டதே... இன்னும் ஏன் நிற்கிறாய்? நீ போலாம் மஞ்சரி...!'' என்றான் தெள்ளத்தெளிவான குரலில்.

மஞ்சரி அரண்டு போய் விட்டாள்.

''மனோ...! மனோ! என்ன சொல்கிறீர்கள்? அவள் பொய் பேசி பித்தலாட்டம் செய்திருக்கிறாள்... அவளைத் தண்டிக்காமல் இப்படி கொஞ்சிக் குலாவிக் கொண்டு என்னை விரட்டுகிறீர்களே...? உங்களுக்கு புத்தி எல்லாம் சரியாயிருக்கிறதா? இல்லை பேதலித்து விட்டதா?''

அவள் ஆத்திரமாய் கேட்க அவளை நோக்கி கைகளை உயர்த்தினான் மனோரஞ்சன்.

''உஷ்... இந்த சத்தம்... கூச்சல்... எல்லாவற்றையும் உன் வீட்டில் வைத்துக்கொள். இவள்... மதுமதி... என் மனைவி... என் மனைவி ஆகிவிட்டாள்...! இவளைப் பற்றி குறைசொல்ல வந்துவிட்டாயே... உன் யோக்யதை பற்றி எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாயா...? சொல்லட்டுமா...? யார் அந்த மதன்? அவனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு? இருவரும் காதலர்களாய் கூத்தடித்து... பின் அதற்கு சாட்சியாய்... எல்.கே.ஹாஸ்பிடல் என்ற தனியார் மருத்துவமனையில் போய் கருக்கலைப்பு கூட செய்தீர்களே... அது... கூட... எனக்குத் தெரியும்... போதுமா?''

மனோரஞ்சன் வெடித்து வார்த்தைகளை விட இம்முறை மஞ்சரி அப்படியே திகைப்பில் அதிர்ச்சியாகி விட்டாள்.

அவளால் அதற்குமேல் ஒரு வார்த்தை பேச முடியவில்லை. நிமிர்ந்து மனோரஞ்சன் முகத்தைப் பார்க்க முடியவில்லை...

''ம்ம்... நிற்காதே...! ஓடிவிடு...!'' என மனோரஞ்சன் மறுபடியும் விரட்ட... திரும்பி நிஜமாகவே அவமானம் தாங்காமல் ஓடினாள் அவள்!

இது என்ன புதுக்கதை? யார் அந்த மதன்? மஞ்சரியின் காதலனா? இருவரும் நெருக்கமாகி அதனால் மஞ்சரி கர்ப்பமாகி... அபார்ஷன்வரை விஷயம் போயிருக்கிறதா?

திகைத்த மதுமதியின் முகம் நிமிர்த்திய மனோரஞ்சன், ''என்ன பார்க்கிறாய்? நீ சொன்ன அந்தப் பொய்தான்



என்னை இந்த மஞ்சரி பாதகியிடம் மோசமான படுகுழியில் விழுவதில் இருந்து காப்பாற்றியிருக்கிறது. இல்லையேல் என் வாழ்க்கையே அப்படியே சின்னாபின்னமாயிருக்கும். நினைத்துப் பார்க்கவே பயமாய் இருக்கிறது...'' என்றான் அவன் குரல் கம்ம.

அவள் புரியாமல் தொடர்ந்து திகைப்புடன் விழிக்கவே, ''என்ன புரியவில்லையா? சரி புரியும்படியே சொல்கிறேன். இரண்டு நாளுக்கு முன்புதான் நம் அலுவலக மேனஜரிடம் பேசும் போது என் முகவரிக்கு ஒரு கூரியர் தபால் வந்திருப்பதை தெரிவித்தார். சரியாக முகவரி எழுதப்படாததை அவர் சொல்ல கடிதத்தை உடைத்து படிக்கும்படி அவரிடம் சொன்னேன். கடிதத்தை மஞ்சரியின் காதலன் மதன்தான் எழுதியிருந்தான். தானும் மஞ்சரியும் பல வருடங்களாக காதலிப்பதாகவும் அவளையே தான் மணமுடிக்க காத்திருப்பதாகவும்... இப்போது பணத்துக்கு ஆசைப்பட்டு மஞ்சரி அவனை உதறிவிட்டு என்னை கல்யாணம் செய்ய முயலுவதாகவும் மஞ்சரியை குற்றம் சாட்டியிருந்தான். தங்களது நெருக்கத்திற்கு சாட்சியாய் தனியார் ஹாஸ்பிடலில் மஞ்சரி அட்மிட் ஆகி அபார்ஷன் செய்ததற்கான மருந்து குறிப்புகளையும் அனுப்பியிருந்தான்... அதன் மூலம் தான் மஞ்சரி எவ்வளவு பெரிய வேஷக்காரி... அவளைப் போய் மணக்க இருந்தேனே... என்பது திகைப்பாய் எனக்குப் புரிந்தது...''

மனோரஞ்சன் நிறுத்த மதுமதிக்கும் எல்லாம் புரிந்தது.

பாதகி! எவனுடனோ கூத்தடித்து விட்டு பணத்திற்காக மனோரஞ்சனை ஏமாற்ற அல்லவா பார்த்திருக்

கிறாள்! நல்லவேளை! நாம் செய்த பொய் பெரும் நன்மை செய்திருக்கிறது! ஆனாலும் பொய் பொய்தான்? பொய் சொல்லியது தவறுதானே?

''இருந்தாலும் நான் சொல்லியது பச்சைப் பொய். என்னை மன்னித்து விடுங்கள்...'' என்றாள் கண்கலங்கிய வாறு.

ஆதரவாய் அவள் தோள்களைப் பிடித்தான் அவன். ''மஞ்சரி பற்றிய இந்த விஷயம் எனக்குத் தெரியாமல் போயிருந்தால் கூட நான் கோபமுற்றிருக்கக் கூடும். ஆனால் அப்போதும் கூட நீ மஞ்சரியிடம் பொய் சொன்ன தினால் என்ன நடந்தது...? மஞ்சரியை... கட்டிக் கொள் ளும் எண்ணம் தடைபட்டது. அவ்வளவு தானே? நான் உன்னை மணந்து கொள்ள முடிவெடுத்தது தன்னிச்சை யாய் நான் எடுத்த முடிவுதானே... அது உனக்குத் தெரிய வாய்ப்பில்லையே?

அதனால் நீ பொய் சொன்ன நோக்கம் எவ்வித சுயநலமுமில்லாமல் முதலாளியான என்னை காப்பாற்ற நீ செய்த விஷயம் என்பது தெளிவாய் போயிற்றே? ஆக ஒரு செகரட்டரியாய் நீ உன் வேலையைச் செய்திருக் கிறாய். பிறகு எப்படி நான் உன் மேல் கோபப்பட முடியும்?''

அவன் சொன்ன பெரிய விளக்கம் அவளை ஓரளவு சமாதானப்படுத்தியது. அவள் உள்ளூர அவனை விரும்பி யிருந்தாலும் அதை அவனிடம் சொல்லும் தைரியம் கொஞ்சமும் இல்லைதானே? அதனால் சுயநலமாக செயல்பட்டான் என அவளை அவளே நினைத்துக் கொள்ள முடியாதுதான். என்ற முடிவுக்கு வந்தாள் அவள்.



அவள் திரும்பியும் கண்கலங்க மருகுவதைப் பார்த்து, ''இன்னும் என்ன கலக்கமான யோசனை...? மஞ்சரி ஓடிப்போய் விட்டாள். இனி ஒரு போதும் நம் முகத்தில் விழிக்கமாட்டாள்...'' என்றான்.

''அதில்லை... இது வேறு...'' என்றாள்.

''வேறு என்றால்...?''

''உங்களுக்குத் தெரியாது. நான் இன்னுமொரு தவறு செய்திருக்கிறேன்...'' என்றாள்.

''இன்னொரு தவறா... என்ன அது?''

''உங்களின் செகரட்டரியாக நான் இருக்கும் போது... நான் உங்களை வெறும் முதலாளியாக மட்டும் பார்க்க வில்லை. என் மனம் கவர்ந்த கதாநாயகமான காதலனாக மனதுள் நினைத்து பூஜித்து வந்தேன். அதனாலே வீட்டில் திருமணப் பேச்சுக்களை எடுக்கும்போதெல் லாம் அதை தள்ளிப்போட்டு வரும் வரன்களை எல்லாம் தட்டிக்கழித்தேன். நீங்கள் எனக்கு கிடைப்பீர்களோ இல்லையா... உங்கள் நினைவிலே வாழ்ந்து விட வேண்டும் என்பதுதான் என் நினைப்பு..''

அவள் தயங்கித் தயங்கி சொல்லி முடிக்க, ''அடடா... இவ்வளவு விஷயங்கள்... இருக்கிறதா... நடந்திருக் கிறதா? ஒன்றையும் உணராமல் இருந்திருக்கிறேனே? நீ சொல்வது எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயம்? நீ என்னை முன்பே ஆசைப்பட்டு விரும்பி இருக்கிறாய் என்பதை அறியும் போது மனதில் எவ்வளவு ஆனந்த மாய் இருக்கிறது தெரியுமா?'' என்றபடி அவளை வேக

மாய் அணைத்து நெற்றி, கன்னம், உதடு என மாறி மாறி முத்தமிட்டான் மனோரஞ்சன்.

''உன்னை இன்று என்ன செய்கிறேன் பார்...!'' என்றபடி படுக்கையில் தள்ளை அவளை மேலும் அணைத்தபோது முகம் சிவக்கத்தான் செய்தாள் அவள்.

அந்நேரம் பார்த்து டெலிபோன் ஒலிக்க ரிசீவரை எடுத்தான் அவன்.

மறுமுனையில் அலுவலக மேனேஜர் சபேசன்!

''சின்னய்யா... உங்களது தந்தை உங்களுடன் பேச விருப்பப்படுகிறார்...'' என்றார் பெருங்குரலோடு.

''என்ன அப்பா... பேச நினைக்கிறாரா? எதனால்? மஞ்சரி திரும்பவும் போய் எதுவும் சொல்லி குழப்பி விட்டாளா?''

யோசனையோடு ''லைன் கொடுங்கள்...'' என்றான்.

மறுமுனை உயிர்பெற்றது.

தந்தை சிவநாதனின் கரகரப்பு குரல், ''மனோ...'' என்று ஒலிக்க, ''என்னை மன்னித்து விடுங்கள் அப்பா. நான் உங்களை ரொம்பவும் கோபப்படுத்தி விட்டேன். உங்கள் அனுமதி இல்லாமல் தெரியாமல் கல்யாணம் செய்தது மிகப்பெரிய தவறு. மேலும் அதற்காக என்னை ஒதுக்கி வைத்து விடாதீர்கள். நான் அந்த அன்பு இல்ல புராஜெக்ட்டையே வேண்டுமானால் விட்டுவிடுகிறேன்... என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்...'' என்றான் படபடவென மனோரஞ்சன் மனமுருகி பேசுபவனாய்.

அப்படியே எதிர்முனையில் ஆடிப்போனார் சிவநாதன் என்றுதான் சொல்ல வேண்டும். நெகிழ்ச்சியான குரலில்,



''இல்லை மனோ, நீ மன்னிக்க வேண்டியது என்னைத் தான்! இவ்வளவு வயதாகியும் பணம்... பணம்... என குறுகிய புத்தியுடையவனாகத்தான் இருந்திருக்கிறேன்... நீ என்னிடம் கோபப்பட்டு சென்றபின் வாழ்க்கையையே வெறுத்துப் போனவனாய் சிந்தித்தேன். அப்போது தான் நானே பிரச்சனைகளுக்கு பயந்து ஏதாவது அனாதை அன்பு இல்லத்தில் சேர்ந்துவிடலாம் போல் எண்ணம் வந்தது. அப்போதுதான் சுரீரென உரைக்கவும் செய்தது. இதுபோல் வாழ்க்கையில் கைவிடப்பட்டு விரக்தியடை வோருக்காக உருவாக்கப்படுவதுதானே அன்பு இல்லம்? என்பது தெளிவாய் எனக்குப் புரிந்தது. இப்படி நாட்டில் உள்ள எத்தனையோ பேரின் கவலைகளை பற்றித் தெரிந்து நீ அன்பு இல்லம் கட்ட நினைத்தது எவ்வளவு பெரிய சாதனையான செயல்? அதையே... தடுத்து நிறுத்தி இவ்வளவு ரகளை செய்திருக்கிறேனே? என எனக்கு வெட்கமாய் அவமானமாய் போய் விட்டது. அதனாலே இரண்டு நாள் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தேன்.

மேலும் இந்த அன்பு இல்ல புராஜெக்ட்தானே நாம் இருவரும் இப்படி சண்டை போட காரணம்? நான் இப்போது அதை உணர்ந்து தெளிந்து விட்டேன். மனோ உனது அன்பு இல்ல புராஜெக்ட் நம் நாட்டிற்கு தேவை யான ஒன்று. அதை உடனே நீ கட்டி பணிகளை முடிக்க இன்றே உனக்கு அதற்கு தேவையான ஐம்பது லட்சத்தை தருகிறேன். நீ என் மருமகளோடு நேரில் புறப்பட்டு வா...! உங்களை ஆசீர்வதிக்க காத்திருக்கிறேன்...!''

படபடவென பேசி தன் மொத்த வாக்குமூலத்தையும் கொடுத்து போனை வைத்து அவனை இன்பமாய் அதிரவைத்தார் சிவநாதன்.

மனோரஞ்சனுக்கு மனம் முழுவதும் இன்ப அதிர்ச்சி! அப்படி ஒரு ஆனந்தத்தை அப்பாவிடம் இருந்து அவன் எதிர்பார்க்கவே இல்லை. அதே மகிழ்ச்சிப் பெறுக்கில் சந்தோஷம் குதூகலிக்க, இறுக்கிய மதுமதியிடம் விஷயத்தைச் சொல்லி, ''எல்லாம் நீ வந்த ராசி...! அப்பா... என்னைப் புரிந்து கொண்டார். என் லட்சிய கனவிற்கு அனுமதி அளித்து விட்டார். இனி என் வாழ்வில் வசந்தம் தான்...! என்னைத் தேடி வந்த பொன் வசந்தம் நீ...!'' என்றபடி சந்தோஷத்தில் அவளை தன் நெஞ்சில் சரித்து முத்தங்களை மாறி மாறி பொழிய ஆரம்பித்தான்.

''இல்லை... இல்லை...! நீங்கள் தான் நான் தேடிய எனது பொன் வசந்தம்...!'' என்றபடி மைவிழிக் கண்கள் நாண அவன் நெஞ்சில் புதைந்து இனிமையாய் சிணுங்க ஆரம்பித்தாள் அவனது அன்பு மனைவி மதுமதி.

# தேவதையைக் கண்டேன்

## அகிலா கோவிந்த்

